- **சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லுங்க் அவர்கள் மற்றும் அவரது பாரியாரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்**

2018 ஜனவரி மாதம் 22 ஆந் திகதி முதல் 24 ஆந் திகதி வரை மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த சிங்கப்பூர் பிரதமர் மற்றும் அவரின் பாரியாருக்காக 2018 ஜனவரி மாதம் 23 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வு, இருதரப்புக் கலந்துரையாடல்கள், ஒப்பந்தங்களைச் கைச்சாத்திடுதல் மற்றும் அவர்களுக்காக ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட பகற் போசன விருந்து என்பவற்றை ஏற்பாடு செய்தல் மற்றும் ஒருங்கிணப்புச் செய்தல் என்பன இப்பிரிவின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டன.



- **இந்தோனேசிய ஜனாதிபதி அதிமேதகு ஜொகோ விடோடோ அவர்கள் மற்றும் அவரது பாரியாரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்**

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்தோனேசிய ஜனாதிபதி மற்றும் அவரது பாரியார் ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு 2018 ஜனவரி மாதம் 24 ஆந் திகதி இடம்பெற்ற நிகழ்வின் வரவேற்பு அலுவல்கள், இருதரப்புக் கலந்துரையாடல்கள், ஒப்பந்தங்களைச் கைச்சாத்திடுதல் மற்றும் அவர்களுக்காக ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட இராப் போசன விருந்து என்பவற்றை ஏற்பாடு செய்தல் மற்றும் ஒருங்கிணப்புச் செய்தல் என்பன வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து செயலாளர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.



- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் இந்தியாவின் புதுடில்லிக்கான உத்தியோகபூர்வ விஜயம்**



2018 மார்ச் மாதம் 10 ஆந் திகதி முதல் 12 ஆந் திகதி வரை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இந்தியாவின் புதுடில்லி நகருக்கு மேற்கொண்ட மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன.



2018 மார்ச் மாதம் 12 ஆந் திகதி முதல் 17 ஆந் திகதி வரை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் ஜப்பானுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பாகிஸ்தானுக்கான உத்தியோகபூர்வ விஜயம்**



2018 மார்ச் மாதம் 22 ஆந் திகதி முதல் 24 ஆந் திகதி வரை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட் டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் லண்டனுக்கான விஜயம்**



அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2018.04.15 முதல் 22 ஆந் திகதி வரை லண்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அந்த விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் ஈரானுக்கான விஜயம்**



2018 மே மாதம் 12 ஆந் திகதி முதல் 14 ஆந் திகதி வரை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் ஈரானுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன.

- **தாய்லாந்துப் பிரதமர் கௌரவ பிரயுத் சான்-ஒ-வா அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்**



மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த தாய்லாந்துப் பிரதமர் பிரயுத் சான்-ஒ-வா அவர்கள் ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு 2018 ஜூலை மாதம் 12 ஆந் திகதி இடம்பெற்ற நிகழ்வின் வரவேற்பு அலுவல்கள், இருதரப்புக் கலந்துரையாடல்கள், ஒப்பந்தங்களைச் கைச்சாத்திடுதல் மற்றும் அவர்களுக்காக ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட இராப் போசன விருந்து மற்றும் ஜூலை 13 ஆந் திகதி கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட பகற் போசன விருந்து என்பவற்றின் ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் இத்தாலி நாட்டிற்கான உத்தியோகபூர்வ விஜயம்**

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2018 ஜூலை மாதம் 14 ஆந் திகதி முதல் 16 ஆந் திகதி வரை இத்தாலிக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அந்த விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் ஜோர்ஜியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம்**



அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2018 ஜூலை மாதம் 17 ஆந் திகதி முதல் 19 ஆந் திகதி வரை ஜோர்ஜியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அந்த விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இப்பிரிவினால் மேற்கொள்ளப் பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் நேபாளத்திற்கான உத்தியோகபூர்வ விஜயம்**

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2018 ஆகஸ்ட் மாதம் 29 ஆந் திகதி முதல் செப்டம்பர் மாதம் 02 ஆந் திகதி வரை நேபாளத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அந்த விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.



- **அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் ஐக்கிய நாடுகள் மாநாட்டின் 73 ஆவது அமர்வில் கலந்து கொள்ளுதல்**





President Sirisena addressing the 73rd Session of the UNGA.

2018 செப்டம்பர் மாதம் 22 ஆந் திகதி முதல் 27 ஆந் திகதி வரை நியூயோர்க் நகரில் இடம்பெற்ற 73 ஆவது ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்டதுடன், அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் சீசெல்ஸ் நாட்டிற்கான உத்தியோகபூர்வ விஜயம்**



அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2018 ஒக்டோபர் மாதம் 08 ஆந் திகதி முதல் 10 ஆந் திகதி வரை சீசெல்ஸ் நாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அந்த விஜயத்தின் ஒருங்கிணைப்புப் பணிகள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன.

- **அமைச்சுக்களில் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள்**

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.01.05, 2018.08.27, 2018.12.04 ஆகிய தினங்களில் மூன்று கூட்டங்களும், ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் 2018.05.09, 2018.06.14 ஆகிய தினங்களில் 02 கூட்டங்களும் நடாத்தப்பட்டதுடன், அந்தக் கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு இப்பிரிவு ஒத்துழைப்பு வழங்கியது.

- **போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் குற்றங்களைக் குறைப்பதற்கு ஏற்புடைய சட்ட வரைவுகளைத் திருத்துவது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையடல்கள்**



பொலிஸ் திணைக்களத்திற்கு ஏற்புடைய சட்ட வரைவுகளைத் திருத்துவது தொடர்பாக 2018.11.27, 2018.12.10 ஆகிய திகதிகளில் ஏற்புடைய தரப்பினருடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற ஏனைய வைபவங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் நிகழ்ச்சிகள்**

  - 2018 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவைக்கு ஏற்புடைய விடயங்களைக் கலந்துரையாடுவது தொடர்பான கூட்டம் மற்றும் அவரது தலைமையில் அன்றைய தினம் இடம்பெற்ற காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் சம்பந்தப்பட்ட கலந்துரையாடலின் ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

  - அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018 ஏப்ரல் மாதம் 07 ஆந் திகதி கொழும்பு 05 பொலிஸ் மைதானத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2018 புத்தாண்டு விழாவுக்கான (பக்மஹ) அழைப்பிதழைத் தயாரித்தல், அதிதிகளுக்கு அழைப்பிதழ்களை அனுப்புதல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

  - நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அலுவலகத்தின் உத்தியோக பூர்வ இலச்சினையை வெளியிடுதல் மற்றும் இணையத்தளத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.05.28 ஆந் திகதி இடம்பெற்றதுடன், அந்த நிகழ்வின் ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்புக்கு இப்பிரிவு ஒத்துழைப்பு வழங்கியது.

  - 2018 ஜூன் மாதம் 06 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற அரச அலுவலர்கள் தொடர்பாக அமைச்சரவைக்கும் அரசாங்க சேவைக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களைச் செயற்படுத்தும்போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடலின் ஏற்பாட்டு நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- **இலவசக் கல்வியின் தந்தை கலாநிதி சீ டப்ள்யூ கன்னங்கர அவர்களின் உருவச்சிலையுடன் கூடிய நினைவுப் படிகத்தை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு**

இலவசக் கல்வி மற்றும் அகில இலங்கை மத்திய மகா வித்தியலய எண்ணக்கருவின் தந்தை கலா நிதி சீ டப்ள்யூ கன்னங்கர அவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் அவரின் ஞாபகார்த்தமாக ஜனாதிபதி அலுவலக வளவில் நிறுவப்பட்ட அன்னாரின் உருவச்சிலையுடன் கூடிய நினைவுப் படிகத்தை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.07.10 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலக வளவில் இடம்பெற்றதுடன், அந்த நிகழ்வின் ஏற்பாடு மற்றும் ஒழுங்கிணைப்பு இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வுடன் இணைந்தவாறு வெளியிட்டு வைக்கப்பட்ட "கன்னங்கராவலோகன" ஞாபகார்த்த நூல் அகில இலங்கை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து அச்சிடப்பட்டது.



➢ **மகாத்மா காந்தி அவர்களின் 150 ஆவது ஞாபகார்த்த வைபவம்**



- இந்திய அகிம்சை சுதத்திரப் போராட்டத்தின் முன்னோடியான மகாத்மா காந்தி அவர்களின் 150 ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வை முன்னிட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018 ஒக்டோபர் மாதம் 02 ஆந் திகதி இடம்பெற்ற வைபவத்திற்கு ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அலுவலர்களுக்கு அழைப்பு விடுக்கும் பணி இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.10.24 ஆந் திகதி கோட்டை, ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற "ஜனபதி சந்தஹம் யாத்ரா" தர்ம போதனைத் தொடரின் நாற்பத்தி மூன்றாவது சபை நிகழ்வுக்கு செயலாளர் பணியகத்தின் பங்களிப்பு வழங்கப்பட்டது.

- 2018 நவம்பர் மாதம் 01 ஆந் திகதி புதிய அமைச்சரவை பதியேற்கும் நிகழ்வுக்கு இப்பிரிவின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018 நவம்பர் மாதம் 17 ஆந் திகதி இடம்பெற்ற மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் ஒருங்கிணைப்புப் பங்களிப்பு செயலாளர் பணியகத் தினால் வழங்கப்பட்டது.

- 2018.12.12 ஆந் திகதி சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரி அதிகாரிகளுடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்பாடு இப்பிரிவின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.12.12 ஆந் திகதி சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

➢ **ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்**

- வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளை விடுவிப்பது தொடர்பாக 2018.01.25, 2018.04.17, 2018.10.19 ஆகிய தினங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் ஒருங்கிணைப்புப் பணிகளுக்கு செயலாளர் பணியகத்தின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

- இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அந்த சேவையில் காணப்படும் சிக்கலான நிலைமைகள் தொடர்பாக 2018.02.23 ஆந் திகதி அச்சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் ஏற்புடைய தரப்பினருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- கொழும்பு பிரதான அஞ்சல் அலுவலகத்தை ஜனாதிபதி மாவத்தையில் அமைந்துள்ள பிரதான அஞ்சல் கட்டிடத்தில் மீள நிறுவுவது தொடர்பாக 2018.07.31 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரை யாடலின் ஒருங்கிணைப்புப் பணிகள் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

- நிலைபேறான அபிவிருத்தி சபையின் தீர்மானங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக 2018 ஆகஸ்ட் மாதம் 02, ஆகஸ்ட் 14 மற்றும் ஒக்டோபர் 19 ஆகிய தினங்களில் ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- Transparency International Sri Lanka நிறுவனத்துடன் இணைந்து சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தொடர்புடுத்திக் கொண்டு அரச அலுவலர்களின் பங்கேற்புடன் ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையில் 2018.06.13, 2018.08.16, 2018.08.21, 2018.08.31ஆகிய தினங்களில் செயலமர்வுகள் சில நடாத்தப்பட்டதுடன், அவற்றை ஒருங்கிணைப்புச் செய்தல்.

- அழிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள விசேட விலங்குகள் மற்றும் தாவரங்களை சர்வதேசரீதியில் வர்த்தகம் செய்வது தொடர்பான உடன்படிக்கைத் (CITES) தரப்பினரின் 18 ஆவது அமர்வை 2019 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்துவது தொடர்பாக 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 11, 14, 17 ஆகிய தினங்களில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், டிசம்பர் மாதம் 21 ஆந் திகதி அந்த உடன்படிக்கையின் பொதுச் செயலாளர் அவர்கள் ஜனாதிபதியின் செயலாளர் அவர்களை சந்திப்பதற்கான நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் 2018.12.03 ஆந் திகதி இடம்பெற்ற கொத்துக் குண்டு தொடர்பான உடன்படிக்கை (OSLO Convention) கலந்துரையாடலின் ஏற்பாடு மற்றும் ஒருங் கிணைப்புப் பணிகள் செயலாளர் பணியகத்தின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டன.

➢ செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய பணிகள்

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.01.28 ஆந் திகதி பொல்கொல்ல அணைக்கட்டு அருகே இடம்பெற்ற "சாலிஸ் வஸரக - மகாவலி அசிரிய" (நாற்பது வருட மகாவலியின் அழகு) நிகழ்வின் ஏற்பாட்டு நடவடிக்கைகளில் ஜனாதிபதி உதவிச் செயலாளர் கலந்துகொள்ளுதல்.

- 70 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு 2018 பெப்ரவரி 04 ஆந் திகதி அஞ்சல் திணைக்களத்தினால் நினைவு முத்திரையொன்று வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், அந்த நிகழ்வின் ஏற்பாடுகளில் ஜனாதிபதி மேலதிக செயலாளர் (பதில்) கலந்துகொள்ளுதல்.

- திறந்த அரச கூட்டுப்பங்காண்மையின் தேசிய கேந்திர அலுவலராக செயலாளர் பணியகத்தின் மேலதிக செயலாளர் (பதில்) பணியாற்றுகிறார். இந்த தேசிய செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கு மக்களின் கருத்துக்களைச் சேகரிக்கும்போது சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து ஏனைய பொறுப்பான அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு மக்கள் கருத்துக்களைப் பெறும் பணிகள் கொழும்பு, யாழ்ப்பாணம், புத்தளம், திருகோணமலை, கண்டி, கேகாலை, அனுராதபுரம், காலி, பதுளை ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றதுடன், அதனூடாக சேகரிக்கப் பட்ட தகவல்கள் மற்றும் கருத்துக்களை மேலும் பகுப்பாய்வு செய்து மேற்குறிப்பிட்ட தேசிய செயல் திட்டத்திற்கான கடப்பாடுகள் எவை என்பதை இனங்கண்டு திறந்த அரச கூட்டுப் பங்காண்மையின் இரண்டாவது தேசிய செயல் திட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கு செயலாளர் பணியகத்தின் பங்களிப்பு வழங்கப்பட்டது.

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சிபார்சுகளை ஒருங்கிணைக்க உதவுவதற்கான அதிகாரிகள் குழுவைப் பிரதிநிதித்துப்படுத்தி 2018.01.09, 2018.01.16, 2018.03.14 ஆந் திகதிகளில் பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.

- தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் 2017 – 2021 ஐச் செயற்படுத்துவது தொடர்பாக 2018.01.04, 2018.01.16, 2018.02.14, 2018.04.27, 2018.06.07 ஆகிய தினங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.

- காணாமற் போன நபர்கள் தொடர்பான குழுவின் அலுவல்கள் தொடர்பாக 2018 நவம்பர் 19 ஆந் திகதி முதல் நவம்பர் 23 ஆந் திகதி வரை சைப்பிரஸ் நாட்டிற்கான கல்விச் சுற்றுலாவொன்றில் செயலாளர் பணியகத்தின் மேலதிக செயலாளர் (பதில்) கலந்துகொள்ளுதல்.

➢ **சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்**

கீழே குறிப்பிட்டுள்ளவாறு சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

தொடர் இலக்கம்	அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்கள்	வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை
01.	ஜனாதிபதி அலுவலகத்தின் அதிகாரிகள்	24
02.	தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவின் அதிகாரிகள்	03
03.	தேசிய கல்வி ஆணைக்குழுவின் அதிகாரிகள்	02
04.	கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்	05
05.	இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள்	19
06.	இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள்	03
07.	இலங்கை மன்றக் கல்லூரியின் அதிகாரிகள்	03
வழங்கப்பட்ட மொத்த அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை		**59**

➢ **சுற்றிக்கைகளை வெளியிடுதல் மற்றும் சுற்றறிக்கை கோப்புக்களை இற்றைப்படுத்தல்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களுடைய சுற்றறிக்கைகள் இப்பிரிவினால் வெளியிடப்பட்டன.

தொடர் இலக்கம்	சுற்றறிக்கையின் பெயர்	சுற்றறிக்கை இலக்கம்	திகதி
01.	ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான திகதிகளைத் தெரிவு செய்யும்போது ஏற்படும் அசௌகரியங்களைக் குறைத்தல்	PS/SP/SB/01/18	2018.01.05
02.	அரச துறையின் வைபவங்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்	PS/SP/SB/21/18	2018.12.07

இப்பிரிவினால் ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை உள்ளடக்கிய கோப்புக்கள் இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டில் ஜனாதிபதி அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட 19 சுற்றறிக்கைகளும், அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட 46 சுற்றறிக்கைகளும் உள்ளடங்கியுள்ளன. அதேபோன்று 2006 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், 2017 ஆம் ஆண்டு முதல் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய பல்வேறுபட்ட

சுற்றறிக்கைளும் மேற்குறிப்பிட்ட கோப்புகளில் உள்ளடங்கும். இந்த அனைத்து சுற்றறிக்கைகள் தொடர்பான தகவல்களும் தரவு அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அவை ஸ்கேன் செய்யப்பட்டு கணனியில் உட்படுத்தப்பட்டுள்ளன.

- **ஜனாதிபதி அலுவலகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளினால் வெளியிடப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் அமைச்சரவைக் குறிப்புக்களுக்கு இலக்கங்களை வழங்குதல்.**

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் காணப்படும் ஒவ்வொரு பிரிவினாலும் அனுப்பி வைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் அமைச்சரவைக் குறிப்புக்களுக்கு இப்பிரிவினால் இலக்கங்கள் வழங்கப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டில் 76 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் குறிப்புக்களுக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அமைச்சரவை விஞ்ஞாபனங்ளினதும் குறிப்புக்களினதும் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகள் தரவு அமைப்பின் உதவியுடன் இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்படுகின்றன.

- **ஜனாதிபதி "பரிஸர நியமு" (சூழல் முன்னோடி) தங்கப் பதக்கம் பெறுவோரைத் தெரிவு செய்வதற்கான நடுவர் குழுக்களின் பணிகள்**

2018 ஆம் ஆண்டில் கீழுள்ள இடங்களில் இடம்பெற்ற பரிஸர நியமு தங்கப் பதக்கங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளின் நடுவர் குழுப் பணிகளில் ஈடுபட்டது.

திகதி	இடம்
2018 மார்ச் 05	புத்தளம் மாவட்டச் செயலகம்
2018 மே 21, 22	பொ/திம்பு/கெகுழுவெல மகா வித்தியாலயம், அரலகங்வில
2018 யூன் 07	காலி மாவட்டச் செயலகம்
2018 யூலை 05	அம்பாந்தோட்டை, போவல கனிஷ்ட வித்தியாலயம்
2018 யூலை 10, 17	மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பிரதான அலுவலகம், பத்தரமுல்லை
2018 ஆகஸ்ட் 24	பொல்கொல்ல மாகாண அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை
2018 நவம்பர் 02	மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பொல்கொல்ல அலுவலகம்

- **தாமரைக் கோபுர கருத்திட்டம்**

தாமரைக் கோபுரம் தொடர்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் மற்றும் உடன்பாட்டை எட்டுவதற்கான குழுவினதும் கருத்திட்டத்தினதும் செயலாளர் எனற வகையில் மேலதிக செயலாளர் (பதில்) 2018.01.26, 2018.05.02, 2018.07.16, 2016.07.10, 2018.09.01, 2018.11.26, 2018.11.29, 2018.12.05, 2018.12.10, 2018.12.18, 2018.12.27 ஆகிய தினங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.

- **மாவட்ட ஒருங்கிணைப்பு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களை நியமித்தல்**

2018 ஆம் ஆண்டில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு 133 இணைத் தலைவர்களையும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு 07 இணைத் தலைவர்களையும் நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவர்கள் 59 பேரினதும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவர்கள் 10 பேரினதும் நியமனங்களை ரத்துச் செய்வதற்கான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு நியமிக்கப் பட்ட இணைத் தலைவர்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு அமைப்பொன்று இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்படுகிறது.

- **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் பிரகடனங்கள் தொடர்பான அலுவல்கள்**

கௌரவ அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிமேதகு தூதுவர்கள் மற்றும் கௌரவ நீதிபதிகள் உட்பட அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்குத் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் பிரகடனங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய நபர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 286 பிரகடனங்கள் சார்பாக அவை கிடைக்கப்பெற்றதாக கடிதங்களை அனுப்பும் பணி 2018 ஆம் ஆண்டில் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அந்தப் பிரகடனங்களை உள்ளடக்கிய தரவு அமைப்பொன்று இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்படுகிறது.

- **சிற பெறுகைக் குழுவில் பங்கேற்றல்**

2018 ஆம் ஆண்டில் 20 சிறு பெறுகைக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றதுடன், 87 பெறுகைச் செயற்பாடுகளுக்குப் பங்களிப்பு வழங்கப்பட்டது.

- **பாதுகாப்பு அமைச்சினால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படும் கோப்புக்கள் தொடர்பான அலுவல்கள்**

பாதுகாப்பு அமைச்சினால் அந்த அமைச்சின் விடயத்துக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்படும் கோப்புக்களைப் பரீட்சித்து, அவற்றின் துல்லியத்தன்மையை உறுதி செய்த பின்பு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் நடவடிக்கை 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆந் திகதி முதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த வருடத்தில் அவ்வாறான 190 கோப்புகள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் விசேட நிகழ்வுகளின்போது அதிதிகளை வரவேற்று ஆசனங்களை வழங்கும் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் தொடர்பான அலுவல்கள்**



ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் விசேட நிகழ்வுகளின்போது அதிதிகளை வரவேற்று ஆசனங்களை வழங்கும் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவினர் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கீழுள்ள நிகழ்வுகளின்போது ஆசனங்களை ஒதுக்கும் பணியில் ஈடுபடுத்தப் பட்டதுடன், அதன் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

தொடர் இலக்கம்	வைபவம்	இடம்பெற்ற திகதி
01.	அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற ஜனாதிபதி அலுவலக நலன்புரிச் சங்கத்தின் நட்புறவு ரீதியான சந்திப்பு	2018.01.15
02.	சிங்கப்பூர் பிரதமரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முன்னிட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களில் தலைமையில் இடம்பெற்ற பகற் போசன விருந்துபசார நிகழ்வு	2018.01.23
03.	இந்தோனேசிய ஜனாதிபதியின் இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை முன்னிட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களில் தலைமையில் இடம்பெற்ற இராப் போசன விருந்துபசார நிகழ்வு	2018.01.24
04.	புதிய அமைச்சரவை மாற்றத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கௌரவ அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு	2018.02.25
05.	புதிய அமைச்சரவை மாற்றத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கௌரவ அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு	2018.05.01
06.	புதிய அமைச்சரவை மாற்றத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கௌரவ அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு	2018.05.02
07.	இப்தார் இராப் போசன விருந்து	2018.06.07
08.	கலாநிதி சீ டப்ள்யு கன்னங்கர அவர்களின் உருவச் சிலை யுடன் கூடிய நினைவுப் படிகத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தல்	2018.07.10
09.	தாய்லாந்து பிரதமரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முன்னிட்டு இடம்பெற்ற இராப் போசன விருந்துபசார நிகழ்வு	2018.07.12
10.	தாய்லாந்து பிரதமரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முன்னிட்டு கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பகற் போசன விருந்துபசார நிகழ்வு	2018.07.13
11.	"தேசிய நிலைபேறான கலந்துரையாடலை" வெளியிட்டு வைக்கும் தேசிய நிகழ்வு	2018.08.06
12.	மகாத்மா காந்தி அவர்களின் 150 ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வு	2018.10.02
13.	நத்தார் தினத்திற்காக இடம்பெற்ற விசேட இராப் போசன விருந்துபசார நிகழ்வு	2018.12.20

மேற்குறித்த குழுவினருக்காக 2018.03.11 ஆந் திகதி இரத்தினபுரி, கிரிஎல்ல, விஜய ஹொலிடே ரீசோட் நிறுவனத்தில் கொள்திறன் விருத்தி மற்றும் குழு ஊக்குவிப்பு விருத்தி தொடர்பான ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வொன்று நடாத்தப்பட்டதுடன், இப்பிரிவினால் அந்த செயலமர்வு ஒருங்கிணைக்கப்பட்டது.

- **உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் செயற்படுத்தும் நடவடிக்கைகள்**





அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவுக்கு ஏற்ப செயற்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் செயற்படுத்துவதற்குத் தொடர்ச்சியான பங்களிப்பு வழங்கப்பட்டது. அதற்காக பிரிவில் தரநிலை வட்டம் அமைக்கப்பட்டதுடன், வட்டக் கருத்திட்டமாக கௌரவ கெபினட் அமைச்சர்கள், கௌரவ ஆளுநர்கள், கௌரவ முதலமைச்சர்கள், கௌரவ பிரதியமைச்சர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு அமைப்பொன்றை இற்றைப்படுத்தி பேணிச் செல்லப்பட்டது. அதேபோன்று தரநிலை வட்டங்களின் முன்மொழிவுகளுக்கு ஏற்ப ஐம்பெரும் எண்ணக் கருக்களைப் பயன்படுத்தி பிரிவினை நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உற்பத்தித்திறன் போட்டியின் நடுவர் பணிக்காக வருகை தந்த நடுவர் குழுவினருக்கு செயலாளர் பணியகத்தில் உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் செயற்படுத்துவது தொடர்பாகவும் தரநிலை வட்டக் கருத்திட்ட முன்மொழிவாகத் தயாரிக்கப்பட்ட தரவு அமைப்பு தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

- **நிர்வாக அலுவல்கள்**

செயலாளர் பணியகம் மற்றும் செயலாளர் பிரிவின் கீழ் காணப்படும் பிரிவுகளின் மேலதிக நேரம், விடுமுறைகளை அங்கீகரித்தல் உட்பட சில நிர்வாக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அறிமுகம்

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்களிலும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஜனாதிபதியின் செயலாளரினால் ஒப்படைக்கப்படும் விசேட உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியின் செயலாளரின் கீழ் நிறுவப்பட்டுள்ள் ஒரு பிரிவாகும்.

நோக்கங்கள்

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்களிலும் நிதி அலுவல்கள் தொடர்பாக காணப்படும் உள்ளக நிர்வாக முறைமையில் கலந்துகொள்ளுதல். அந்த நடவடிக்கைகளில் தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் வெளிப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளகக் கண்காணிப்பின் முறையான தன்மை மற்றும் போதிய தன்மை தொடர்பான தொடர்ச்சியான ஆய்வு மற்றும் சுயாதீன மதிப்பீடொன்றைப் பேணிச் செல்லுதல்.

வேலைகள், திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்தினைத் தேடிப் பார்த்தல் தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளருக்கு உதவியாக இருத்தல்.

2018 ஆம் ஆண்டின் நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

தொடர் இலக்கம்	திட்டம்	நிலைமை	உற்பத்தித் திறன் சதவீதம் (%)
1	கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு	பூர்த்தி	100
2	பௌத்த மறுமலர்ச்சி நிதியம்	பூர்த்தி	100
3	ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதான களஞ்சிய அறை யில் பட்டியல் பொருட்களை வழங்குதல்	பூர்த்தி	100
4	உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம்	பூர்த்தி	100
5	போதைப்பொருட்கள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்	பூர்த்தி	100
6	சிறுநீரக நோய்த் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்	பூர்த்தி	100
7	2018 ஆம் ஆண்டில் ஜனாதிபதி அலுவலகத்தின் பெறுகை அலுவல்கள்	பூர்த்தி	100
8	ஜனாதிபதி நிதியம்	பூர்த்தி	100
9	தேசிய கல்விச் சேவை ஆணைக்குழு	பூர்த்தி	100
10	2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை ஜனாதிபதி செயலகத்தின் கடமைகளை மேற்கொள்ளும்போது மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை தினச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளுதல்	பூர்த்தி	100
11	கண்டி ஜனாதிபதி மாளிகையின் உள்ளக நிர்வாக அலுவல்கள் மற்றும் நிதி முகாமைத்துவ அலுவல்கள்	பூர்த்தி	100
12	அநுராதபுரம் ஜனாதிபதி மாளிகையின் உள்ளக நிர்வாக அலுவல்கள் மற்றும் நிதி முகாமைத்துவ அலுவல்கள்	பூர்த்தி	100
13	ஜனாதிபதி அலுவலக போக்குவரத்துப் பிரிவின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம்	(*)	40

*2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய ஜனாதிபதி அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் தொடர்பான கணக்காய்வறிக்கை 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் அந்த அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

பிரத்தியேகச் செயலாளர் பிரிவு

அறிமுகம்

கௌரவ ஜனாதிபதி அவர்களினால் மற்றும் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளின்போது ஜனாதிபதி பிரத்தியேகச் செயலாளர் பிரிவு என்ற வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

நோக்கங்கள்

கௌரவ ஜனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சிகள்/அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகள்/கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக அதிகபட்ச வினைத்திறனுடன் செயற்படுதல்.

பிரதான பணிகள்

	செயற்பாடுகள்	நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்
1	கௌரவ ஜனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சிகள்/ அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகள்/கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக அதிகபட்ச வினைத்திறனுடன் செயற்படுதல்.	உத்தரவு கிடைக்கப் பெற்றவுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
2	கௌரவ ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் சந்திப்பு நிகழ்வு களைக் குறிப்பிட்டு நாட்குறிப்பினைத் தயார் செய்தல். அதற்கமைய நாளாந்த நிகழ்ச்சிகளை வரிசைப் படுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஏற்புடைய பிரிவுகள் மற்றும் அதிகாரிகளை அறிவுறுத்தல்	அதே
3	கௌரவ ஜனாதிபதி அவர்களின் உத்தரவுக்கு அமைவாக அவரது கையொப்பத்திற்காக கடிதங்களைத் தயாரித்தல்	அதே
4	கௌரவ ஜனாதிபதி அவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய கடிதங்கள்/அறிக்கைகள், வைபவ அழைப் பிதழ்கள் போன்ற வற்றைக் குறிப்புக்களுடன் அவருக்குச் சமர்ப்பித்தல் மற்றும் அவற்றுக்கு வழங்கப்படும் உத்தரவுகளுக்கு அமைவாக செயற்படுதல்	நாளாந்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
5	கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்களினால் அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்	அதே
6	கிடைக்கப் பெறும் கடிதங்கள் தொடர்பான தகவல் களை இற்றைப்படுத்தல்/கோப்புக்களைத் தயாரித்தல் மற்றும் பேணிச் செல்லுதல்	அதே

பணியாட் குழு தலைமை அலுவலர் பிரிவு

அறிமுகம்

ஜனாதிபதி பணியாட் குழுவினரை முகாமைத்துவம் செய்தல், கௌரவ ஜனாதிபதி அவர்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், கொழும்பு மற்றும் வெளிப் பிரதேசங்களில் வைபவங்கள் மற்றும் கூட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு கிடைக்கப் பெறும் கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகள் தொடர்பாக அவரது அறிவுறுத்தலுக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளுதல், ஜனாதிபதி பணியாட் குழு தலைமை அலுவலர் பிரிவிடம் ஒருங்கிணைப்புப் பணிகளுக்காக ஒப்படைக்கப்படும் பல்வேறுபட்ட கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன ஜனாதிபதி பணியாட் குழு தலைமை அலுவலர் பிரிவின் பிரதான பொறுப்புக்கள் ஆகும்.

நோக்கங்கள்

- கௌரவ ஜனாதிபதி அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- கௌரவ ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் வைபவங்கள் மற்றும் கூட்டங்களுக்கு வினைத்திறன்மிக்க, உற்பத்தித் திறன்மிக்க அணுகலை வழங்குதல்.
- கௌரவ ஜனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சிகளை வினைத்திறன்மிக்கதாகவும், உற்பத்தித் திறன்மிக்கதாகவும் மேற்கொள்ளுதல்.
- கௌரவ ஜனாதிபதி அவர்களின் பிரத்தியேக பணியாட் குழுவினரை முறையான, வினைத்திறன்மிக்க சேவையை வழங்கும் வகையில் ஈடுபடுத்தல்.
- தமது தேவைகள் நிறைவேற்றப்படும் சிறந்ததொரு அரச சேவையின் கருத்துருவை பொதுமக்கள் மத்தியில் கட்டியெழுப்புதல்.
- பௌத்த தர்மத்தின் நிலைபேறான தன்மைக்கு அரச தலைவர் வழங்கும் உதவிக்கான அணுகலை வழங்குதல்.
- வடமத்திய உலர் வலயத்தைச் சேர்ந்த பொலன்னறுவை மாவட்டத்தில் கஷ்டங்களை எதிர்நோக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு அரச தலைவர் வழங்கும் உதவிக்கான அணுகலை வழங்குதல்.
- கிறிஸ்தவ சமய மற்றும் கலாசாரத்தின் முன்னேற்றத்திக்காக அரச தலைவர் வழங்கும் உதவிக்கான அணுகலை வழங்குதல்.
- ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகளை வினைத்திறன்மிக்கதாகவும், உற்பத்தித் திறன் மிக்கதாகவும் மேற்கொள்ளுதல்.
- சங்கைக்குரிய தேரர்கள் கௌரவ ஜனாதிபதி அவர்களின் கவனத்தை ஈர்க்கும் விடயங்கள் தொடர்பாக வினைத்திறன்மிக்க, உற்பத்தித் திறன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

பிரதான பணிகள்

1. ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகிய இடங்களின் பாதுகாப்பு அலுவல்களைப் பாதுகாப்புப் பிரிவினருடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
2. கௌரவ ஜனாதிபதி அவர்கள் அலுவலகத்திற்கு வெளியே கலந்துகொள்ளும் வைபவங்களின் தயார்நிலை மற்றும் அவர் கலந்துகொள்வதன் பொருத்தத் தன்மையினைப் பரீட்சித்து உறுதிப்படுத்தல்.

3. கௌரவ ஜனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

4. கௌரவ ஜனாதிபதி அவர்களின் பிரத்தியேகப் பணியாட் குழுவினரின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ அலுவல்களை மேற்கொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

5. பொதுமக்களினால் கௌரவ ஜனாதிபதி அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அனுப்பி வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக சந்தர்ப்பதிற்கேற்றவாறு பதில்களை வழங்குதல் மற்றும் அந்த அலுவல்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

6. "பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தினை" செயற்படுத்தி பௌத்த மத, கலாசார மற்றும் கல்விச் சேவைகளுக்காக நடாத்திச் செல்லப்படும் நிறுவனங்கள் மற்றும் விகாரைகளிலுள்ள பிக்குமார்களின் நலனோம்புகைப் பணிகளை மேற்கொள்ளுதல். (இந்தக் கருத்திட்டம் 2018.11.09 ஆந் திகதி விசேட கருத்திட்டப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது)

7. 2016 – 2020 "எழுச்சி பெறும் பொலொன்னறுவை" மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தினைச் செயற் படுத்துவதன் ஊடாக பொலன்னறுவை மாவட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தல். (2018 மார்ச் மாதம் முதல் தனியானதொரு பிரிவாக இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது)

8. "மடுமாதா தேவாலய அபிவிருத்தி" கருத்திட்டத்தைச் செயற்படுத்தி கிறிஸ்தவ பக்தர்களின் கேந்திர நிலையமாக மடுமாதா தேவாலயத்தை மாற்றியமைத்தல். (இக்கருத்திட்டம் 2018.11.09 ஆந் திகதி ஜனாதிபதி பணியாட் குழு தலைமை அலுவலர் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது)

9. ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடகப் பிரிவை மேற்பார்வை செய்தல்.

10. சங்கைக்குரிய தேரர்களுடனான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

1. கௌரவ ஜனாதிபதி அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்.

அலுவலகத்தில், உத்தியோகபூர்வ இல்லத்தில் மற்றும் களக் கடமைகளின்போது பாதுகாப்புத் தலைமை அலுவலர்களுடன் கலந்துரையாடி ஒருங்கிணைப்பு வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல். கௌரவ ஜனாதிபதி அவர்களினதும் அலுவலகத்தினதும் தகவல்கள் தேவையற்ற தரப்பினரிடம் செல்வதைத் தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள், இலத்திரனியல் உபகரணங்களை அலுவலகத்தினுள் எடுத்து வருவதைக் கட்டுப்படுத்தல், அலுவலகத்திற்கு வருகை தரும் புதிய நபர்களின் வருகை மற்றும் வெளியேறுகையைக் கண்காணிக்கும் வேலைத்திட்டமொன்றை நிறுவுதல் போன்றன மூலம் கௌரவ ஜனாதிபதி அவர்களினதும் ஜனாதிபதி அலுவலகத்தினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

2. கௌரவ ஜனாதிபதி அவர்களின் கொழும்பு மற்றும் வெளிப்பிரதேசக் கூட்டங்கள் மற்றும் வைபவங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

கௌரவ ஜனாதிபதி அவர்கள் கொழும்பு மற்றும் வெளிப் பிரதேசங்களில் கலந்துகொள்ளும் கூட்டங்களின் தயார்நிலை, அதில் கலந்துகொள்வதன் பொருத்தத்தன்மை மற்றும் அங்கே உரையாற்றுவதன் பொருத்தத்தன்மை, அழைப்பு விடுக்கப்பட்டுள்ள மற்றும் கலந்துகொள்வதை உறுதிப்படுத்தியுள்ள அதிதிகள் தொடர்பான தகவல்கள், கூட்டத்தின் நோக்கம், கூட்டம் அல்லது வைபவ இடத்திற்குச் செல்லும் வீதி விபரம், ஊடக அறிக்கையிடல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக முழுமையான புரிதலைப் பெற்றுக்கொண்டு அது தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் வைபவங்கள் இற்றைப்படுத்தப்பட்டன.

இத்தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஜனாதிபதி ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கு மாவட்டங்களில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அலுவலர்களிடமும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளிடமும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ளும் தகவல்களை மாவட்டச் செயலாளர்களிடம் உறுதிப்படுத்திக் கொள்ளும் வேலைத்திட்டமொன்றும் செயற்படுத்தப்படுகிறது.

3. கௌரவ ஜனாதிபதி அவர்களின் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் உற்பத்திறன் மிக்க வகையில் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தல்

கௌரவ ஜனாபதி அவர்கள் கலந்துகொள்ளும் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறும் கூட்டங்களின் நோக்கங்கள், முன்வைக்கப்பட முடியுமான சிக்கல்கள் மற்றும் கோரிக்கைகள், கலந்துகொள்ளும் தரப்பினர், கூட்டத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப நேரடியாக சம்பந்தப்படும் நிறுவனங்கள் தொடர்பாக முழுமையான புரிதலைப் பெற்றுக்கொண்டு கௌரவ ஜனாதிபதி அவர்களுக்குத் தெரியப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டத்திற்கு கௌரவ ஜனாதிபதி அவர்கள் வருகை தர முன்பு நிகழ்ச்சிநிரல், கலந்துகொள்வோர் பற்றிய தகவல்கள், கூட்டத்தின் நோக்கத்திற்கு ஏற்புடைய பின்புலத் தகவல்களைக் கொண்ட ஒரு கோப்பு மற்றும் குறிப்பெடுத்துக் கொள்வதற்கான எழுதுகருவி வகைகள் மேசை மீது தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல். சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஊடக அறிக்கையிடலுக்கான தயார் நிலை நடவடிக்கைகள் தொடர்பாக மிகவும் கவனஞ் செலுத்தப்பட்டது.

4. ஜனாதிபதியின் பிரத்தியேக பணியாட் குழுவினரை முகாமைத்துவம் செய்தல்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பிரத்தியேக பணியாட் குழுவினருக்கு விடயரீதியான அறிவு, அலுவலக முறைமைகள், ஒழுக்கம் மற்றும் மனப்பாங்கு விருத்திக்கான செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மூலம் நோக்கங்கள் அடையப் பெற்றுள்ளன.

5. கௌரவ ஜனாதிபதி அவர்களுக்குத் தனிப்பட்டரீதியில் கிடைக்கப்பெறும் கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகள் தொடர்பாகப் பதில்களை வழங்குதல்.

கௌரவ ஜனாதிபதி அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் பொது மக்களின் கோரிக்கைகளை இனங்கண்டு வகைப்படுத்தி ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்பி வைத்தல். அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர்தல், பொது மக்களின் தேவை-களை நிறைவேற்றுவதில் காணப்படும் தடைகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவது தொடர்பாகப் பின்னாய்வு செய்தல், பொது மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலம் அந்தக் கோரிக்கைகள் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளில் கிட்டத்தட்ட 9000 கோரிக்கைகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. "பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தைச்" செயற்படுத்தி பௌத்த சமய, கலாசார மற்றும் கல்விச் சேவைகளுக்காக நடாத்திச் செல்லப்படும் நிறுவனங்கள் மற்றும் விகாரைகளிலுள்ள தேரர்களின் நலனோம்புகைப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2018.11.09 ஆந் திகதி விசேட கருத்திட்டப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தப் பிரிவு மூலம் கருத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அந்தப் பிரிவு மூலம் 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய செயலாற்றுகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7. 2016 – 2020 "எழுச்சி பெறும் பொலொன்னறுவை" மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் ஊடாக பொலன்னறுவை மாட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

2018 மார்ச் மாதம் முதல் எழுச்சி பெறும் பொலொன்னறுவை மற்றும் சிரிசர பிவிசும என தனியான பிரிவினால் கருத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அந்தப் பிரிவு மூலம் 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய செயலாற்றுகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

8. "மடுமாதா தேவாலய அபிவிருத்தி" கருத்திட்டத்தைச் செயற்படுத்தி கிறிஸ்தவ பக்தர்களின் கேந்திர நிலையமாக மடுமாதா தேவாலயத்தை மாற்றியமைத்தல்.

- அபிவிருத்திப் பணிகளுக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள 287 ஏக்கர் காணியை குறைந்தபட்சம் 300 ஏக்கர் வரை அதிகரிப்பதற்குத் தேவையான அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் நிபந்தனைகளை உள்ளடக்கி எல்லைகள் மற்றும் அடையாளங்களை உள்ளடக்கிய தகுதிப் பத்திரத்தைத் தயாரித்து வர்த்தமானியை வெளியிடுதல் (நிலத்தின் பயன்பாட்டு உரிமையை வழங்குதல்)

9. ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடகப் பிரிவை மேற்பார்வை செய்தல்.

- கௌரவ ஜனாதிபதி அவர்கள் மற்றும் பணியாட் குழுவினர் கலந்துகொள்ளும் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஊடகப் பிரிவின் பங்கேற்பு தொடர்பான உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் தொடர்பாக முன் உசாவலை மேற்கொண்டு ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கௌரவ ஜனாதிபதி அவர்களின் விசேட பங்கேற்பு மற்றும் பணியாட் குழுவினர் கலந்துகொண்ட பல்வேறுபட்ட நிகழ்வுகளின்போது ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் போன்றவற்றின் துல்லியத்தன்மை, வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஊடகப் பிரிவின் பணியாட் குழுவினர் மத்தியில் நாளாந்த செயற்பாடுகளின்போது ஏற்படும் தேவைப்பாடுகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி அவற்றை முடிந்தளவு தீர்த்து வைப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10. சங்கைக்குரிய தேரர்களுடனான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- கௌரவ ஜனாதிபதி அவர்களை சந்திப்பதற்கு வருகை தரும் சங்கைக்குரிய தேரர்களுக்கு ஆசனங்களை வழங்கி அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ள சந்தர்ப்பங்களில் அந்த அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஏனைய சந்தர்ப்பங்களில் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சங்கைக்குரிய தேரர்களின் கோரிக்கைகள் முடிந்தளவு நிறைவேற்றப்பட்டுள்ளன.

அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவு

நாட்டின் அபிவிருத்தி முற்றுமுழுதாக உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின்பால் வரையறுக்கப்படாது தனிநபர் அபிவிருத்தியின் ஊடாக ஒழுக்கநெறிமிக்க சமூகமொன்றின்பாலும் பலமான சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கத்தினை முன்னிறுத்தியும், அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் ஜனாதிபதி செயலகத்தின் "அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால்" பின்வரும் விசேட தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
2. போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
3. சிறுநீரகநோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
4. "பிள்ளைகளைக் காப்போம்" தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
5. நிலைபேறுடைய பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்.
6. அங்கவீனர்கள் மற்றும் முதியோர் சமூகத்தினரை வலுவூட்டுவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்
7. மத அலுவல்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள்.
8. பிற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் (கலை, கலாசாரக் கொள்கையைத் தயாரித்தல்)

மேற்போந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தாபிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி மற்றும் விசேட பிரிவுகள் மூலம்,

- திட்டவட்டமான காலப்பகுதியுடன் கூடிய தேசிய திட்டங்களைத் தயாரித்தல்.
- அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான சிறந்த ஒருங்கிணைப்பு.
- சட்ட மற்றும் கொள்கை விடயங்கள் சம்பந்தமாகத் தலையிடுதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் நிதி ஏற்பாடுகளையும் வசதிகளையும் வழங்குதல்.
- சிவில் அமைப்புகளுடனும் பயனாளிகளுடனுமான ஒருங்கிணைப்பு.
- மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வு.
- கிரமமான தொடர் நடவடிக்கைகள்.

2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவுக்கு 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட தோடு, இதில் 98 சதவீதத்திற்கு மேற்பட்ட நிதி முன்னேற்றம் எய்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 1,250 மில்லியன் ரூபாவிலிருந்து 92 சதவீதத்திற்கும் கூடுதலான அளவு பல்வேறுபட்ட கருத்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் செலவுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் 1400 மில்.ரூ. வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு தேசிய நிகழ்ச்சித்திட்டங்களிடையே கீழுள்ள வாறு ஒதுக்கப்பட்டதுடன், முன்னேற்றம் உயர் மட்டத்தில் காணப்படுகிறது. 2019 ஆம் ஆண்டிலும் 1250 மில்.ரூ. வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்ச்சித்திட்டம்	2018 வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு (மில்.ரூ.)	உண்மைச் செலவினம் மில்.ரூ.	2019 வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு (மில்.ரூ.)
சுற்றாடல் பாதுகாப்பு தே. நி.	496	255.8	300
போதைப்பொருள் ஒழிப்பு தே. நி.	198	159.8	200
சிறுநீரகநோய் ஒழிப்பு தே. நி.	395	394.6	250
"பிள்ளைகளைக் காப்போம்" தே. நி.	149	109.5	200
அங்கவீனரான முதியோர் சமூகத்தினரை வலுவூட்டுவ தற்கான தே. நி.	146	121.9	200
தேசிய கலாசார மறு மலர்ச்சிக்கான விசேட வழிநடாத்தல் அலகு	16	8.6	100
மொத்தம்	**1400**	**1355.14**	**1250**

“புனருதய” சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

தொலைநோக்கு

நிலையான சுற்றாடலொன்றை இலங்கையில் தாபித்தல்

செயற்பணி

நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பினை மேம்படுத்துவதற்கு பொறிமுறையொன்றைத் தாபித்தலும் பரந்துபட்ட மக்கள் பங்களிப்பின் ஊடாக இனங்காணப்பட்ட முக்கிய சுற்றாடல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி இலங்கையில் நிலைபேறுடைய சுற்றாடலினை தாபித்தலும்.

நோக்கங்கள்

1. இலங்கையின் நிலைபேறான தன்மைக்குத் தேவையான வன வளத்தினைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும்.
2. இலங்கையில் இயற்கைவளத்தின் நிலைபேறான பயன்படுத்துகை, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் மூலம் வாழ்வதற்கு உகந்த சுற்றாடல் முறைமையொன்றைத் தாபித்தல்.
3. நிலைபேறுடைய கழிவு முகாமைத்துவத்தின் மூலம் கழிவுகளற்ற வாழ்க்கை சூழலொன்றை உருவாக்குதல்.
4. இலங்கையில் உயிரினப் பல்வகைமை பாதுகாப்பும் நிலைபேறான முகாமைத்துவமும்.
5. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்களை அறிவுசார் ரீதியில் பலப்படுத்துதல்.
6. இலங்கை மக்களை சுற்றாடல் பாதுகாப்பின்பால் கூர் உணர்வுடைய மக்களாக மாற்றுதல்.

அறிமுகம்

பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள் துரிதமடைந்தமை, மக்களின் வாழ்க்கைமுறை மாற்ற மடைந்தமை, சனத்தொகை மற்றும் மனித தேவைகள் அதிகரித்தமை போன்ற காரணங்களினால் உருவாகும் சுற்றாடல் பிரச்சினைகளைக் குறைத்து இயற்கை வளங்களை பாதுகாத்து நிலைபேறுடைய சுற்றாடலொன்றை தாபிக்கும் நோக்கில் ”புனருதய” சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துகின்றது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு உட்பட தொடர்புடைய அமைச்சுக்களும் இந்த அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறுபட்ட திணைக்களங்களும் நிறுவனங்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நேரடியாக பங்களிப்பினை நல்குகின்றன. பின்வரும் பிரதான ஆறு விடயத்துறைகளின் கீழ் 21 தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

- **சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல்**
- **வனப்பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி**
- **நிலைபேறுடைய காணி முகாமைத்துவம்.**
- **வன விலங்குகள் மனிதர்களுக்கிடையலான சகவாழ்வு**
- **உயிரின வளங்களின் பாதுகாப்பு**
- **நிறுவன மீளமைப்பும் மேம்பாடும்.**

அந்தந்த துறைகளின் கீழ் ஜனாதிபதி அலுவலகத்தினால் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து கீழுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. அழிவை எதிர்நோக்கியுள்ள நீர்மூலங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களை முறையாகப் பாதுகாத்தல்.
2. சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் - கழிவு முகாமைத்துவம்
3. வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி
4. நிறைபேறுடைய பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள்
5. சுற்றாடல் அறிவினை மேம்படுத்துதல்
6. சுற்றாடல் பாதுகாப்பும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலும்

துறைகளுக்கு ஏற்ப ஒதுக்கீடு வழங்குதல் - 2018

தொடர். இல.	நிகழ்ச்சித்திட்டம்	வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுத் தொகை (ரூ.)
1	அழிவை எதிர்நோக்கியுள்ள நீர்மூலங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களை முறையாகப் பாதுகாத்தல்	43.7
2	சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல் - கழிவு முகாமைத்துவம்	351.9
3	வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி	6.4
4	நிறைபேறுடைய பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள்	29.2
5	சுற்றாடல் அறிவினை மேம்படுத்துதல்	51.6
6	சுற்றாடல் பாதுகாப்பும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலும்	15.2
		498

1. அழிவை எதிர்நோக்கியுள்ள நீர்மூலங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களை பரப்புகளை முறையாகப் பாதுகாத்தல்.

கண்டி, இரத்தினபுரி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமையளித்து ஏனைய மாவட்டங்களிலும் நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் 100 க்கு மேற்பட்ட கருத்திட்டங்களுக்கு 43 மில்.ரூ. ஒதுக்கீடு இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ளதுடன், தோட்டக் கம்பனிகளுக்கு உரித்தான காணிகளினுள் காணப்படும் நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.





அழிவை எதிர்நோக்கியுள்ள நீர்மூலங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களை முறையாகப் பாதுகாத்தல்			
காரணம்	**ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்**	**நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்**	**விடுவிக்கப்பட்ட/ செலுத்தப்பட்ட தொகை ரூ.**
சமாதீ தியான நிலையம் - மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள்	மாவட்டச் செயலகம் - கண்டி	மாவட்டச் செயலகம் - கண்டி	106,500
காலி மாவட்டத்தில் திய புபுல பாதுகாப்பு	மாவட்டச் செயலகம் - காலி	மாவட்டச் செயலகம் - காலி	584,000
நீர்ப்பாசனத் தொகுதியில் காணப்படும் புதிய தாவரங்களை அகற்றும் கருத்திட்டம்	இலங்கை கடற்படை	இலங்கை கடற்படை கப்பற் துறை பண்டுகாபய நிறுவனம்	14,680
மொனறாகலை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - மொனறாகலை	மாவட்டச் செயலகம் - மொனறாகலை	2,808,000
கண்டி மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - கண்டி	மாவட்டச் செயலகம் - கண்டி	4,623,500
மாத்தளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - மாத்தளை	மாவட்டச் செயலகம் - மாத்தளை	3,866,625
பதுளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - பதுளை	மாவட்டச் செயலகம் - பதுளை	4,883,200
இரத்தினபுரி மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி	மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி	6,487,430
பதுளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - பதுளை	மாவட்டச் செயலகம் - பதுளை	1,074,200
கேகாலை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	659,645
பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டி மற்றும் நீர்ப்பாசனத் துறையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவை	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	112,485

காரணம்	ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்	நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்	விடுவிக்கப்பட்ட/ செலுத்தப்பட்ட தொகை ரூ.
களுத்துறை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள	மாவட்டச் செயலகம் - களுத்துறை	மாவட்டச் செயலகம் - களுத்துறை	1,660,510
மொனறாகலை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - மொனறாகலை	மாவட்டச் செயலகம் - மொனறாகலை	1,281,237
கம்பஹா மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - கம்பஹா	மாவட்டச் செயலகம் - கம்பஹா	1,559,500
இயற்கை சுடுநீர் ஊற்றுக்களைக் கொண்ட நீர் மூலங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவை சார்ந்துள்ள வீட்டுத் தோட்டங்களில் மண் வளப் பாதுகாப்பு	மாவட்டச் செயலகம் - அம்பாறை	மாவட்டச் செயலகம் - அம்பாறை	199,300
நுவரெலியா மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - நுவரெலியா	மாவட்டச் செயலகம் - நுவரெலியா	2,430,000
புத்தளம் மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - புத்தளம்	மாவட்டச் செயலகம் - புத்தளம்	867,800
மடுவல்லாகதுர நுண் நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் கருத்திட்டம்	மாவட்டச் செயலகம் - பதுளை	மாவட்டச் செயலகம் - பதுளை	485,500
மாத்தறை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	மாவட்டச் செயலகம் - மாத்தறை	மாவட்டச் செயலகம் - மாத்தறை	3,279,886
நிலம் தரமிழப்பதைத் தடுப்பதற்கான மண், நீர்ப் பாதுகாப்புக் கருத்திட்டம்	மாவட்டச் செயலகம் - பதுளை	ஹப்புத்தலை பிரதேச செயலகம்	266,250
07 வாவிகளின் வனங்களை அளவையிட்டு வேறுபடுத்தும் கருத்திட்டம்	மாவட்டச் செயலகம் - புத்தளம்	வணாத்தவில்லு பிரதேச செயலகம்	140,000
முருதவெல நீர்த்தேக்கத்தைச் சூழவுள்ள பகுதியில் மரநடுகைத் திட்டம்	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	91,400

காரணம்	ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்	நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்	விடுவிக்கப்பட்ட/ செலுத்தப்பட்ட தொகை ரூ.
கொழும்பு மாவட்ட கருத்திட்டப் பிரேரணைகள	மாவட்டச் செயலகம் - கொழும்பு	மாவட்டச் செயலகம் - கொழும்பு	360,000
கையிலுள்ள விலைப் பட்டியல்களைத் தீர்த்தல்	மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி	மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி	203,003.39
மாத்தறை மாவட்ட 15 கருத்திட்டப் பிரேரணைகளுக்கான பிரயாணச் செலவுகள்/ ஒருங்கிணைப்புச் செலவுகள்	மாவட்டச் செயலகம் - மாத்தறை	மாவட்டச் செயலகம் - மாத்தறை	105,000
தோட்டக் கம்பனிகளுக்கு உரித்தான காணிகளினுள் காணப்படும் நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாத்தல்	மாவட்டச் செயலகம் - நுவரெலியா	வலப்பனை பிரதேச செயலகம்	3,082,500
நெலுவ பிரதேச செயலகத்தின் காணிப் பயன்பாட்டுத் திட்ட மாதிரிக் கருத்திட்டம்	மாவட்டச் செயலகம் - காலி	நெலுவ பிரதேச செயலகம்	412,000
சுது கங்கை நீரேந்துக் காணிகளில் மண் வளப் பாதுகாப்பு மேலதிக செயற்பாடுகளுக்காக	மாவட்டச் செயலகம் - மாத்தளை	மாவட்டச் செயலகம் - மாத்தளை	199,960
பன்சலதென்ன நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான கருத்திட்டம்	மாவட்டச் செயலகம் - மாத்தளை	உக்குவளை பிரதேச செயலகம்	73,000
திவிதுர எல மற்றும் கடலோர வனம் சார்ந்த சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்	மாவட்டச் செயலகம் - காலி	வெலிவிடிய பிரதேச செயலகம்	1,324,000
காணி உபயோகக் கொள்கைகள் திணைக்களம் - முன்னேற்ற மீளாய்வு மற்றும் கள மேற்பார்வைக்காக	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	காணிப் உபயோகக் கொள்கைகள் திணைக்களம்	312,000
நீர் மூலங்கள்/நீர் ஊற்றுக்கள் அமைந்துள்ள 11 இடங்களில் அறிவித்தல் பலகைகளைப் பொருத்துதல்	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	193,600
மொத்தம்			**43,746,711.39**

உள்நாட்டு சிறியளவிலான நீர் மின்சக்தித் துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல்.

இலங்கையின் பல மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் தலையீட்டுடன் பல கலந்துரையாடல் அமர்வுகள் நடாத்தப்பட்டு ஏற்புடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஏலவே செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் ஏற்புடைய நிபந்தனைகளை மீறுவதாக அமையுமாயின் அது தொடர்பாக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும், தொடர்ச்சியான கண்காணிப்பினை மேற்கொள்ளவும், மாவட்டச் செயலகங்களின் உதவியுடன் மாற்று சக்தி வளங்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டவும், முறையான தொழிநுட்ப ஆராய்ச்சி மூலம் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களை இனங்காண்பது மிகவும் பொருத்தமானது எனவும் அதனூடாக பல சிக்கல்களைத் தவிர்க்க முடியும் எனவும் இக்கலந்துரையாடல்களின்போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஏற்புடைய நீர் ஊற்றுக்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களில் செடிகளை நட்டு பாதுகாப்பது தொடர்பான அதிக பொறுப்பினை சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலைய அபிவிருத்தியாளர்களின் சங்கம் ஏற்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இலங்கை நிலைபேண்தகு வலு அதிகார சபை மற்றும் சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலைய அபிவிருத்தியாளர்களின் சங்கம் இணைந்து அரசாங்க அதிபர்களை சந்தித்து காணப்படும் சிக்கல்களை மீளாய்வு செய்வதற்குத் தேவையான வகையில் அரசியல் துறை சார்ந்தோரையும் சிவில் மக்களையும் விழிப்புணர்வூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல்

திண்மக் கழிவுப் பொருட்கள் உருவாக்கப்படும் இடத்திலேயே வேறுபடுத்தி முகாமை செய்வதை ஊக்குவித்தல் மற்றும் அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குதல், உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தலையீடு செய்தல், கொழும்பு, கம்பஹா மாவட்டங்களை முன்னிலைப்படுத்தி ஏனைய மாவட்டங்களில் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்களை செயற்படுத்தல், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், மதஸ்தலங்கள், தேசிய மற்றும் சமய நிகழ்வுகளின்போது கழிவு முகாமைத்துவம் என்பவற்றுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் கீழ் பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திண்மக் கழிவுப் பொருட்கள் உருவாக்கப்படும் இடத்திலேயே வேறுபடுத்தி முகாமை செய்வதை ஊக்குவித்தல் மற்றும் அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.
- நீர் மூலங்கள் மாசடைதலைத் தடுத்தல்.
- இலத்திரனியல் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்.
- மருத்துவரீதியான, ஆபத்தை விளைவிக்கும் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்.
- பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்காக மாற்றீடுகளை அறிமுகப்படுத்தல்.
- வீட்டு வாயு முகாமைத்துவம்.
- பசுமைக் கட்டிடங்களை நிர்மாணித்தல்.
- சமுத்திரம் மற்றும் கடற்கரை மாசடைவதைக் கட்டுப்படுத்தல்.

❖ **பெதியா கந்த மற்றும் கெரவலபிட்டிய கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்.**

கம்பஹா மாவட்டத்தின் இணைந்த திணக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு 76 மில்.ரூ. ஒதுக்கீட்டினை வழங்குதல், கெரவலபிடிய கொம்போஸ்ட் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடுகளை வழங்குதல் இவற்றில் முக்கியமானவையாகும்.



கெரவலபிட்டிய கொம்போஸ்ட் உற்பத்தி நிலையம்

❖ **கடற்கரையை சுத்தம் செய்வதற்கான சர்வதேச தினம் மற்றும் சமுத்திரச் சூழலைப் பாதுகாப்பதற்கான வாரம்**

கடற்கரையைச் சுத்தம் செய்வதற்கான சர்வதேச தினத்துடன் இணைந்தவாறு ஏற்பாடு செய்யப்பட்ட கடற் கரையைச் சுத்தம் செய்வதற்கான தேசிய நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமை யில் 2018.09.17 ஆந் திகதி முற்பகல் வேளையில் காலி, தடல்ல கடற்கரையில் இடம்பெற்றது. அதே போன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட கடற்கரையைச் சுத்தம் செய்தல் மற்றும் சமுத்திர வளங்களைப் பாதுகாப்பதற்கான வாரத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் இதனுடன் இணைந்தவாறு இடம்பெற்றது. செப்டம்பர் 15 ஆந் திகதி முதல் 22 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்ட இந்த வாரத்தில் கடற்கரை மற்றும் சமுத்திரச் சூழலை சுத்தம் செய்யும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் நாடு முழுவதும் 14 கரையோர மாவட்டங்களில் 100 கடற்கரைகளில் சமுத்திரச் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அனைத்து கரையோர மாவட்டங் களிலும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்டச் செயலகங்கள், முப்படை யினர், பொலிசார் மற்றும் சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.







❖ **கரிடாஸ் ஸ்ரீ லங்கா – செடெக் நிறுவனம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் செப்டம்பர் 30 ஆந் திகதி இடம்பெற்ற கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் உதவியுடன் கரிடாஸ் ஸ்ரீ லங்கா – செடெக் நிறுவனத்தினால் வத்தளை பள்ளியவத்த முதல் பல்லன்சேன வரையான கடற்கரையைச் சுத்தம் செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் 2018.09.30 ஆந் திகதி 5000 பேரின் பங்கேற்புடன் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது.





கடற்கரையைச் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 300.000/- ரூபாய் ஒதுக்கீடு கரிடாஸ் ஸ்ரீ லங்கா – செடெக் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

❖ **சுரகிமு ஸ்ரீ லங்கா இளைஞர் அமைப்பு ஏனைய அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் டிசம்பர் 23 ஆந் திகதி நடாத்திய கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

ஜனாதிபதி அலுவலகத்தினதும் ஏனைய அரச நிறுவனங்களினதும் உதவியுடன் சுரகிமு ஸ்ரீ லங்கா இளைஞர் அமைப்பினால் வெள்ளவத்தை முதல் தெஹிவலை வரையான கடற்கரையைச் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் 2018.129.23 ஆந் திகதி 1000 பேரின் பங்கேற்புடன் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது.











❖ **உயிரற்ற கிளிஞ்சல் சிப்பி அகழ்வு மற்றும் போக்குவரத்திற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குதல்.**

2016.10.21 ஆந் திகதி இடம்பெற்ற திருகோணமலை மாவட்ட சூழல் மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்ட உயிரற்ற கிளஞ்சல் சிப்பி அகழ்வு மற்றும் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி செயலகத்தின் தலையீட்டுடன் பல கலந்துரையாடல் அமர்வுகளை நடாத்தி ஏற்புடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய நிறுவனங்கள் பலவற்றைத் தொடர்புபடுத்தி தற்போதும் அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன.

சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல்.			
விடயம்	**ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்**	**நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்**	**விடுவிக்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூ.**
நக்கல்ஸ் வனத்திற்கு ஏற்புடைய காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் சூழல் பிரச்சினைகளைத் தீர்த்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்	மாவட்டச் செயலகம் - கண்டி	மாவட்டச் செயலகம் - கண்டி	20,000.00
கம்பஹா மாவட்ட இணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை	76,512,352.75
சூழல் நட்பான சிவனொளிபாத மலை தரிசிப்புக் காலத்தில் மலசலகூட அமைப்புக்களை நிர்மாணித்தல்	மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி	மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி	4,015,000.00
டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவ தற்காக வீரகெடிய பிரதேச வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு புகை யடிக்கும் உபகரணமொன்றை வழங்குதல்	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	250,000.00
இலத்திரனியல் கழிவுகளை முறை யாக ஒன்று சேர்ப்பதற்கு பிளாஸ்டிக் தொட்டிகளை வழங்குதல்	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	119,000.00
சட்டவிரோத பொலித்தீன வகைகளை விஞ்ஞான ரீதியாக இனங்காண்ப தற்குத் தேவையான பகுப்பாய்வு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	மத்திய சுற்றாடல் அதிகார சபை	34,900,000.00
மஹியங்கனை ரஜமகா விகாரை எசல பெரஹராவுக்கான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்	உள்ளூராட்சி அமைச்சு	ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் அலுவலகம்	179,200.00
திண்மக் கழிவு முகாமைத்துவ அலகுகளை (சம்பத் பியஸ) நிறுவுதல்	வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை	10,000,000.00
கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	மாவட்டச் செயலகம் - கம்பஹா	மாவட்டச் செயலகம் - கம்பஹா	300,000.00
கெரவலபிடிய கொம்போஸ்ட் நிலையத்தின் செயற்பாடுகளுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு	இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்	235,023,880.00
கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான பொலிசெக் உறை களைக் கொள்வனவு செய்தல்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	மத்திய சுற்றாடல் அதிகார சபை	10,000,000.00
இரத்தினபுரி மாநகர சபை சார்பில் ஆராய்ச்சி மட்டத்தில் கொம்போஸ்ட் இயந்திரமொன்றை உருவாக்குவதற்கு ஏற்பட்ட செலவினத்திற்கான மீளளிப்பு	சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு	பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் - இரத்தினபுரி	193,814.00
			371,513,246.75

1. வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி

25 மாவட்டங்களில் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல், காடு வளர்ப்பு தேசிய மர நடுகை மாதத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல், செடி வகைகளுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய பழ மற்றும் காட்டுச் செடிகள் தயாரிப்புக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காடுகளின் அளவை அதிகரிப்பதற்குத் தேவையான செடிகளை உற்பத்தி செய்தல் மற்றும் 6409 நிலைபேறான பாடசாலைகளில் செடி வளர்ப்பு நிலையங்களை உருவாக்குதல் என்பன இதில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள் ஆகும். காடுகளைப் பாதுகாப்பதற்கு அவற்றின் எல்லைகளை அளவையிட்டு அடையாளமிடுதல் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்கள் உட்பட வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு 10 மில்.ரூ. ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.





காடு வளர்ப்பு தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

- **கேகாலை மாவட்ட சூழல் மாநாடு**

2018.06.04 ஆந் திகதி இடம்பெற்ற கேகாலை மாவட்ட சூழல் மாநாட்டில் பங்குபற்றிய 4500 பேருக்கு பழக்கன்று ஒன்றுடன் சூழல் நட்பான பையொன்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



- **2018 – காடு வளர்ப்பு தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்**

“காடு வளர்ப்பு” (வனரோபா) தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய வைபவம் மதவாச்சி – மன்னார் வீதியில் தம்பனைக்குளத்தில் 2018 ஒக்டோபர் மாதம் 06 ஆந் திகதி ஜனாதிபதி அவர்களின் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

அதற்கமைய பாடசாலை மாணவர்களின் தலைமையில் 2 ஹெக்டயார் நிலப் பிரதேசத்தில் 2000 கன்றுகள் நடப்பட்டன. அத்துடன் நாடு முழுவதும் அனைத்து அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களிலும் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.





- **மன்னார் மாவட்ட சூழல் மாநாடு**

2018.10.05 ஆந் திகதி இடம்பெற்ற மன்னார் மாவட்ட சூழல் மாநாட்டில் பங்குபற்றிய 3000 பேருக்கு பழக்கன்று ஒன்றுடன் சூழல் நட்பான பையொன்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.





- **வீதியின் இரு மருங்கிலும் மரங்களை நடுதல்**

2018 காடு வளர்ப்பு தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்தவாறு அனைத்து வீதிகளின் இரு மருங்கிலும் மரங்களை நடும் நிகழ்ச்சித்திட்டமொன்றைச் செயற்படுத்துமாறு பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிருத்தி அமைச்சு அறிவுறுத்தப்பட்டதுடன் அதற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

➢ **அனைத்து அரச நிறுவனங்களிலும் செடி வளர்ப்பு நிலையமொன்றைப் பேணிச் செல்லுதல்**

அனைத்து அரச மற்றும் பகுதி அரச நிறுவன வளவிலும் காணப்படும் சிறியளவிலான நிலப் பகுதியி லாவது செடி வளர்ப்பு நிலையமொன்றைப் பேணிச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கி ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டதுடன் தற்போது அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி.			
விடயம்	**ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்**	**நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்**	**விடுவிக்கப்பட்ட /கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை**
வன வளர்ப்புக் கருத்திட்டம்	இலங்கை கடற்படை	இலங்கை கடற்படை கப்பற்துறை நிறுவனம்	407,974.60
முலங்காவில் முதல் மந்தகல்லாறு வரை பரந்துள்ள கடனீரேரிப் பகுதியில் கண்டல் சூழற் தொகுதியைப் பாதுகாக்கும் கருத்திட்டம்	இலங்கை கடற்படை	இலங்கை கடற்படை கப்பற்துறை புவனெக நிறுவனம்	270,000
தெல்தோட்டை கந்தேதென்ன வாவி வனாந்தரத்தின் 2018 ஆம் ஆண்டு பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிதாக 01 ஹெக்டயரில் காடுகளை வளர்த்தல் நடவடிக்கைகளுக்கு	வனப் பாதுகாப்புத் திணைக்களம்	வனப் பாதுகாப்புத் திணைக்களம்	1,282,950
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உயிர்ப் பல்வகைமைப் பிரிவினால் முன்வைக்கப்பட்ட 03 கருத்திட்டப் பிரேரணைகளுக்கு	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	2,210,000
தெல்தோட்டை – தற்போது நடப்பட் டுள்ள செடிகளின் பாதுகாப்புக்காக 2 வரிசை கம்பி எல்லைகளை அமைத்து வெள்ளை பொலித்தீன் மூலம் மறைத்தல்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	வனப் பாதுகாப்புத் திணைக்களம்	70,280
கண்டல் சூழற் தொகுதி பாதுகாப்புக் கருத்திட்டம்	கடற் படை	கடற் படை	162,350
எதாகல உயிரினப் பல்வகைமைப் பாதுகாப்புக் கருத்திட்டம் யானை வேலிகளை அமைத்தல் மற்றும் 1000 கன்றுகளை நடுதல்	மாவட்டச் செயலகம் - மட்டக்களப்பு	மாவட்டச் செயலகம் - மட்டக்களப்பு	358,500
மன்னார் மாவட்டத்தில் 04 ஹெக்டயார் பிரதேசத்தில் மரக்கன்றுகளை நடும் கருத்திட்டம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	வனப் பாதுகாப்புத் திணைக்களம்	1,711,996
Planing of mangrove forest for the concervation of the environment	மாவட்டச் செயலகம் - திருகோணமலை	மாவட்டச் செயலகம் - திருகோணமலை	2,630,000
			9,104,023.60

2. சூழல் தொடர்பான அறிவை விருத்தி செய்தல்

சூழல் வாரத்தை நடாத்துதல், மாவட்ட மட்டத்தில் சூழல் மாநாடுகளை நடாத்துதல், சூழல் மாநாடுகளுடன் இணைந்தவாறு சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல். மாணவர் சமூகத்தினருக்கு சூழல் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வளித்தல், முன்னுரிமைப்படுத்திய முக்கிய பல நிகழ்ச்சித்திட்டங்கள் இதன் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இது வரை 47 மில்.ரூ. ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் சுற்றாடல் கல்வி தொடர்பாக புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப அரச பாடசாலை ஆசிரியர்கள் 2,150 பேருக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக அனைத்து மாகாணங்களிலும் 15 செயலமர்வுகளை நடாத்துவதற்கு 15.25 மில்.ரூ. ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.





சூழல் தொடர்பான அறிவை விருத்தி செய்தல் - ஒதுக்கீடு வழங்குதல்.

சூழல் தொடர்பான அறிவை விருத்தி செய்தல்			
விடயம்	**ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்**	**நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்**	**விடுவிக்கப்பட்ட /கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை**
சுற்றாடல் கல்வி தொடர்பாக புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப அரச பாடசாலை ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வூட்டும் கருத்திட்டம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	15,250,000.00
கடற்படை சூழல் பாதுகாப்புக் கருத்திட்டப் பிரேரணைகள்	கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்	கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்	995,040.00
சூழல் முன்னோடி (பரிஸர நியமு) நிகழ்ச்சித்திட்டம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	24,400,000.00
கேகாலை மாவட்ட சூழல் மாநாட்டிற்காக நடாத்தப்படும் ஆரம்பக் கலந்துரையாடலின் உபசரிப்புச் செலவினம்	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	22,545.00
முன்னேற்ற மீளாய்வு மற்றும் சூழல் மாநாட்டின் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலின் உபசரிப்பு வசதிகளுக்கு	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	26,930.00
கேகாலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சூழல் மாநாடு	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	680,000.00

விடயம்	ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்	நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்	விடுவிக்கப்பட்ட /கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை
கேகாலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சூழல் மாநாட்டின் கூட்டங்களுக்கான உபசரிப்பு நடவடிக்கைகளுக்கு	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	7,445.00
கேகாலை மாவட்ட சூழல் மாநாடு	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	4,582,663.50
மன்னார் மாவட்ட சூழல் மாநாட்டிற்கு ஒதுக்கீடு வழங்குதல்	மாவட்டச் செயலகம் - மன்னார்	மாவட்டச் செயலகம் - மன்னார்	5,666,500.00
மொத்தம்			51,631,123.50

கேகாலை மாவட்ட சூழல் மாநாடு மற்றும் சர்வதேச சூழல் தின தேசிய வைபவம்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.06.04 ஆந் திகதி கேகாலை மாவட்ட சூழல் மாநாடு மற்றும் சர்வதேச சூழல் தின வைபவம் கேகாலை நிதஹஸ் மாவத்தையில் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது. அந்த நிகழ்வில் 4500 பேர் கலந்துகொண்டனர். இந்த சூழல் மாநாட்டுடன் இணைந்த வாறு பல சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கேகாலை மாவட்டம் முழுவதும் செயற்படுத்தப்பட்ட துடன், கலந்துகொண்ட அனைவருக்கும் சூழல் நட்பான பையொன்றுடன் பழக்கன்றொன்று மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பல விடயங்களை வழங்கி வைத்தார்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வழங்கி வைத்தவை

1. பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைத்தவை

i. சூழல் தினக் கருப்பொருள் உரையை நிகழ்த்தும் மாணவர்கள் இருவருக்கும் பழக்கன்றுகள் இரண்டை வழங்கி வைத்தல்.

ii. வரவேற்புரையை நிகழ்த்தும் மாணவர்கள் இருவருக்கும் பழக்கன்றுகள் இரண்டை வழங்கி வைத்தல்.

iii. சூழல் வாரத்துடன் இணைந்தவாறு பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தல்.

iv. சூழல் வாரத்துடன் இணைந்தவாறு பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தல்.

v. கேகாலை மாவட்டப் பாடசாலைகள் இரண்டுக்கு அடையாளரீதியாக விவசாய உபகரணத் தொகுதி, புத்தகங்கள் தொகுதியைக் கையளித்தல்.

vi. சாரணர் இயக்கத்துடன் இணைந்து இலங்கை நிலைப்பெறுதகு வலு அதிகார சபையினால் 10000 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து 02 இலட்சம் ஒதுக்கீட்டினை வழங்குதல்.

2. அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்

i. அரநாயக்க சாமஸர கந்த மண்சரிவினால் இடம்பெயர்ந்த 5 குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

ii. சாமஸர கந்த மண்சரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பல்லாண்டுப் பயிர் வளர்ப்புக்காக 10 மில்.ரூ. ஒதுக்கீட்டினை வழங்குதல்.

iii. கேகாலை மாவட்ட நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாப்பதறகான ஒதுக்கீட்டினை மாவட்டச் செயலாளருக்கு வழங்கி வைத்தல்.

iv. மாவனெல்லை அரச காணி பெறுனர்கள் ஐவருக்கு 5 காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

3. கேகாலை மாவட்ட கழிவு முகாமைத்துவத்திற்காக வழங்கி வைக்கப்பட்டவை

i. அரநாயக்க பிரதேச சபைக்கு உக்கிப் போகாத கழிவு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒதுக்கீட்டினை வழங்குதல்.

ii. மாவனெல்லை பிரதேச சபைக்கு கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான இயந்திரங்களை வழங்குதல். (இரண்டு டேலர்கள்)

iii. தெரணியகல பிரதேச சபைக்கு கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான இயந்திரங்களை வழங்குதல். (டிரக்டர் டேலர் 1)

iv. புளத்கொஹுபிட்டிய பிரதேச சபையின் 03 டிரக்டர் டேலர்களைத் திருத்துதல் மற்றும் கழிவு நிலைய நிலப் பிரதேசத்தை தயார்படுத்துவதற்குத் தேவையான ஒதுக்கீட்டினை வழங்குதல்.

v. கேகாலை நகர சபைக்கு பொப் கெட் இயந்திரமொன்றை வழங்குதல்.

vi. டெடோல் நிறுவனத்துடன் இணைந்து குப்பைத் தொட்டிகளை கேகாலை நகர சபைக்கு அடையாள ரீதியாக வழங்கி வைத்தல்.





மன்னார் மாவட்ட சூழல் மாநாடு மற்றும் காடு வளர்ப்பு தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய வைபவம்

“மன்னார் மாவட்ட சூழல் மாநாடு” மன்னார் நகர சபை மைதானத்தில் “காடு வளர்ப்பு (வனரோபா)” தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய வைபவம் மதவாச்சி – மன்னார் வீதியில் தம்பனெக்குளத்தில் 2018 ஒக்டோபர் மாதம் 05 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

அதற்கமைய 2018 – காடு வளர்ப்பு தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் முகமாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கரங்களினால் நினைவுப் படிகம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டு பாடசாலை மாணவர்களின் தலைமையில் 2 ஹெக்டயார் நிலப் பிரதேசத்தில் 2000 மரக் கன்றுகள் நடப்பட்டன. (1.7 மில்.ரூ. ஒதுக்கீடு ஜனாதிபதி அலுவலகத்தினால் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதுடன், மூன்று வருடங்கள் வரை அந்த மரக் கன்றுகளைப் பராமரிப்பதற்கான ஒதுக்கீடு ஜனாதிபதி அலுவலகத்தினால் எதிர்காலத்தில் வழங்கப்பட்டவுள்ளது.)

இந்த சூழல் மாநாட்டுடன் இணைந்தவாறு பல சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மன்னார் மாவட்டம் முழுவதும் செயற்படுத்தப்பட்டதுடன் பங்குபற்றிய அனைவருக்கும் சூழல் நட்பான பையொன்றுடன் பழக் கன்று மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அதேபோன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பல விடயங்களை வழங்கி வைத்தார்.

4. அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வழங்கி வைத்தவை

i. பாடசாலை மாணவர்கள் உட்பட வருகை தந்த அனைவருக்கும் பழக் கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதை அடையாளப்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள் மூவருக்கு பழக் கன்றுகளை வழங்கி வைத்தல்.

ii. காடு வளர்ப்பு தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்தவாறு பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற 13 பேருக்கு சான்றிதழ்கள் மற்றும் கிண்ணங்களை வழங்கி வைத்தல்.

iii. முல்லைத்தீவு மாவட்டத்தின் விஷ்வமடு பிரதேசத்தில் யானை வேலி அமைப்பதற்கு 5 மில்.ரூ. ஒதுக்கீட்டினை நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சுக்கு வழங்குதல்.

iv. மன்னார் - மதவாச்சி வீதியின் இரு மருங்கிலும் மரங்களை நட்டு இலங்கை பொலிசார் செய்த பணியைப் பாராட்டுதல்.

v. சூழல் பாதுகாப்புக்காக செயற்படும் பாடசாலைகளைப் பாராட்டுதல்.





5. சூழல் பாதுகாப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

சமூக காடு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல், பசுமைக் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல், பசுமைத் தொழில்கள் மற்றும் பசுமை உற்பத்திகளை ஊக்குவித்து மேம்படுத்தல், சூழல் சுற்றுலாத்துறை முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல், வீட்டு வாயு நிலைமை முகாமைத்துவத்தை முன்னிலைப்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன 5 மில்.ரூ. ஒதுக்கீட்டினைச் செலவழித்து இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

சூழல் பாதுகாப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் .			
விடயம்	**ஒதுக்கீடு வழங்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுவனம்**	**நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனம்**	**விடுவிக்கப்பட்ட/ கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை**
1% Idea கருத்திட்டத்தின் “நெனவத் கஸ” எண்ணக்கரு மற்றும் “நிவுன் சகோதர கஸ” எண்ணக்கரு	மாவட்டச் செயலகம் - குருநாகல்	மாவட்டச் செயலகம் - குருநாகல்	1,580,020.00
பழக் கன்றுகளை வழங்குதல்	விவசாயத் திணைக்களம்	விவசாயத் திணைக்களம்	4,000,000.00
கட்டுநிதி இல்லாமை காரணமாகத் தீர்க்க முடியாமல் போன விலைப்பட்டியல்களைச் செலுத்தல்.	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை	113,818.00
"#டி பயய் பத் கஸய்” கருத்திட்டத்திற்கு	மாவட்டச் செயலகம் - மொனறாகலை	மாவட்டச் செயலகம் - மொனறாகலை	1,584,000.00
சாமஸர கந்த பகுதியில் மண்சரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பல்லாண்டுப் பயிர்கள் வளர்ப்புக்கு	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	1,060,000.00
பழ மற்றும் காட்டுச் செடிகள் மூலம் வன உள்ளடக்கத்தை மேம்படுத்தும் கருத்திட்டம்	மாவட்டச் செயலகம் - கேகாலை	மாவட்டச் செயலகம் - கேகாலை	1,078,530.00
முல்லைத்தீவு விஷ்வமடு காட்டு யானைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யானை வேலி யமைத்தல்	நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு	வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்	5,000,000.00
கொழும்பு மாவட்டத்தில் 21 மதஸ்தலங்களில் வனாந்தர சூழல் அமைப்பின் உயிரியில் பண்பு கொண்ட வன உணவுப் பயிர்செய்கைக் கருத்திட்டம்	மாவட்டச் செயலகம் - கொழும்பு	மாவட்டச் செயலகம் - கொழும்பு	341,240.00
களுத்துறை (பண்டாரகமை, ஹொரணை, களுத்துறை, தொடங்கொட, பிரதேச செயலகப் பிரிவுகளில் மாங்கன்று, ஒட்டுப் பலா, தென்னங் கன்றுகளைப் பகிர்ந்தளிக்கும் கருத்திட்டம்)	மாவட்டச் செயலகம் - களுத்துறை	மாவட்டச் செயலகம் - களுத்துறை	469,900.00
"ஷாக்ய ஜனபத” மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்	புத்தசாசன அமைச்சு	புத்தசாசன அமைச்சு	37,250.00
மொத்தம்			15,264,758.00

நகல்ஸ் காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் மீ முரே கிராமத்தைச் சூழ ஏற்பட்டுள்ள சூழல் சிக்கல்கள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள்

2016.06.05 ஆந் திகதி மாத்தளை எட்வட் மைதானத்தில் இடம்பெற்ற சூழல் மாநாட்டுடன் இணைந்தவாறு ஆரம்பிக்கப்பட்ட சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமாக உலக மரபுரிமை நகல்ஸ் வனாந்தரத்திற்கு ஏற்புடைய காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.
மேலும் மீமுரே கிராமம் மற்றும் நகல்ஸ் இயற்கை மழைக் காட்டுத் தோகுதியைச் சூழ ஏற்பட்டுள்ள சூழல் சிக்கல்களுக்குத் தீர்வு வழங்கும் வேலைத்திட்டமொன்றும் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கண்டி மாவட்டச் செயலகத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கமைய நகல்ஸ் வனாந்தரத்திற்கு ஏற்புடைய காணிகளைச் சுவீகரித்தல், நகல்ஸ் சுற்றுலா மையத்தின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் மீமுரே கிராமம் மற்றும் நகல்ஸ் இயற்கை மழைக் காட்டுத் தோகுதியைச் சூழ ஏற்பட்டுள்ள சூழல் சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குவது தொடர்பான கலந்துரையாடலொன்று 2018 மார்ச் 23 ஆந் திகதி மு.ப. 9.30 க்கு கண்டி மாவட்டச் செயலகத்தில் நடாத்தப்பட்டது.

இதன்போது பல்வேறுபட்ட தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. லக்கல பல்லேகம பிரதேச செயலகத்தில் வாரமொன்றில் இரண்டு நாட்களாவது பணியாற்ற முடியுமான வகையில் புலனாய்வு உதவி அலுவலர் ஒருவரின் சேவையை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சிடம் கோரப்பட்டதுடன், உரிமையாளர்கள் உரிமை கோராத நிலைமையின் கீழ் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சுவீகரிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இது வரை உரிமையாளர்கள் உரிமை கோராத காணிகளின் முழு நில அளவையும் ஒரு அலகாகக் கருதி அளவையிடல் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

மீ முரே கிராமத்திற்கு நுழையும் வீதியமைப்பின் 0km முதல் 15km வரையான வீதிப் பகுதியை காபட் இட்டு புனரமைப்பதற்கும், மீமுரே சார்ந்த தொல்லியல் பெறுமதிமிக்க இடங்கள் தொடர்பாக முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு அந்த இடங்கள் தொடர்பாக அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கும், தொல்லியல் நினைவுச் சின்னமாயின் மீமுரே பங்களாவின் கூரையைச் சீரமைக்கவும், புஸ்ஸெல்ல சமூக நீர் வழங்கல் கருத்திட்டத்தை மறுசீரமைப்பதற்கும், யுனிடோ சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலையத்தினை அகற்றி நீர் முன்பு போன்று ஓடிச் செல்லும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவும், தற்காலிக தங்குமிடங்களை முறையாகச் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும், நீரேந்துப் பிரதேசங்களில் ஏற்படும் பாதிப்பு, அனுமதியின்றி வனாந்தரத்தினுள் நுழைதல், வனாந்தரத்தினுள் நிகழும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் பொலித்தீன் பிளாஸ்டிக் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு 300 மில்.ரூ. ஆகும்.

02. போதைப்பொருட்களைத் தடுப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியானது அரச நிறுவனங்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் கூட்டுப்பங்குபற்றுதலுடன் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. போதைப் பொருட்களைத் தடுப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் சகல கண்காணித்தல் மற்றும் கூட்டினைப்புப் பணிகள் போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் நிறைவேற்றப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சட்டவிரோத போதைப்பொருட்களின் உற்பத்தியையும் போக்குவரத்தையும் 80 வீதத்தினாலும் போதைப்பொருட்களின் தலைக்குரிய பயன்படுத்துகையை 25 வீதத்தினாலும் புகையிலை உற்பத்தியை 50 வீதத்தினாலும் 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் குறைத்தலே போதைப்பொருட்களைத் தடுப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் முதனிலை இலக்காகும். இதற்கமைவாக இந்த நிகழ்ச்சித்திட்டமானது போதைப்பொருட்களின் கேள்வி மற்றும் வழங்கல் ஆகிய இரண்டு விடயங்களையும் குறைப்பது மீது தீவிர கவனம் செலுத்தப்பட்டு இந்த நிகழ்ச்சித் திட்டமானது பின்வரும் மூன்று விடயங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1. **கொள்கைகள் மற்றும் சட்டங்களை வகுத்தல், செயற்படுத்தல் மற்றும் சுற்றிவளைப்புக்கள்**
2. **பரிகாரங்களும் புனர்வாழ்வளித்தலும்**
3. **தடுத்தல்**

01. கொள்கைகள் மற்றும் சட்டங்களை வகுத்தல், செயற்படுத்தல் மற்றும் சுற்றிவளைப்புக்கள்.

இலங்கையில் சட்டவிரோத போதைப் பொருட்களை உற்பத்தி செய்தல், அவற்றின் போக்குவரத்து மற்றும் விற்பனை செய்தல் தொடர்பில் ஏற்கனவேயுள்ள சட்டதிட்டங்களில் காலத்திற்குப் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளுதல், பிற போதைப் பொருட்களின் பாவனையைக் குறைப்பதற்குத் தேவை யான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உட்பட "போதைப்பொருட்கள் அற்றதோர் நாட்டை" உருவாக்குவதற்குத் தேவையான கொள்கைரீதியான, சட்டரீதியான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் என்பன போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் நிறைவேற்றப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு போதைப்பொருளுக்கும் ஏற்ப கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் போதைப்பொருட்களின் அளவு

போதைப்பொருள்	2018 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை	போதைப்பொருளின் அளவு (கிலோ கிராம்)
கஞ்சா	54,686	4878.399
ஹெரோயின்	40,998	739.095
ஹசீஸ்	21	333.11
கொகேயின்	95	212.05
மென்பிட்டமின்	257	712.7

தேசிய கொள்கை மற்றும் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

தேசிய கொள்கை மற்றும் செயல் திட்டத்திற்கு ஏற்பு அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் பலவற்றுக்கு நேரடி பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் ஊடாக அனைத்து அரச நிறுவனங்கள் மூலமும் போதைப்பொருள் ஒழிப்புச் செயற்பாட்டைப் பலப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி 2018 ஆம் ஆண்டில் இந்த அனைத்து நிறுவனங்களையும் அழைத்து அவற்றின் முன்னேற்றம் மற்றும் சிக்கல்கள் தொடர்பாகக் கலந்துரையாடி எதிர்வரும் வருடங்களுக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

02. பரிகாரங்களும் புனர்வாழ்வளித்தல்களும்

போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியானது நாடு முழுவதுமுள்ள போதைப் பொருட் களுக்கு அடிமையானவர்கள் தொடர்பில் புனர்வாழ்வு நிலையங்களில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ் வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் தேவையான ஒதுக்கீடுகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையமானது புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகம் மற்றும் போதைப் பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்படு வதுடன், இந்த அனைத்து புனர்வாழ்வு நிலையங்களிலும் மனித மற்றும் பௌதீக வளத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், ஏற்புடைய அமைச்சுக்களுடன் நேரடி ஒருங்கிணைப்புப் பணிகள் என்பன போதைப் பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2015 முதல் 2018 வரை பரிகாரங்களுக்காக அனுமதிக்கப்பட்ட சேவைபெறுனர்களின் எண்ணிக்கை

ஒவ்வொரு பரிகார நிலையங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட சேவைபெறுனர்களின் எண்ணிக்கை					
ஆண்டு	அபாயகரமான ம.க.தே.நி. பரிகார நிலையங்கள்	அரச சார்பற்ற அமைப்புக்கள்	சிறைச்சாலை பரிகார நிகழ்ச்சித்திட்டம்	கந்தகாடு பரிகார நிலையம்	மொத்தம்
2015	**866**	**212**	**317**	**87**	**1482**
2016	**826**	**474**	**684**	**371**	**2355**
2017	**1280**	**608**	**295**	**523**	**2706**
2018	**1142**	**415**	**948**	**1456**	**3961**

03. ஒழிப்பு


3.1. விசேட போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் நடாத்துதல்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2016 ஆம் ஆண்டு முதல் இது வரை 11 போதைப்பொருள் ஒழிப்பு மாவட்ட மாநாடுகள் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டுள்ளன. “போதைப் பொருட்கள் அற்றதோர் நாடு” எனும் கருப்பொருளின் கீழ் 11 தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் (கம்பஹா, காலி, கொழும்பு, குருநாகல், நுவரெலியா, புத்தளம், யாழ்ப்பாணம், களுத்துறை, எம்பிலிபிட்டிய, கண்டி) செயற்படுத்தப்பட்டதுடன், 2018.02.23 ஆந் திகதி இரத்தினபுரி மாவட்ட மாநாடு எம்பிலிபிட்டியவிலும், 2018.07.10 ஆந் திகதி கண்டி மாவட்ட மாநாடு, கண்டி கெடம்பே மைதானத்திலும் நடாத்தப்பட்டது.



இந்த மாவட்ட மாநாடுகள் மூலம் ஏற்புடைய மாவட்டங்களில் அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்களுக்கு போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக புத்திஜீவிகளின் உரைகள், முன்மாதிரிக் குறு நாடகங்கள், பல்துறை அம்சங்கள் ஊடாக விழிப்பணர்வூட்டப்படுவதுடன், மாவட்டங்களில் போதைப்பொருள் ஒழிப்புக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அரச அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் (2015 முதல் இன்று வரை)



மாவட்டம்,	இடம்,	திகதி,	எண்ணிக்கை
கம்பஹா	ஜாஎல நகர சபை	2015.07.	3000
காலி	நகர சபை மண்டபம்	2015.09.	1500
கேகாலை	நகர சபை மண்டபம்	2015.09.	1500
கொழும்பு	மஹரகமை இளைஞர் சேவைகள் மன்றம்	2015.09.	1500
குருநாகல்	மாளிகாபிட்டிய மைதானம்	2016.04.	3000
நுவரெலியா	நுவரெலியா நகர சபை	2016.06.	3000
புத்தளம்	புத்தளம் பொது	2016.07.	3000
குருநாகல்	கனேவத்த மைதானம்	2016.08.	5000
யாழ்ப்பாணம்	துரையப்பா மைதானம்	2016.09.	3000
களுத்துறை	நகர சபை மைதானம்	2017.07.	7000
எம்பிலிபிட்டிய	மகாவலி மைதானம்	2018.02.	8000
கண்டி	கெடம்பே மைதானம்	2018.07.	7500
		மொத்த எண்ணிக்கை	47,000

தற்போது மாவட்ட போதைப்பொருள் ஒழிப்பு மாநாடுகளுடன் இணைந்தவாறு மாவட்டத்தில் பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்கள் மற்றும் கிராமிய போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்களைப் பலப்படுத்தல், ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவும் உள்ளடங்கும் வகையில் கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணிக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளினால் நேரடியாக மேற்கொள்ளப்படு கின்றன. இதன்போது விழிப்புணர்வூட்டலுக்கு மேலதிகமாக போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாகப் பொதுமக்களினால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அந்த முறைப்பாடுகளை ஏற்புடைய தரப்பினருக்கு அனுப்பி வைத்தல் என்பனவும் இடம்பெறுகின்றன.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் விசேட போதைப்பொருள் ஒழிப்பு கிராமிய நிகழ்ச்சித்திட்டங்கள் போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணிக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

3.2. மாவட்ட / பிரதேச / கிராமிய போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்களை அமைத்தல்



தற்போது 25 மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்கள், 331 பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்கள் மற்றும் 14022 கிராமிய போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், கிராமியக் குழுக்களின் செயற்பாடு பிரதேச செயலாளர் மட்டத்திலும், பிரதேச குழுக்களின் முன்னேற்றம் மாவட்டக் குழுக்களினாலும் கண்காணிக்கப்படுகின்றன. இந்தக் குழுக்கள் ஊடாக "போதைப்பொருட்கள் அற்றதோர் வீட்டை" உருவாக்கி, அவ்வாறான குடும்பங்களின் ஒன்றிணைவு மூலம் "போதைப்பொருட்கள் அற்றதோர் கிராமத்தை" உருவாக்கி, இறுதியில் "போதைப்பொருட்கள் அற்றதோர் நாட்டை" கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக போதைப்பொருள் பாவனையின் தீங்கான விளைவுகள் மற்றும் அதிலிருந்து தவிர்ந்திருப்பதன் மூலம் ஏற்படும் நலன்கள் தொடர்பாக சமூகத்தை விழிப்புணர்வூட்டல், மதுபான, சிகரெட் கம்பனிகள் மேற்கொள்ளும் போலியான பிரச்சாரங்களுக்கு எதிராக மக்களுக்கு விழிப்புணர்வூட்டல், போதைப்பொருள் பாவனையின் விளைவுகளை விளங்கிக்கொண்டு அவற்றை நிராகரிக்க அவர்களை வலுவூட்டுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது முழு நாடும் உள்ளடங்கும் வகையில் 14022 (14022 கிராம அலுவலர் பிரிவுகள்) போதைப்பொருள் ஒழிப்பு கிராமியக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இந்த கிராமியக் குழுக்கள் ஊடாக ஏற்புடைய கிராமங்களில் போதைப்பொருட்கள், மதுபானம், சிகரெட் பாவனையைக் குறைப்பதன் மூலம் மக்களைப் போதைப்பொருளுக்கு எதிராக வலுவூட்டுவதற்கு அவர்களின் பங்களிப்பு மற்றும் செயற்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது போதைப்பொருள் குற்றங்கள், புனர்வாழ்வு மற்றும் பரிகாரம் தொடர்பாக கிராமிய மட்டத்தில் தீர்வுகளை வழங்க முடியாத பிரச்சினைகளுக்கு பிரதேச செயலாளரின் தலைமையில் கூடும் பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுவுக்குச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதேச செயலாளர் பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுவின் தலைமைத்துவத்தை வகிப்பதுடன் அந்தக் குழு பிரதேச செயலகப் பிரிவுக்கு ஏற்புடைய அனைத்து கிராம அலுவலர்கள், பொலிசார் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் அலுவலர்கள் போன்ற துறையுடன் தொடர்புற்றுச் செயற்படும் அனைத்து அரச அலுவலர்களையும் உள்ளடக்கியுள்ளது. பிரதேச செயலகப் பிரிவுக்கு ஏற்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல், தீர்வு வழங்க முடியாத பிரச்சினைகளை மாவட்டச் செயலாளரின் தலைமையில் நடாத்தப்படும் போதைப்பொருள ஒழிப்பு மாவட்டக் குழுவுக்கு அனுப்பி வைத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

3.3. இது வரை போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள மாவட்டங்கள்/ பி.செ/கிராம அலுவலர் பிரிவுகளின் விபரம்

அ / அ	மாவட்டம்	மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியோரின் எண்ணிக்கை
1	கொழும்பு	37	2011
2	பொலொன்னறுவை	131	11148
3	குருநாகல்	88	3027
4	களுத்துறை	750	28679
5	பதுளை	33	2974
6	அனுராதபுரம்	754	67613
7	இரத்தினபுரி	170	10640
8	மாத்தளை	39	3579
9	மட்டக்களப்பு	15	1224
10	புத்தளம்	542	26558
11	மொனறாகலை	298	14616
12	கண்டி	397	18352

மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புக் குழு மாவட்டச் செயலாளரின் தலைமையில் ஒன்றுகூடுவதுடன் மாவட்டத்திற்குரிய அனைத்து பிரதேச செயலாளர்கள், இலங்கை பொலிசார், மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாகப் பணியாற்றும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை இது உள்ளடக்கியுள்ளது.

பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுவினால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் பொதுவாக மாவட்டத்தில் போதைப்பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்தல், புனர்வாழ்வு மற்றும் போதைப்பொருள் ஒழிப்புச் சிக்கல்கள், அவற்றுக்குத் தீர்வு வழங்குதல் என்பன மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புக் குழு மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

"கிராமத்தை உருவாக்குவோம்" கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்



"கிராமத்தை உருவாக்குவோம்" கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலங்கை விமானப் படையின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பயிற்சி பெற்ற விமானப் படை அங்கத்தவர்கள் பின்வருமாறு மாவட்டச் செயலகம் ஊடாக பிரதேச செயலகப் பிரிவுகளில் தற்போது போதைப்பொருள் ஒழிப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாவட்டம்	விமானப் படை அங்கத்தவர்கள் போதைப்பொருள் ஒழிப்புப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பி.செ. பிரிவுகளின் எண்ணிக்கை
களுத்துறை	09
கொழும்பு	10
பொலொன்னறுவை	03
கம்பஹா	11
கண்டி	13
குருநாகல்	25
மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை	**71**

"கிராமத்தை உருவாக்குவோம்" கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலங்கை விமானப் படையின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பயிற்சி பெற்ற விமானப் படை அங்கத்தவர்கள் பின்வருமாறு மாவட்டச் செயலகம் ஊடாக பிரதேச செயலகப் பிரிவுகளில் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் பாடசாலை போதைப்பொருள் ஒழிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு ஏற்புடைய பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

மாவட்டம்	விமானப் படை அங்கத்தவர்கள் போதைப்பொருள் ஒழிப்புப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பி.செ. பிரிவுகளின் எண்ணிக்கை
மாத்தறை	10
புத்தளம்	08
கொழும்பு	10
காலி	07
திருகோணமலை	10
அநுராதபுரம்	10
மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை	**55**

3.4. போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான தொழிநுட்ப அறிவுடைய வளவாளர் குழாம்

போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்களுக்குரிய அங்கத்தவர்களிடையே தெரிவுசெய்யப்பட்ட ஒரு குழுவினரை போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக விஞ்ஞானரீதியான, தொழிநுட்பரீதியான அறிவினைக் கொண்ட பயிற்சியாளர்களாக மாற்றி பயிற்சியாளர் குழாமொன்றை உருவாக்கி, அவர்கள் ஊடாக சமூகத்தை வலுவூட்டுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

தற்போது மாவட்ட மட்டத்தில் 100 (25x4) பயிற்சியாளர்கள், பிரதேச மட்டத்தில் 1,986 (331x6) பயிற்சியாளர்கள், கிராமிய மட்டத்தில் 70,110 (14,022x5) பயிற்சியாளர்களைக் கொண்ட பயிற்சியாளர் குழாமொன்று உருவாகியுள்ளது.

3.5. போதைப்பொருள் ஒழிப்புப் பணிகளை செயலூக்கத்துடன் மேற்கொள்வதற்கு முப்படையைச் சேர்ந்த அங்கத்தவர்களைப் பயிற்றுவித்தல் .

போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணிக்கு இணைப்புச் செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் 56 பேர், விமானப் படை அதிகாரிகள் 100 பேர், கடற் படை அதிகாரிகள் 90 பேரைப் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான பயற்சியாளர்களாகப் பயன்படுத்துவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டனர்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தினால் சுற்றறிக்கைகள் மற்றும் விசேட கட்டுரைகளை வெளியிடுதல்

- போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வாரத்தைப் பிரகடனப்படுத்தல்

  (அனைத்து அரச நிறுவனங்களுக்கும்) – சுற்றறிக்கை இலக்கம் SP/DSP/DPU/07/18

3.6. பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் போதைப்பொருள் ஒழிப்பு பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள்



- "நிலைபேறான பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் 3409 நிலைபேறான பாடசாலைக் குழுக்களை உருவாக்கியதன் மூலம் 3409 போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்கள் நிறுவப் பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு குழுவுக்குமாக ஆசிரியரொருவருக்கும் பாடசாலை அதிபருக்கும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக விசேட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளங்களை வழங்குதல்.

போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி நாட்டிலுள்ள பாடசாலைகளினால் ஏற்பாடு செய்யப்படும் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நேரடி வளப் பங்களிப்பை வழங்கிய துடன், அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் போதைப்பொருள் பாவனையின் பாதகமான விளைவுகள், அதிலி ருந்து தவிர்ந்திருப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள், மதுபான, புகையிலைக் கம்பனிகள் மேற் கொள்ளும் போலியான பிரச்சாரங்கள், போதைப்பொருட்களில் மிகைப்படுத்திக் காட்டப்படும் கவர்ச்சியின் உண்மையான நிலைமை தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலை போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்களை சரியான திசையில் பயணிக்கச் செய்து விளை திறன்மிக்க செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்காக போதைப்பொருள் ஒழிப்பு ஆலோசனைக் கோவையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.



3.7. நிலைபேறான பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டம்

ஜனாதிபதி அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் செயற்படுத்தப்படும் போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி, சிறுநீரக நோய்த் தடுப்பு ஜனாதிபதி செயலணி உள்ளிட்ட அனைத்து கருத்திட்டங்களையும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக இலங்கையின் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் 6409 இல் நிலைபேறான பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் 6409 பாடசாலைகளில் பாடசாலை போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் ஒரு குழுவில் 15 அங்கத்தவர்கள் வீதம் 6409 பாடசாலைகளில் 96000 மாணவர்கள் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டு செயற்படுகின்றனர்.





பாடசாலையில் சுறுசுறுப்பான, கவர்ச்சியான மாணவ மாணவியர் ஊடாக பாடசாலை சமூகத்தின் மத்தியில் போதைப்பொருள் ஒழிப்பினைக் கொண்டு செல்வது இதன் நோக்கமாகும். அதற்காக தேசிய மாணவர் படையணி மற்றும் இலங்கை சாரணர் சங்கத்தின் பாடத்திட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பினை உட்படுத்தி புதிய பதக்கங்களை அறிமுகப்படுத்தி மாணவர்களை இது தொடர்பாக ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் கீழ் மாணவர் படையணி ஆலோசகர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ரன்டெம்பே முகாம் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.






3.8. கல்யான மித்ர சமூகங்கள்



பௌத்த குணப்பண்புகள் கொண்ட தர்ம பாடசாலை மாணவர்களின் தலைமை ஊடாக தமது நண்பர்கள் மற்றும் சமூகத்தினரை போதைப்பொருளிலிருந்து மீட்பதை நோக்கமாகக் கொண்டு புத்தசாசன அமைச்சு, பௌத்த அலுவல்கள் திணைக்களம், சாசனப்பாதுகாப்பு கூட்டவையுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. தற்போது தர்ம பாடசாலைகள் மட்டத்தில் 10,018 கல்யான மித்ர சமூகக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 10,018 தர்ம பாடசாலைகளில் கல்யான மித்ர சமூகக் குழுக்களை அமைத்தல் மற்றும் அந்த அனைத்து கல்யான மித்ர குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி 03 அதிகாரிகள், ஒரு ஆசிரியர் வீதம் (10018X4) 40072 பேரைப் போதைப்பொருள் ஒழிப்பு பயிலுனர்களாக அவர்களை 2017 ஆம் ஆண்டில் வலுவூட்டுதல். இந்தப் பயிலுனர்கள் உட்பட கல்யான மித்ர அங்கத்தவர்கள் 12 வீதம் (12X10018) 120216 ஊடாக முழு தர்ம பாடசாலை அமைப்பு முறையிலும் போதைப்பொருள் ஒழிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதனுடன் இணைந்த வகையில் கல්யான மித்ர சமூகக் குழுக்களை சரியான திசையில் பயணிக்கச் செய்து விளைதிறன்மிக்க செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்காக போதைப்பொருள் ஒழிப்பு ஆலோசனைக் கோவையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.



3.9. ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

"போதைப்பொருட்கள் அற்றதோர் நாடு" பாதயாத்திரை மற்றும் தேசிய பட்டம் விடும் நிகழ்வு

போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியினால் 2016 ஆம் ஆண்டு முதல் ரொடரி நிறுவனம் மற்றும் Kite Sri Lanka நிறுவனத்துடன் இணைந்து தேசிய பட்டம் விடும் நிகழ்வு மற்றும் பாதயாத்திரை நடாத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் அது காலிமுகத்திடலில் நடாத்தப்பட்டது.

மே 31, உலக புகையிலை ஒழிப்புத் தினத்துடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டங்கள்

அனைத்து அரச நிறுவனங்களிலும் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை நடாத்துமாறும், பெனர், சுவடிரொட்டிகளைக் காட்சிப்படுத்துமாறும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் வழங்குதல். அதனுடன் இணைந்தவாறு பல அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களில் போதைப்பொருள் ஒழிப்புச் செயலமர்வுகள் இத்தினத்துடன் இணைந்தவாறு நடாத்தப்பட்டன.



போயா தினம் மற்றும் கதிர்காமம் பெரஹரா போன்ற சமய நிகழ்வுகளுடன் இணைந்தவாறு விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

பொசொன் போயா தினத்துடன் இணைந்தவாறு அநுராதபுரம் பொசொன் வலயத்தை போதைப்பொருட்கள் இல்லாத வலயமாக்குவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் கொடிகளும் சுவரொட்டிகளும் மற்றும் வீதி நாடகங்களும் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுடன் சட்டத்தை மீறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.
கதிர்காமம் ஆலய வருடாந்த எசல பெரஹரா, கண்டி தலதா மாளிகையில் நடாத்தப்படும் பெரஹராக்கள் போன்ற நிகழ்ச்சிகளுடன் இணைந்தவாறு போதைப்பொருள் ஒழிப்புப் பிரச்சாரங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுதல்.

உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்த நிறுவனங்கள் போன்ற சர்வதேச நிறுவனங்கள் மற்றும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம், ஹெல்தி லங்கா நிறுவனம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் போதைப்பொருள் ஒழிப்புக்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோன்று தேசிய, சர்வதேச மாநாடுகளுக்கு ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த அறிக்கைகள் கீழுள்ள மாநாடுகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

உதா: Symposium of International Cancer Society 2018 - Nepal
Scientific Symposium 2018 – ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

சமூக வலைத்தளங்கள் ஊடாக போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை சமூக வலையமைப்புக்கள் ஊடாகப் பரப்புவது தற்காலத்தின் தேவையாகக் காணப்படுகிறது. எமது முகநூல் பக்கம் மற்றும் இணையப் பக்கம் ஊடாக எமக்கு யோசனைகள், கருத்துக்களை அனுப்ப முடியும் என்பதுடன், எமது செயற்பாடுகள் தொடர்பாகவும் அவற்றில் இற்றைப்படுத்தப்படுகின்றன.



2018 ஆம் ஆண்டில் 198 மில்.ரு போதைப்பொருள் ஒழிப்பு விசேட நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் 200 மில்.ரு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

3. சிறுநீரக நோய்களை ஒழிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

தொலைநோக்கு

நாட்பட்ட சிறுநீரக நோயை மேலும் தடுத்தல் மற்றும் சிறுநீரக நோயாளிகள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் நலனோம்புகை

செயற்பணி

தேவையான அறிவை வழங்குதல் மற்றும் சரியான முறைமைகளைப் பயன்படுத்தல், நோயைத் தடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நலனோம்புகை என்பவற்றை ஒருங்கிணைப்புப் பணிகள் மூலம் உறுதிப்படுத்தல்.

இந்த நாட்டில் முதனிலையாக ஏறத்தாழ 1990 களில் ரஜரட்ட பிரதேசத்தில் கண்டறியப்பட்ட சிறுநீரக நோயானது தற்போது இலங்கையில் பல பிரதேசங்களில் பரவிக் காணப்படுகின்றது. நோயாளர்கள் பெருமளவில் வடமத்திய, ஊவா, வடமேல், வடக்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே காணப்படுகின்றனர். அத்துடன் தற்போது தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சிறுநீரக நோயாளர்கள் இருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்டரீதியாக நோக்கும்போது இந்த நோய் பிரதானமாக 11 மாவட்டங்களில் (அனுராதபுரம், பொலன்னறுவை, குருணாகல், மாத்தளை, வவுனியா, பதுளை, அம்பாந்தோட்டை, அம்பாறை, மொனறாகலை, முல்லைத்தீவு திருகோணமலை) 60 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வதியும் மக்களைப் பிரதானமாகப் பாதித்துள்ளது.

மூலவேர் அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் மேலும் பரவுவதைத் தடுப்பதற்கும் அந்த நோயினால் அவதியுறும் நோயாளிகள் உட்பட குடும்ப அங்கத்தவர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

மூலவேர் அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் ஒழிப்புக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் - முக்கிய துறைகள்

1. நோய் ஒழிப்புக்கான நடத்தைப் பாங்குகளை மேம்படுத்தல்.
2. நோயாளர்களை முன்னரே கண்டறிதல்
3. நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்தல்
4. நோயாளர்களுக்கும் குடும்பத்தினர்களுக்கும் சமூகத்திற்கும் நலனோம்பலை வழங்குதல்
5. சுத்தமான குடி நீரை வழங்குதல்
6. சுகாதாரப் பாதுகாப்புமிக்க உணவு மற்றும் போசனை
7. செயலாற்றல் மிக்க கண்காணிப்பு தரவு முறைமையொன்றை நிறுவுதல்
8. கொள்கைகள், அளவைகள் மற்றும் ஆராய்ச்சிகளை வகுத்தமைத்தல்

சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய திட்டமானது தொடர்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச, அரச சார்பற்ற அமைப்புகளுடன் கூட்டாக இணைந்து மேற்போந்த பிரதான துறைகளின் கீழ் நிறைவேற்றப்படுகிறது. சிறுநீரக நோயை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியானது இந்த அனைத்துச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் தேவைப்படும் போது வளங்களை வழங்குவதற்குமாக நிறுவப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் ஜனாதிபதி அலுவலகத்தினால் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

1. நோய் ஒழிப்புக்கான நடத்தைப் பாங்குகளை மேம்படுத்தல்

- **விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்**

சிறுநீரக நோய் பரவுதல் மற்றும் அதனைத் தடுத்தல் தொடர்பாக சிறுநீரக நோய் அபாயம் மிக்க பிரதேசங்களை மையப்படுத்தி இலங்கை முழுவதும் மக்களை விழிப்புணர்வூட்டுவது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இதன்போது மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்களின் உதவியுடன் கிராமிய மட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் விழிப்புணர்வூட்டப்படுகின்றனர்.

அத்துடன் சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் செயற்படுத்தப்படும் மாவட்ட மட்டத்திலான தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்தவாறு முழு மாவட்டமும் உள்ளடங்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இந்த செயலணியின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான 6170 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் 13 இலட்சம் பேருக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இந்த செயலணியின் அனுசரணையில் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

மாவட்டம்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	விழிப்புணர்வளிக்கப்பட்ட மக்கள் தொகை
அனுராதபுரம் /பொலொன்னறுவை	09	12,541
குருநாகல்/புத்தளம்	13	13,376
பதுளை / மொனறாகலை	08	66,312
அம்பாறை/திருகோணமலை	07	10,962
கண்டி /மாத்தளை	05	5,430
முல்லைத்தீவு/ வவுனியா	02	2,362
கொழும்பு/ கம்பஹா	06	8,630
காலி/ அம்பாந்தோட்டை/ மாத்தறை	06	4,731
இரத்தினபுரி/ கேகாலை	04	11,200
மொத்தம்	**60**	**135,544**



2018.08.10,11,12 ஆகிய தினங்களில் திஸ்ஸமகாராமை உத்தகந்தர ரஜமகாவிகாரையில் இடம்பெற்ற சிறுநீரக நோயாளிகளை முன்னரே கண்டறியும் நிகழ்வுடன் இணைந்தவாறு நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி

கிராமிய மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக சிறுநீரக நோய் பரவுதல் மற்றும் அதனைத் தடுத்தல் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் ஊடாகவும் விழிப்புணர்வுகள் நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

❖ **இலத்திரனியல் ஊடகங்கள் மூலமான விழிப்புணர்வூட்டல்.**

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 12 ஒலிபரப்பு அலைவரிசைகளில் நாளொன்றுக்கு 5 ஒலிபரப்புத் தடவைகள் வீதம் சிறுநீரக நோய் ஒழிப்பு தொடர்பான, நோயாளிகளை முன்னரே கண்டறிவது தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதன் முக்கியத்துவம் தொடர்பான விளம்பரங்கள் பிரச்சாரம் செய்யப்படுகின்றன.

- அத்துடன் வானொலி மற்றும் தொலைக்காட்சி நேர்காணல்களை நடாத்துவதன் ஊடாகவும் சிறுநீரக நோய் ஒழிப்பு மற்றும் அதனைத் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்படுகிறது.

❖ **அச்சு ஊடகங்கள் மூலமான விழிப்புணர்வூட்டல்.**

- சிறுநீரக நோய் தொடர்பான விசேட கட்டுரைகளை உள்ளடக்கிய ஆரோக்யா, தீகாயு, வகுகடு ஆகிய சஞ்சிகைகளை அச்சிட்டுப் பகிர்ந்தளித்தல்.

- சிறுநீரக நோய் தொடர்பான விசேட வைத்தியர்கள் மற்றும் நிபுணர்களின் கட்டுரைகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட கல்விசார் நூலை அச்சிட்டுப் பகிர்ந்தளித்தல்.

- சிறுநீரக நோய் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், பெனர்களை அச்சிட்டுப் பகிர்ந்தளித்தல்.

❖ **மாவட்ட மட்டத்தில் தேசிய நிகழ்ச்சிகளை நடாத்துதல்**

இந்த செயலணியினால் 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 07 மாவட்ட மாநாடுகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய மாநாடுகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.


- **மொனறாகலை மாவட்ட புத்தளை இராணுவ அதிகாரிகளுக்கான வளர்ச்சி நிலைய மைதானத்தில் நடாத்தப்பட்ட உலக சிறுநீரக தினத்தைக் கொண்டாடும் தேசிய நிகழ்வு**

2018 மார்ச் மாதம் 08 ஆந் திகதி மொனறாகலை மாவட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் தலைவர்களின் தலைமையில் புத்தளை, இராணுவ அதிகாரிகளுக்கான வளர்ச்சி நிலைய மைதானத்தில் இந்த நிகழ்வு நடாத்தப்பட்டது. இதனுடன் இணைந்தவாறு மொனறாகலை மாவட்டத்தை மையப்படுத்தி பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

- ❖ போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.
- ❖ வெள்ளவாய, தனமல்வில, புத்தளை சுகாதார வைத்திய அலுவலர் பிரிவுகளில் அனைத்து கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் 87,347 பேரை இலக்காகக் கொண்டு சிறுநீரக நோயை முன்னரே கண்டறியும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- ❖ மொனறாகலை மாவட்டத்தில் நிறுவப்பட்ட 10 நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளை மக்களுக்கு கையளித்தல்.
- ❖ குறைந்த வருமானமுடைய சிறுநீரக நோயாளிகள் 53 பேருக்கு வீடமைப்பு உதவிகளை வழங்குதல்.
- ❖ சிறுநீரக நோயினால் தாய் அல்லது தந்தையை இழந்த க.பொ.த உ/தரம் கற்கும் 03 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்.
- ❖ சிறுநீரக நோயினால் வாடும் 1408 குடும்பங்களுக்கு 1408 வீட்டு நீர் வடிகட்டல் உபகரணங்களை வழங்குதல்.
- ❖ சிறுநீரக, தல்சீமியா, புற்றுநோய்கள் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் 464 பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்.







தேசிய நிகழ்வின் விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு முத்திரை

- **சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் நிறுவப்பட்ட 500 ஆவது நீர் சுத்திகரிப்புத் தொகுதியை மக்களிடம் கையளித்தல்.**

2018 செப்டம்பர் மாதம் 21 ஆந் திகதி அனுராதபுர மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயலகப் பிரிவில் குருந்தகுலம மிஹிந்து ஆரண்ய சேனாசனவில் நிறுவப்பட்ட 500 ஆவது நீர் சுத்திகரிப்புத் தொகுதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

அதனுடன் இணைந்தவாறு சிறுநீரக நோயாளிகளுக்கு நிவாரணம் வேண்டி இது வரை நிர்மாணிக்கப்பட்ட 500 நீர்த் தொகுதிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சுத்தமான நீரை ஜய ஸ்ரீ மகா போதிக்குப் பூஜை செய்யும் ஆசிர்வாதப் பூஜையொன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களில் தலைமையில் அமைச்சர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.





2. சிறுநீரக நோயாளிகளை முன்னரே கண்டறியும் பணிகள்

சிறுநீரக நோயை ஆரம்ப கட்டத்தில் கண்டறிவதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்த முடியும். எனவே சிறுநீரக நோயாளிகளை முன்னரே கண்டறிவது தொடர்பாக முக்கிய கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் பூரண ஒத்துழைப்புடன் சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் சிறுநீரக நோயாளிகளை முன்னரே கண்டறியும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 851,342 நபர்கள் சிறுநீரகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக நோயாளிகளை முன்னரே கண்டறியும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மாவட்டம் மற்றும் நோய் ஆபத்துமிக்க பிரதேச செயலகப் பிரிவுகள்	பரிசோதிக்கப்பட்ட மக்கள் தொகை
அனுராதபுரம் (அனைத்து பிர.செய. பிரிவுகளும்)	2,500
பொலொன்னறுவை (அனைத்து பிர.செய. பிரிவுகளும்)	19,000
பதுளை (கிராந்துருகோட்டே, ரிதீமாலியத்த, மஹியங்கனை)	1,796
அம்பாறை (தெஹியத்தகன்டிய, மஹா ஓய)	484
குருநாகல் (பொல்பிதிகம, எஹட்டுவெவ, கிரிபாவ, கொடவெஹெர, மஹவ, நிக்கவெரட்டிய)	5,421

மாவட்டம் மற்றும் நோய் ஆபத்துமிக்க பிரதேச செயலகப் பிரிவுகள்	பரிசோதிக்கப்பட்ட மக்கள் தொகை
மாத்தளை (வில்கமுவ, நாஉல, பல்லேகம, கலேவெல, தம்புள்ளை)	5,919
மொனறாகலை (புத்தளை, வெள்ளவாய, தனமல்வில)	18,266
முல்லைத்தீவு (வெலிஓய, மலாவி)	477
திருகோணமலை (பதவி ஸ்ரீ புர, கோமரன்டகவல, கந்தளாய்)	2,263
வவுனியா (வவுனியா, வவுனியா தெற்கு, செட்டிக்குளம்)	5,000
அம்பாந்தோட்டை (திஸ்ஸமகாராமை, சூரியவெவ, அங்குணகொலபெலெஸ்ஸ, லுனுகம்வெஹெர)	7,317
ஏனைய மாவட்டங்கள்	1,829
மொத்தம்	70,272

மூலம் : சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

- அத்துடன் சிறுநீரக நோய் ஒழிப்புக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்தவாறு ஏற்புடைய பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் சிறுநீரக நோயாளிகளை முன்னரே கண்டறியும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.




மடு பொலிஸ் நிலையம், உத்தகந்தர ரஜமகா விகாரையில் இடம்பெற்ற சிறுநீரக நோயாளிகளை முன்னரே கண்டறியும் நிகழ்ச்சிகள்




மாத்தளை – வில்கமுவ





மடு பொலிஸ் நிலையம்





அம்பாந்தோட்டை - உத்தகந்தர ரஜமஹா விகாரை

3. சுத்தமான குடிநீரை வழங்குதல்.

சுத்தமான குடிநீரை அருந்துவதன் மூலம் சிறுநீரக நோயைப் பெரும்பாலும் கட்டுப்படுத்த முடியும் என உலக சுகாதார அமைப்பு சிபார்சு செய்கிறது. அதற்கமைய சிறுநீரக நோய் ஆபத்துமிக்க பிரதேசங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவது தொடர்பாக சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி முக்கிய கவனத்தைச் செலுத்தியுள்ளது. அதற்கேற்ப சிறுநீரக நோய் ஆபத்துமிக்க பிரதேசங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக கீழுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளை வழங்குதல்.
- ❖ மழை நீர்த் தாங்கிகளை நிர்மாணித்தல்.
- ❖ ஏலவேயுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் சேவை நீடிப்புக்கள்.
- ❖ வீட்டு நீர் வடிகட்டல் கருவிகளை வழங்குதல்.

- **நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளை வழங்குதல்**

சிறுநீரக நோய் ஆபத்துமிக்க பிரதேசங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் வகையில் குறுகிய காலத் தீர்வாக நீர் சுத்திகரிப்புத் தொகுதிகள் வழங்கப்படுகின்றன. சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி மற்றும் பல்வேறுபட்ட நலன்விரும்பிகளின் நிதியுதவியுடன் இலங்கை கடற்படையின் ஊழியப் பங்களிப்புடன் இந்த நீர்த் தொகுதிகள் நிறுவப்படுகின்றன.

சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி மூலம் 2016 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 521 நீர் சுத்திகரிப்புத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் நன்மை பெறும் மக்கள் தொகை நபர்களின் எண்ணிக்கையில் 13 இலட்சத்திற்கு மேற்பட்டதாகும். 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நீர்த் தொகுதிகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மாவட்டம்	நீர்த் தொகுதிகளின் எண்ணிக்கை	செலவினம் (மில்லியன் ரூபாய்)	நாளொன்றில் சுத்திகரிக்கும் நீரின் கொள்திறன் (லீட்டர்)	பயனாளிகளின் எண்ணிக்கை
அனுராதபுரம்	52	78	520,000	130,000
குருநாகல்	33	49.5	330,000	82,500
பொலொன்னறுவை	05	7.5	50,000	12,500
மொனறாகலை	26	39.0	390,000	65,000
பதுளை	01	1.5	10,000	2,500
வவுனியா	18	27.0	180,000	45,000
திருகோணமலை	23	34.5	230,000	57,500
ஏனைய மாவட்டங்கள்	24	36.0	240,000	60,000
மொத்தம்	**182**	**273.0**	**1,450,000**	**455,000**





கலஹகல, மிஹிந்தலை, குருந்தன்குளம் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தொகுதிகளை மக்களிடம் கையளித்தல்

அத்துடன் நிறுவப்பட்ட மேற்குறிப்பிட்ட நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளின் விலைப்பட்டியல்கள் சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் செலுத்தப்படுகின்றன.

- **வீட்டு நீர் வடிகட்டல் உபகரணங்களை வழங்குதல்**

நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளை அணுகும் வாய்ப்புக் குறைந்த சிறுநீரக நோயாளிகளின் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் ஒரு முறைமையாக வீட்டு நீர் வடிகட்டல் உபகரணங்கள் வழங்கப் படுகின்றன. கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் இந்த ஒரு உபகரணத்திற்கு ரூ. 4,700 செலவாவதுடன், சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியினால் இந்தச் செலவினம் ஏற்கப்படுகிறது.

சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2016 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 5002 வீட்டு நீர் வடிகட்டல் உபகரணங்கள் சிறுநீரக நோயாளிகளின் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள வீட்டு நீர் வடிகட்டல் உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மாவட்டம்	அளவு	பயனாளிகளின் எண்ணிக்கை
பதுளை	1,150	5,750
குருநாகல்	343	1,715
கிளிநொச்சி	500	2,500
மொனறாகலை	1,808	9,040
பொலொன்னறுவை	85	425
மொத்தம்	**3,886**	**19,430**

❖ 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏலவே காணப்படும் குழாய் நீர்த் தொகுதிகளை நீட்டிப்புச் செய்தல்

மாவட்டம்/ பிரதேசம்	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவினம் (மில்லியன் ரூபாய்)
பதுளை – மகியங்கனை பஹல ரத்கிந்த கிராமம்	800 குடும்பங்கள்	7.2
மொனறாகலை	600 குடும்பங்கள்	5.9

சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுத்தமான குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள்













4. நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.

- **ஜனாதிபதி கல்விப் புலமைப்பரிசில்கள் வழங்குதல்**

சிறுநீரக நோயாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி உரிமை பாதுகாக்கப்படும் வகையில் சிறுநீரக நோய் காரணமாக தாய்/தந்தையை இழந்த க.பொ.த. (உ.த.) கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

ஒரு மாணவருக்கு மாதம் ரூ. 3000 வீதம் வழங்கப்படும் இந்த புலமைப்பரிசிலுக்கு தேசிய சிறுநீரக நிதியம் மூலம் நிதி ஒதுக்கீடுகள் பெறப்படுகின்றன. இது வரை இந்த செயலணியினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் 68 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டம்	புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை (ரூபாய்)
அநுராதபுரம்	121	1682,000.00
அம்பாறை	06	136,000.00
குருநாகல்	04	92,000.00
திருகோணமலை	27	610,000.00
பொலொன்னறுவை	16	341,000.00
பதுளை	67	859,000.00
மாத்தளை	08	182,000.00
முல்லைத்தீவு	06	136,000.00
மொனறாகலை	25	134,000.00
வவுனியா	28	380,000.00
மொத்தம்	**308**	**4,552,000.00**





அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கரங்களினால் ஜனாதிபதி கல்விப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்

- **குறைந்த வருமானமுடைய சிறுநீரக நோயாளிகளுக்கு மாதாந்தம் ரூ. 5000 கொடுப்பனவை வழங்குதல்.**

சமூக வலுவூட்டல், நலனோம்புகை மற்றும் மலைநாட்டு மரபுரிமைகள் அமைச்சுடன் இணைந்து குறைந்த வருமானமுடைய சிறுநீரக நோயாளிகளுக்கு பிழைப்பூதியம் வழங்கப்பட்டதுடன், ஏற்புடைய கொடுப்பனவை ரூ. 3000 இலிருந்து 5000 வரை அதிகரிப்பதற்கு சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி பங்களிப்பு வழங்கியது.

இதன் கீழ் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பிழைப்பூதியத் தொகை வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மாவட்டம்	2015 (&.3000)	2016 (&.3000)	2017 (&.5000)	2018 (&.5000)
அநுராதபுரம்	6,232	7,199	8,685	8,945
பொலொன்னறுவை	2,758	3,662	4,483	4,487
வவுனியா	163	1,601	1,828	1,820
மாத்தளை	741	1,222	1,755	1,776
குருநாகல்	442	749	1,302	1,413
திருகோணமலை	364	464	603	624
முல்லைத்தீவு	223	440	485	485
அம்பாறை	493	545	1,071	1,092
அம்பாந்தோட்டை	-	105	189	187
மொத்தம்	**11,416**	**15,987**	**20,401**	**20,829**





அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கரங்களினால் சிறுநீரக நோயாளிகளுக்கு உதவிகளை வழங்குதல்

- **வீடமைப்பு உதவிகளை வழங்குதல்**

சிறுநீரக நோயாளிகளின் நலனோம்புகைக்காக செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமாக சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இணைந்து குறைந்த வருமானமுடைய சிறுநீரக நோயாளிகளுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்தல், வீடுகளைத் திருத்தியமைத்தல் என்பவற்றுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதில் 2017 ஆம் ஆண்டில் 1,757 பயனாளிகளுக்காக 406 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டிற்கு 400 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





தேசிய நிகழ்வுகளின்போது குறைந்த வருமானமுடைய சிறுநீரக நோயாளிகளுக்கு வீடமைப்பு உதவிகள் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்

5. நோயாளிகளின் சிகிச்சைக்குத் தேவையான சுகாதாரத் துறை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

இதன் கீழ் சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் சிறுநீரக நோயாளிகளின் நலனோம்புகைக்காக சிறுநீரக நோயாளிகளுக்கான நிவாரண உபசரணை மற்றும் நலனோம்புகை நிலையங்கள் 03 நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

- **அனுராதபுர பொது வைத்தியசாலையுடன் இணைந்தவாறு நிர்மாணிக்கப்படும் "மெத்சிறி செவன" சிறுநீரக நோயாளிகளுக்கான நிவாரண உபசரணை, நலனோம்புகை நிலையம்**

நான்கு மாடிகள் கொண்ட இந்த நிவாரண உபசரணை, நலனோம்புகை நிலையம் நோயாளிகளுக்கான 26 அறைகள், 02 தரிப்பிட மண்டபங்கள், ஒரு விரிவுரை மண்டபம் மற்றும் மருத்துவ, ஆலோசனைச் சேவைகள் கொண்ட அறைகளை உள்ளடக்கியுள்ளது.

இந்த நலனோம்புகை நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தேசிய சிறுநீரக நிதியத்தினால் 332.3 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், 2019.03.15 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கரங்களினால் “மெத்சிறி செவன” சிறுநீரக நோயாளிகளுக்கான நிவாரண உபசரணை, நலனோம்புகை நிலையம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.



நிர்மாணிக்கப்பட்டு வரும் சிறுநீரக நோயாளிகளுக்கான நிவாரண உபசரணை, நலனோம்புகை நிலையத்தின் திட்ட வரைபடம்

- **கண்டி பொது வைத்தியசாலையுடன் இணைந்தவாறு நிர்மாணிக்கப்படும் சிறுநீரக நோயாளி களுக்கான நிவாரண உபசரணை, நலனோம்புகை நிலையம்**

கண்டி பொது வைத்தியசாலையுடன் இணைந்தவாறு நிர்மாணிக்கப்படும் இந்த நலனோம்புகை நிலையம் 06 மாடிகளைக் கொண்டதுடன், அது 60 குருதிச் சுத்திகரிப்பு இயந்திரங்களைக் கொண்ட குருதிச் சுத்திகரிப்பு அலகு, நோயாளிளுக்கான 40 அறைகள், இரண்டு தரிப்பிட மண்டபங்கள், கேட்போர்கூடம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இந்த நலனோம்புகை நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தேசிய சிறுநீரக நிதியம் மற்றும் சிறுநீரக நோய் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு மூலம் 628 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், 2019.02.25 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால் சிறிசேன அவர்களின் கரங்களினால் இந்த சிறுநீரக நோயாளிகளுக்கான நிவாரண உபசரணை, நலனோம்புகை நிலையம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.



நிர்மாணிக்கப்பட்டு வரும் சிறுநீரக நோயாளிகளுக்கான நிவாரண உபசரணை, நலனோம்புகை நிலையத்தின் திட்ட வரைபடம்

- **சீன அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் பொலொன்னறுவை சீன இலங்கை நட்புறவு தேசிய சிறுநீரக வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை ஒருங்கிணைத்தல்.**

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப சீன அரசாங்கத்தினால் சிறுநீரக நோயாளி களுக்கான விசேட வைத்தியசாலையொன்று நன்கொடையாக வழங்கப்பட்டதுடன் அதற்காக இரு நாடுகளுக்கிடையிலும் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தயாரித்தல் மற்றும் அதன் ஒருங்கிணைப்பு இந்த செயலணியினால் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய தேசிய சிறுநீரக வைத்தியசாலைக்கு 2017.12.06 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால் சிறிசேன அவர்களின் கரங்களினால் அடிக்கல் நடப்பட்டதுடன், 12,000 மில்லியன் ரூபாய் செலவில் பொலொன்னறுவையில் நிர்மாணிக்கப்படும் இந்த விசேட தேசிய சிறுநீரக வைத்தியசாலை கீழுள்ள அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

- சகல வசதிகளையும் கொண்ட சத்திரசிகிச்சைக் கூடப் பிரிவு
- சிறுநீரகம் மற்றும் உறுப்புக்களைப் பொருத்தும் பிரிவு
- மயக்க மருந்து வழங்குனர் பிரிவு, அறுவைசிகிச்சை அதிதீவிர கவனிப்புப் பிரிவு, மருத்துவ ரீதியான அதிதீவிர கவனிப்புப் பிரிவு
- 10 படுக்கைகள் வீதம் கொண்ட 02 சத்திரசிகிச்சைக்கூடங்கள், 200 படுக்கைகள், 100 குருதிச் சுத்திகரிப்புப் படுக்கைகள்
- சிறுநீரக நோய் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கான விசேட ஆய்வுகூடம்



நிர்மாணிக்கப்பட்டு வரும் சீன நட்புறவு தேசிய சிறுநீரக வைத்தியசாலை


- **கிராந்துருகோட்டையில் நிர்மாணிக்கப்படும் சிறுநீரக நோயாளிகளை வலுவூட்டுவதற்கான பொருளாதார நலனோம்புகை, கல்வித் தகவல் மையம்**

இந்த நலனோம்புகை நிலையம் சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் சிறுநீரக நோயாளிகளின் நலனோம்புகைக்காக மேற்கொள்ளப்படும் இன்னுமொரு கருத்திட்டமாகும்.

பதுளை மாவட்டத்திலுள்ள கிராந்துருகோட்டை பிரதேசம் சிறுநீரக நோயாளிகள் அதிகம் காணப்படும் பிரதேசம் என்பதுடன், அப்பிரதேசத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக செயற்படுத்தப்படும் நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய கருத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட விசேட பிரிவொன்று இல்லாமை முக்கிய பிரச்சினையாகக் காணப்பட்டது. பதுளை மாவட்டத்தை மையப்படுத்தி கிராந்துருகோட்டையில் நடாத்தப்பட்ட சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் ஏற்புடைய பிரச்சினை தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கவனம் ஈர்க்கப்பட்டதுடன், அதன் பிரதிபலனாக இந்த நலனோம்புகை நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் மதிப்பீட்டுச் செலவினம் 74 மில்லியன் ரூபாய் என்பதுடன், நிர்மாணப் பணிகள் இலங்கை கடற் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய ஊழியச் செலவினம், ஒப்பந்தக்காரருக்கு கிடைக்க வேண்டி இலாபத்தை நீக்கிய பின்பு மதிப்பிடப்பட்ட செலவினம் 43 மில்லியன் ரூபாய் ஆகும்.

ஏற்புடைய நலனோம்புகை நிலையத்தின் மாதிரித் திட்ட வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.



6. நோயாளர் சிகிச்சைக்குத் தேவையான ஏனைய வசதிகளை வழங்குதல்

❖ சிறுநீரக நோய்க்கு வழங்கப்படும் இறுதியான மற்றும் வெற்றிகரமான தீர்வு சிறுநீரக மாற்றுச் சிகிச்சையாகும். அதற்கமைய மூளை மரணித்த நோயாளிகளின் சிறுநீரகங்களை சிறுநீரக நோயாளிகளுக்கு மாற்றிப் பொருத்தும் முறைமையொன்று சுகாதார அமைச்சுடன் இணைந்து ஆரம்பிக்கப் பட்டதுடன், ஏற்புடைய சத்திரசிகிச்சைகள் கண்டி போதனா வைத்தியசாலை மற்றும் மாளிகாவத்தை சிறுநீரக வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது ஏற்புடைய வைத்தியசாலைகளுக்கு மூளை மரணித்த நோயாளிகளின் சிறுநீரகங்களைத் துரிதமாக எடுத்துச் செல்வது தொடர்பாக சிக்கலான நிலைமையொன்று காணப்பட்டதுடன், சிறுநீரக நோய் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் கோரிக்கைக்கு ஏற்ப இலங்கை விமானப்படையின் ஒத்துழைப்பு இதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கேற்ப தற்போது நாட்டில் எந்தவொரு இடத்திலிருந்தும் மூளை மரணித்த நோயாளிகளின் சிறுநீரகங்களை மாற்றிப் பொருத்துவதற்குத் துரிதமாக எடுத்துச் செல்லும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

❖ அத்துடன் மூளை மரணித்த நோயாளிகளின் சிறுநீரகங்களை தானம் செய்வதற்கான விருப்பினை சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையில் உள்ளடக்குவது தொடர்பான தேசிய வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவது தொடர்பாகவும் தற்போது கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ சிறுநீரக நோய் காரணமாக அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் சுகாதார நிலைமை மற்றும் பொருளாதார நிலைமையில் மாத்திரமன்றி உளரீதியாகவும் கடுமையான பாதிப்பினை எதிர்நோக்கு கின்றனர். இந்த நிலைமைக்குத் தீர்வாக அவர்களுக்கான உளவளத்துணை நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

❖ சிறுநீரக நோயாளிகனை முன்னரே கண்டறியும் நடவடிக்கைகளைத் துரிப்படுத்துவதற்காக குருதி, சிறுநீர்ப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு ஆய்வுகூட நிபுணர்கள் மேலதிகமாக ஈடுபடுத்தப்பட் டுள்ளதுடன், கடமை நேரங்களின் பின்பும் ஏற்புடைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய ஏற்புடைய பரிசோதனைகளுக்கான கொடுப்பனவை மேற்கொள்வதன் மூலம் சிறுநீரக நோய் ஒழிப்பு ஜனாதிபதி செயலணி அதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

7. ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

மூலவேர் இனங்காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்க்கு இது வரை குறிப்பான காரணங்கள் கண்டறியப்படாமையினால் அதற்கான காரணங்களைக் குறிப்பாக கண்டறிவதற்கு பாரியளவிலான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் சிறுநீரக நோய் ஒழிப்பு மற்றும் அதற்கான சிகிச்சை தொடர்பாக தொடர்ச்சியான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்நாட்டு வெளிநாட்டு நி-புணர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கு சிறுநீரக நோய் ஒழிப்பு ஜனாதிபதி செயலணி ஒத்துழைப்பு வழங்குகிறது.

- **சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்**

1. 2017.07.13, 14 ஆந் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயின் மூலவேரைக் கண்டறியும் ஆய்வுகளை மேற்கொள்ளும் தரப்பினரின் மாநாடு.

2. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயாளிகளின் குடும்பங்களின் நலனோம்புகையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகளை ஆராய்வதற்கான கணக்கெடுப்பு

3. 2018.02.08, 09, 10 ஆந் திகதிகளில் அமெரிக்க ஐக்கியக் குடியரசின் மாயோ மருத்துவ நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட சிறுநீரகவியல், குருதிச் சுத்திகரிப்பு, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை, புற்றுநோயியல் தொடர்பான சர்வதேச மாநாடு.

4. கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் நடாத்தப்பட்ட உறுப்புக்கள் மாற்றுச் சிகிச்சை மற்றும் உறுப்புக்களை தானம் செய்தல் தொடர்பான தேசிய செயலமர்வு.

5. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக நோய்க்கு காரணமாக அமையும் சமூக, பொருளாதாரக் காரணங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு

6. கண்டி பொது வைத்தியசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட குருதிச் சுத்திகரிப்பு தொடர்பாக தாதியரைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சி (மலேசியா)





2017.07.13, 14 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயின் மூலவேரைக் கண்டறியும் ஆய்வுகளை மேற்கொள்ளும் தரப்பினரின் மாநாடு

- **சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்ட ஏனைய ஆய்வுகள்**

  - ❖ 2015.12.26 ஆந் திகதி காலி முகத்திடல் ஹோட்டலில் நடாத்தப்பட்ட சிறுநீரக நோயின் மூல வேரைக் கண்டறியும் ஆய்வுகளுடன் தொடர்புடைய உள்நாட்டு வெளிநாட்டு புத்திஜீவிகளின் மாநாடு.

  - ❖ 2016.03.15 ஆந் திகதி சீன விசேட நிபுணத்துவ அறிவைப் பரிமாறிக் கொள்ளும் செயலமர்வொன்று நடாத்தப்பட்டதுடன், இதன்போது வழங்கப்பட்ட நவீன தொழிநுட்பத்தைக் கொண்ட ஆய்வுகூடத்தை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் நிர்மாணிப்பதற்கு 2017.11.17 ஆந் திகதி அடிக்கல் நடப்பட்டது.

- 2016.04.04 முதல் 2016.04.08 ஆந் திகதி வரை நெதர்லாந்து நீர் தொடர்பான நிபுணர் களினால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிநிதிகளுடன் இணைந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர் மூலங்களைப் பரிசோதித்து அது தொடர்பான அறிக்கை மற்றும் விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- 2016.04.26, 27, 27 ஆந் திகதிகளில் உலக சுகாதார அமைப்புடன் இணைந்தவாறு உள்நாட்டு வெளிநாட்டு புத்திஜீவிகள் ஒன்றிணைந்து மாநாடொன்றை நடாத்தி நோய் ஒழிப்புப் பணிகள் தொடர்பான விதப்புரைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை கௌரவ ஜனாதிபதி அவர்களுக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

- 2016.10.09-11 ஆகிய தினங்களில் பேர்லின் நகரில் இடம்பெற்ற உலக சுகாதார மாநாட்டில் கருத்திட்டப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் பங்குபற்றி உலக சுகாதார அமைப்புடன் இடம்பெற்ற செயலமர்வின் பெறுபேறுகள் கொண்ட அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

- 2017.11.02 ஆந் திகதி அணு விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைப்பினால் (ANSTO) நடாத்தப்பட்ட சிறுநீரக நோயின் மூலவேரைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் தொடர்பான மீளாய்வு மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான செயலமர்வு.

- 2018.02.08, 09, 10 ஆந் திகதிகளில் சேர் ஜெனரல் ஜோன் கொத்தலாவ வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட சிறுநீரகவியல், குருதிச் சுத்திகரிப்பு, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை, புற்றுநோயியல் தொடர்பான சர்வதேச மாநாடு





2015.12.26 ஆந் திகதி நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் விசேட சந்தர்ப்பங்கள்

8. செயல்திறமுடைய தரவுத்தளமொன்றை நிறுவுதல்

நோயாளிகள் தொடர்பான தரவுகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட சிரமம் சிறுநீரக நோய் ஒழிப்பு ஜனாதிபதி செயலணி ஆரம்பம் முதல் நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடும்போது ஏற்பட்ட பிரதான சிக்கல் ஆகும். இதன் காரணமாக சிறுநீரக நோயாளிகள் தொடர்பான தரவுத்தளமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் தற்போது சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் ஏற்புடைய தரவுத்தளம் நிறுவப்பட்டு பேணிச் செல்லப்படுகிறது. இதற்காக 55 வைத்தியசாலைகளுக்கு கணனிப் பயிலுனர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

04. "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

தொலைநோக்கு

இருபத்தியோராம் நூற்றாண்டின் சவால்களுக்கு சிறப்பாக முகங்கொடுக்கும், பாதுகாப்பான சூழலொன்றில் வாழும் பிள்ளைகள் சந்ததியொன்று

செயற்பணி

பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான, அவர்களின் உடல், உளரீதியான அபிவிருத்திக்கு ஏற்ற சூழலொன்றை உருவாக்குதல்

அறிமுகம்

எதிர்கால ஊழியப் படையணியின் தரம் தற்கால சிறுவர் சந்ததிதியில் தங்கியுள்ளதால், தற்போது சமூகத்தில் பரவிச் செல்லும் பல்வேறுபட்ட அழிவுகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான அம்சங்களை முன்னுரிமை அடிப்படையில் இனங்கண்ட அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தற்கால சிறுவர் சந்ததிக்கான விசேட நலனோம்புகை மற்றும் பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றைத் துரிதமாக செயற்படுத்த வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். அதற்கமைய இந்த விடயத்துக்கு ஏற்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபை அமைச்சுக்கள் உட்பட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய தரப்பினரின் பங்கேற்புடன் பல கலந்துரையாடல் அமர்வுகள் நடாத்தப்பட்டன. கலந்துரையாடல்களில் இனங்காணப்பட்ட சிக்கல்களை முறையாக விரைவாகத் தீர்ப்பதற்கான அம்சங்களை உள்ளடக்கிய குறிப்பான காலச் சட்டகம் கொண்ட செயல் திட்டமொன்றைத் (Time-bound Action Plan) தயாரித்து மூன்று வருடங்களினுள் (2017 – 2019) செயற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு கீழுள்ள மூன்று துறைகளின் கீழ் "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. கொள்கை வகுத்தல், சட்டச் சீர்திருத்தம் மற்றும் செயற்படுத்தல்
2. நிறுவனங்களைப் பலப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி.
3. சிறுவர்களின் உடல் ஆரோக்கியம், அறிவு, திறன் விருத்திக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்



"சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய நிகழ்ச்சித்திட்டமானது தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்தப்படுவதுடன், ஜனாதிபதி அலுவலகத்தினால் 2018 ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

4.1 "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய நிகழ்ச்சிகளை நடாத்துதல்

சிறுவர்களைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டத்தை சமூகமயப்படுத்தும் நோக்குடன், அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் சில தேசிய வைபவங்கள் நடாத்தப்பட்டன.

திகதி	இடம்	கலந்துகொண்டோரின் எண்ணிக்கை
2017.09.08	கண்டி திகன மாகாண விளையாட்டுக் கட்டிடத் தொகுதி	7,000
2017.11.10	பொலொன்னறுவை ரோயல் மத்திய மகா வித்தியாலயம்	5,500

இதன் மூன்றாவது வைபவம் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசனே அவர்களின் தலைமையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் 4000 பேரின் பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றதுடன் அதனுடன் இணைந்தவாறு,

விமானப் படையின் ஊழியப் பங்களிப்பினை அடிப்படையாகக் கொண்டு 50 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி கனகபுரம் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் திருக்கரங்களினால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன்,

- வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களை நவீனமயப்படுத்தல் மற்றும் புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு வழங்குதல் (4.85 மில்லியன் ரூபாய்)

- அங்கவீனமுடைய பிள்ளைகள் கல்வி கற்கும் வட மாகாணத்தின் 25 பாடசாலைகளில் கட்டிடங்களுக்கான நுழைவு வீதிகள் மற்றும் ஏனைய வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்புடைய நிதியொதுக்கீட்டினை வழங்குதல் (24.95 மில்.ரூ)

- பாதுகாப்பின்றி வாழும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக் களத்தினால் காப்புத் திட்டங்கள் **Care plan)** முறைமையொன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் கீழ் பிள்ளைகளின் பாதுகாப்பு குடும்ப அலகினுள்ளேயே உறுதிப் படுத்தப்படுகிறது. இதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 குடும்பங்களுக்கு அடையாளரீதியாக ரூ. 50,000 நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.





4.2 "எதிர்காலத்தை வெல்லும் பிள்ளைகள்" ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தல்.

தனிநபர் ஆளுமையானது சிறுவர் பருவத்தின் மனப்பாங்கு, திறன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாவதால், சிறுவர் பருவத்தில் எதிர்கொள்ள வேண்டியேற்படும் பாதகமான தாக்கங்களை முடிந்தளவு குறைத்துக் கொள்வதே தற்போதைய காலத்தின் தேவையாகும். அதற்கு சமூகத்தில் விழிப்புணர்வைக் கட்டியெழுப்பும் நோக்குடன் சிறுவர்களைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தை வெல்லும் பிள்ளைகள் ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன்போது,

I. பிள்ளைகளின் ஆளுமை விருத்தி தொடர்பான பயிற்சி மொடியுலைத் தயாரித்தல்.

- நிபுணர் குழு அங்கத்தவர்களான சிரேஷ்ட உளவள ஆலோசகர், உளவள வைத்தியர்கள், விசேட உளவள வைத்தியர்கள், மகப்பேற்று மருத்துவர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்களின் பங்கேற்புடன் 2018.01.04 – 06 வரை இலங்கை அபிவிருத்தி மற்றும் நிர்வாக நிறுவனத்தில் மூன்று நாள் செயலமர்வொன்றை நடாத்தி பயிற்சி மொடியுல் தயாரிக்கப்பட்டது.

II. மாகாணரீதியாக அரச அலுவலர்களுக்கு விழிப்புணர்வளித்தல்.

- **மத்திய மாகாண நிகழ்ச்சித்திட்டம்**
  2018.04.05 மற்றும் 06 ஆந் திகதிகளில் 350 அலுவலர்களின் பங்கேற்புடன் பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

- **ஊவா மாகாண நிகழ்ச்சித்திட்டம்**
  2018.05.21 ஆந் திகதி 500 அலுவலர்களின் பங்கேற்புடன் பதுளை சைமன் பீரிஸ் மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

4.3 "ஆரோக்கியமான சிறுவர் சந்ததியொன்றைக் கட்டியெழுப்புவோம்" மேல் மாகாணத்தில் அங்கவீனராகவும், பாதுகாப்பின்றியும் வாழும் பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் ஆளுமை விருத்திக்கான கருத்திட்டம்

மேல் மாகாணத்தில் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் காணப்படும் அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் விசேட கல்வியைப் பெறும் விசேட தேவையுடைய பிள்ளைகள், அவ்வாறே உடல், உள அங்கவீனம் காரணமாக வீட்டில் வாழும் பிள்ளைகள், நகர மற்றும் கிராமியப் பிரதேசங்களில் பாதுகாப்பற்ற வாழ்வு ஒழுங்கைக் கொண்ட பிள்ளைகளை பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவை அலுவலர்கள், சமூக சுகாதார மருத்துவ அலுவலர்கள் மூலம் இனங்கண்டு அவர்களின் பெற்றோருக்கு விழிப்புணர்வு வழங்கி அப்பிள்ளைகளின் சுகாதார நிலைமை மற்றும் வாழ்க்கை நிலைமையை சிறந்த அபிவிருத்தி நிலை-மைக்கு மாற்றும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இதன்போது செயன்முறைச் செயற்பாடுகளைக் கொண்ட ரசனைமிக்க நிகழ்ச்சிகள் மூலம் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதன் ஊடாக அவர்களை சமூகமயப்படுத்தல்,

ஆயுர்வேத வைத்திய முறைமைகளுடன் உள்நாட்டு உணவு ஒழுங்கு ஊடாக அப்பிள்ளைகளின் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தி, போசாக்கு மிகுந்த ஆரோக்கியமான சிறந்த உள ஆரோக்கியமுடைய பிள்ளைகளாக அவர்களை மாற்றுவதற்கு பெற்றோர்களை அறிவுறுத்தும்போது, போசாக்கு குறைபாடுடைய பிள்ளைகளுக்கு உள்நாட்டு உணவுகள் தொடர்பாக விளக்கமளித்தல், உள ஆரோக்கியம், அறிவு விருத்தி, நரம்பு வளர்ச்சியை ஏற்படுத்தும் மருத்துவக் குணமுள்ள தாவர வகைகளை அறிமுகப்படுத்தல், அவற்றை வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதற்கு அறிவுறுத்தல் என்பன இடம்பெற்றன.

அதற்கமைய மேல் மாகாணத்தில் வாழும் 800 அங்கவீனரான பிள்ளைகள், பாதுகாப்பின்றி வாழும் 400 பிள்ளைகளை உள்ளடக்கி மேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தினால் 1200 பிள்ளை களுக்காக இக்கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

4.4 “எமது பிரச்சினைகளை நாமே தீர்ப்போம்” பாடசாலை இணக்கப்பாடு தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தை தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளில் செயற்படுத்தல்

- இணக்க சபை ஆணைக்குழுவினால் நீதியமைச்சு ஊடாக அமைதியான, சகவாழ்வுடன் கூடிய பிள்ளைகளை எதிர்காலத்திற்கு வழங்குவதற்காக மோதல்கள் குறைந்த பாடசாலைத் தொகுதியைக் கருப்பொருளாகக் கொண்டு "எமது பிரச்சினைகளை நாமே தீர்ப்போம்" பாடசாலை இணக்கப்பாடு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் 25 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்தில் 10 பாடசாலைகளில் வீதம் 250 பாடசாலைகளில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பினும், முதலாவது கட்டத்தில் ஒரு மாவட்டத்தில் 04 பாடசாலைகள் வீதம் சிங்கள, தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் உள்ளடங்கும் வகையில் 100 பாடசாலைகளில் இந்த நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆண்டில் செயற்படுத்தப்பட்டது.

- அதற்கமைய நாடு முழுவதும் 100 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், பிள்ளைகளுக்கு ஐந்து நாள் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் ஏற்புடைய பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் என்பன இதில் இடம்பெற்றன.

- இதில் வடக்கு கிழக்கிலுள்ள 15 பாடசாலைகளில் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட வில்லை என்பதுடன், 85 பாடசாலைகளில் சிறப்பாக செயற்படுத்தப்பட்டது.
  மேலும் பாடசாலை இணக்க அலகைச் சேர்ந்த மாணவர்களை சமூக இணக்க சபை-யொன்றைப் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லும் களப் பிரயாணம், பாடசாலை இணக்க அலகுகளுக்கு முறைப்பாட்டுப் பெட்டிகள் மற்றும் பெயர்ப் பலகைகளைத் தயாரித்தல் ஆகிய திட்டப் பிரேரணைகளுக்கு காலம் போதியதாக அமையாத காரணத்தினால், அவற்றை 2019 ஆம் ஆண்டின் கருத்திட்டப் பிரேரணைகளில் உள்ளடக்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன், மொத்தமாக நோக்கும்போது இந்த நிகழ்ச்சித்திட்டம் மிகவும் சிறப்பாக செயற்படுத்தப்பட்டது எனக் கூற முடியும்.









4.5 அரச/ மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் காணப்படும் சிறுவர் இல்லங்கள் தடுப்பு இல்லங்களின் அத்தியாவசிய திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்

பெற்றோரின் பராமரிப்பை இழந்த, அநாதையான, ஆதரவற்ற, தடுப்பு இல்லங்களில் வாழும் பிள்ளைகளின் நலனோம்புகைக்காக அவர்களின் அனைத்து தேவைகளும் நிறைவேற்றப்படும் வகையில் சிறுவர் இல்லங்கள், தடுப்பு இல்லங்களில் மலசலகூடத் தொகுதிகள், கூரைகள், சேதமடைந்துள்ள மதில்களைப் புனரமைத்தல், குழாய்நீர்த் தொகுதிகள், பாதுகாப்பான நுழைவாயில்களை ஏற்படுத்தல், கழிவுகளை அகற்றுவதற்கு குப்பைக் கூடாரங்களை நிர்மாணித்தல், கட்டிடங்களுக்குப் பூச்சிடுதல் போன்ற பல பணிகளுக்காக சிறுவர்களைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித் திட்டம் முன்னைய ஆண்டில் வழங்கிய பங்களிப்பை 2018 ஆம் ஆண்டிலும் 09 மாகாணங்களை மையப்படுத்தி செயற்படுத்தியது.

	மாகாண சபை	திருத்தியமைக்கப்பட்ட சிறுவர் இல்லங்கள்/ தடுப்பு இல்லங்களின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மில்)
01.	வடக்கு	03	4.85
02.	கிழக்கு	08	9.23
03.	வடமேல்	02	1.40
04.	வட மத்திய	03	6.55
05.	சப்ரகமுவ	03	3.85
06.	தென்	05	8.46
07.	மேல்	04	4.50
08.	மத்திய	02	1.98
09.	ஊவா	03	2.06
மொத்தம்		**33**	**42.88**

மீகலேவ அமில செவன அரச பொறுப்பேற்பு சிறுவர் இல்லத்தில் பிள்ளைகளின் அத்தியாவசியப் பொருட்களை வைத்திருப்பதற்கான களஞ்சிய அறையொன்றை நிர்மாணித்தல் (நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் - வடமேல் மாகாணம்)









வியலகொட பெண் சிறுமிகள் தடுப்பு இல்லம் - ஜனாதிபதி செயலகத்தின் ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள், திருத்த வேலைகள்

துணி உலர வைக்கும் இடத்தை அமைத்தல்.







மைதானத்தில் மண்ணை வெட்டி திருத்தியமைத்தல்.





விளையாட்டு மைதானத்தைச் சூழ புல்திட்டு பிடித்தல்.





சிறுவர் இல்லக் கட்டிடத்தைச் சூழ வர்ணப் பூச்சிடுதல்.





பெரடைஸ் சிறுவர் இல்லம் - பால் அறையொன்றை அமைத்தல்





பகுதி பிரித்தல், ஓடு இடுதல், பேன்ட்ரி அலுமாரிகள் அமைத்தல் .









பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்

கருப்பொருள்

"சிறுவர்களுக்கான ஓர் மகிழ்ச்சிகரமான உலகம் -
நிலைபேற்று நிலை வருங்காலம்"

மூலோபாயங்கள்

1. பங்குபற்றலும் ஒத்துழைப்பும் பங்களிப்பும்.
2. அனுபவங்கள் மூலம் கற்றல்.
3. சுயமதிப்பீடும் மதிப்பீடும்.
4. சுயேச்சையான பங்குபற்றுதலும் பணிபுரிதலும் சமூக மயப்படுத்தலும்.

குறிக்கோள்கள்

1. பிள்ளைகளை உள்நாட்டு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் நுகர்வதற்கும் ஊக்குவித்தல்.
2. சூழல் மீது ஆர்வங்கொண்ட எதிர்காலச் சந்ததியினரை உருவாக்குவதன் மூலமாக நிறைபேற்று நிலை அபிவிருத்தியை நோக்கி பாடசாலைச் சிறுவர்களுக்கு வழிகாட்டுதல்.
3. சமகாலத்தில் அச்சுறுத்தலாகக் காணப்படும் போதைப்பொருட்கள் மற்றும் சிறுநீரக நோயை ஒழிப்பதில் செயல்திறமுள்ள பங்குதாரர்களாக பாடசாலைச் சிறுவர்களை ஈடுபடுத்துதல்.
4. ஆளுமை விருத்தி மற்றும் சிறுவர்களை வலுவூட்டல் மூலம் பாதுகாப்பான சிறுவர் சந்ததியை உருவாக்குதல்.
5. பாடசாலை மற்றும் அதன் வளவில் பேண்தகு அபிவிருத்தி மூலம் பெறும் அனுபவங்களைத் தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்பவர்களாக சிறுவர்களை வலுவூட்டுதல்.

பிரதான செயற்பாடுகள்

1. காணி/நிலங்களைப் பயன்படுத்தும் ஒழுங்கு தொடர்பாக விழிப்புணர்வு வழங்குதல்.
2. பாடசாலைத் தோட்டத்தை உற்பத்திக்கான ஓர் வழிவகையாக்குதல்.
3. அழகிய, சுத்தமான, சுகாதாரப் பாதுகாப்பு மிக்க பாடசாலைச் சூழலை உருவாக்குதல்.
4. போதைப்பொருள், சிறுநீரக நோய் அச்சுறுத்தல் தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வளித்தல்.
5. போதைப்பொருள், சிறுநீரக நோய் அச்சுறுத்தலைப் தடுப்பதற்கு செயல்திறமுடைய தரப்பினராக பாடசாலை மாணவர்களைப் பயிற்றுவித்தல்.
6. சுய பாதுகாப்பை மேற்கொள்ள மாணவர்களுக்கு வலுவூட்டுதல்.
7. பிள்ளைகளின் வாசிப்பு ஆர்வத்தை மேம்படுத்துவதன் ஊடாக இரசனையையும் அறிவையும் மேம்படுத்தல்.
8. பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய முடியுமான வகையில் அறிவு, ஆற்றல், மனப்பாங்கினை விருத்தி செய்தல்.
9. பிள்ளைகளிடம் சிறந்த நடத்தைகளை வளர்த்தல்.

அறிமுகம்

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தனது விசேட அவதானத்தின் கீழ், அவரின் முழுமையான மேற்பார்வை மற்றும் வழிகாட்டலுடன் ஐந்து விடயத் துறைகள் தொடர்பாக தற்போது பின்வரும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

1. சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்
2. போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்
3. சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்
4. “சிறுவர்களைப் பாதுகாப்போம்” தேசிய நிகழ்ச்சித்திட்டம்
5. உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம்

பாடசாலை மாணவர்களை ஆபத்தான நடத்தைகளிலிருந்து தடுத்து உலகிற்கும் சமூகத்திற்கும் அவர்களைப் பரிச்சயப்படுத்தும் இலட்சியத்தை முன்னிலைப்படுத்தி இந்த ஐந்து தேசிய நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒன்றிணைத்து தற்போது பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் நாடு முழுவதும் 6409 பாடசாலைகளில் செயற்படுத்தப்படுகின்றது.

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்பேறுபட்ட கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் ஜனாதிபதி அலுவலகத்தினால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

தொடர் இல.	செயற்பாடு	ஒதுக்கீடு ரூ.
1	பாடசாலை "துரு உயன்" நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தல்	30,999,415.97
2	பாடசாலை காணி உபயோக மாதிரிக் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் - (பொறுப்பு – மாவட்ட காணி உபயோக அலுவலர்)	4,527,461.00
3	சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்	29,352.00
4	சுற்றாடல் பாதுகாப்புக்கு ஏற்புடையவாறு பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்	1,916,230.00
5	முன்னேற்ற மீளாய்வுப் பணிகள்	675,225.00
6	மாணவர்களின் மென் திறன்கள் மற்றும் உள சமூகத் திறமை-களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	1,483,700.00
7	பேண்தகு பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கருத்திட்டத்தைச் செயற்படுத்தல்	6,190,230.00
8	"கலன மிதுரு - பொத் மிதுரு" நிகழ்ச்சித்திட்டம்	1,750,000.00
9	"தெயட பிபென மல்" நிகழ்ச்சித்திட்டத்தை சிருத்தா ஊடக அலைவரிசையுடன் இணைந்து செயற்படுத்தல்	9,775,520.00
10	பாடசாலை மாணவர்கள் அருந்தும் நீரின் தரநிலையைப் பரிசோதித்தல்	15,657,851.76

தொடர் இல.	செயற்பாடு	ஒதுக்கீடு ரூ.
11	சிறுவர்களைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சிகள்	2,828,314.75
12	ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை அலுவலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்	1,250,000.00
13	142 பாடசாகைளுக்கு நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்	59,019,152.00
14	சிறுநீரக நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலை களினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சிகள்	316,140.00
15	போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சிகள்	370,310.00
16	பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தைப் (BMI) பேணிச் செல்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்	18,385,000.00

01. பாடசாலை "துரு உயன்" கருத்திட்டம்.

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் மூலம் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செடிகளுக்கான தேவை இனங்காணப்பட்டு, அதற்குத் தேவையான பழக் கன்றுகள் மற்றும் ஏனைய தாவர வகைகள் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.

பாடசாலை "துரு உயன்" கருத்திட்டத்தின் நோக்கங்கள்

- பசுமையான சூழலொன்றைக் கட்டியெழுப்புவற்கு பாடசாலை மாணவர்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல்.
- வளி மாசடைதல், உலக வெப்பமாதலைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.
- அரிய வகைத் தாவரங்கள், மருந்துச் செடிகளை நடுதல், அவற்றைப் பாதுகாத்தல்.
- சூழல் மீது அன்பு செலுத்துகின்ற எதிர்கால சந்ததியொன்றை உருவாக்குதல்.

இந்தக் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்கள்

தொடர் இல.	ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிறுவனம்	ஒதுக்கீட்டுத் தொகை ரூ.
1	மாவட்டச் செயலகம், கம்பஹா	847,975.00
2	மாவட்டச் செயலகம், கண்டி	1,697,500.00
3	மாவட்டச் செயலகம், மாத்தளை	2,285,600.00
4	மாவட்டச் செயலகம், பொலொன்னறுவை	680,000.00
5	மாவட்டச் செயலகம், அனுராதபுரம்	4,098,578.00
6	மாவட்டச் செயலகம், திருகோணமலை	1,532,500.00
7	மாவட்டச் செயலகம், கேகாலை	478,000.00

தொடர் இல.	ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிறுவனம்	ஒதுக்கீட்டுத் தொகை ரூ.
8	மாவட்டச் செயலகம், பதுளை	2,986,382.00
9	மாவட்டச் செயலகம், மொனறாகலை	1,317,731.00
10	மாவட்டச் செயலகம், களுத்துறை	884,625.00
11	மாவட்டச் செயலகம், காலி	1,675,080.00
12	மாவட்டச் செயலகம், நுவரெலியா	2,238,916.00
13	மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை	1,737,713.00
14	மாவட்டச் செயலகம், குருநாகல்	2,535,987.47
15	மாவட்டச் செயலகம், மாத்தறை	636,212.50
16	மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு	926,588.00
17	மாவட்டச் செயலகம், இரத்தினபுரி	864,918.00
18	மாவட்டச் செயலகம், கொழும்பு	1,291,760.00
19	மாவட்டச் செயலகம், அம்பாறை	2,283,350.00
	மொத்தம்	**30,999,415.97**

02. பாடசாலை காணி உபயோக மாதிரிக் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்.

ஒவ்வொரு பாடசாலைக்குமான பாடசாலை காணி உபயோகத் திட்டம் காணி உபயோக அலுவலர்களின் உதவியுடன் தயாரிக்கப்படுவதுடன், தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைகளில் காணி உபயோகத் திட்டமிடல் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட பாடசாலை காணி உபயோகக் கருத்திட்டங்களுக்காக இந்த ஆண்டில் கீழுள்ளவாறு நிதியொதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர். இல.	மாவட்டம்	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு ரூ.
1	இரத்தினபுரி	4	296200.00
2	கேகாலை	4	287510.00
3	காலி	4	354605.00
4	மாத்தறை	3	221770.00
5	குருநாகல்	10	863400.00
6	அம்பாந்தோட்டை	4	339700.00
7	அம்பாறை	4	337850.00
8	மாத்தளை	4	334750.00
9	மொனறாகலை	2	75320.00
10	களுத்துறை	1	53780.00
11	கொழும்பு	5	407978.00
12	திருகோணமலை	4	392500.00
13	அனுராதபுரம்	1	91668.00
14	கம்பஹா	2	193300.00
15	வவுனியா	3	277130.00
	மொத்தம்	**55**	**4527461.00**

03. சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சூழல் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை ஆசிரியர் களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் பின்வரும் மாவட்டங்களில் ஆசிரியர் களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

- காலி மாவட்டம்
- கிழக்கு மாகாணம்
- பதுளை மாவட்டம்
- ஊவா மாகாணம்
- மட்டக்களப்பு மாவட்டம்

04. சூழல் பாதுகாப்புக்கு ஏற்புடையவாறு பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் .

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை களினால் சூழல் பாதுகாப்புக்கு ஏற்புடையவாறு அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

தொடர். இல.	மாவட்டம்	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு ரூ.
1	அனுராதபுரம்	28	689,370.00
2	கேகாலை	8	205,500.00
3	இரத்தினபுரி	3	83,850.00
4	பதுளை	1	25,500.00
5	மன்னார்	6	149,000.00
6	யாழ்ப்பாணம்	2	28,450.00
7	மட்டக்களப்பு	9	174,350.00
8	திருகோணமலை	14	167,690.00
9	அம்பாறை	2	17,800.00
10	கிளிநொச்சி	1	34,000.00
11	மொனறாகலை	3	41,520.00
12	பதுளை	5	119,000.00
13	இரத்தினபுரி	7	180,200.00
	மொத்தம்	**89**	**1,916,230.00**

05. முன்னேற்ற மீளாய்வுப் பணிகள்.

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இரண்டு மாகாணங்களில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் இடம்பெற்றன.

- ஊவா மாகாணம்
- கிழக்கு மாகாணம்

06. மாணவர்களின் மென் திறன்கள் மற்றும் உள சமூகத் திறமைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.

i. மாணவர்களின் மென் திறன்கள் மற்றும் உள சமூகத் திறமை அபிவிருத்திக் கையேட்டைத் தயாரித்தல்.
பாடசாலைகளில் இந்தப் பாடத் துறைக்குப் பொறுப்பாயுள்ள ஆசிரியர்களின் பாவனைக்காக புத்திஜீவிகள் குழுவொன்றினால் வரையப்பட்டது.

ii. பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல்
மாணவர்களின் மென் திறன்கள் மற்றும் உள சமூகத் திறமைகள் தொடர்பாக பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட அதிகாரிகள் பயிற்சியாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டனர்.

07. பேண்தகு பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கருத்திட்டம்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு உப நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டன.

I. ரூபவாஹினியினால் செயற்படுத்தப்படும் "கவனமாகச் சென்று வாருங்கள்" (பரிஸ்ஸமின் கிஹின் என்ன) நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்தவாறு வீதிப் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வளித்தல்.

தொடர் இலக்கம்	பாடசாலையின் பெயர்	ஒதுக்கீடு (ரூ.)
1	மாத்தறை மத்திய மகா வித்தியாலயம்	60,000.00
2	மஹிந்த ராஜபக்ஷ தேசிய பாடசாலை	60,000.00
3	பண்டுவஸ்நுவர எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க தேசிய பாடசாலை	60,000.00
4	விக்கிரமஷீலா தேசிய பாடசாலை	60,000.00
5	சாந்த மரியா மகா வித்தியாலயம்	60,000.00
6	சுமன மகளிர் கல்லூரி	60,000.00
7	ரத்னாவலீ மகளிர் மகா வித்தியாலயம்	60,000.00
8	தர்மபால வித்தியாலயம்	60,000.00
9	ரத்னாவலீ மகளிர் மகா வித்தியாலயம்	60,000.00
10	தர்மபால வித்தியாலயம	60,000.00
11	மைத்திரிபா சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம்	60,000.00
12	அனுராதபுரம் மத்திய கல்லூரி	60,000.00
13	ஸ்ரீ சுமங்கல மகளிர் கல்லூரி	60,000.00
14	தக்ஷிலா மத்திய கல்லூரி	60,000.00
15	கிங்ஸ்வூட் வித்தியாலயம்	60,000.00
16	மஹாமாயா வித்தியாலயம்	60,000.00
17	ஆனந்த மகளிர் கல்லூரி	60,000.00
18	மெதிரிகிரிய தேசிய பாடசாலை	60,000.00
19	வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்	60,000.00
20	Xaried Boy's School	60,000.00
21	மஹாநாம மத்திய மகா வித்தியாலயம்	60,000.00
22	மொனறாகலை ரோயல் கல்லூரி	60,000.00
	மொத்தம்	**1,320,000.00**

II. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் மாணவர் வண்டிக் காப்பாளர் குழுக்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்.

தொடர் இலக்கம்	கல்வி வலயம்	பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை	தொடர் இலக்கம்	கல்வி வலயம்	பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை
1	அம்பாந்தோட்டை	550	11	இரத்தினபுரி	450
2	தங்கல்லை	450	12	பலாங்கொடை	450
3	அக்குரெஸ்ஸ	450	13	மாவனெல்ல	450
4	மாத்தறை	450	14	கேகாலை	450
5	காலி	450	15	தெஹியோவிட்ட	450
6	கொழும்பு	450	16	கந்தளாய்	450
7	ஹொரணை	450	17	திருகோணமலை	450
8	கம்பஹா	450	18	அம்பாறை	450
9	களுத்துறை	450	19	கல்முனை	450
10	மத்துகமை	450	20	மட்டக்களப்பு	450

08. “கலன மிதுரு - பொத் மிதுரு” நிகழ்ச்சித்திட்டம்.

பாடசாலை மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை மேம்படுத்தும் நோக்கில் “கலன மிதுரு - பொத் மிதுரு” நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்கு வழங்கும் நோக்கில் “முத்தர கியவமு” (முத்திரை வாசிப்போம்) எனும் புத்தகம் கொள்வனவு செய்யப்பட்டது.

09. “தெயட பிபென மல்” நிகழ்ச்சித்திட்டம் .

சிருத்தா ஊடக அலைவரிசையுடன் இணைந்து “தெயட பிபென மல்” நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப் பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் ஊடாக பாடசாலை மாணவர்களின் நெறிமுறைசார் விருத்தி, போதைப்பொருட்களிலிருந்து விடுபடல், பெற்றோர், ஆசிரியர் மீதான மரியாதையை மேம்படுத்தல் என்பன நோக்கமாகக் காணப்பட்டன. இது சிருத்தா தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பானது.

தொடர் இல.	பாடசாலையின் பெயர்	தொடர் இல.	பாடசாலையின் பெயர்
1	தலாவ மகா வித்தியாலயம்	31	கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயம்
2	விஜயபா தேசிய பாடசாலை	32	அக்குரெஸ்ஸ மகா வித்தியாலயம்
3	பண்டாரநாயக்க மகா வித்தியாலயம்	33	பொல்பகொட மகா வித்தியாலயம்
4	ஹத்தெத்தேவ மகா வித்தியாலயம்	34	கா/ ரிபன் மகளிர் கல்லூரி
5	தம்பரவ மகா வித்தியாலயம்	35	கா/ மஹிந்த வித்தியாலயம்
6	ரணசிங்க பிரேமதாஸ தேசிய பாடசாலை	36	கா/ அனுலாதேவி மகளிர் கல்லூரி
7	உல்ஹிட்டிய மகா வித்தியாலயம்	37	கட்டுகுருந்தை தர்மபால மகா வித்தியாலயம்

தொடர் இல.	பாடசாலையின் பெயர்	தொடர் இல.	பாடசாலையின் பெயர்
8	ஆந்தாஉல்பத மகா வித்தியாலயம்	38	கோதமீ மகளிர் கல்லூரி
9	ஒருபெந்திவெவ மத்திய மகா வித்தியாலயம்	39	ஹேமமாலி மகளிர் கல்லூரி
10	மஹியங்கனை தேசிய பாடசாலை	40	புஷ்பதான மகளிர் கல்லூரி
11	கிராந்துருகோட்டை மகா வித்தியாலயம்	41	பேராதெனிய மத்திய மகா வித்தியாலயம்
12	திஸ்ஸபுர மகா வித்தியாலயம்	42	சீதாதேவி மகளிர் கல்லூரி
13	பதுளை மத்திய மகா வித்தியாலயம்	43	மஹமாயா மகளிர் கல்லூரி
14	மே/ தர்மதூத மகா வித்தியாலயம்	44	கலகெதர மத்திய மகா வித்தியாலயம்
15	மே/ சுஜாதா மகா வித்தியாலயம்	45	டீ.எஸ். சேனாநாயக்க வித்தியாலயம்
16	மே/ மீகஹகிவுல தேசிய பாடசாலை	46	சுவர்ணமாலி மகளிர் கல்லூரி
17	மே/ விகாரமகாதேவி வித்தியாலயம்	47	ரணபிம ரோயல் கல்லூரி
18	மலியதேவ ஆண்கள் பாடசாலை	48	தெல்தெனிய தேசிய பாடசாலை
19	பொல்பித்திகம மகா வித்தியாலயம்	49	சங்கமித்தா மகளிர் கல்லூரி
20	கு/ வயம்ப ரோயல் கல்லூரி	50	அம்பேகம ஸ்ரீ நன்தஸார மகா வித்தியாலயம்
21	பட்டபொல மத்திய மகா வித்தியாலயம்	51	சேர் வில்லியம் கொபல்லவ மத்திய மகா வித்தியாலயம்
22	தேவபதிராஜ மத்திய மகா வித்தியாலயம்	52	வாரியபொல ஸ்ரீ சுமங்கல மகா வித்தியாலயம்
23	ரிச்மன்ட் வித்தியாலயம்	53	வித்யார்த்த வித்தியாலயம்
24	ஓல்கட் மகா வித்தியாலயம்	54	சாந்த சில்வெஸ்டர் வித்தியாலயம்
25	அளுத்கமை மகா வித்தியாலயம்	55	விகாரமாகதேவி மகளிர் கல்லூரி
26	திஸ்ஸ மகா வித்தியாலயம்	56	மகாநாம வித்தியாலயம்
27	களுத்துறை வித்தியாலயம்	57	உயர் மகளிர் கல்லூரி
28	நாகொட மத்திய மகா வித்தியாலயம்	58	ஹொ/ ஸ்ரீ பாலி வித்தியாலயம்
29	காமினி மகா வித்தியாலயம்	59	C.W.W. கன்னங்கர வித்தியாலயம்
30	கோனகல மகா வித்தியாலயம்	60	தரணகம மகா வித்தியாலயம்

10. பாடசாலைகளில் குடிநீரின் தரநிலையைப் பரிசோதித்தல்.

இலங்கையில் மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கை 10162 ஆகும். பல்வேறுபட்ட நீர் மூலங்கள் ஊடாக இப்பாடசாலைகள் தமது குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. வரலாற்றில் முதற் தடவையாக அனைத்துப் பாடசாலைகளிலும் அருந்தப்படும் நீரின் தரநிலை இக்கருத்திட்டம் ஊடாகப் பரிசோதிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் அருந்தும் நீரின் தரநிலையை உறுதிப்படுத்துவதற்குப் பின்வரும் பரிசோதனை வகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- Basic Chemical and microbiological testing
- Heavy metal testing
- Pesticide residual testing

இந்த Basic Chemical and microbiological பரிசோதனைகளை அனைத்துப் பாடசாலைகளும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. Heavy metal, Pesticide residual பரிசோதனைகள் சிறுநீரக நோய் பரவும் 11 மாவட்டங்களில் முதலாவது கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

நீர்ப் பரிசோதனைகள் பின்வரும் அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
- கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம்

தொடர் இலக்கம்	மாவட்டம்	பரிசோதனை வகை மேற்கொள்ளப்பட்ட பாடசாலை களின் எண்ணிக்கை			ஒதுக்கீடு (ரூ.)
		Basic	Heavy metal	Pesticide	
1	அநுராதபுரம்	**119**	**487**	**47**	**6,647,212.76**
2	பதுளை		**166**	**161**	**4,195,001.00**
3	மாத்தளை		**178**	**115**	**3,679,852.00**
4	கேகாலை	**158**			**387,021.00**
5	வவுனியா	**170**			**748,765.00**
	மொத்தம்	**447**	**831**	**323**	**15,657,851.76**

11. "சிறுவர்களைப் பாதுகாப்போம்" கருப்பொருளுக்கு ஏற்புடையவாறு பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்.

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாது கட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளினால் சிறுவர்களைப் பாதுகாப்போம் கருப்பொருளுக்கு ஏற்புடையவாறு அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

தொடர் இலக்கம்	மாவட்டம்	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூ.)
1	அநுராதபுரம்	3	21,880.00
2	பதுளை	7	26,500.00
3	கேகாலை	7	52,000.00
4	இரத்தினபுரி	7	86,760.00
5	மன்னார்	5	66,000.00
6	யாழ்ப்பாணம்	1	12,000.00
7	மட்டக்களப்பு	3	25,000.00
8	கிளிநொச்சி	1	16,000.00
9	மொனறாகலை	2	11,800.00
	மொத்தம்	**36**	**317,940.00**

12. **ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை அலுவலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்**

தொடர் இலக்கம்	மாவட்டம்	பாடசாலை	ஒதுக்கீடு (ரூ.)
1	குருநாகல்	கோன்வெவ மகா வித்தியாலயம்	50,000.00
2	கேகாலை	உடன்விட மகா வித்தியாலயம்	50,000.00
3	அம்பாறை	வீரமுனை ஆர்கேஎம் வித்தியாலயம்	50,000.00
4	நுவரெலியா	லுகும்பெ தமிழ் மகா வித்தியாலயம்	50,000.00
5	அனுராதபுரம்	கே.பீ. ரத்நாயக்க வித்தியாலயம்	50,000.00
6	முல்லைத்தீவு	பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்	50,000.00
7	மொனறாகலை	ரஞ்சன் விஜேரத்ன மகா வித்தியாலயம்	50,000.00
8	வவுனியா	கலமடு மகா வித்தியாலயம்	50,000.00
9	கிளிநொச்சி	கோனவில் மகா வித்தியாலயம்	50,000.00
10	கிளிநொச்சி	உருத்திபுரம் மகா வித்தியாலயம்	50,000.00
11	பதுளை	புஸ்ஸெல்லாகந்த மகா வித்தியாலயம்	50,000.00
12	கம்பஹா	தேசமான்ய எச்.கே. தர்மதாஸ மகா வித்தியாலயம்	50,000.00
13	களுத்துறை	கட்டுகுருந்தை ஆர்.சீ.எம். வித்தியாலயம்	50,000.00
14	புத்தளம்	சேனாநாயக்க தேசிய பாடசாலை	50,000.00
15	அம்பாந்தோட்டை	கொக்கல்ல மகா வித்தியாலயம்	50,000.00
16	திருகோணமலை	பெருந்தரு விக்னேஷ்வரா மகா வித்தியாலயம்	50,000.00
17	மாத்தளை	மகாபோதி இரண்டாம் நிலைப் பாடசாலை	50,000.00
18	காலி	தொடகொட அத்ததிஸ்ஸ மகா வித்தியாலயம்	50,000.00
19	கண்டி	புஷ்பதான மகளிர் கல்லூரி	50,000.00
20	பொலொன்னறுவை	விலயாய மத்திய மகா வித்தியாலயம்	50,000.00
21	யாழ்ப்பாணம்	சாந்த ஹென்றி வித்தியாலயம்	50,000.00
22	மாத்தறை	மாலிம்பட ஸ்ரீ சுமேத மகா வித்தியாலயம்	50,000.00
23	மன்னார்	நானாட்டான் மகா வித்தியாலயம்	50,000.00
24	மட்டக்களப்பு	வின்சன்ட் பெண்கள் பாடசாலை	50,000.00
25	கொழும்பு	எம்.டீ.எச். ஜயவர்தன மகா வித்தியாலயம்	50,000.00
	மொத்தம்		**1,250,000.00**

13. அருந்துவதற்குப் போதிய நீர் வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு நீர் வசதிகளை வழங்குதல்

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது கட்டத்தில் அருந்துவதற்குப் போதிய நீர் வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு நீர் வசதிகளை வழங்குதல். தெரிவுசெய்யப்பட்ட 142 பாடசாலைகளில் ஏற்புடையவாறு அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

தொடர் இலக்கம்	மாகாணம்	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூ.)
1	மத்திய	40	16,582,996.00
2	சப்ரகமுவ	31	16,721,861.00
3	வடமத்திய	34	11,769,061.00
4	வடக்கு	15	5,908,173.00
5	மேல்	2	877,000.00
6	ஊவா	1	770,115.00
7	தென்	18	5,527,418.00
8	வடமேல்	1	862,528.00
	மொத்தம்	**142**	**59,019,152.00**

14. சிறுநீரக நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சிகள் .

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையவாறு சிறுநீரக நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

தொடர் இலக்கம்	மாவட்டம்	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூ.)
1	அநுராதபுரம்	5	45,640.00
2	கேகாலை	6	52,000.00
3	பதுளை	6	19,500.00
4	இரத்தினபுரி	5	70,000.00
5	மன்னார்	10	86,800.00
6	யாழ்ப்பாணம்	4	32,450.00
7	அம்பாறை	2	8,750.00
8	மொனறாகலை	1	1000.00
	மொத்தம்	**39**	**316,140.00**

15. போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளினால் அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சிகள்

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது கட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளினால் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையவாறு அனுப்பி வைக்கப்படும் கருத்திட்டங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

தொடர் இலக்கம்	மாவட்டம்	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூ.)
1	அநுராதபுரம்	3	35,670.00
2	கேகாலை	7	54,500.00
3	பதுளை	4	11,000.00
4	இரத்தினபுரி	2	39,500.00
5	மன்னார்	7	55,040.00
6	யாழ்ப்பாணம்	3	28,000.00
7	அம்பாறை	1	3,100.00
8	மொனறாகலை	3	11,000.00
9	மட்டக்களப்பு	18	132,500.00
	மொத்தம்	**48**	**370,310.00**

16. பாடசாலை மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பேணிச் செல்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்.

இதன் கீழ் 1500 பாடசாலைகளுக்கு உயரம் மற்றும் பாரத்தை அளக்கும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

06. அங்கவீனர்கள் மற்றும் முதியோர் சமூகத்தினரை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

தொலைநோக்கு

அங்கவீனர்கள் மற்றும் முதியோர் சமூகத்தினர் தமது உரிமைகளை அனுபவித்தவாறு சுயாதீனமாக வாழ முடியுமான சூழலொன்று.

செயற்பணி

அங்கவீனர்கள் மற்றும் முதியோர் சமூகத்தினர் முகங்கொடுக்க வேண்டியேற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து அவர்கள் இன்னொருவர் மீது தங்கியிராது தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களைப் பங்களிக்கச் செய்து கண்ணியமான நபர்களாக மாற்றியமைத்தல்.

அறிமுகம்

உலகில் வாழும் அனைத்து நபர்களுக்கும் சமத்துவம் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக இயல்பான உரிமை காணப்படுகிறது. எனினும், அங்கவீனர்கள் மற்றும் முதியோர் சமூகத்தினர் பல்வேறுபட்ட சமூகப் புறக்கணிப்புக்கள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. இலங்கையின் 2012 ஆம் ஆண்டிற்கான தொகைமதிப்பு, புள்ளிவிபர அறிக்கையின்படி உடல், உளக் கஷ்டங்கள் காணப்படும் நபர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 1.6 மில்லியன் என்பதுடன், 2012 இல் முதியோர் சனத்தொகை 12.4% வரை அதிகரித்துள்ளதாகவும், 2041 ஆம் ஆண்டில் அந்த சனத்தொகை இரு மடங்கை எட்டும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கருத்திற் கொள்ளும்போது, அங்கவீனர் மற்றும் முதியோர் சமூகத்தின் உரிமைகளை உறுதிப்படுத்தி, அவர்களின் திறமைகள் மற்றும் பெறுமதியான அனுபவங்களைத் திட்டமிடலுடன் பயன்படுத்தி பொருளாதாரச் செயற்பாட்டில் பங்களிக்கச் செய்து அவர்களுக்கு கண்ணியமானதோர் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கமைய அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் முக்கிய கவனக்குவிப்பின் கீழ் 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி முதல் அங்கவீனர் மற்றும் முதியோர் சமூகத்தினரை வலுவூட்டும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தும்போது ஏற்புடைய தொடர்பான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் விசேட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், பிரதான சில துறைகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டன.

1. பொதுச் சேவை வசதிகள் பாவனையின்போது சமத்துவத்தை உறுதிப்படுத்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

    - அங்கவீனமான நபர்களுக்கு சமமான, உள்ளடக்கமுள்ள (inclusive) கல்வியை வழங்குதல்.
    - வாக்களிப்பதற்கான அணுகல் மற்றும் அரசியல், பொதுச் செயற்பாடுகளில் கலந்து கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல்.
    - மிகவும் வினைத்திறன் மிக்க முறையில் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு காணப்படும் உரிமையை உறுதிப்படுத்தல்.
    - சமய, கலாசார, விளையாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான உரிமையை உறுதிப்படுத்தல்.

2. பொருளாதார, சமூகரீதியாக வலுவூட்டல்.
3. சுயாதீனமாக, முழு சமூகத்துடனும் இணைந்த தன்மை தொடர்பாக சமூகத்தை விழிப்புணர்வூட்டல் மற்றும் நடத்தைகள் விருத்தி.
4. கணக்கெடுப்புக்கள், ஆராய்ச்சிகள் மற்றும் கொள்கை வகுப்பு.
5. மேற்பார்வை, ஒருங்கிணைப்பு, தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு

அதற்கமைய 2018 இன் இறுதியில் இவற்றில் பிரதான சில செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டன.

1. அங்கவீனமுற்ற சிறுவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு நுழைவு வீதிகள், உடநலப் பாதுகாப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
2. அரச முதியோர் இல்லங்களின் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
3. அங்கவீனர் மற்றும் முதியோர் சமூகத்தின் பல்வேறுபட்ட திறமைகள் மற்றும் கொள்திறன் நிகழ்ச்சிகளுக்கு உதவுதல்.

01. அங்கவீனமுற்ற சிறுவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு நுழைவு வீதிகள், உடநலப் பாதுகாப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்

அனைத்துப் பிள்ளைகளும் சமத்துவத்துடன் கல்வியைப் பெற வேண்டும் எனும் நோக்கத்தினை முன்னிறுத்தி இக்கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக பொலொன்னறுவை, கிளிநொச்சி, பதுளை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் 54 பாடசாலைகளில் 80.7 மில்.ரூ செலவில் நுழைவு வீதிகள் மற்றும் உடநலப் பாதுகாப்பு வசதிகளை வழங்கும் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அந்தக் கருத்திட்டங்களின் நற்பயன் மற்றும் பாடசாலை மட்டத்தில் இத்துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான தேவை அதிகரித்தமை காரணமாக 2018 ஆம் ஆண்டில் 09 மாகாணங்களிலும் 124 பாடசாலைகளில் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தினால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

அங்கவீனமுற்ற சிறுவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு நுழைவு வீதிகள், உடநலப் பாதுகாப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்

தொடர் இல.	மாகாணம்	மாவட்டம்	பாடசாலைகளின் எண்ணிக்கை		வழங்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.)
1	மேல்	கொழும்பு	5	4,407,970.08	14,825,972.72
		கம்பஹா	4	3,667,451.15	
		களுத்துறை	5	6,750,551.49	
2	வடமேல்	குருநாகல்	5	4,855,213.50	9,710,427.00
		புத்தளம்	5	4,855,213.50	
3	தென்	காலி	1	932,067.00	3,439,063.46
		அம்பாந்தோட்டை	1	2,506,996.18	
4	ஊவா	பதுளை	5	7,014,266.44	14,442,594.28
		மொனறாகலை	5	7,428,327.84	

தொடர் இல.	மாகாணம்	மாவட்டம்	பாடசாலை களின் எண்ணிக்கை		வழங்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.)
5	மத்திய	கண்டி	5	8,008,814.01	20,110,000.00
		நுவரெலியா	3	4,335,393.00	
		மாத்தளை	5	7,765,792.99	
6	கிழக்கு	திருகோணமலை	7	4,900,000.00	16,737,732.49
		மட்டக்களப்பு	7	5,228,491.50	
		அம்பாறை	11	6,609,240.99	
7	வடக்கு	யாழ்ப்பாணம்	5	3,625,000.00	24,475,026.00
		கிளிநொச்சி	5	5,500,000.00	
		மன்னார்	5	4,062,926.00	
		வவுனியா	5	6,187,100.00	
		முல்லைத்தீவு	5	5,100,000.00	
8	சப்ரகமுவ	இரத்தினபுரி	7	5,601,665.59	11,698,580.64
		கேகாலை	8	6,096,915.05	
9	வடமத்திய	அநுராதபுரம்	6	10,188,730.88	19,662,407.73
		பொலொன்னறுவை	5	9,473,676.85	
மொத்தம்			125		135,101,804.32

2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகளை வழங்குதல்

இக்கருத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கு நுழைவு வீதிகள், உடநலப் பாதுகாப்பு வசதிகளை வழங்கும் அளவுருக்கள் (guildline) கல்வியமைச்சினால் வழங்கப்பட்டதுடன், மாகாண கல்விப் பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் இவை செயற்படுத்தப்பட்டன. அனைத்து மாகாணங்களிலும் கருத்திட்டங்களைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து மிகவும் உயர்வான நிதி, பௌதீக முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.



கொலங்கொட மகா வித்தியாலயம்



விஜயபால மகா வித்தியாலயம்

மத்திய மாகாணம்




வடமத்திய மாகாணம்




வடமேல் மாகாணம்




சப்ரகமுவ மாகாணம்

02. அரச முதியோர் இல்லங்களில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

தற்காலத்தில் மெதுவாக அதிகரித்துச் செல்லும் முதியோர் சமூகத்தினர் தொடர்பாகவும் விசேட கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. மிகவும் குறைந்த வசதிகளுடன் காணப்படும் அரச முதியோர் இல்லங்களில் அனுமதிக்கப்படும் ஆதரவற்ற முதியோர் சமூகத்தினருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டது.

முதியோர் இல்லங்களின் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வடமேல், மத்திய, வடக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்குப் பின்வருமாறு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

- வடமேல் மாகாணம் ரூ. 5,165,007.30
- மத்திய மாகாணம் ரூ. 480,442.04
- வட மாகாணம் ரூ. 1,570,000.00
- சப்ரகமுவ மாகாணம் ரூ. 1,500,000.00

(வட மாகாணம்) முதியோர் இல்லங்களை மறுசீரமைக்கும் பணிகள்



நமசிவாயம் முதியோர் இல்லம்



மெதடிஸ்ட் முதியோர் இல்லம்



எஸ்.கே. எல்டர்ஸ் இல்லம்



நமசிவாயம் முதியோர் இல்லம்

வட மாகாணத்தில் பருத்தித்துறை மெதடிஸ்ட் முதியோர் இல்லம் (&.200,000), கிளிநொச்சி யோகஸ்வாமி (Yogarswamy) முதியோர் இல்லம் (ரூ.450,000), நமசிவாயம் (Namasivayam) முதியோர் இல்லம் (&.500,000), எஸ்.கே. எல்டர்ஸ் இல்லம் (&.420,000) ஆகிய 04 முதியோர் இல்லங்களின் மறுசீரமைப்புப் பணிகள் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

(வடமேல் மாகாணம்) முதியோர் இல்லங்களை மறுசீரமைக்கும் பணிகள்

வடமேல் மாகாணத்தில் சீலவதீ முதியோர் இல்லம், சங்கைக்குரிய கபலேவ பியபாரதீ அனுநாஹிமி ஞாபகார்த்த முதியோர் இல்லம், சுவசெவன முதியோர் ஓய்வு இல்லம், வித்யாபந்து முதியோர் இல்லம், மல்லவபிட்டி முதியோர் இல்லம், மாகலானேகம அஸரன சரன முதியோர் இல்லம், சீ.ஏ. ரத்நாயக்க ஞாபகார்த்த முதியோர் இல்லம், சுவசெவன முதியோர் இல்லம், சிறிசேன சுபசிங்க முதியோர் இல்லம் ஆகிய இல்லங்களின் திருத்த வேலைகள் மற்றும் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கு ரூ. 5,165,007 அளவில் செலவிடப்பட்டது.

(மத்திய மாகாணம்) முதியோர் இல்லங்களை மறுசீரமைக்கும் பணிகள்



சந்த்ரா விஜேரத்ன முதியோர் இல்லம்



தம்புள்ளை முதியோர் இல்லம்

மத்திய மாகாணத்தில் விதுலிதுர சந்த்ரா விஜேரத்ன முதியோர் இல்லம், நிககெடிய முதியோர் இல்லம், ரன்கிரி தம்புளு முதியோர் இல்லம், அரச பொறுப்பேற்பு முதியோர் இல்லங்களின் மறுசீரமைப்புப் பணிகள் ரூ.480,442.04 செலவில் மேற்கொள்ளப்பட்டன.

(சப்ரகமுவ மாகாணம்) முதியோர் இல்லங்களை மறுசீரமைக்கும் பணிகள்

சப்ரகமுவ மாகாணத்தில் நெழும்தெனிய முதியோர் இல்லம், சிரிசுமன முதியோர் இல்லம், மேதானந்த முதியோர் இல்லம், அல்கொட சுவசெவன முதியோர் இல்லம், எஸ்.டீ. எலன் பிரணாந்து முதியோர் இல்லம் ஆகிய இல்லங்களின் மறுசீரமைப்புப் பணிகள் ரூ.1,500,000.00 செலவில் மேற்கொள்ளப்பட்டன.
2019 ஆம் ஆண்டில் நாட்டின் ஏனைய மாகாணங்களிலுள்ள முதியோர் இல்லங்களில் அத்தியாவசிய திருத்த வேலைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

03. ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

I. ஊவா மாகாணத்தில் விசேட தேவையுடைய நபர்களுக்காக நடாத்தப்படும் கொள்திறன் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்.

ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஊவா மாகாணத்தில் வாழும் விசேட தேவையுடைய நபர்களுக்காக 2018 ஆம் ஆண்டில் கொள்திறன் விருத்தி நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

அது தொடர்பாக ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கைக்கு ஏற்புடையவாறு ஜனாதிபதி அலுவலகத்தினால் ரூ.434,100.00 நிதி வழங்கப்பட்டது.

விசேட தேவையுடைய நபர்கள் தமது குடும்பத்தினுள் சுருங்கிப் போவார்களாயின் அவர்களுக்கு மாத்திர மன்றி முழுக் குடும்பத்திற்கும் பல பொருளாதார, சமூகச் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அவ்வாறான பின்புலத்தில் விசேட தேவையுடைய நபர்கள் மத்தியில் விசேட திறமைகள் கொண்ட குழுவைத் தெரிவு செய்து, அவர்களின் திறமைகள், திறன்களை சமூகமயப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக அவர்களுக்குப் பல்வேறுபட்ட சிறப்புரிமைகள், பயிற்சிச் செயலமர்வுகள், பொருளாதார நன்மைகளைப் பெற்றக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால் இந்தக் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி அலுவலகத்தின் அனுசரணையின் கீழ் ஒதுக்கீடு வழங்கப்பட்டது.








ஊவா மாகாணத்தில் விசேட தேவையுடைய நபர்களுக்காக நடாத்தப்பட்ட கொள்திறன் விருத்தி நிகழ்ச்சி

II. **2018** உலக அங்கவீனர் தினத்தை முன்னிட்டு தனமல்வில பிரதேச செயலகப் பிரிவில் அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்துதல்.

விசேட தேவையுடைய நபர்களுக்கான பிரதான தினமான "உலக அங்கவீனர் தினம்" சர்வதேச ரீதியில் முக்கியமான தினமாகும். இத்தினத்தை மையப்படுத்தி அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டியொன்றை 2018.12.04 ஆந் திகதி நடாத்துவதற்காக ரூ.153,600 ஒதுக்கீடு ஜனாதிபதி அலுவலகத்தினால் வழங்கப்பட்டது.

அங்கவீனம் விளையாட்டிற்குத் தடையல்ல என்பதை வெளிப்படுத்துவதற்கு நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி மூலம் 2019 ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டு விழாவில் அங்கவீனமுடைய நபர்கள் பங்குபற்றுவதை ஊக்குவிப்பதற்கு (2020 பெரா ஒலிம்பிக் போட்டிகளுக்காக தேசிய ரீதியில் தெரிவு-செய்ய) எதிர்பார்க்கப்பட்டது.









தனமல்வில பிரதேச செயலகப் பிரிவில் அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்துதல்

2019 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் பல முக்கிய செயற்பாடுகளை 200 மில்.ரூ. வரவுசெலவுத்திட்டம் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

- அங்கவீனமுடைய பிள்ளைகளுக்கான நுழைவு வீதிகள், உடநலப் பாதுகாப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்தல்.
- அரச முதியோர் இல்லங்கள் மற்றும் அங்கவீனர்கள் உள்ள மத்திய நிலையங்களுக்கு மறுசீரமைப்பு உள்ளிட்ட வசதிகளை வழங்குதல்.
- முதியோர் மற்றும் அங்கவீன சமூகத்தினருக்கு விசேட சுகாதார பிணியாய்வு நிலையங்களை நடாத்துதல்.
- தனியார் துறையினரின் உதவியுடன் வளர்ப்புப் பிள்ளை முறைமை ஊடாக அங்கவீனர் மற்றும் முதியோர் சமூகத்தினரை வலுவூட்டுதல்.
- அங்கவீனமுடைய மற்றும் முதியோர் சமூகத்தைச் சேர்ந்த நபர்களுக்குத் தேவையான சக்கர நாற்காலிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகளை வழங்குதல்.
- சுய தொழில்களுக்கான சாத்தியவளமுள்ள சமூகத்தினருக்குத் தேவையான சுய தொழில் உதவிகள், சந்தை வாய்ப்புக்கள் மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்குதல்.
- திறன்கள் விருத்தி மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு உதவுதல்.
- விழிப்புணர்வூட்டுதல், பிரச்சாரம், நடத்தைகள் விருத்தி.
- கணக்கெடுப்புக்கள், ஆராய்ச்சிகள் மற்றும் கொள்கை வகுப்பு.
- மேற்பார்வை, ஒருங்கிணைப்பு, தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.

07. சமய அலுவல்கள் பிரிவு

அறிமுகம்

ஜனாதிபதி அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவின் கீழ் செயற்படும் சமய அலுவல்கள் பிரிவு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் சார்பில் அவர் மேற்கொள்ள வேண்டிய சமய அலுவல்கள் தொடர்பாக முன்னின்று பணியாற்றுகிறது. அனைத்துச் சமயங்களையும் முதன்மைப்படுத்தி நடாத்தப்படும் கலந்துரையாடல்கள், வைபவங்கள் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் சார்பில் ஏற்புடைய ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்குத் தனது சேவையை வழங்குகிறது.

தொலைநோக்கு

அனைத்துச் சமயங்களுக்கும் ஒன்றுபோல் தமது சாசனப் பணியை ஆற்றுவதற்கு உதவியளித்தல்

செயற்பணி

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் சார்பில் ஜனாதிபதி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை ஆற்றுதல்.

பிரதான நோக்கங்கள்

- மாதாந்தம் சந்தஹம் யாத்ரா நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை நடாத்துதல்.
- தேசிய வெசாக் வைபவத்தின் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- பௌத்த புலனாய்வுச் சபை, பௌத்த ஆலோசனைச் சபையின் அலுவல்களை ஏற்பாடு செய்தல், ஒருங்கிணைப்புச் செய்தல்.
- கண்டி எசல பெரஹராவின் இறுதி நிகழ்வு உட்பட வருடாந்தம் நடாத்தப்படும் பிரதான பெரஹரா நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல், வசதிகளை வழங்குதல்.
- ஜனாதிபதி அலுவலகத்தின் பங்கேற்புடன் அதிமேதகு ஜனாதிபதி சார்பில் நாடளாவியரீதியில் நடாத்தப்படும் சமய நிகழ்ச்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ராமக்ஞ மகா நிக்காய, அமரபுர மகா நிக்காயவின் உபசம்பதா புண்ணிய நிகழ்வுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஸ்ரீ தலதா மாளிகை உட்பட பௌத்த சமயஸ்தலங்கள் மற்றும் ஏனைய சமயஸ்தலங்களின் மறுசீரமைப்புப் பணிகளுக்கு உதவியளித்தல்.
- வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கி நாடு முழுவதும் காணப்படும் கஷ்டப் பிரதேச விகாரைகளை இனங்கண்டு அந்த விகாரைகளின் அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்குதல்.

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஒப்படைக்கப்படும் கடமைகளை மேற்கொள்ளுதல்.







சந்தஹம் யாத்ரா தர்மபோதனை நிகழ்ச்சி

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள்

1. சந்தஹம் யாத்ரா தர்மபோதனை நிகழ்ச்சிகளை நடாத்துதல்

தொடர் இலக்கம்	மாதம்	மாவட்டம்	விகாரை	அபிவிருத்திப் பணிகளுக்கான செலவினம் (ரூ.)	நிதிச் செலவினம் (ரூ.)
01	துருது	கொழும்பு	அஸ்கிரிய, விஜயசுந்தராமை விகாரை	1,071,065.00	1,636,765.00
02	நவம்	கொழும்பு	ஹோமாகமை, தூவ விகாரை	72,585.00	231,037.00
03	மெதின்	இரத்தினபுரி	சிவனொளிபாதமலை		16,040.00
04	பக்	குருநாகல்	கிரியுல்ல, மெத்தேபொல விகாரை	263,675.00	465,470.00
05	வெசாக்	குருநாகல்	பிங்கிரிய, புராண விகாரை		47,570.00
06	அதி பொசொன்	கம்பஹா	பெதியகொட, பரமார்த தர்மாகர பிரிவெனா		366,445.00
07	பொசொன்	பொலொன்னறுவை	திம்புலாகல ஆரன்ய சேனாசனய	159,282.58	1,757,182.66
08	எசல	கேகாலை	லெனகல, ரஜமகா விகாரை	155,000.00	456,131.00
09	நிகினி	கண்டி	மொரகந்த, ஸ்ரீ ஞானலோக விகாரை	582,170.00	1,002,785.00
10	பினர	கொழும்பு	பொரலஸ்கமுவை, பரதம்ம நிவஸ பிரிவெனா	148,350.00	383,790.00
11	வப்	கொழும்பு	ஜனாதிபதி மாளிகை		350,150.00
12	இல்	கொழும்பு	பன்னிபிட்டிய, ருக்மலே புராண விகாரை	164,445.00	414,500.00
13	உந்துவப்	கம்பஹா	கம்பஹா, சாம விகாரை	310,850.00	666,425.00
மொத்தம்				**4,091,692.66**	**7,794,290.66**

2. வருடாந்த பெரஹரா நிகழ்வுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்



- **வரலாற்றுச் சிறப்பு மிகுந்த கண்டி தலதா பெரஹராவின் இறுதி நிகழ்வு**

  அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் கண்டி வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஸ்ரீ தலதா பெரஹராவின் நிறைவைக் குறிக்கும் முகமாக சன்னஸ் பத்திரத்தைக் கையளிக்கும் நிகழ்வின் ஏற்பாட்டு நடவடிக்கைகள் கண்டி மாவட்டச் செயலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன.

- **ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பெரஹராவின் ஒருங்கிணைப்பு**

- **பெல்லன்வில் ரஜமகா விகாரையின் பெரஹரா ஒருங்கிணைப்பு.**

3. ஏனைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

- **அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபைக் கூட்டம்**

  இக்கலந்துரையாடலில் பிரதானமாக கலந்துரையாடப்பட்ட ஞாயிறு மற்றும் போயா தினங்களில் தனியார் வகுப்புக்கள் நடாத்துவது தொடர்பான சிக்கல் குறித்து தொடர்புடைய தரப்பினருடன் உபகுழுவொன்றை அமைத்து ஏற்புடைய ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- **ஜனாதிபதி அலுவலகத்தைச் சூழ வெசாக் வலயத்தை ஏற்பாடு செய்தல்.**

  ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெசாக் தின நிகழ்வுடன் இணைந்தவாறு ஜனாதிபதி அலுவலகத்தின் உள்ளக நிர்வாகப் பிரிவுடன் இணைந்து செயற்படுத்தல்.

- **பௌத்தாலோக வெசாக் வலயத்தை ஏற்பாடு செய்தல்**

  அனுசரணையாளர்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

- **ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற தீபாவளி வைபவத்தினை ஏற்பாடு செய்தல்.**

  தமிழ் சமயத் தலைவர்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வசதிகளை வழங்குதல்.

- **தேசிய வெசாக் நிகழ்வு - குருநாகல், பிங்கிரிய ரஜமகா விகாரை**

  அனுசரணையாளர்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

- **வருடாந்த மல்லிகைப் பூ பூஜை**

  அனுசரணையாளர்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

- **ஸ்ரீ தலதா மாளிகையின் ரன்வியனவில் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.**

  கண்டி மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் ரன்வியன மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- **ராமக்ஞ மகா நிக்காயவின் உபசம்பதா நிகழ்வு**

  அனுசரணையாளர்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

- **திரிபீடகத்தை தேசிய மரபுரிமையாக மாற்றுவது தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.**

  புத்தசாசன அமைச்சு மற்றும் மாத்தளை மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் ஏற்புடைய பணிகளை மேற்கொள்ளுதல்.

- **பல்வேறுபட்ட மாகாணங்களில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் சமய நிகழ்வுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.**

- **பல்வேறுபட்ட பிரதேசங்களில் வாழ்ந்து காலமாகும் சங்கைக்குரிய தேரர்களின் இறுதிச் சடங்கு நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்.**

  இறுதிச் சடங்கிற்காக அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அனுதாபச் செய்தியை வழங்குதல். இறுதிச் சடங்கு நிகழ்வுகளுக்கு தேவைக்கேற்ப ஒதுக்கீடுகளை வழங்குதல்.

- **வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் உட்பட நாடு முழுவதும் இனங்காணப்பட்ட கஷ்டப் பிரதேச விகாரைகளை அபிவிருத்தி செய்ய நிதியுதவி வழங்குதல்.**

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப மேற்கொள்ள்படும் நலனோமம்புகை நிகழ்ச்சிகள்.**





ஸ்ரீ தலதா மாளிகையின் ரன்வியன் மறுசீரமைப்பு





கஷ்டப் பிரதேச விகாரைகளுக்கு விகாரை உதவி வழங்குதல்

08. ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

கலை கலாசாரக் கொள்கையொன்றை வகுத்தல்

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்தவாறு தேசிய கலாசார மறுமலர்ச்சியை நோக்கமாகக் கொண்ட விசேட வழிநடாத்தல் அலகொன்றை நிறுவி அந்த அலகின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. வளமான, முழுமையான, நெகிழ்வுத்தன்மை மிக்க தேசிய கலை மற்றும் கலாசாரக் கொள்கைப் பிரேரணையொன்றை பரந்த கருத்துக் கணிப்புச் செயற்பாடு ஊடாக வரைவு செய்து அரசுக்குச் சமர்ப்பித்தல்.

2. அரச கலை மற்றும் கலாசார நிறுவனங்களுக்கான விளக்கமான சீர்திருத்த முன்மொழிவுகள், ஆராய்ச்சிச் செயன்முறை ஊடாகத் தயாரித்த, பூர்த்தி செய்யப்பட்ட நிறுவனரீதியான சீர்திருத்தப் பிரேரணையை அரசுக்குச் சமர்ப்பித்தல்.

3. அரச மற்றும் தனியார் துறையின் உதவியுடன் தேசிய கலை - கலாசார பாதுகாப்பு நிதிய மொன்றை சமூகப் பொறுப்புடைமையில் நிறுவுதல்.

4. இலங்கை மக்களின் கலாசார ஞானத்தை விரிவுபடுத்தி கலை மற்றும் கலாசாரத்திற்கு அவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் முன்னுரிமை வழங்கப்படும் வகையில் கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல். இதனுடன் இணைந்தவாறு கலை - கலாசார வள நிலையங்களை ஆரம்பித்தல்.

5. ஏலவேயுள்ள கல்வி முறைமையில் மதிப்பாய்வுரீதியான கலாசாரக் கல்விக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் பங்களிப்புச் செய்து கலாசாரரீதியாக மிகவும் கரிசனைமிக்க எதிர்கால சந்ததியொன்றை உருவாக்க வழியமைத்தல்.

6. சமூக நீதி மற்றும் சமூக ஒருமைப்பாடு, இயைபான நல்லாட்சிக்கு கலாசார அடிப்படையில் பிரஜைகள் "நல்வாழ்வு" தொடர்பான நோக்கினை இலங்கை சமூகத்திற்கு வழங்குதல்.

7. கலை மற்றும் கலாசார அபிவிருத்தியைப் போன்றே தெற்காசியப் பிராந்தியத்தில் கலாசார உரிமை கள் தொடர்பான கருப்பொருட்களை ஏற்புடைய மாற்றம் பெறும் பிராந்திய கலாசார உரையாடலுக்கு வித்திடுதல், யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் கலாசார உரிமைகள் தொடர்பாக தெற்காசிய நியதிச்சட்டமொன்றை நிறைவேற்றுதல்.

8. தேசிய கொள்கைகளை வகுப்பதன் ஊடாக கலைரீதியான பங்களிப்புக்கள் மற்றும் கலாசார உணர்வுகள் எப்போதும் உள்ளீர்க்கப்படுவது உறுதிப்படுத்தப்படும் நிலைமையை ஏற்படுத்தல்.

9. இலங்கை கலைஞர்களின், கலை மற்றும் கலைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரதிபிம்பத்தை தேசியரீதியிலும் சர்வதேசரீதியிலும் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

10. இலங்கையின் இந்த கலாசார முனைப்புத் தொடர்பாக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தல் மற்றும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளுதல்.

11. யுனெஸ்கோ நிறுவனத்தினால் சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள், தரநியமங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி தேசியரீதியாக ஏற்புடையவாறு இயைந்து செயற்படுதல்.

12. பொதுச் சேவைகள் தொடர்பாடல் மற்றும் ஊடக அறிவினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டமொன்றுக்குத் தலைமைத்துவம் வழங்கி மக்கள் நட்பான ஊடகக் கலாசாரமொன்றுக்கான அடிப்படையை உருவாக்குதல்.

பிரதேச முன்னோடிக் கருத்திட்டம்

தேசிய கலாசார மறுமலர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தைப் பிரதேச மட்டத்தில் பரவலாக்கி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தல், கலாசார மறுமலர்ச்சி அபிலாசைகளை அடைந்துகொள்ளுதல் என்பவற்றுக்காக 10 மாவட்டங்களில் முன்னோடிக் கருத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது. (அநுராதபுரம், பதுளை, கேகாலை, பொலொன்னறுவை, குருநாகல், கண்டி, இரத்தினபுரி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு)



சமய, கல்வி, கலாசார, கலை, வெகுசன ஊடகங்கள் போன்ற கலாசார அதிகாரத்தினைப் பயன்படுத்தும் குழுக்கள், மாவட்ட மட்டத்தில் செயல்திறமுடைய கலைஞர்கள், மாவட்ட மட்ட அதிகாரிகள் ஆகிய குழுவினருக்கு கலாசார மறுமலர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கி மாவட்டத்தினுள் செயல்திறமுடைய அமைப்புக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு மாவட்டச் செயலாளர்களின் ஏற்பாட்டுப் பங்களிப்புடன் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.



தேசிய கலாசாரக் கொள்கை

நாட்டின் பிரஜைகள் கலையுடன் கொண்டுள்ள தொடர்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கட்டமைப்புரீதியான நடத்தை மாற்றங்களை வலுவூட்டுவதற்கு தேசிய கொள்கையொன்றைத் தயாரித்தலின் கீழ் திட்ட மற்றும் அடிப்படை வரைவு தயாரிக்கப்பட்டது.

அதற்கான கலந்துரையாடல் அமர்வுகள் 2018.06.11 முதல் 13 ஆந் திகதி வரை பன்னலை வெரலுகமவில் பணிப்பாளர் சபையின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டன.

மேலும் கலாசார நடத்தைகள் விருத்தியில் தற்காலத்தில் காணப்படும் நிறுவனரீதியான கட்டமைப்புக்கள், நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தினை ஆய்வு செய்ய களரீதியான கருத்திட்டமொன்று மூலம் கலாசார அமைச்சின் கீழ் காணப்படும் கலாசார நிலையங்களில் சாத்தியவளக் கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன. அதில் காலி மாவட்டத்தில் அமைந்துள்ள 14 கலாசார நிலையங்களின் நடவடிக்கைகள் மற்றும் பணிகள் அதன் மாதிரியாகக் எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த ஆய்வில் பெற்றுக்கொண்ட பெறுபேறு களுக்கு ஏற்ப கொள்கைகளை வகுப்பதற்கு ஏற்புடைய நிறுவனரீதியான உத்திகளை இனங்காணுதல், கள ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

கலாசார அறிவு நிகழ்ச்சித்திட்டம்



தேசிய கலாசாரப் பாதுகாப்பு நிதியம்

தேசிய கலாசாரப் பாதுகாப்பு நிதியத்தைச் செயற்படுத்துவதற்கு சட்டரீதியான கணக்கெடுப்புக்கள் உட்பட ஆரம்ப நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்கான ஒருங்கிணைப்பு அலுவலரொன்றை இணைத்துக் கொள்வதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது.

தேசிய கலாசார நடத்தை தொடர்பான ஆய்வு

ஆய்வுக் கருத்திட்டத்தின் ஆரம்ப அடிப்படைகள் மற்றும் செயன்முறை திட்டமிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், செயற்படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

தேசிய கலாசார வள நிலையம்

மக்களை முன்னேற்றகரமான கலாசாரப் பயன்பாடுகளை நோக்கி ஈர்ப்பதனை நோக்கமாகக் கொண்ட கலாசார வள நிலையங்கள் வேலைத்திட்டத்தின் கீழ் உரைகள் செயலமர்வுகள் மற்றும் வெளியீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதற்கமைய சிறந்த சமூகமொன்றை உருவாக்க கலாசாரத்துடன் இணைந்த வாழ்வுக்கு வழிகாட்டும் கலாசார அறிவு எனும் மூன்று நாள் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டடு நடாத்தப்பட்டன. அதேபோன்று எமது வள நிலையத்தின் ஒத்துழைப்புடன் பல்வேறுபட்ட நிறுவனங்கள், அமைப்புக்களுக்கு மாற்றங்களை ஏற்படுத்தும் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சிகள் இரண்டு நடாத்தப்பட்டன.

பல்கலைக்கழகத் துறையினருக்கு கலாசார மறுமலர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தினைத் தெளிவு படுத்துவதற்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் 02 கலந்துரையாடல் அமர்வுகள் நடாத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் பல முக்கிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதுடன், அதற்கு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடாக 100 மில்.ரூ. எதிர்பார்க்கப்படுகிறது.

மனிதவள அபிவிருத்திப் பிரிவு

அறிமுகம்

ஜனாதிபதி அலுவலகத்திற்குப் பணியாட்களை ஆட்சேர்ப்புச் செய்தல்/ இடமாற்றம் செய்தல்/ பதவியுயர்த்தல்/ ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தாபன அலுவல்கள் மற்றும் பணியாட் குழுவினரின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

நோக்கங்கள் / பணிகள்

- ஜனாதிபதி அலுவலகத்திற்குப் பணியாட்களை ஆட்சேர்ப்புச் செய்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்த்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தாபன அலுவல்கள்.
- ஜனாதிபதி பணியாட் குழுவுக்கு நி.பிர. 71 இன் கீழ் பதவிகளை உருவாக்குவதற்கு ஏற்புடைய அலுவல்கள்.
- ஜனாதிபதி அலுவலகத்திற்கு மற்றும் ஏனைய பணியாட் குழுவுக்கு இணைத்துக் கொள்ளப்படும் அலுவலர்களின் தனியாள் கோப்பினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்.
- ஜனாதிபதி அலுவலக பணியாட் குழு அலுவலர்கள்/ ஊழியர்களின் பாதுகாப்பு தடைநீக்க அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான அலுவல்கள்
- அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை விபரங்களைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல்
- ஜனாதிபதி அலுவலகத்தின் நிறுவனக் கட்டமைப்பைப் பேணிச் செல்லுதல்
- ஜனாதிபதி பணியாட் குழுவுக்கு இணைத்துக் கொள்ளப்படும் அரச சேவையின் நிரந்தர/ தற்காலிக அலுவலர்களின் செயலாற்றுகை அறிக்கை மதிப்பீட்டு நடவடிக்கைகள்
- ஜனாதிபதி பணியாட் குழுவுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அலுவலர்களுக்கு உள்நாட்டு/ வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்
- அரச அலுவலர்களுக்கு தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் கீழ் வழங்க முடியுமான வீடமைப்பு, ஆதனக் கடன்கள், இடர் கடன் உள்ளிட்ட ஏனைய கடன்களை வழங்குவதற்கு சிபார்சு செய்தல்/அங்கீகாரம் வழங்குதல்.
- ஜனாதிபதி பணியாட் குழு அலுவலர்களின் விடுமுறை புகையிரதவண்டி ஆணைச்சீட்டுக்கள், பருவகால பிரயாணச் சீட்டுக்களை வழங்குவதற்கு ஏற்புடைய அலுவல்கள்
- அக்ரஹார காப்புறுதி இழப்பீடுகள் வழங்குவதை சிபார்சு செய்தல்
- ஜனாதிபதி பணியாட் குழு அலுவலர்களின் விடுமுறைகள், மேலதிக நேரக் கொடுப்பனவு, பிரயாணச் செலவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கு ஏற்புடைய அலுவல்கள்.
- பணியாட் குழுவுக்குரிய அலுவலர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- விமானநிலைய முனைய விசேட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய ஜனாதிபதி அலுவலகத்தின் பணியாட் குழு அலுவலர்களுக்கு அந்த வசதிகளை வழங்குவது தொடர்பான அலுவல்கள்

- வெளிநாட்டு கடமைப் பிரயாணச் சீட்டுக்களை வழங்குவதற்கு ஏற்புடைய சிபார்சுகளை முன்வைத்தல் மற்றும் வீசாக்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும்போது சேவையினை அத்தாட்சிப்படுத்தல்
- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வெளிநாட்டு விஜயங்களின்போது கலந்துகொள்ளும் ஜனாதிபதி பணியாட் குழு அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு உரித்தான கொடுப்பனவுகள் மற்றும் அது தொடர்பான செலவினங்களைச் செலுத்துதல்
- வரி விதிக்கப்படாத வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு ஏற்புடைய கடமைகள்
- வாசிகசாலைக்கு ஏற்புடைய நிர்வாக அலுவல்கள்
- ஒரு மொழிக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அரச அலுவலர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான அலுவல்கள் மற்றும் அரச மொழிக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான அலுவல்கள்
- வரவு, வெளியேறிச் செல்லும் குறிப்பேடுகளைப் பேணிச் செல்லுதல் மற்றும் விரலடையாளப் பதிவியந்திரம் தொடர்பான கண்காணிப்பு
- மருத்துவப் பிரிவின் கீழ் ஜனாதிபதி அலுவலகத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் சேவை வழங்குதல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

- ஆட்சேர்ப்பு, இணைப்புச் செய்தல், இடமாற்றம் செய்தல், ஓய்வு வழங்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பான கடமைகள். அந்தக் காலப் பகுதியினுள் நியமனங்கள் மற்றும் இணைப்புச் செய்தல் 421 உம், இடமாற்றம் மற்றும் மீள விடுவித்தல் 104 உம், அக்ரஹார மருத்துவ செலவுச் சிட்டைகளுக்கு ஈடுசெய்தல் 130 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


2018.12.31 ஆந் திகதி வரை பணியாட் குழுவினர்

அங்கீகரிக்கப்பட்ட பணியாட் குழுவினர் : 1497

சேவையிலுள்ள பணியாட் குழுவினர் : 1346

2018.12.31 ஆந் திகதியில் பணியாட் குழுவினரின் இயல்பு

நிரந்தர	தற்காலிக	ஒப்பந்த அடிப்படையிலான	இணைப்புச் செய்யப்பட்ட	மொத்தம்
858	283	76	129	1346



உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சித் தேவைகளை வழங்குதல்

வெளிநாட்டுப் பயிற்சிகள்


வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகளுக்கு அங்கீகாரம் பெற்று அந்தப் பாடநெறிகளில் 2018.01.01 ஆந் திகதி முதல் 2018.09.30 ஆந் திகதி வரை கலந்துகொண்ட பதவிநிலை அலுவலர்களின் எண்ணிக்கை 12 ஆகும்.


வெளிநாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு அங்கீகாரம் பெற்று அவற்றில் 2018.01.01 ஆந் திகதி முதல் 2018.09.30 ஆந் திகதி வரை கலந்துகொண்ட பதவிநிலை அலுவலர்களின் எண்ணிக்கை 24 ஆகும்.

2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகள்/மாநாடுகள் மற்றும் கடமைகளுக்காக ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து கலந்துகொண்ட அலுவலர்கள் தொடர்பான அறிக்கை

மாதம்	வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகளில் கலந்துகொண்ட அலுவலர்கள்	மாநாடுகள் மற்றும் சுற்றுப்பயணங்களில் கலந்துகொண்ட அலுவலர்கள்	பாடநெறிகள்/மாநாடுகள்/ நிகழ்ச்சி களில் கலந்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை
ஜனவரி	01	01	02
பெப்ரவரி	01	03	04
மார்ச்	00	05	05
ஏப்ரல்	01	02	03
மே	06	09	15
ஜூன்	00	03	03
ஜூலை	01	01	02
ஆகஸ்ட்	00	04	04
செப்டம்பர்	00	02	02
ஒக்டோபர்	02	00	02
நவம்பர்	01	02	03
டிசம்பர்	02	04	06
மொத்த எண்ணிக்கை	**15**	**36**	**51**

2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றியோரின் மொத்த எண்ணிக்கை





உள்நாட்டுப் பயிற்சிகள்

ஜனாதிபதி அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள்/அலுகுகளிலுமுள்ள பதவிநிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப மட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களின்/ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்யும் பயிற்சி நிகழ்ச்சிகள்/செயலமர்வுகள் கீழுள்ளவாறு நடாத்தப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	*2018.01.01 முதல் 2018.09.30 வரை நடாத்தப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்*	*பயிலுனர்களின் வகுதி*	*எண்ணிக்கை*
01	அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெறும் வைபவங்களில் விசேட அதிதிகளை வரவேற்றல்/ஆசனங்கள் வழங்குதல் தொடர்பான ஒருநாள் செயலமர்வு	அனைத்துப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பதவிநிலை அலுவலர் வகுதியின் அங்கத்தவர்கள்	35
02	"அலுவலக வேலைச் சூழல் மற்றும் மனப்பாங்கு விருத்தி" இரண்டாவது செயலமர்வு	அலுவலக உதவியாளர்கள்	119
03	முகாமைத்துவ உதவியாளர் சேவையின் புதிய அலுவலர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சி	புதிய முகாமைத்துவ உதவி யாளர் சேவை அலுவலர்கள்	19
04	புதிய அலுவலக உதவியாளர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சி	புதிய அலுவலக உதவியாளர்கள்	19
05	புதிய சாரதி அலுவலர்களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சி	புதிய சாரதி அலுவலர்கள்	08
06	Proposal For Training Programme on "Enhancing Skills & Professional Knowledge of Office Aides" மூன்று நாள் நிகழ்வு	புதிய அலுவலக உதவியாளர்கள்	19
07	ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் விசாரணைத் தர அலுவலர்களுக்கான 07 நாள் செயலமர்வு	ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் விசாரணைத் தர அலுவலர்கள்	124
08	ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கீழான வீடியோ அலகு/புகைப்பட அலகு மற்றும் ஆசிரியர் அலகு ஆகிய அலகுகளின் அலுவலர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு	வீடியோ அலகு/புகைப்பட அலகு மற்றும் ஆசிரியர் அலகு அலுவலர்கள்	120
09	ஊடகப் பிரிவில் பணியாற்றும் புதிய அலுவலர்களுக்கு அரச சேவை தொடர்பான தெளிவூட்டலை வழங்குதல்	ஜனாதிபதி ஊடகப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள புதிய அலுவலர்கள்	150
10	பொதுத் தொடர்பாடல் பிரிவின் அலுவலர்களுக்கான OBT நிகழ்ச்சி	பொதுத் தொடர்பாடல் பிரிவின் அனைத்து அலுவலர்களும்	37
11	அபிவிருத்திக் கருத்திட்டங்கள், வைபவ நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்பு	ஜனாதிபதி ஒருங்கிணைப்பு அலுவலர்கள்	30
12	கன்னெலிய பாதுகாப்பு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற தலைமைத்துவச் செயலமர்வு	நிதி முகாமைத்துவப் பிரிவின் கணக்காய்வுப் பிரிவு அலுவலர்கள்	40

தொடர் இலக்கம்	2018.01.01 முதல் 2018.09.30 வரை நடாத்தப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்	பயிலுனர்களின் வகுதி	எண்ணிக்கை
13	அலுவலக உதவியாளர்கள்/சாரதி அலுவலர் களுக்கான 50 மணத்தியால பங்கேற்பைக் கொண்ட தமிழ் மொழிப் பாடநெறி	சாரதி அலுவலர்கள் 50 அலுவலக உதவியாளர்கள் 50	100
14	கண்டி மாவட்டத்தின் அனைத்து தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கும் தெளிவூட்டும் நிகழ்வு	கண்டி மாவட்டத்தின் அனைத்து தொழில் வழிகாட்டல் அலுவலர்களும்	200
15	இலங்கை ஜேர்மனி தொழிற் பயிற்சி நிறுவனத்தின் உதவியுடன் சாரதிகளின் அறிவு மற்றும் மனப்பாங்கு விருத்திக்கான மூன்று நாள் பயிற்சிப் பாடநெறி	புதிய சாரதி அலுவலர்கள்	16
16	இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் வளப் பங்களிப் புடன் அலுவலக உதவியாளர்களுக்கான “அதிதிகளை உபசரித்தல்” பயிற்சிப் பாட நெறி	அலுவலக உதவியாளர்கள்	69
17	திறன் அபிவிருத்தி நிதியத்தின் வளப் பங்களிப்புடன் புதிய அலுவலக உதவியாளர் களுக்கான சேவைத் துவக்கப் பயிற்சி	புதிய அலுவலக உதவியா ளர்கள்	16
18	ஆளுமை விருத்திச் செயலமர்வு	அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திடப் பிரிவின் அலுவலர்கள்	22
19	கித்துல்கல பெஸ்ட் லைப் எட்வன்சர் கேம்பில் இடம்பெற்ற ஆளுமை விருத்திச் செயலமர்வு	மனித வள அபிவிருத்திப் பிரிவின் அலுவலர்கள்	31
20	கொஸ்கம எட்வன்சர் பார்க்கில் இடம்பெற்ற ஆளுமை விருத்திச் செயலமர்வு	எழுச்சி பெறும் பொலொன் னறுவை மற்றும் சிரிசர கருத்திட்ட அலுவலர்கள்	22
மொத்தம்			**1196**

ஜனாதிபதி அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள்/அலுகுகளிலுமுள்ள பதவிநிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப மட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களின்/ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்யும் நோக்கில் வெளி நிறுவனங்களில் நடாத்தப்படும் கீழுள்ள பயிற்சி நிகழ்ச்சிகள்/ செயலமர்வுகளில் அலுவலர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டுள்ளனர்.

	பாடநெறி	கலந்துகொண்ட அலுவலர்களின் எண்ணிக்கை
01	டிஜிட்டல் புகைப்படமாக்கல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி	02
02	அரச பெறுகைச் செயல்முறை	11
03	Diploma in English for Professionals – Level 1	03
04	File Management & General Office Administration, E – Code	04
05	Master of Public Management	01
06	இரண்டு நாள் ஆரம்பப் பயிற்சி நிகழ்ச்சி	01

	பாடநெறி	கலந்துகொண்ட அலுவலர்களின் எண்ணிக்கை
07	உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி	01
08	தரவுப் பகுப்பாய்வு தொடர்பான சான்றிதழ் பாடநெறி	01
09	Speech craft Training with the Toastmasters International for Special Grade Officers of All Island Services பாடநெறி	04
10	கருத்திட்ட முகாமைத்துவம்	02
11	Basic Report Writing Skills	04
12	Government Auditing Standards and Answering Audit Queries	03
13	அறிவிப்புக் கலை பாடநெறி	02
14	பொருளியல் பட்டப்பின் பட்டம்	01
15	Diploma in English for Professionals	04
16	வெகுசனத் தொடர்பாடல் மற்றும் ஊடக முகாமைத்துவம்	01
17	Master of Human Resource Management (MHRM)	01
18	சமூகவியல் தொடர்பான முதுமானிப் பட்டம்	01
19	Disciplinary Procedures in the Public Sector	04
20	கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்	02
21	Report Writing Skills	02
22	முன்னிலைப்படுத்தல் திறன்கள் தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு	03
23	ICT for Management Assistants	07
24	அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணங்கள்	05
25	Stores Management & Publish Assets Disposal Procedures	01
26	கருத்திட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் மதிப்பீடு	02
27	நிதிப் பிரமாணம் 104 நட்டங்களை அறிக்கையிடல், இழப்பீடு, கணக்கு வைத்தல்	01
28	Advanced MS Excel Skills for Junior Officers	04
29	Stores & Inventory Management	02
30	Public Speaking Accelerator – 2018 பயிற்சி அமர்வு	10
31	கைசென் முகாமைத்துவம்	02
32	அறிவு முகாமைத்துவம்	01
33	உற்பத்தித்திறன் டிப்ளோமா	03
34	ஒப்பந்த முகாமைத்துவம், கொடுப்பனவு செய்யும் செயன்முறை மற்றும் ஒப்பந்தக் கோப்புகள் பேணுகை	02
35	Computerized Government Payroll System	02
36	Sri Lanka Economic Summit - 2018	01

	பாடநெறி	கலந்துகொண்ட அலுவலர்களின் எண்ணிக்கை
37	Financial Regulations in the Public Sector	07
38	Database Management using MS Access	01
39	Internal Auditing Practices in Public Sector	03
40	அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணங்கள்	12
41	36 ஆவது தேசிய தகவல் தொழிநுட்ப சம்மேளனம்	03
42	தரவுப் பகுப்பாய்வு	08
43	*13 ஆவது இணைந்த சட்ட மாநாடு*	01
44	GBCSL Associate Professional Training (APT) Course	01
45	தொழில்சார் அபிவிருத்தி தொடர்பான சான்றிதழ் பாடநெறி	05
46	Diploma in English for Junior Executives – Level 2	03
47	Master of Information Security	01
48	ஊடகவியல் பட்டப்பின் பட்டப் பாடநெறி	02
49	தமிழ் மொழி பேச்சுப் பாடநெறி	02
50	புகைப்படக் கலை ஒரு வருட டிப்ளோமா பாடநெறி	01
51	அபிவிருத்திக் கொள்கைகள் பகுப்பாய்வு தொடர்பான டிப்ளோமா	01
52	Public Financial Regulations	01
53	சினிமா மற்றும் தொலைக்காட்சி ஒரு வருட டிப்ளோமா பாடநெறி	03
54	பொதுத் தொடர்புகள் உயர் டிப்ளோமா பாடநெறி	01
55	Diploma in Public Procurement and Contract Administration	02
56	கிரபிக் டிசைனிங் (NVQ LEVEL 04) பாடநெறி	01
57	ஆங்கில டிப்ளோமா பாடநெறி	01
58	சமுத்திர வளங்கள் முகாமைத்துவம்	01
59	நிர்வாகச் சட்டம் டிப்ளோமா பாடநெறி	01
60	Lean Six Sigma Black Belt பயிற்சிப் பாடநெறி	01
61	Certificate in English for Employment Purposes Level - 2	01
மொத்தம்		**174**

- **மருத்துவ அலகு**

அறிமுகம்

ஜனாதிபதி செயலகத்தினுள் காணப்படும் மருத்துவ அலகு மனித வள அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்குவதுடன், கௌரவ ஜனாதிபதி அவர்கள், அவரின் நெருக்கமான உறவினர்கள், ஜனாதிபதி செயலகத்தின் அலுவலர்கள் ஆகியோரின் ஆரோக்கியத்தினை சிறந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

அத்துடன் பொருளாதாரக் கஷ்டங்களுடைய பிரஜைகளின் ஆரோக்கிய நிலைமையை மேம்படுத்து வதற்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகளைத் திட்டமிடலும் இந்த அலகினால் மேற்கொள்ளப் படுகிறது.

நோக்கங்கள்

- கௌரவ ஜனாதிபதி அவர்களின் வாகனத் தொடரணியுடன் பயணிக்கும் அம்பியுலன்ஸ் வண்டியை இயங்கு நிலையில் பேணிச் செல்வதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து செயற்பாட்டு நிலையில் பேணிச் செல்லுதல்.
- அந்த அம்பியுலன்ஸ் வண்டியின் பராமரிப்புப் பணிகள் மற்றும் வழங்கல் தொடர்பாக எப்போதும் ஆராய்ந்து தேவையானபோது அதில் பங்கேற்று செயற்படுதல்.
- கௌரவ ஜனாதிபதி அவர்களின் ஆரோக்கிய அலுவல்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவருடன் பயணித்தல்.
- அலுவலக அலுவலர்களுக்கு சிறந்த ஆரோக்கிய நிலைமையைப் பேணிச் செல்வதற்குத் தேவையான அறிவூட்டலை வழங்குவதற்காக பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.
- அலுவலக அலுவலர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ள ஆலோசனை வழங்கவும், சிகிச்சை செய்யவும் மருத்துவ மத்திய நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல்.
- அலுவலக அலுவலர்களுக்கு விசேட வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய பிரதான மருத்துவ நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்.
- அலுவலகத்தினால் பொது மக்களின் நலனோம்புகைக்காக அவ்வப்போது கஷ்டப் பிரதேசங்களில் திட்டமிட்டு நடாத்தப்படும் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை சிறப்பாக நடாத்துவதற்கு ஆலோசனைகள் மற்றும் செயற்பாட்டுரீதியான பங்களிப்பினை தேவையான சந்தர்ப்பங்களில் வழங்குதல்.
- நாட்டின் தேவைக்கு ஏற்ப காலத்திற்கு அமைவாக ஏற்பட முடியுமான எந்தவொரு சுகாதார நடவடிக்கைக்கும் தேவையான வேலைத்திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தல்.

• உற்பத்தித்திறன் அலகு

அறிமுகம்

2017.07.12 ஆந் திகதி தாமரைத் தடாக அரங்கில் ஜனாதிபதி அலுவலகத்தின் அனைத்து அலுவலர்களினதும் மத்தியில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் உரையாற்றும்போது 2018 தேசிய உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் ஜனாதிபதி அலுவலகம் சிறந்த வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனக் கூறினார்.

எனவே அந்த இலக்கினை அடைந்து கொள்ளும் பிரதான நோக்கத்துடன் ஜனாதிபதி சிரேஷ்ட செயலாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் ஜனாதிபதி உதவிச் செயலாளர் ஒருவரின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தினுள் உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் செயற்படுத்துவதற்காக உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அலகு நிறுவப்பட்டது.

அதற்காக ஒட்டுமொத்த பணியாட் குழுவினரும் ஒன்றிணைந்து செயற்பட்டு மேற்குறித்த சவாலை வெற்றி கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நோக்கங்கள்

- ஜனாதிபதி அலுவலகத்தினுள் உற்பத்தித்திறன் எண்ணக்கருவை ஏற்படுத்தல்.
- 2016 – 2017 தேசிய உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு ஏற்புடைய அலுவல்கள்.
- வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மற்றும் தரநிலை வட்டத் தலைவர் குழுக் கூட்டங்களை நடாத்தி அனைத்துப் பிரிவுகளையும் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஜனாதிபதி அலுவலக அலுவலர்களின் அறிவு விருத்திக்காக உற்பத்தித்திறன் பயிற்சிச் செயலமர்வுகளை ஏற்பாடு செய்து நடாத்துதல்.
- பிரிவுகளுக்கிடையே உற்பத்தித்திறன் போட்டிகளை நடாத்துதல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

- 2016 – 2017 தேசிய உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் இலங்கையில் முதலிடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி அலுவலகத்தினுள் உற்பத்தித்திறன் எண்ணக்கருவைச் சிறப்பாக செயற்படுத்தி பணியாட் குழுவினரை அதற்காக வழிநடாத்தியமை 2018 ஆம் ஆண்டில் உற்பத்தித்திறன் அலகு பெற்றுக்கொண்ட தனிச்சிறப்பான வெற்றியாகும். கலந்துகொண்ட முதலாவது சந்தர்ப்பத்திலேயே அந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டமை மிகவும் முக்கியமானதொரு அம்சமாகும்.
- உற்பத்தித்திறன் வழிநடாத்தல் குழுக்களை அமைத்தல் மற்றும் வருடத்தினுள் 12 வழிநடாத்தல் குழுக் கூட்டங்களை நடாத்துதல்.
- அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் அமைக்கப்பட்ட தரநிலை வட்டங்களின் எண்ணிக்கை 45 ஆகும்.
- பிரிவுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட வட்டக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை 60 ஆகும்.
- அலகினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை 10 ஆகும்.




NATIONAL PRODUCTIVITY AWARDS 2018
NPS SRI LANKA
PUBLIC SECTOR – INTER MINISTRIES CATEGORY - FIRST PLACE
PRESIDENTIAL SECRETARIAT
NATIONAL PRODUCTIVITY AWARDS 2018
26th March 2019 @ BMICH
Studio Lakdam
0777743680

கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு

அறிமுகம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலாக தேசிய மட்டத்திலான அரசாங்க நிறுவனங்கள் அதேபோன்று மாவட்ட மற்றும் மாகாண மட்டத்திலான நிருவாக அலகுகளுடன் ஒருங்கிணைந்து அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு மற்றும் போசாக்கு தொடர்பான பல்துறை செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு தலைவர்கள்/ பணிப்பாளர் சபைகளை நியமிப்பதற்கு ஏற்புடைய அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இப்பிரிவு பிரதான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

பணிகள்

- கொள்கை வகுத்தலை இலகுபடுத்துதலும் ஒருங்கிணைத்தலும்.
- “வளர்ச்சி மற்றும் பொறுப்புடன் கூடிய அரசாங்கத்துறையினை ”மைத்திரி நிருவாகம் - நிலைபேறுடைய நாடு” என்னும் கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப அமைச்சுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு.
- அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் நிகழ்ச்சித்திட்டங்களினதும் மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பணிகள்.
- போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான சகல தரப்பினர்களுக்குமிடையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்தாசை நல்குதல், இதன் பிரதான நோக்கமாவது போசனைக்கான பல்துறை செயல்திட்டம் 2018 இன் கீழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் போசாக்குக் குறைபாட்டினை ஒழிப்பதற்கு இனங்காணப்பட்ட விசேட கருத் திட்டங்களைச் செயற்படுத்தல்.
- கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்குத் தலைவர்கள்/பணிப்பாளர் சபைகளை நியமிப்பதற்கு ஏற்புடைய பெயர் முன்மொழிவுகளை அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட அலுவலர் குழுவுக்குச் சமர்ப்பித்து குழுவின் சிபார்சுகளை அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பாக ஏற்புடைய அமைச்சின் செயலாளர்களுக்குத் தெரியப்படுத்தல்.
- மாவட்ட அபிவிருத்தி பணிகள் ”மைத்திரி நிருவாகம் - நிலைபேறுடைய நாடு” என்பதற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிசெய்தல்.
- கொள்கை வகுப்பதற்குத் தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை திரட்டுதல், புலனாய்வு செய்தல் மற்றும் தேவைக்கேற்றவாறு அறிக்கைகளை வழங்குதல்.
- சமூக, பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகள் மற்றும் சமூகத் தேவைகள் தொடர்பில் ஆராய்தல்.

2018 ஆம் ஆண்டில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினதும் ஜனாதிபதி செயலாளரினதும் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டங்கள் .

2018 ஆம் ஆண்டில் மேற்போந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

விடயம்	கூட்டம் / செயற்பாடுகள்
அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில்	40
ஜனாதிபதி செயலாளரின் தலைமையில்	30
ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளரின் தலைமையில்	03
ஜனாதிபதி மேலதிக செயலாளரின் தலைமையில்	01
பிற	03
மொத்தம்	86

01. கைத்தொழில் துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் - 2018.03.05

கைத்தொழில் துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஏற்புடைய அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் இது தொடர்பான முன்னேற்றத்தை ஆராயும் விதமாக 03 கலந்துரையாடல்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்டன. மேலும் தேசிய பொருளாதாரச் சபையில் இது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டன.

02. நிர்மாணக் கைத்தொழிலின் பிரதான சவால்கள் மற்றும் உத்தேச நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் - 2018.03.29

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பாகக் காணப்படும் பிரதான சவால்கள் மற்றும் உத்தேச நடவடிக்கைகள் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. இதன்போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துவதனை ஒருங்கிணைக்கும் பணி இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்தக் கூட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான பின்னாய்வுக் கலந்துரையாடலொன்று 2018.04.09 ஆந் திகதி நடாத்தப்பட்டுள்ளனது.



03. ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தின் ஸ்ரீ லங்கன் இணைந்த தொழிற் சங்கத்துடனான கலந்துரையாடல் - 2018.04.25

ஸ்ரீ லங்கன் விமானச் சேவை நிறுவனம் தற்போது எதிர்நோக்கியுள்ள நிலைமை, அது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாக ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

04. தொழில்சார் இணைய ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் - 2018.05.24

தொழில்சார் இணைய ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலொன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இணைய ஊடகக் கலைக்கு ஒழுக்கநெறி அமைப்பொன்றை உருவாக்குதல், இணையத்தளங்களின் பதிவு, அரச பிரச்சாரங்களுக்கு இணைய ஊடகங்களைப் பயன்படுத்தல், இணைய ஊடகவியலாளர்களுக்கு தொழிற் பயிற்சியை வழங்குதல் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு மானியக் கடன் வழங்குதல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

04. மடுமாதா தேவாலயப் பிரதேசத்தை புனித பூமியாக மாற்றி அபிவிருத்தி செய்தல் - 2018.08.31

மடுமாதா தேவாலயப் பிரதேசத்தை புனித பூமியாக மாற்றி அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்ட மொன்றைத் தயாரிக்கும் நோக்குடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைப 18/1706/801/017 மற்றும் 2018 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக இக்கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன அவர்களின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதனடிப்படையில் களப் பரிசோதனை மற்றும் கலந்துரையாடலொன்று 2018.09.14 ஆந் திகதி மடு பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது.





மேலும் இது தொடர்பான 02 பின்னாய்வுக் கலந்துரையாடல்கள் இப்பிரிவின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டுள்ளன.

06. கத்தோலிக்க தேவாலயங்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் சம்பந்தப்பட்ட கலந்துரையாடல் - 2018.07.18

சமய ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காக கத்தோலிக்க மதம் தொடர்பான கல்வித் துறை, கத்தோலிக்க வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான காணிகள் சம்பந்தப்பட்ட அலுவல்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் தொடர்பான அமைச்சரின் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவினை அழைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின்னாய்வு செய்தல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் இதன் கீழ் கல்வி விடயம் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் 2018.09.10 ஆந் திகதி நடாத்தப்பட்டுள்ளது.

07. எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் - 2018.12.11

பண்டிகைக் காலத்தில் வாழ்க்கைச் செலவு மற்றும் மக்களுக்கு நுகர்வுச் சேவைகள் மற்றும் பொருட்களைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வது தொடர்பான கலந்துரையாடலொன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது.



08. 2018 நத்தார் பண்டிகை நிகழ்வு – 2018.12.20

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்படும் வருடாந்த நத்தார் நிகழ்வு இம்முறையும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் அதிவணக்கத்திற்குரிய மெல்கம் காதினல் ரஞ்சித் அவர்களின் பங்கேற்புடன் 2018.12.20 ஆந் திகதி ஜனாதிபதி மாளிகையில் வெகு விமரிசையாக நடாத்தப்பட்டது. இந்த வருடாந்த நத்தார் நிகழ்வு கெரொல் நிகழ்ச்சி மற்றும் இராப் போசன விருந்து என்பவற்றைக் கொண்டிருந்ததுடன், இப்பிரிவினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.






09. டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதிச் செயலணி

2017 ஆம் ஆண்டு டெங்கு நோயின் பரவல் தீவிரமடைந்ததுடன், நிலவிய தொற்று நிலைமையினால் நாட்டில் பொதுமக்களின் சுகாதார நிலைக்கு ஏற்பட்ட பிரதிகூலமான நிலைமையினை குறைப்பதற்கு அதிமேதகைய ஜனாதிபதி அவர்களின் ஆலோசனையின் பேரில் டெங்குநோய் ஒழிப்பு பற்றிய ஜனாதிபதி செயலணியுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு தொடர்பான வழிநடாத்தல் குழு செயற்பட்டது.

சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலாக அரசாங்க தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கும் கையாள்வதற்கும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் தொழிநுட்ப பங்களிப்புடன் டெங்குநோயை ஒழிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் துரித பல்தரப்பு நிகழ்ச்சித்திட்ட மொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதிமேதகைய ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2017.05.16 ஆம் திகதியன்று டெங்குநோய் ஒழிப்பு பற்றிய ஜனாதிபதி செயலணியின் கூட்டம் நடாத்தப்பட்டதோடு, இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் வாராந்த மற்றும் மாதாந்த ரீதியில் ஜனாதிபதியின் செயலாளரினால் முன்னேற்றமானது மீளாய்வு செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் இத்தகைய 18 கூட்டங்களும் 2018 ஆம் ஆண்டில் 05 கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.



10. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு – 2018

அனைத்து அமைச்சுக்களினாலும் இலங்கை அரசின் நிதி, வெளிநாட்டுதவித் திட்டங்கள் மற்றும் வரவுசெலவுப் பிரேரணைகளின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற் படுத்துவது தொடர்பான முன்னேற்றம் காலாண்டு ரீதியாக மீளாய்வு செய்யும் பணி கொள்கை, ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கமைய அந்தந்த அமைச்சுக்களினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

அந்தந்த அமைச்சுக்களினால் 2018 ஆம் ஆண்டில் அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் போது ஒவ்வொரு காலாண்டின் இறுதியில் பெற்றுக்கொண்ட முன்னேற்றம் சுருக்கமாக கீழே காட்டப்பட்டுள்ளது.

2018.01.01 - 2018.12.31			
காலாண்டு	***ஒதுக்கப்பட்ட திருத்தப்பட்ட மூலதன ஒதுக்கீட்டின் அளவு (ரூ. பில்லியன்)***	***மூலதன ஒதுக்கீடுகளை செலவு செய்த அளவு/ முன்னேற்றம் (ஒட்டுமொத்த) (ரூ. பில்லியன்)***	***நிதி முன்னேற்றம் (ஒட்டுமொத்த) (சதவீதமாக)***
முதலாவது காலாண்டு	633.64	130.62	20.6%
இரண்டாவது காலாண்டு	625.31	246.62	39.4%
மூன்றாவது காலாண்டு	647.01	405.07	62.6%
நான்காவது காலாண்டு	*தற்போது தகவல்கள் கோரப்பட்டுள்ளன.*		

11. அமைச்சுக்களின் முன்னேற்றம் மற்றும் தேசிய அபிவிருத்தி இலக்குகளின் முன்னேற்ற மீளாய்வு

இப்பிரிவினால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் அமைச்சு விடயச் சேர்க்கைகளுக்கு ஏற்ப அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏற்புடைய ஏனைய அதிகாரிகளுடன் கீழுள்ள விடயங்கள் தொடர்பாக முக்கிய கவனஞ் செலுத்தி நிதியமைச்சு (வரவுசெலவுத் திட்டத் திணைக்களம், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம்) கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், திட்டமிடல் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பங்கேற்புடன் தொடர்ச்சியான முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

1. அமைச்சுக்கள் இலக்காகக் கொள்ளும் பிரதான செயல் சுட்டிகள் **(KPIs)**
2. 2015-2017 ஆம் ஆண்டுகளின் முன்னேற்றத்தின் மொத்தமாக மற்றும் பிரதான கருத்திட்டங்களின் முன்னேற்றம்
3. 2018 ஆம் ஆண்டின் செயல்திட்டம், அதன் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்
4. 2020 ஆகும்போது செயற்படுத்தி நிறைவடையும் மற்றும் கருத்திட்டங்கள்

அதற்கமைய, நடாத்தப்பட்ட மொத்தக் கூட்டங்களின் எண்ணிக்கை 06 என்பதுடன், அழைக்கப்பட்ட மொத்த அமைச்சுக்களின் எண்ணிக்கை 23 ஆகும். 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அமைச்சு முன்னேற்ற மீளாய்வுக்கு ஏற்புடைய சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இலக்கம்	திகதி	அமைச்சு விடயச் சேர்க்கை	அழைக்கப்பட்ட அமைச்சு
01	2018.01.18	பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் உப விடயம் III	I. வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு II. நகர திட்டமிடல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு III. தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
02	2018.02.15	கைத்தொழில் மற்றும் சேவைகள் உப விடயம் I	I. தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி அமைச்சு II. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு III. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு IV. கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு
03	2018.03.23	கைத்தொழில் மற்றும் சேவைகள் உப விடயம II	I. அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு II. உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு III. சமூக வலுவூட்டல், நலனோம்புகை மற்றும் மலை நாட்டு உரிமைகள் தொடர்பான அமைச்சு
04	2018.08.21	பிராந்திய மற்றும் பிரதேச அபிவிருத்தி	I. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு II. மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு III. பேண்தகு அபிவிருத்தி, வனசீவரசிகள் மற்றும் பிரதேச அபிருத்தி அமைச்சு
05	2018.09.18	பிராந்திய மற்றும் பிரதேச அபிவிருத்தி	I. அரச தொழில் முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சு II. இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, III. உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, IV. மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, V. விஞ்ஞான, தொழிநுட்ப, ஆராய்ச்சி, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி மற்றும் மலை நாட்டு உரிமைகள் தொடர்பான அமைச்சு,
06	2018.10.22	மனித வளங்கள் மற்றும் தேசிய ஒற்றுமை	I. தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க மற்றும் அரச-கரும மொழிகள் அமைச்சு, II. புத்தசாசன அமைச்சு, III. மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு , IV. அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு , V. சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

12. ஏனைய விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் -

இந்திய அரசினால் நிதியளிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு – 2018.05.16

இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரை யாடலொன்று 2018.05.16 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் கௌரவ பிரதம அமைச்சர், ஏற்புடைய கருத்திட்டங் களைச் செயற் படுத்தும் நிரல் அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் அந்த அமைச்சுக்களின் அதிகாரிகளின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலின்போது ஏற்புடைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றம் மற்றும் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக விசேட கவனம் ஈர்க்கப்பட்டது.

போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள்

2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

- **போசாக்கு தொடர்புபட்ட பல்துறை செயல் திட்டம் 2018 ஐச் செயற்படுத்தல்.**
- **போசாக்கு தொடர்புபட்ட பல்துறை செயல் திட்டம் 2018 - 2025 இன் கீழ் அமைச்சுக்கள், மாகாண, மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டங்களில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், தொடர் நடவடிக்கைகள் எடுத்தல், மதிப்பிடுதல்.**

➢ போசாக்கு தொடர்புபட்ட பல்துறை செயல் திட்டம் 2018 இன் கீழ் நாட்டிலுள்ள சகல மாவட்டங்களையும் தழுவும் விதத்தில் போசாக்கின்மையை இல்லாதொழிப்பதற்காக இனங்காணப் பட்ட விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். 2018 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

- போசாக்கிற்கான பல்துறை செயல் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தேசிய போசாக்குத் தரவுத் தளத்தினைப் பகுப்பாய்வு செய்து பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக காணப் படும் போசாக்கு அபாய நிலைமைகள் மற்றும் அதற்கான காரணிகளைத் தனித் தனியாக இனங்காணுதல்.

- அவ்வாறு பகுப்பாய்வு செய்து பெற்றுக் கொள்ளப்படும் தரவுகளை மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கி அந்தந்த பிரதேச செயலக மட்டத்தில் காணப்படும் போசாக்குச் சிக்கல்கள் மற்றும் அபாய நிலைமைகளுக்குப் பொருத்தமான தீர்வுகள் கிடைக்கும் வகையில் அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளுக்குத் தனித்துவமான குறிப்பான செயற்பாடுகளைக் கொண்ட செயல் திட்டத்தைப் தயாரிப்பதற்குத் தேவையான உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.





- அதற்கேற்ப, அவ்வாறு தயாரித்து அனுப்பி வைக்கப்பட்ட 331 பிரதேச செயலகப் பிரிவுகளின் செயல் திட்டங்களைப் பரீட்சித்து தேவையான திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகரித்தல், அத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அதிகபட்சம் ரூ. 100,000.00 ஒதுக்கீட்டினை விடுவித்தல் மற்றும் அமுல்படுத்தலை ஒழுங்கு படுத்தல்.



கர்ப்பிணித் தாய்மாருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி – தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவு, மாத்தறை மாவட்டம்



பிள்ளைகளின் உணவு ஆர்வம் மேம்படும் வகையில் உணவு தயாரித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி – பலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவு, காலி மாவட்டம்.



கீரைத் தொட்டி நிகழ்ச்சித்திட்டம் - உக்குவெல பிரதேச செயலகப் பிரிவு, மாத்தளை மாவட்டம்



பிள்ளைகளின் போசாக்கு தொடர்பாகத் தாய் மாருக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி – புத்தல பிரதேச செயலகப் பிரிவு, அம்பாந்தோட்டை மாவட்டம்

- போசனைக் குறைபாடு அபாயத்தைக் கொண்ட வீட்டு அலகுகளில் போசனை அபிவிருத்தி முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்டவாறான விருத்தியைப் பெற்றுக் கொள்ளாத வீட்டு அலகுகள் காணப்படின் அந்த வீட்டு அலகுகளை இலக்காகக் கொண்டு பொருத்தமான ஏனைய கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்.
- இரு மாதங்களுக்கு ஒரு தடவை பிரதேச மற்றும் மாவட்ட போசனைக் குழுக் கூட்டங்களை நடாத்துவதன் மூலம் ஒழுங்காக மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவது தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அறிக்கைகளைப் பெறல்.
- கடந்த வருடம் பிபிலை பிரதேச செயலகப் பிரிவில் செயற்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டம் மூலம் பெற்றுக்கொண்ட முன்னேற்றத்திற்கு அமைவாக தேசிய போசாக்குத் தரவுத் தளப் பகுப்பாய்வு ஊடாக இனங்காணப்பட்ட போசனைக் குறைபாடு அபாயங்களை அதிகமாகக் கொண்டுள்ள நுவரெலியா, பதுளை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஹங்குராங்கெத்த, கொத்மலை, வலபனே, ரிதீமாலியத்த, லுணுகல, கோரளைப்பற்று வடக்கு, கோரளைப்பற்று தெற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் விசேட மாதிரிப் போசனைக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.




ஹங்குராங்கெத்த பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு போசாக்கின்மையைக் குறைப்பதற்கான விசேட போசாக்கு முன்னோடித் திட்டத்தின் கீழ் குறைநிறையுடைய பிள்ளைகளுக்கு குருதிப் பரிசோதனை மேற்கொள்ளுதல்




கொத்மலை பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு வறுமை அல்லது மோசமான வருமான முகாமைத்துவம் காரணமாக போசாக்கின்மை அபாயத்தை எதிர்நோக்கியுள்ள பிள்ளைகளைக் கொண்ட வீட்டு அலகுகளை வலுவூட்டுவதற்காக செயற்படுத்தப்படும் விசேட போசாக்கு முன்னோடித் திட்டத்தின் கீழ் சுயதொழில் உருவாக்க நிகழ்ச்சியின் விசேட சந்தர்ப்பங்கள்




வலப்பனே பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படும் விசேட போசாக்கு முன்னோடிக் கருத்த் திட்டத்தின் கீழ் அடிப்படை விழிப்புணர்வை வழங்குதல்.





பதுளை மாவட்டத்தின ரிதீமாலியத்த பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படும் விசேட போசாக்கு முன்னோடிக் கருத் திட்டத்தின் விசேட சந்தர்ப்பங்கள்





மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படும் விசேட போசாக்கு முன்னோடிக் கருத் திட்டத்தின் விசேட சந்தர்ப்பங்கள்





மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படும் விசேட போசாக்கு முன்னோடிக் கருத் திட்டத்தின் விசேட சந்தர்ப்பங்கள்

- தெற்காசிய உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "தெற்காசியாவில் போசாக்கு எளிதில் பாதிப்புறும் கைத்தொழில்கள் மற்றும் உணவு அமைப்பு முறைகள் தொடர்பாக வாடிக்கையாளர்களைக் கவருதல்" இரு நாள் சர்வதேச மாநாட்டினை நடாத்துதல் - 2018 ஜூன் 25, 26, தாஜ் சமுத்ரா ஹோட்டல்.





அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு

அறிமுகம்

அரசியலமைப்பின் மூலமும் பல்வேறுபட்ட சட்டங்கள் மூலமும் அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் நடைமுறைப்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்தாசையினை வழங்குதல்.

01. நோக்கு

இலங்கைக்காக ஜனாதிபதி அவர்களின் நோக்கினைச் செயற்படுத்துவதற்குத் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலை வழங்கி அரச தலைவரின் அலுவலகம் என்ற வகையில் தொழில்சார் நிபுணத்துவத்தின் கேந்திர நிலையமாக மாறுதல்.

02. செயற்பணி

நல்லாட்சிக்கு ஏற்றவாறு புதிய இலங்கையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலை வழங்குதல்.

03. பிரதான நோக்கம்

மேற்போந்த தத்துவங்களையும் பொறுப்புகளையும் நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வினைத்திறனுடனும் தளராத ஊக்கத்துடனும் நிறைவேற்றுதல்.

04. 2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

L. அரசியலமைப்பின் மூலமும் பிற நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட பதவிகளுக்கான நியமனங்கள்	
• அமைச்சரவை அமைச்சர்கள்	82
• அமைச்சரவையின் அங்கத்தவரல்லாத அமைச்சர்கள்	05
• இராஜாங்க அமைச்சர்கள்	33
• பிரதியமைச்சர்கள்	34
• மாகாண ஆளுநர்கள்	08
• உயர் நீதிமன்ற நீதிபதிகள்/ பிரதம நீதியரசர்	03
• மேன்முறையீட்டு நீதிபதிகள்	03
• மேல் நீதிமன்ற நீதிபதிகள்	19
• நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	00
• மேல் நீதிமன்ற ஆணையாளர்கள்	00
• ஜனாதிபதி சட்டத்தரணிகள்	28
• சட்டமா அதிபதி	00

L. அரசியலமைப்பின் மூலமும் பிற நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட பதவிகளுக்கான நியமனங்கள்	
• பொலிஸ் மா அதிபர்	00
• இலங்கை தீர்ப்பு வழங்கல் நிறுவன உறுப்பினர்கள்	00
இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் (பதில் நியமனம்)	01
• அமைச்சுக்களின் செயலாளர்கள்	89
• மாகாண பிரதம செயலாளர்கள்	01
• அமைச்சர், பிரதியமைச்சர், இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டு லீவுகள்	350
• அமைச்சுக்களின் செயலாளர்களின் வெளிநாட்டு லீவுகள்	200
• ஏனைய	50
• அரசியலமைப்பின் 34 ஆவது உறுப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி மன்னிப்பை வழங்குதல் - விடுதலை செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை	12
• வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுட்கால சிறைத் தண்டனையாக மாற்றுதல் - வழங்கப்பட்டுள்ள சிறைத்தண்டனைக் காலத்தைக் குறைத்தல்	16
• விசேட சந்தர்ப்பங்களில் சிறைக் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குதல் - 2018	சுதந்திர தினம் 01 மற்றும் வெசாக் தினம் 01
• விமானப் படைத்தளபதி	00
• கடற்படைத் தளபதி	00
• இராணுவத் தளபதி	00
• பொலிஸ் மா அதிபர்	00
• பல்கலைக்கழக வேந்தர்கள்	06
• பல்கலைக்கழக துணைவேந்தர்கள்	04
• கொத்தலாவல பாதுகாப்பு வித்தியாலயத்தின் வேந்தர்	01
• இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	01
• பொது ஒப்பந்த உடன்படிக்கைப் பதிவாளர்	01

L. அரசியலமைப்பின் மூலமும் பிற நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட பதவிகளுக்கான நியமனங்கள்	
• உதவிப் பொது ஒப்பந்த உடன்படிக்கைப் பதிவாளர்	01
• சாரணர் தலைமையக ஆணையாளர்கள்	01
• சாரணர் மாவட்ட ஆணையாளர்கள்	16
• தேசிய மாணவர் படையணியின் பணிப்பாளர்	01
• இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம்	03
• ரணவிரு சேவைகள் அதிகாரசபையின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்	05
• தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உறுப்பினர்கள்	13
• இலங்கை மன்றக் கல்லூரியின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்	01
• மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	08
• தகவல் அறிந்துகொள்ளும் உரிமை பற்றிய ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள்	--
• தேசிய அடிப்படைக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சி சபை உறுப்பினர்கள்	05
• முதியோர்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர்கள்	12
• வலது குறைந்தோர்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர்கள்	01
• தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	02
• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல்	01
• அரச துறை சம்பள மீளாய்வு தொடர்பான விசேட ஆணைக்குழு	15
• இலங்கை பத்திரிகைகள் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்	06
• அரசகரும மொழி ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல்	06
• குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை	01
• தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு செயலாளரை நியமித்தல்	01
• தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு உறுப்பினர்களை நியமித்தல்	23
• ADC அழைத்தல்	30

L. அரசியலமைப்பின் மூலமும் பிற நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட பதவிகளுக்கான நியமனங்கள்	
ll. காணி உறுதிகளும் நீண்டகால குத்தகை உறுதிகளும்	
• நீண்டகால குத்தகை உறுதிகளை வழங்குதல்	146
• அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கு கொடைப் பத்திரங்களை வழங்குதல்	538
• ”ரணவிரு” உறுதிகளை வழங்குதல்	35
• சுனாமி கொடைப் பத்திரங்களை வழங்குதல்	1034
• விகாரைகளுக்கான கொடைப்பத்திரங்கள்	57
• இலங்கை முதலீட்டுச் சபைக்கு காணிகளை வழங்குதல்	01
• நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணிகளை உடைமையாக்குதல்	13
• வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணிகளை உடைமையாக்குதல்	10
• மாற்றுக் காணிகளை வழங்குதல்	14
• மகாவலி குத்தகை உறுதிகள்	56
• மகாவலி கொடைப்பத்திரங்களை வழங்குதல் (அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகள் சார்பில்)	57
• மகாவலி கொடைப்பத்திரங்களை வழங்குதல் (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ்)	3313
• மகாவலி விகாரைகள்	19
• புதிய ரண்பிம கொடைப்பத்திரங்கள்	8346
• அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஊடாக இரத்துச் செய்தல்	340
• அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவினை நீக்கி 4 (3) ஆம் பிரிவின் ஊடாக புதிய கொடைப் பத்திரங்களை வழங்குதல்	1406
• நடுத்தர வகுப்பினருக்கான காணிகள்	49
• அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவை நீக்குதல்	52

L. அரசியலமைப்பின் மூலமும் பிற நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட பதவிகளுக்கான நியமனங்கள்	
lll. பெறுகை மேன்முறையீட்டுச் சபை	
• பெறுகை மேன்முறையீட்டுச் சபைக் கூட்டங்கள்	86
lV. இராணுவ வீரர்களுக்கு வீரபதக்கம் வழங்குதல்	4757
V அதிகாரி தகுதிச்சான்றிதழ் (முப்படை) **அதிகாரி தகுதிச்சான்றிதழ் (கடற்படை)**	1376
VI. அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளினதும் உத்தியோகத்தர்களினதும் வெளிநாட்டு லீவு சார்பில் அங்கீகாரம் வழங்குதல்	600
Vll. மக்கள் பிரதிநிதிகளின் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் செயற்பட வேண்டிய முறைமை தொடர்பான சுற்றறிக்கைகளை வெளியிடுதல்	01

நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பிரிவு

அறிமுகம்

நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பிரிவின் ஊடாக அதிமேதகைய ஜனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் காணப்படும் சுயாதீன ஆணைக்குழுக்கள்/அமைச்சுக்கள்/ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் தாபன மற்றும் நிருவாக பணிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் நிறுவனங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் அமைச்சொன்றின் கீழ் உள்ளடக்கப்படாத திணைக்களங்களின் தாபன மற்றும் நிருவாகப் பணிகள் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் இதற்கு மேலதிகமாக அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அலுவலக பணிகள் நிறுவனங்கள் ஒவ்வொன்று சார்பிலும் வெவ்வேறாக இணைப்பு IV இல் எண்ணிக்கையளவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நோக்கங்கள்

- அதிமேதகைய ஜனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் நிலவும் அமைச்சுக்களின் ஒருங்கிணைப்புப் பணிகளை தாமதமின்றி மேற்கொள்ளல்.
- அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு வசதிகளை செய்தலும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளலும்.
- ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள், குழுக்கள் மற்றும் செயலணிகள் ஆகியவற்றின் கொள்கை, நிறுவன மற்றும் நிருவாக பணிகள் சம்பந்தமாக கிடைக்கப் பெறும் கடிதங்களுக்கு துரிதமாக பதில் வழங்குதல்.
- அதிமேதகைய ஜனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் தாபன, நிருவாக மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்.
- அதிமேதகைய சனாதிபதி அவர்களின் சார்பில் மாண்புமிகு பிரதம அமைச்சரினால் வழங்கப்பட வேண்டிய சகல பாராளுமன்ற வினாக்கள் சார்பிலும் உரிய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளை ஒருங்கிணைத்து பதில் வழங்குதல்.
- அதிமேதகைய ஜனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் நிலவும் அமைச்சுக்களினதும் (அதிமேதகைய ஜனாதிபதி அவர்களின் செய்யப்படும் நியமனங்கள் தவிர) அமைச்சுக்களின் கீழ் எடுக்கப்படாத சுயாதீன நிறுவனங்களினதும் வெளிநாட்டு லீவுகள் மற்றும் நாட்டிலிருந்து வெளிச் செல்வதற்கு உரியதான பணிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- விசேட ஆட்களுக்கு இராஜதந்திர உரிமப்பத்திரங்களை வழங்குதலும் இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்குரிய பணிகளும்.
- அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

நிறுவனம்	நிறைவேற்றப்பட்ட பணிகள்	முன்னேற்றம்
அதிமேதகைய ஜனாதிபதி அவர்கள் அமைச்சர் பதவி வகிக்கும் அமைச்சுக்களில் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்.		
பாதுகாப்பு அமைச்சு	அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தல் மற்றும் நானாவிதமானவை	20
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தல் மற்றும் நானாவிதமானவை	15
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சு	தாபன அலுவல்கள்	11
அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்.		
தேர்தல் ஆணைக்குழு	வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள்	22
	தாபனப் பணிகள்	18
	நானாவிதமானவை	21
அரசாங்க சேவை ஆணைக்குழு	வெளிநாடடு லீவு சம்பந்தமான பணிகள்	05
	பல்வேறுபட்ட கோரிக்கைகள்	12
தேசிய பொலிஸ் ஆணைக்குழு	தாபனப் பணிகள்	06
	பல்வேறுபட்ட கோரிக்கைகள்	06
கணக்காய்வு சேவை ஆணைக்குழு	தாபனப் பணிகள்	03
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு	தாபனப் பணிகள்	22
	பொதுமக்களின் முறைப்பாடுகள்	06
	வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள்	11
	கட்டிடமொன்றைக் கொள்வனவு செய்தல்	05
	ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்தல்	01
	நானாவிதமானவை	05
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு	வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள்	19
	நானாவிதமானவை	46
நிதி ஆணைக்குழு	தாபனப் பணிகள்	05
	நிதி ஆணைக்குழுவுக்குச் சட்டமொன்றைத் தயாரித்தல்	04
	வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள்	05
	நானாவிதமானவை	06
	2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்	

நிறுவனம்	நிறைவேற்றப்பட்ட பணிகள்	முன்னேற்றம்
எல்லை நிர்ணய ஆணைக்குழு	தாபனப் பணிகள்	07
	நானாவிதமானவை	05
தேசிய பெறுகை ஆணைக்குழு	தாபனப் பணிகள்	07
அதிமேதகைய ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுக்கள், ஜனாதிபதி செயலணிகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்		
அமைச்சரவை அலுவலகம்	வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள்	13
கணக்காய்வுத் திணைக்களம்	வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள்	89
	தாபனப் பணிகள்	36
நீதிச் சேவைகள் ஆணைக்குழு	தாபனப் பணிகள்	06
	ஆண்டறிக்கைகள்	06
தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணியகம்	நானாவிதமானவை	16
தேசிய கல்வி ஆணைக்குழு	தாபனப் பணிகள்	21
	சலுகை அடிப்படையில் வாகன உரிமப்பத்திரங்களை வழங்குதல்	02
தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழு	தாபனப் பணிகள்	20
	வெளிநாட்டு லீவுகள்	01
தகவல் அறியும் ஆணைக்குழு	தாபனப் பணிகள்	93
பாரிய முறைக்கேடுகள், ஊழல், அரச வளங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள் என்பவற்றை முறைகேடாக பயன்படுத்துதல் சம்பந்தமாக புலனாய்வு செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு	விலைப்பட்டியல்களைச் செலுத்தல்	06
	தாபனப் பணிகள்	16
அரசாங்க சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்ளல் பற்றிய ஜனாதிபதி செயலணி	தாபனப் பணிகள்	30
இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு	வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள்	78
	விசா வழங்குதலும் அங்கீகரித்தலும்	82
	தாபனப் பணிகள்	37
	நானாவித பணிகள்	72
இலங்கை மன்றம்	வெளிநாடு லீவு சம்பந்தமான பணிகள்	35
	தாபனப் பணிகள்	40

நிறுவனம்	நிறைவேற்றப்பட்ட பணிகள்	முன்னேற்றம்
நிருவாகத்துக்கான மேன்முறையீட்டு நியாயச் சபை	தாபனப் பணிகள்	12
	ஆண்டறிக்கைகள்	04
எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மன்றம்	தாபனப் பணிகள்	10
	பல்வேறுபட்ட கோரிக்கைகள்	04
நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்	தாபனப் பணிகள்	12
	நடைமுறைப்படுத்தப்படாத சிபாரிசுகள்	10
ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்	தாபனப் பணிகள்	10
இலங்கை வெகுசன ஊடகப் பயிற்சி நிறுவனம்	தாபனப் பணிகள்	29
தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ அரங்க மண்டபம்	பராமரிப்புப் பணிகள்	180
	மின்சார பட்டியலைத் தீர்த்து வைத்தல்	22
	நீர்ப் பட்டியலைத் தீர்த்து வைத்தல்	24
	தொலைபேசி மற்றும் இணையப் பட்டியலைத் தீர்த்து வைத்தல்	14
	பத்திரிகை பற்றுச் சீட்டுக்களைத் தீர்த்து வைத்தல்	14
	மண்டபத்தை ஒதுக்கிக் கொள்ளல்	120
	சுத்திகரிப்பு பணிகள் சம்பந்தமான கடிதங்கள்	16
	பெறுகைக் குழுக்களை நியமித்தல்	56
	சிறு கட்டுநிதி	51
	பல்வேறுபட்ட பணிகள்	151
	பதவியணியினர் சம்பந்தமான பிரச்சினைகள்	10
	கட்டிடப் பணிகள்	08
தாமரைக் கோபுரம்	பல்வேறுபட்ட பணிகள்	32
திறைசேரி பிணைமுறி வழங்கல் தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கையிடுவதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு	பல்வேறுபட்ட பணிகள்	24
மூலோபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவனம்	தாபனப் பணிகள்	46
சிரேஷ்ட அமைச்சர்கள் அலுவலகம்	தாபனப் பணிகள்	08
Indian Ocean Marine Affairs Co-Operation நிறுவனம்	தாபனப் பணிகள்	06

நிறுவனம்	நிறைவேற்றப்பட்ட பணிகள்	முன்னேற்றம்
முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்	தாபனப் பணிகள்	25
	பல்வேறுபட்ட பணிகள்	10
மிஹின் லங்கா ஆணைக்குழு	விலைப்பட்டியல்கள் தொடர்பான பணிகள்	39
	பல்வேறுபட்ட பணிகள்	87
இலங்கை கல்வி நிர்வாக, ஆசிரிய கல்வியியலாளர், அதிபர் மற்றும் ஆசிரியர் சேவைகளில் அரசியல் பழிவாங்கல் காரணமாக நியமனம், பதவியுயர்வுகள் வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து சிபார்சுகள் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழு	தாபனப் பணிகள்	17
வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஜனாதிபதி செயலணி	தாபனப் பணிகள்	19
பல்வேறுபட்ட பணிகள்		
பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகளை பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல்.		10
பாராளுமன்ற அலுவல்கள் சம்பந்தமான நானாவித பணிகள்		17
இராஜதந்திர உரிமப்பத்திரங்கள் தொடர்பான பணிகள்		12
அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள்		340

நிதி முகாமைத்துவப் பிரிவு

அறிமுகம்

ஜனாதிபதி செயலகத்திற்குரிய வேலை வழங்கல் சேவைகளுக்கான அனைத்து கொடுப்பனவு அலுவல்கள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவ அலுவல்களை மேற்கொள்ளல் போன்றன நிதி முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பணிகள்


- வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தலும் திறைசேரிக்குச் சமர்ப்பித்தலும்.
- மாதாந்தம் கட்டுநிதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- ஜனாதிபதி செயலகத்துக்கான சேவைகள் மற்றும் வழங்குகைகளுக்குரியதான கொடுப்பனவுகளைச் செய்தல்.
- உள்ளக மற்றும் வெளித் தரப்பினருக்கு காசோலைகளை வழங்குவது தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளல்.
- நாளாந்த நிதி மற்றும் காசோலை வரவுகளை வங்கியில் வைப்பிலிடல் மற்றும் சிறாப்பர் பிரிவு ஊடாக நாளாந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.
- அலுவலகத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் மாதாந்த, நாளாந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைத் தயாரித்தல்.
- மாதாந்தக் கணக்குப் பொழிப்புகள், வங்கி கணக்கிணக்கக் கூற்றுகள், கட்டுநிதி அறிக்கைகள், பதவியணியினர் அறிக்கைகளைத் தயாரித்து திறைசேரிக்குச் சமர்ப்பித்தல்.
- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தின்படி மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக நாடு முழுவதும் அமைந்துள்ள அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகளை விடுவித்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- அலுவலர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு, பிரயாணச் செலவுக் கொடுப்பனவுகளைச் செலுத்துவது தொடர்பான அலுவல்களை மேற்கொள்ளுதல்.
- ஜனாதிபதி அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்கள், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு எழுதுகருவிகள், அலுவலக உபகரணங்களை வழங்குதல், களஞ்சிய முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் அதற்கு ஏற்புடைய அனைத்து கொடுப்பனவு நடவடிக்கைகள்.
- ஜனாதிபதி அலுவலகத்தின் அலுவலர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல், கடன் தவணைகளை அறவிடுதல், வருடாந்த கடன் கணக்குகளைத் தயாரித்து கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல்.
- சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு, திறைசேரிக்கு மற்றும் ஏனைய தகவல் கோரும் நிறுவனங்களுக்கு நிதியறிக்கைகளைத் தயாரித்து மூலோபாயத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கு நிதித் தகவல்களை வழங்குதல்.
- ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் இயங்கும் சிறுநீரக நிதியம், பௌத்த மறுமலர்ச்சி நிதியம், அனர்த்த நிவாரண தேசிய நிதியம் ஆகிய நிதியங்களின் நிதி அலுவல்களை மேற்கொள்ளுதல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

2018 ஆம் ஆண்டின் நிதி முன்னேற்றம்

விபரம்	மொத்த ஒதுக்கீடு 2018	மொத்தச் செலவினம் 2018
மீண்டெழும் செலவினங்கள்	2,898,716,000.00	2,888,705,264.76
மூலதனச் செலவினங்கள்	7,989,209,000.00	5,708,596,886.80


2018 ஆம் ஆண்டின் நிதி முன்னேற்றம்



2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் மொத்தச் செலவினங்களை ஒப்பிடுதல்

	2016	2017	2018
மீண்டெழும் செலவினங்கள்	2,081	3,240	2,888
மூலதனச் செலவினங்கள்	4,779	4,677	5,708

கடந்த மூன்று வருடங்களின் மொத்தச் செலவின ஒப்பீடு



உள்ளக நிருவாகப் பிரிவு

அறிமுகம்

ஜனாதிபதி அலுவலகத்தின் சகல பிரிவுகளினதும் கூறுகளுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களை வினைத்திறனுடனும் உற்பத்தித்திறனுடனும் நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலக இடவசதியையும் பௌதிக வளங்களையும் சேவைகளையும் வழங்குவதை முகாமைத்துவம் செய்வது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணியாகும்.

இப்பணியினை மேற்கொள்வதற்காக உள்ளக நிர்வாகப் பிரிவின் கீழ் கீழுள்ள கூறுகள் செயற்படுகின்றன.

- உள்ளக செயற்பாட்டுக் கூறு
- பெறுகைக் கூறு
- பொறியியல் கூறு
- கட்டிடம் பராமரிப்புக் கூறு
- அஞ்சல் I கூறு
- அஞ்சல் II கூறு
- பிரதான தொலைபேசி பரிமாற்றக் கூறு
- வரவேற்புக் கூறு
- ஆவணக் காப்பகம்
- விமானப்படை களியாட்டக் கூறு
- விமானப்படை பூங்கா பராமரிப்புக் கூறு
- ஜனாதிபதி இல்லம் (கொழும்பு கோட்டை, கண்டி, அநுராதபுரம், நுவரெலியா, மஹியங்கனை, கதிர்காமம்)
- மொழிபெயர்ப்புக் கூறு
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் கூறு
- போக்குவரத்து கூறு

நோக்கங்கள்

- ஜனாதிபதி அலுவலகத்தில் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக அனைத்துப் பிரிவுகள் மற்றும் கூறுகளின் தேவைகளைத் தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்திற்குரிய அனைத்துப் பிரிவுகள், கூறுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை உற்பத்தித்திறனுடன், வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்வதற்குத் தேவையான இடவசதிகள், பௌதீக வளங்கள் மற்றும் சேவைகள் வழங்கு வதை முகாமைத்துவம் செய்தல்.

பிரதான பணிகள்

- ஜனாதிபதி அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் கூறுகளுக்கு ஏற்புடைய அலுவலக இடவசதிகள், உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- விசேட அரசாங்க வைபவங்களை ஒழுங்குபடுத்துதலும் அதற்கு ஏற்புடைய வசதிகளை வழங்குவதில் பிற உள்ளக மற்றும் வெளிவாரித் தரப்புகளுடன் இணைந்து பணியாற்றுதலும்.
- நீர்/மின்சாரம்/தொலைபேசி விலைப்பட்டியல்களைத் தாமதமின்றி செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வருடாந்த பொருட் கணக்கெடுப்புச் சபைகளை நியமித்தல், பொருட் கணக்கெடுப்பினை நடாத்துதல், பொருட் கணக்கெடுப்புச் சபை அறிக்கைகளுக்கு அமைவாக அப்புறப்படுத்த வேண்டிய பொருட்களை ஏலத்தில் விடல்/அழித்து உரியவாறு பொருட் பட்டியல் ஏட்டினைப் பேணிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மாவட்டத்திற்கு வெளியே இடம்பெறும் கூட்டங்கள்/வைபவங்களில் கலந்துகொள்ளும் அலுவலர்களுக்கு முற்பணங்களை வழங்குதல்/தீர்த்தல் மற்றும் அந்த அலுவலர்களுக்குத் தேவையான தங்குமிடங்களை வழங்கி அதற்கு ஏற்புடைய கொடுப்பனவுகளைச் செய்தல்.
- ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ அடையாள அட்டையை வழங்குதல்.
- பதவிநிலை அலுவலர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல்.
- சகல பிரிவுகளிலிருந்தும்/கூறுகளிலிருந்தும் ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படும் கோப்புகளை சேமித்து வைத்திருப்பதற்கு/பேணி வைத்திருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஜனாதிபதி அலுவலகத்தின் அஞ்சல் கூறினால் கிடைக்கும் மற்றும் வெளியே அனுப்பும் அஞ்சல்களை முறையாக, தாமதமின்றி, பொறுப்புடன் ஏற்புடைய பிரிவு/கூறுகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளுதல்.
- ஜனாதிபதி அலுவலகத்தின் அனைத்துக் கட்டிடங்களினதும் பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகளை கடற்படை/இராணுவ பொறியியல் பிரிவின் உதவியுடன் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளுதல்.
- வருடாந்த பெறுகை நடைமுறையைப் பின்பற்றி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் வழங்குபவர்களைப் பதிவு செய்தலும் பொருட்களுக்கான தருவித்தல் கட்டளைகளைச் செய்தலும் பொருட்களை வழங்குதலும்.
- பிரதான தொலைபேசிப் பரிமாற்றம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.
- ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் அனைத்து வைபவங்களுக்கும் உபசரிப்பு வசதிகளை வழங்குவதற்கு ஏற்புடையதாக அனைத்து உபசரிப்பு நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்தல் மற்றும் சேவைகளை வழங்குதல். இதன் போது விமானப் படை உபசரிப்புப் பிரிவின் உதவி பெற்றுக் கொள்ளப்படுகிறது.
- ஜனாதிபதி செயலகத்தினால் தயாரிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவைப் பத்திரங்கள், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மீதான அவதானிப்புரைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் அனுப்பப்படும் கடிதங்களையும் ஆவணங்களையும் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்தல்.
- அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் சார்பில் பிரமுகர்களின் மரணச் சடங்குகளில் அனுதாபத்தைத் தெரிவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயற்படுதல் மற்றும் ஏற்புடைய செலவினங்களைத் தீர்த்தல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

- **உள்ளக செயற்பாட்டுப் பிரிவு**

1. விசேட அரசாங்க வைபவங்களை / கூட்டங்களை ஒழுங்குபடுத்தலும் இயைபுள்ள வசதியளித் தலுக்கு தேவையான உள்ளக மற்றும் வெளிவாரித் தரப்புகளை கூட்டிணைத்தல் மூலமாக சிறப்புப் பணிகளைச் சாதித்தல்

➢ இராஜதந்திர வைபவங்கள்

இராஜதந்திர வைபவங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அதன் அனைத்துப் பணிகளுக்கும் தேவை யான வசதிகளை வழங்கல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் முக்கிய பணியாகும். இராஜதந்திர வைபவங்களின் போது கீழுள்ள விடயங்கள் தொடர்பாக அதிக கவனஞ் செலுத்தி ஏற்புடைய தரப்பினருக்கு வைபவத்தின் பொறுப்புக்களை ஒப்படைத்தல், அதற்கான வசதிகளை வழங்குதல், மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் முதனிலை கூட்டமொன்றை நடாத்துதல்.
- பின்பு ஜனாதிபதியின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் முப்படைகளுடனும் போக்குவரத்து பொலிசாருடனும் பிற தரப்புகளுடனும் கலந்துரையாடல்களைச் செய்தல்.
- அரச தொழிற்சாலை மூலம் விசேட மேடையைத் தயாரித்தலும் சிவப்பு கம்பளங்களை விரித்தலும் கௌரவ அணிவகுப்பு மேற்கொள்வதற்கும் பீரங்கி வெடி முழக்கம் மூலம் மரியாதை செலுத்துதலுக்குமான தயார் செய்தல்.
- நாடுகளின் தலைவர்களின் சந்திப்புகளுக்கும் இருதரப்புக் கலந்துரையாடல்கள் செய்யப்படு வதற்கும் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்வதற்கும் வசதிகள் வழங்குதல்.
- உபசரிப்புகளையும் அலங்காரங்களையும் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.
- விசேட சிற்றுண்டி விருந்தை / அரசாங்க சிற்றுண்டி விருந்தை வழங்குவதற்கான உள்ளக / வெளிவாரித் தரப்பினர்களை கூட்டிணைத்தல்.
- தேவைப்படும் போது பல்வேறு நிறுவனங்களை கூட்டிணைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

2018 ஆம் ஆண்டில் ஜனாபதிபதி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட இராஜதந்திர வைபவங்கள்

- **2018.01.23 - சிங்கப்பூர் பிரதமரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்**





- 2018.01.24 - இந்தோனேசிய ஜனாதிபதியின் இலங்கைகான உத்தியோகபூர்வ விஜயம்








- 2018.07.12 – தாய்லாந்து பிரதமரின் இலங்கைகான உத்தியோகபூர்வ விஜயம்







ஏனைய வைபவங்கள்

கீழுள்ள வைபவங்களின்போது பல்வேறு நிறுவனங்களிடையே அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகள், உபசரிப்பு, அலங்காரங்கள் மற்றும் ஏனைய வசதியளிப்புக்களையும் மேற்கொள்ளுதல்.

- 2018.01.01 ஆந் திகதி அஸ்கிரிய விஜயசுந்தராராமை விகாரையில் நடாத்தப்பட்ட ஜனாதிபதி சந்தஹம் யாத்ரா தர்ம போதனை நிகழ்வு
- 2018.01.02 ஆந் திகதி இலங்கை விமானப் படையினருக்கான இராப்போசன விருந்து.
- 2018.01.03 ஆந் திகதி களனி ரஜமஹா விகாரையில் நடாத்தப்பட்ட ஆசிர்வாத போதிப் பூஜை
- 2018.01.15 ஆந் திகதி ஜனாதிபதி பதவியணியினர் சந்திப்பு இராப்போசன விருந்து
- 2018.01.26, 2018.02.16, 2018.04.03, 2018.04.06 ஆந் திகதிகளில் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகப் பணிப்பாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்
- 2018.01.31 ஆந் திகதி ஹோமாகமை தூவ விகாரையில் நடாத்தப்பட்ட சந்தஹம் யாத்ரா தர்ம போதனை நிகழ்வு
- 2018.02.04 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஜப்பான் நாட்டின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு



- 2018.02.08 ஆந் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர விகாரையில் இடம்பெற்ற சங்கைக்குரிய பெல்லன்வில தேரர் அவர்களின் இறுதிச் சடங்கு நிகழ்வு
- 2018.02.13 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட சேர் டீ.பீ. ஜயதிலக்க அவர்களின் 150 ஆவது நினைவு தின வைபவம்.
- 2018.03.20 ஆந் திகதி நாரஹேன்பிட்டி ஷாலிக்கா மைதானத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பு.
- 2018.04.05 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு.
- 2018.04.06 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற உலக சுகாதார தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட இராப்போசன விருந்து.

- 2018.04.25 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற வீர வீராங்கனைகளைப் பாராட்டும் நிகழ்வு





- 2018.04.29 ஆந் திகதி முதல் 2018.05.02 ஆந் திகதி வரை தேசிய வெசாக் வாரம்.
- 2018.05.29 ஆந் திகதி சிறப்புச் சேவை விபூஷனப் பதக்கம் வழங்கும் வைபவம்
- 2018.05.21 ஆந் திகதி ஊவா மாகாண சபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கிராம சக்தி செயற்பாட்டுக் குழுக் கூட்டம்.
- 2018.05.28 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் நாயக அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை வெளியீடு மற்றும் இணையத்தளத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு.
- 2018.06.05 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட இரத்ததான முகாம்





- 2018.06.07 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட இப்தார் இராப்போசன விருந்து.
- 2018.06.13 ஆந் திகதி மதுரங்குளி, தலவில முகத்துவாரத்தில் இடம்பெற்ற கிராம சக்தி வடமேல் மாகாண செயற்பாட்டுக் குழுக் கூட்டம்.
- 2018.06.13 ஆந் திகதி புத்தளம் மஹவெவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற "கம ஹதன கமன" கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- 2018.06.25 ஆந் திகதி முதல் 06.30 ஆந் திகதி வரை பொசொன் வலயம்

- 2018.07.11 ஆந் திகதி கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கிராம சக்தி செயற்பாட்டுக் குழுக் கூட்டம்.



- 2018.07.11 ஆந் திகதி மறைந்த சீ.டப்.டப். கன்னங்கர அவர்களின் உருவச்சிலையைத் திரைநீக்கம் செய்யும் நிகழ்வு.
- 2018.07.25 ஆந் திகதி இரத்தினபுரி பெல்மடுல்லவில் இடம்பெற்ற கிராம சக்தி சப்ரகமுவ மாகாண செயற்பாட்டுக் குழுக் கூட்டம்.
- 2018.08.06 ஆந் திகதி BMICH இல் நடாத்தப்பட்ட 2030 நோக்கினை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு
- 2018.08.24 ஆந் திகதி பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிலைபேறான உரையாடல் தொடர்பாக கொழும்பு மாவட்ட கிராமிய தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு விழிப்புணர் வூட்டும் நிகழ்வு
- 2018.08.26 ஆந் திகதி தலதா மாளிகை எசல பெரஹராவின் குறிப்பாணையைக் கையளிக்கும் நிகழ்வு





- 2018.09.14 ஆந் திகதி மடு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மடுமாதா தேவாலயத்தைப் புனித பூமியாக மாற்றியமைத்தல் தொடர்பான கூட்டம்
- 2018.09.21 ஆந் திகதி ஜயஸ்ரீ மகா போதி அருகில் நடாத்தப்பட்ட ஆசிர்வாத நீரூற்றும் பூஜை
- 2018.09.21 ஆந் திகதி ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தில் நடாத்தப்பட்ட உலக கிரிக்கட் கிண்ணத்தை உத்தியோகபூர்வ இல்லத்திற்கு கொண்டு வரும் வைபவம்
- 2018.10.02 ஆந் திகதி மகாத்மா காந்தி அவர்களின் 150 ஆவது நினைவு தின நிகழ்வு
- 2018.11.05 ஆந் திகதி தீபாவளி இராப்போசன விருந்து
- 2018.12.17 ஆந் திகதி பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான இராப்போசன விருந்து
- 2018.12.19 ஆந் திகதி விஞ்ஞான மற்றும் தொழிட்ப வெற்றிகளுக்கான தேசிய விருது விழா

- 2018.12.20 நத்தார் பண்டிகை நிகழ்வு




➢ சான்றுப் பத்திரங்கள் வழங்கும் வைபவங்கள்

- **2018.01.23 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள்**
  - வியட்நாம்
  - சீனா
  - மியன்மார்
  - புதுடில்லி
  - கொரியா




- **2018.04.11 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள்**
  - மொரோக்கோ
  - பின்லாந்து
  - ஒஸ்ட்ரியா
  - தன்சானியா
  - ஐக்கிய அரபு இராச்சியம்




- **2018.05.25 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள்**
  - டொசெம்பியா
  - சவுதி அரேபியா
  - சுவீடன்
  - வெனிசியுலா
  - போலாந்து




- **2018.09.06 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள்**
  - சுவிற்சர்லாந்து
  - செம்பியா
  - மலேசியா




- **2018.11.01 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள்**
  - அமெரிக்கா
  - பிரான்ஸ்
  - ஜப்பான்
  - ஆப்கானிஸ்தான்




- **2018.12.03 ஆந் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையில் சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள்**
    - கயானா
    - இத்தாலி





- **இதற்கு மேலதிகமாக அலுவலகத்தில் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 185 கூட்டங்களுக்கு வசதிகளை வழங்கியுள்ளது.**

2. **நீர் / மின்சார செலவுச் சிட்டைக் கட்டணங்கள் உடனடியாகத் தீர்வு செய்யப்பட்டுள்ளன.**

இப்பிரிவு ஜனாதிபதி செயலகத்தின் கீழுள்ள 36 கட்டிடங்களுக்கான 2018 ஆம் ஆண்டிற்கான நீர் செலவு சிட்டைக் கட்டணத்தைத் தீர்வு செய்வதற்காக 32,332,511.03 ரூபாவும், மின்சார செலவுச் சிட்டை கட்டணங்களைத் தீர்வு செய்வதற்காக 131,590,401.33 ரூபாவும் செலவு செய்துள்ளது.

3. தொலைபேசிக் கட்டணங்கள் உடனடியாக தீர்வு செய்யப்பட்டுள்ளன.

பதவி நிலைத்தர உத்தியோகத்தர்கள் 128 பேரின் தொலைபேசி செலவுச் சிட்டைக் கட்டணங்களைத் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. வருடாந்த பொருட் கணக்கெடுப்புச் சபைகளை நியமித்தல், பொருட் கணக்கெடுப்பினை நடாத்துதல், பொருட் கணக்கெடுப்புச் சபையின் அறிக்கைகளுக்கு ஏற்ப அப்புறப்படுத்த வேண்டிய பொருட்களை ஏலத்தில் விற்றல்/ அழித்தல் 2018 ஆம் ஆண்டிலும் கீழுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது.

- பொருட் கணக்கெடுப்புச் சபைக்கு 41 அலுவலர்கள் நியமிக்கப்பட்டதுடன் அந்த அலுவலர்கள் இந்த அலுவலகத்தின் மற்றும் அதற்குரிய அனைத்துப் பிரிவுகள், கூறுகளுக்கு ஏற்புடைய அனைத்துக் கட்டிடங்களிலும் பொருட் கணக்கெடுப்பினை மேற்கொண்டனர். அந்தப் பணிகளின் இறுதியில் பொருட்களை ஏலத்தில் விடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- இது இந்த அலுவலகத்திற்கு 281,075/- ரூபா வருமானத்தை வழங்கியுள்ளது.

5. இந்த அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டு பல்வேறு பிரிவுகளுக்கும் இணைக்கப்பட்டுள்ள 399 உத்தியோகத்தர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

6. மாவட்டத்திற்கு வெளியே நடாத்தப்பட்ட கூட்டங்களில்/வைபவங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர் களுக்கு 2018 ஆம் ஆண்டில் 12,269,835.00 ரூபாவை முற்பணமாக வழங்குவதற்கு, தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

7. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் சார்பில் 142 பிரமுகர்களின் மரணச் சடங்குகளுக்கு அனுதாபச் செய்திகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **கட்டிடங்கள் பராமரிப்புப் பிரிவு**

  ❖ ஜனாதிபதி அலுவலகத்தின் சகல கட்டிடங்கள் பராமரிப்பிற்கும் 2018 ஆம் ஆண்டில் 136,484,950 /- ரூபாவைக் கொண்ட பணத்தொகை செலவழிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அலுவலகத்தின் கீழ் காணப்படும் கட்டிடங்கள் மற்றும் மாளிகைகளின் திருத்தம்/பராமரிப்புப் பணிகள் கடற்படையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

  ❖ ஜனாதிபதி அலுவலகத்தின் பழைய கட்டிடத்துடன் இணைந்தவாறு புதிய மூன்று மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு அது 2018.04.05 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் திருக்கரங்களினால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான செலவினம் அண்ணளவாக ரூ. 157,501,000/- ஆகும். இதனை நிர்மாணித்தமை மூலம் ஜனாதிபதி அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர் களுக்குத் தேவையான இடவசதிகளை விளைதிறனுடன் சிறப்பாக ஏற்படுத்திக் கொள்ள முடிந்த துடன் அதற்கு கடற்படையின் ஊழியப் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டமையினால் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஏற்படும் செலவைக் குறைத்து அரசுக்கு பாரிய பணத்தொகையை சேமிக்க முடிந்தது.





- **பெறுகைக் கூறு**

  ❖ 2018 ஆம் ஆண்டின் தொடர்பில் பெறுகை நடைமுறையின் கீழ் மதிப்பீடுகளைத் தயாரித்தலையும் வழங்குநர்களை பதிவு செய்தலையும் பொருட்களைத் தருவித்தலுக்கான கட்டளைகளை செய்தலையும் பொருட்களை வழங்குதலையும் இப்பிரிவு மேற்கொள்ளுகின்றது.

  ❖ இந்த அலுவலகத்திற்கான சிறியளவிலான பெறுகை நடவடிக்கைகளுக்காக 308,512,095.41 ரூபாவையும் பெரிய அளவிலான பெறுகைகளுக்கு 336,009,831.60 ரூபாவையும் செலவழித்து உரிய பெறுகை நடைமுறைக்கு அமைவாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

- **அஞ்சல் I ஆம், அஞ்சல் II ஆம் பிரிவுகள்**

  ❖ 2018 ஆம் ஆண்டில் அலுவலகத்தின் அஞ்சல் II ஆம் பிரிவில் கடிதங்கள் பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன் அவை கிரமமாகவும் உடனடியாகவும் இயைபுள்ள பிரிவுகளுக்கு உடனடியாக அனுப்பப்பட்டுள்ளன.

● பதிவுத் தபால்	9111
● சாதாரண அஞ்சல்	21239
● ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பு செயலகப்பிரிவு	57641
● கை மூலமாக	6998
● பெக்ஸ் (தொலைநகல்) மூலமாக	5355
● மொத்தம்	100344

- அலுவலகத்தின் அஞ்சல் 1 ஆம் பிரிவு 2018 ஆம் ஆண்டில் கடிதங்களை கிரமமாக அனுப்பியுள்ளதுடன் அது ஜனாதிபதி அலுவலகத்தின் கடிதங்களை தகுந்த முறையில் வெளியே அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது

- அங்கு சாதாரண தபாலில் மற்றும் பதிவுத் தபாலில் கடிதங்களை அனுப்புவதற்காக செலவு செய்த முத்திரைக்கான தொகை ரூபா. 4,700,000.00 ஆகும்.

● ஆவணக் காப்பகம்

- அலுவலகத்தின் பழைய ஆவணங்களையும் கோப்புகளையும் பராமரித்தலையும் பேணலையும் தகுதிவாய்ந்த முறையில் சேமித்து வைத்தலையும் செய்வதுடன் தேவைப்படும் போது அவற்றை வழங்கும் வேலையையும் செய்கின்றது.

● பிரதான தொலைபேசிப் பரிவர்த்தனை மற்றும் வரவேற்புப் பிரிவு

- அலுவலகத்திற்கு வருகை தரும் நபர்களை வரவேற்று அவர்களுக்கு தேவையான அறிவுறுத்துரைகளை வழங்குவதுடன் அவர்களை இயைபுள்ள பிரிவிற்கு அனுப்புகின்றது.

- அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகளுக்கு பணிவாகவும் உடனடி யாகவும் மறுமொழி பகர்ந்து வினைத்திறமையுள்ள சேவையை வழங்குகின்றது.

- அலுவலகத்தின் உள்ளக உத்தியோகத்தர்களுக்கிடையே தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு உதவி வழங்குகின்றது.

● விமானப் படையின் களியாட்டக்கூறு

- இந்த அலுவலகத்தில் இடம்பெறும் சகல வைபவங்களுக்கும் கூட்டங்களுக்கும் உரிய நேரத்தில் மிக ருசியானவைகளும் நம்பிக்கையான உணவுகள் மற்றும் பானங்கள் வழங்கும் சேவையைப் புரிந்து அதன் மூலம் அரசாங்கத்திற்கு பெரிய பணத் தொகைகளைச் சேமித்துள்ளது.

● விமானப் படை பூங்கா பராமரிப்புக்கூறு

- அரச தலைவர் ஒருவரின் அலுவலகத்திற்குப் பொருத்தமானவாறு ஜனாதிபதி அலுவலகத்தின் வெளிப்புற பூங்கா மற்றும் உட்புற சூழலை அழகியதாகவும் இனிமையானதாகவும் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

● மொழிபெயர்ப்புக் கூறு

- ஜனாதிபதி செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவைப் பத்திரங்கள், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மீதான அவதானிப்புரைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகள் ஆகியவற்றையும் பல்வேறு நிறுவனங்களினாலும் நபர்களினாலும் ஜனாதிபதி செயலகத்திற்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட ஏறத்தாழ 2127 கடிதங்களுக்கும் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்பை வினைத்திறமையுடன் செய்தல்.

போக்குவரத்து அலகு

01. பிரிவின் கடமைப் பொறுப்புக்கள்

- கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கு ஏற்புடைய பணிகளைச் செய்தல்.
- நாளாந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்.
- ஜனாதிபதி அலுவலகத்திற்குரிய வாகனங்களுக்கு ஏற்புடைய காப்புறுதி, வருமான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் புகைப் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- வாகன விபத்துக்களுக்கு காப்புறுதி இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- எரிபொருள் கட்டளைகளை வழங்குதல், எரிபொருள் கட்டளைகளுக்கான கொடுப்பனவுகளுக்கு அவற்றின் சரிநிலையைப் பரீட்சித்து வவுச்சர்களைத் தயாரித்து கணக்குப் பிரிவுக்குச் சமர்ப்பித்தல்.
- வாகனத் திருத்த வேலைகள் மற்றும் ஏற்புடைய சேவைகளுக்கான விலைப்பட்டியல்களைப் பரீட்சித்து கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பித்தல்.
- எரிபொருள் வழங்கலுக்கு ஏற்பட ஒட்டக் குறிப்புக்களைப் பரீட்சித்தல் மற்றும் எரிபொருள் செலவினத்தை முகாமைத்துவம் செய்து பேணிச் செல்லுதல்.
- வாகனங்கள் விபர ஏட்டினைப் பேணிச் செல்லுதல், கையேற்றல், கையளித்தல், அப்புறப்படுத்தல்.
- ஜனாதிபதி அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் புதிய சாரதிகளை வெற்றிடங்கள் காணப்படும் ஏற்புடைய பிரிவுகளுக்கு இணைப்புச் செய்தல்.
- சாரதிகள் மற்றும் ஆளணியினரின் திறமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிப் பாடநெறிகளை மனித வள அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து ஏற்பாடு செய்தல்.

02. ஆளணி.

- சில வருடங்களாக போக்குவரத்துப் பிரிவில் காணப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஜனாதிபதி செயலகத்திற்கு புதிய ஆளணி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரையும் இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் பெற்றுக்கொள்ள முடிந்ததுடன் சாரதி வெற்றிடங்களுக்கு புதிதாக 35 சாரதிகளை 2018 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ள முடிந்தது.
- அதேபோன்று அவ்வப்போது மனித வள அபிவிருத்திப் பிரிவு ஊடாக கோரப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் ஆளணி அங்கத்தவர்கள் சில பேரைப் பங்குபற்றச் செய்ததுடன், அந்த பயிற்சிகள் மூலம் அலுவலகக் கடமைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.
- புதிய சாரதிகளுக்கு மனித வள அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து ஒரு நாள் பயிற்சி செயலமர்வொன்றை ஏற்பாடு செய்து சாரதியின் கடமைகள் மற்றும் பாதுகாப்பான வாகனம் செலுத்துகை தொடர்பான விழிப்புணர்வூட்டலை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் பிரிவின் உற்பத்தித்திறன் அபிவிருத்திச் செயற்பாடாக சாரதிகள் உட்பட ஆளணியினர் அனைவரினதும் குழு உணர்வினை மேம்படுத்தும் நிகழ்ச்சியொன்றை 2018.06.15 ஆந் திகதி கோட்டை – அங்கம்பிட்டி மைதானத்தில் சிறப்பாக நடாத்தி முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

03. போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல்.

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிநடாத்தலின் கீழ் ஜனாதிபதி செயலகத்தினால் நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்படும் மாபெரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட சமூகக் கருத்திட்டங்களைத் துரிதமாக விரிவாகச் செயற்படுத்துவதற்கு ஈடுபடுத்தப்படும் அரச அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் வரையறுத்த கையிருப்பு வாகனங்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஜனாதிபதி செயலகம் சார்ந்த போக்குவரத்துக் கடமைகளை முறையாக, அதிக கொள்திறனுடன் மேற்கொள்வதற்கு போக்குவரத்து கையிருப்பினை விரிவுபடுத்தும் நோக்குடன் டொயோடா வகையைச் சேர்ந்த 10 வேன்கள், இஸுஸு வகையைச் சேர்ந்த 19 இரட்டை கெப் வண்டிகளை ஜனாதிபதி செயலகத்திற்குப் புதிதாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- அத்துடன் பல்வேறுபட்ட அரச நிறுவனங்களிடம் காணப்படும் பயன்படுத்தப்படாத எனினும் பாவனைக்கு உகந்த நல்ல நிலையில் காணப்படும் வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திற்குப் பெற்றுக்கொண்டு அவை ஒதுக்குக் கடமைகள் மற்றும் பதவிநிலை அலுவலர்களின் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

- அதற்கமைய 2018 ஆம் ஆண்டு நிறைவடையும்போது ஜனாதிபதி அலுவலகத்திடம் காணப்படும் வாகனங்களின் இருப்பு எண்ணிக்கையை 710 வரை அதிகரித்துக் கொள்ள முடிந்தது.

04. எரிபொருள் பாவனை.

- ஒப்பீட்டளவில் ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் எரிபொருளுக்கான செலவில் சற்று அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், 2018 ஆம் ஆண்டு ஆரம்பமான கிராமசக்தி மக்கள் இயக்கம் போன்ற பல்வேறுபட்ட புதிய கருத்திட்டங்களின் அதிகரிப்பு மற்றும் அந்தக் கருத்திட்டங்கள், ஏனைய போக்குவரத்துக் கடமைகளின் போக்குவரத்து வசதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வாகனக் கையிருப்பின் அதிகரிப்புக்கு ஏற்ப இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

வருடம்	எரிபொருள் செலவு (ரூ.)
2015	120,000,000.00
2016	140,000,000.00
2017	180,000,000.00
2018	246,000,000.00

- அதேபோன்று எரிபொருள் வினைத்திறனை அடிப்படையாகக் கொண்டு வெளி மாகாணங்களில் கடமைகளுக்காக எரிபொருள் வழங்கும்போது வண்டியின் பொதுவான எரிபொருள் சீராக்கத் திற்கு மேலும் 0.5 லீட்டர் எரிபொருள் சேர்த்து அந்தப் பெறுமதியின் அடிப்படையில் செலுத்து வதற்கு எதிர்பார்க்கும் தூரத்திற்குச் செலவாகும் எரிபொருள் அளவைக் கணக்கிட்டு எரிபொருள் வழங்குவதன் மூலம் எரிபொருளைத் திறம்படப் பயன்படுத்தவும் அதனூடாக எரிபொருள் செலவினை ஓரளவு குறைப்பதற்குமான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது.

05. வாகன விபத்துக்கள்

- வாகன விபத்துக்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக வாகன விபத்துக்களின் எண்ணிக்கையை முன்னைய வருடத்தை விட எண்ணிக்கை ரீதியில் மிகவும் குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது. கையிருப்பில் காணப்படும் அதிக வாகன எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு வாகன விபத்துச் சம்பவங்களை நோக்கும்போது 2018 ஆண்டில் நிகழ்ந்த விபத்துக்களின் எண்ணிக்கை 180 ஆக காணப்படுகிறது.

- அதேபோன்று திடீர் விபத்துக்கள் தொடர்பாக உரியவாறு விசாரணைகளை மேற்கொண்டு ஏற்புடைய விபத்து தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய சாரதிகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டிலும் வாகன விபத்துக்களுக்கு ஏற்புடைய இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள கீழுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டு	கிடைத்த தொகை (ரூ.)
2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிகழ்ந்த வாகன விபத்துக்களுக்காக 2018 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட இழப்பீடு	13,000,000.00
2018 ஆம் ஆண்டினுள் நிகழ்ந்த வாகன விபத்துக்களுக்காக 2018 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட இழப்பீடு	10,100,000.00

06. சாரதிகளின் நலனோம்புகை

- ஜனாதிபதி செயலகத்தில் இரவு நேரக் கடமைகள் மற்றும் நாளாந்த கடமைகளை ஆற்றும் சாரதிகளுக்கு மும்தாஸ் மஹல் கட்டிடத்தில் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் தற்போது பாதுகாப்பு பதவிநிலை பிரதானி அலுவலகம் அந்தக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள மையினால் சாரதிகளின் தங்குமிட வசதிக்காக பழைய மேல் மாகாண சபை காணப்பட்ட சிராவஸ்தி கட்டிடத்தொகுதியில் ஒரு பகுதி அமைக்கப்பட்டு வருகிறது.

• தகவல் தொழிநுட்பவியல் கூறு

அறிமுகம்


தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் கூறு, ஜனாதிபதி அலுவலகத்திலும் அதனுடன் இணைந்த சகல இடங்களிலும் கணினிகள், தொலைபேசிகள் மற்றும் பிற தொழிநுட்ப உபகரணங்களின் பராமரிப்பு, இணையத்தளங்கள், மென்பொருட்களின் வடிவமைப்பு மற்றும் வலையமைப்பாக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

பிரதான குறிக்கோள்களும் முன்னேற்றமும்

பின்வருவன ஜனாதிபதி அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல் கூறு 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ள ஆரம்பித்த பணிகளும் அடையப்பட்ட முன்னேற்றமும் ஆகும்.


01. ஜனாதிபதி அலுவலகத்தின் வலையமைப்பு முறைமையை ஒழுங்குறுத்தல்.

இப்பணிகளில் 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.




02. ஜனாதிபதி அலுவலகத்தின் வலையமைப்பு முறைமையின் முழுமையான பதிவு

இக்கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஜனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஜனாதிபதி செயலகத்திலுள்ள உட்கட்டமைப்பை தரமுயர்த்துதல்" மூலம் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப் பட்டிருந்தது. அதில் குறித்தொதுக்கப்பட்ட பணியில் 70% வீதம் 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.




03. ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்த அனைத்து இடங்களிலும் வலையமைப்பு முறைமையை முழுமையாகப் பதிதல்.

ஜனாதிபதி அலுவலகத்திலும் அதனுடன் இணைந்த அனைத்து இடங்களிலும் வலையமைப்பு முறை மையைப் பதியும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதில் தற்போது 50% நிறைவு செய்யப்பட்டுள்ளது.



04. Cloud Based File சேர்வர் இயந்திரமொன்றை ஜனாதிபதி அலுவலகத்தில் நிறுவுதல்.

இப்பணியில் 50% 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மீதியை 2019 ஆம் ஆண்டின் முதலிரண்டு காலாண்டுகளில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.



05. ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை நவீனமயப்படுத்தலும் அதன் தரவுகளை இற்றைவரையானதாக்குதலும்.


ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை மூன்று மொழிகளிலும் இற்றைப்படுத்தும் பணிகளை 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

06. பொது மக்கள் தொடர்பாடல் பிரிவின் “Tell President” கருத் திட்டத்தை இற்றை வரையானதாக்குதல்.

பொது மக்கள் தொடர்பாடல் பிரிவின் “Tell President” கருத் திட்டத்தை இற்றை வரையானதாக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தொலைபேசி மூலம் மேற்கொள்ளப் படும் விசாரிப்புகள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் முறைமையைப் பேணிச் செல்வதற்கான தொழிநுட்ப உதவி எப்போதும் வழங்கப்படுகிறது.

07. ஜனாதிபதி அலுவலகத்திற்கு இணைய அக முறைமையொன்றை நிறுவுதல்.

இப்பணியில் 40% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.




08. ஜனாதிபதி அலுவலகத்திலும் அதனுடன் இணைந்த இடங்களிலும் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்தல்


தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பக் கூறு மூலம் ஜனாதிபதி அலுவலகத்திலும் அதனுடன் இணைந்த இடங்களிலும் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பணிகள் மீதான அடிப்படை பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் (E-mail) முகவரிகளின் பயன்படுத்துகை மற்றும் Advance Microsoft Excel பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்பின்பு Microsoft Word, Microsoft PowerPoint, Microsoft Excel மற்றும் இணையத்தளப் பாவனை, அடிப்படை கணினிப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த எதிர்பார்க்கப்படுகிறது.

09. ஜனாதிபதி அலுவலகத்தின் பழைய கட்டிடத்திற்கும் புதிய கட்டிடத்திற்கும் முழுமையான **Wi-Fi** வலயமொன்றை நிறுவுதல்
இப்பணியில் 70% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



10. ஜனாதிபதி அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் அனைத்து தகவல்களையும் உள்ளடக்குவதற்காக புதிய கணனி அமைப்பொன்றை உருவாக்குதல்.
இப்பணிகளில் 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



11. போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக்கு இணையத்தளமொன்றை உருவாக்குதல்.

போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக்கு எமது கூறினால் ஏலவே இணையத்தளமொன்று (http://www.drugfree.gov.lk) உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதன் இற்றைப்படுத்தல்களும் மேற் கொள்ளப்படுகின்றன.

12. போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக்கு மென்பொருள் அமைப்பொன்றை உருவாக்குதல்.

போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக்கு Drug Prevention எனும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதன் இற்றைப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

13. நிலைபேறான பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்தவாறு அந்த நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை இற்றைப்படுத்தல் மற்றும் அவற்றின் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இணையத்தளமொன்றை உருவாக்குதல்.


நிலைபேறான பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்தவாறு அந்த நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை இற்றைப்படுத்தல் மற்றும் அவற்றின் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இணையத்தளமொன்றை உருவாக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

14. புதிய தோற்றத்துடன் கூடிய மனித வள முகாமைத்துவ அமைப்பொன்றை உருவாக்குதல்.

இப்பணியில் 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.


15. புதிய தோற்றத்துடன் கூடிய மனித வள முகாமைத்துவ அமைப்பொன்றை உருவாக்குதல்.

இப்பணியில் 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



16. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கலந்துரையாடல்கள், கூட்டங்கள், கடிதங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் உள்ளடக்குதல் மற்றும் முகாமை செய்வதற்காக மென்பொருள் அமைப்பொன்றை உருவாக்குதல்.

இப்பணியில் 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



17. அஞ்சல் பிரிவுக்கு கடித முகாமைத்துவ அமைப்பொன்றை உருவாக்குதல்.

இப்பணி தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது.

18. ஜனாதிபதி அலுவலகத்தில் காணப்படும் சிற்றுண்டியக மண்டபம், மாநாட்டு மண்டபங்கள் உள்ளிட்ட மண்டபங்களை ஒதுக்கிக் கொள்வதற்கு மென்பொருள் அமைப்பொன்றை உருவாக்குதல்.

19. ஜனாதிபதி அலுவலகத்தின் களஞ்சியத்திற்கு சொத்து முகாமைத்துவ மென்பொருள் அமைப்பொன்றை உருவாக்குதல்.

மேலே 17, 18 இல் குறிப்பிடப்பட்ட பணிகளை வெளி நிறுவனமொன்றினால் மேற்கொள்ள தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சட்டப் பிரிவு

அறிமுகம்



இப்பிரிவு 2015 மார்ச் மாதம் 18 ஆந் திகதி நிறுவப்பட்டதுடன், ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடைய அனைத்து சட்ட அலுவல்களையும் வழிநடாத்துதல் மற்றும் அறிவுறுத்தல் வழங்குதல் என்பன இதனால் மேற்கொள்ளப்படுகின்றன.

பொறுப்பினைக் கொண்டுள்ள பிரதான துறைகள்;

1. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் மேலதிக செயலாளருக்கு (சட்டம்) அனுப்பி வைக்கப்படும் சர்வதேச ஒப்பந்தங்களின் வரைவுகள், சட்டங்களின் வரைவுகள், பொதுமக்களின் மனக்குறைகள் அல்லது சட்டத் துறைக்கு ஏற்புடைய ஆவணங்கள் மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்படும் சட்டரீதியான சிக்கல்களை ஆராய்ந்து ஏற்புடைய அறிக்கைகளைப் பெற்று அவதானிப்புரைகளைச் சமர்ப்பித்தல்.

2. ஜனாதிபதியின் செயலாளரினால் சட்டத் துறைக்கு ஏற்புடையதாக அனுப்பி வைக்கப்படும் அனைத்துக் கடிதங்கள் மற்றும் சிக்கல்களையும் ஆராய்ந்து தேவையானவாறு அவதானிப்புரைகள் மற்றும் விதப்புரைகளை வழங்குதல், அது தொடர்பான ஏற்புடைய ஆவணங்களைத் தயாரித்தல்.

3. புலன் விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஜனாதிபதி புலன் விசாரணை ஆணைக்குழுக்கள்

    i. மேற்போந்த விடயத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி புலன் விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் இடைக்கால அறிக்கைகளை ஆய்வு செய்வது அவற்றை சுருக்கமாக்குதலும் தேவையானவாறு அது பற்றி ஜனாதிபதி அவர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளருக்கும் அறிவுறுத்தலும்.

    ii. இந்த ஆவணக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்படும் இறுதி அறிக்கைகளை அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அல்லது ஜனாதிபதியின் செயலாளரின் உத்தரவுக்கு அமைவாக ஆய்வு செய்து, ஜனாதிபதி அவர்களின் அனுமதியுடன் மேற்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவற்றை இயைபுள்ள நிறுவனங்களுக்கு அனுப்புதல்.

    iii. மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுக்களினால் விதந்துரைக்கப்படும் ஏனைய விதப்புரைகளை ஏற்புடைய நிறுவனங்களுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுப்புதல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

    iv. அதிமேதகு ஜனாதிபதி அல்லது ஜனாதிபதியின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படும் ஆவணங்கள் சட்டப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும்போது அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

4. நீதி முறைச் செயற்பாடுகள்

i. அதிமேதகு ஜனாதிபதி எதிர்வாதியாக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் வழக்குகளிலும் ஜனாதிபதியின் செயலாளர் அல்லது ஜனாதிபதியின் பதவியினர்கள் தொடர்புபடுத்தப்பட்டு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் உள்ள விடயங்களை கூட்டிணைத்தல் மற்றும் தேவையானவாறு பிரிதிநிதித்துவப்படுத்தல்.

ii. நீதிமன்றத்தில் கட்டுக்காப்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான ஆதனங்களை விடுவிக்குமாறு கோருகின்ற சமர்ப்பிப்புகளை கூட்டிணைத்தலும் சமர்ப்பித்தலும்.

iii. அதிமேதகு ஜனாதிபதி அல்லது ஜனாதிபதியின் செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அந்தந்த அமைச்சுக்களில் காணப்படும் குழுக்களில் ஜனாதிபதி அலுவலகம் சார்பாக கலந்துகொள்ளுதல்.

iv. சட்டமா அதிபதி திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

5. ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் பிற குழுக்கள்

i. இயைபுள்ள குழு அறிக்கைகளை ஆய்வு செய்து அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளருக்கும் சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

ii. அதிமேதகு ஜனாதிபதி அல்லது ஜனாதிபதியின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படும் ஆவணங்கள் சட்டப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும்போது அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

6. ஜனாதிபதி அலுவலகத்தின் தினசரி உத்தியோகபூர்வ கடமைகளின் சட்ட விடயங்கள் மீது தேவையான ஆலோசனையை வழங்குதல்.

i. உள்ளக நிர்வாகப் பிரிவு

- ஜனாதிபதி அலுவலகத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் கட்டிடங்களுக்கு ஏற்புடைய ஒப்பந்தங்களை ஆய்வு செய்து அவதானங்கள் மற்றும் விதப்புரைகளைச் சமர்ப்பித்தல்.
- அரசாங்க நிறுவனங்களிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவது தொடர்பிலான சட்ட ஆவணங்களை ஆய்வு செய்தலும் அவதானிப்புரைகளையும் சிபாரிசுகளையும் செய்தலும்.

a. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல் பிரிவு (ICT)

- இப்பிரிவினால் தொழிநுட்பச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் மற்றும் வரைவுகளை ஆய்வு செய்து அவதானங்கள் மற்றும் விதப்புரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

b. போக்குவரத்துப் பிரிவு

- ஜனாதிபதி அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் வாகனங்களுக்கு ஏற்புடைய ஒப்பந்தங்கள் மற்றும் வரைவுகளை ஆய்வு செய்து அவதானங்கள் மற்றும் விதப்புரைகளைச் சமர்ப்பித்தல்.
- திடீர் விபத்துக்களின் போது நீதிமன்றத்திற்கு பொறுப்பேற்கப்படும் வாகனங்களை நீதிமன்றத்திலிருந்து விடுவித்தல்.

ii. மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

- ஜனாதிபதி அலுவலகத்தின் பணியாட்கள் கடன்களை மீளவும் செலுத்தாத சந்தர்ப்பங்களில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

iii. தாபன ஒருங்கிணைப்புப் பிரிவு

- சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பிலான வரைவுகளும் சட்ட மூலங்களும் பற்றி ஆய்வு செய்தல், அவதானிப்புரைகளையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல்.
- ஜனாதிபதி செயலகத்தின் கீழுள்ள தாபனங்களின் வரைவுகள் மற்றும் சட்டமூலங்கள் பற்றிய ஆய்வும் அவற்றின் மீதான அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகள் சமர்ப்பித்தலும்.

iv. அரசியலமைப்புப் பிரிவு

- இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் செய்யப்படும் நியமனங்கள் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான விடயங்கள் மீது ஆலோசனைகளை வழங்குதல்.
- ஜனாதிபதி அவர்களின் மீது அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைப் பொறுப்புக்களின் கீழ் செய்யப்படும் நியமனங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

v. கொள்கை மற்றும் அமைச்சுக்கள் மட்டத்திலான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு

- தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கைகளை ஆய்வு செய்து அவற்றின் மீதான அவதானிப்புரைகளையும் சிபாரிசுகளையும் செய்தல்.

vi. பதவியினர்கள் பிரதானி பிரிவு

- தேசிய ரீதியில் முக்கியத்துவமுடைய எழுச்சி பெறும் பொலொன்னறுவை கருத்திட்டம் தொடர்பிலான அரசாங்க நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு சட்ட உதவி வழங்குதல்.

vii. பிரத்தியேகச் செயலாளர் பிரிவு

- ஜனாதிபதி அவர்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் வழங்கப்பட்ட பொதுமக்களின் மனக் குறைகள் தொடர்பாக தேவையான சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் சட்ட ஆலோசனை வழங்குதல்.
- ஜனாதிபதி அவர்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் வழங்கப்படும் சட்டச் சிக்கல்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

viii. விசேட கருத்திட்டப் பிரிவு

- இப்பிரிவினால் பல்வேறுபட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தனியார் துறையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளைப் பற்றி ஆய்வு செய்தலும் அவற்றின் மீது அவதானிப்புரைகளும் சிபாரிசுகளும் சமர்ப்பிக்கப்படுகின்றன.
- **SAPP** நிறுவனத்தின் உடன்படிக்கைகளை ஆய்வு செய்து அவதானிப்புரைகளை வழங்குதல்.
- **SMART Sri Lanka** நிறுவனத்தின் உடன்படிக்கைகளை ஆய்வு செய்து அவதானிப்புரைகளை வழங்குதல்.

7. அமைச்சரவை உபகுழுவுக்கு தொடர்புபடுத்தப்பட்ட சட்ட வரைவுகள் மீது தீர்மானம் எடுப்பதற்கு ஜனாதிபதி அலுவலகம் சார்பாக பங்களிப்புச் செய்தல்.

8. அமைச்சரவையினால் ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பப்படும் புதிய சட்டவாக்கங்கள் மற்றும் சட்டங்கள் மீது தேவைப்படுமிடத்து சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

9. சட்டமா அதிபதி மற்றும் சட்டமா அதிபதி திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

10. நீதிபதிகளின் சிக்கல்கள் மற்றும் அவை தொடர்பான பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

11. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் முன்மொழிவின் பிரகாரம் ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களினதும் பிரச்சினைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக அவரின் கவனத்தை ஈர்ப்பதற்கான முறைமையொன்றைத் தயாரித்தல்.

12. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்குதல் மற்றும் தகவல் கோரிக்கையை நிராகரிக்கும் சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரிகளினால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலருக்கு மேன்முறையீடுகள் மேற்கொள்ளப்படும்போது அந்த மேன்முறையீடு களுக்கான பதில்களைத் தயாரித்தல்.

13. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் கீழ் பெயர் குறிப்பிடப்படும் அலுவலர் சார்பாக ஆணைக்குழுவில் முன்னிலையாதல்.

14. மரண தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டரீதியான நிலைமையை சீர்செய்து அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

15. இலங்கை மத்திய வங்கியின் திறைசேறி பிணைமுறி தொடர்பாக புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள புலனாய்வு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பாராட்டினை வழங்குவதற்குத் தேவையான விதப்புரைகள் மற்றும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.

16. இலஞ்சம் பெறுவது தொடர்பாக சிறப்பாக மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புக்களைப் பாராட்டும் வகையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பாராட்டினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.


17. போதைப்பொருட்கள் ஒழிப்பு மற்றும் குற்றங்களை ஒழிப்பதற்கு முக்கிய பங்களிப்பினை வழங்கிய விசேட அதிரடிப் படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பாராட்டினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.


18. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டில் அரசியல-மைப்பின் 33 ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி சட்டத்தரணிகள் 25 பேரை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

19. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களினால் கையளிக்கப்பட்டுள்ள ஆவணங்களைத் தேவையான சந்தர்ப்பங்களில் சட்டத்தை வலுப்பெறச் செய்யும் நிறுவனங்களுக்கு விடுவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2018 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட வெற்றிகள்

- பாரிய ஊழல், மோசடி, அரச சொத்துக்கள், வரப்பிரசாதங்கள், அதிகாரம் மற்றும் உரிமைகளை முறை யற்ற விதத்தில் உபயோகித்தல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையைக் கையளித்தல்.






- பாரிய ஊழல், மோசடி, அரச சொத்துக்கள், வரப்பிரசாதங்கள், அதிகாரம் மற்றும் உரிமைகளை முறையற்ற விதத்தில் உபயோகித்தல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 2018.01.02 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், அதன் பிரதியொன்று கௌரவ சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.



- திறைசேரி பிணைமுறி வழங்கல் தொடர்பில் கண்டறிவதற்கும் விசாரணை செய்வதற்கும் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை.



- திறைசேரி பிணைமுறி வழங்கல் தொடர்பில் கண்டறிவதற்கும் விசாரணை செய்வதற்கும் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை2017 டிசம்பர் 30 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், அந்த அறிக்கையின் விதப்புரைகளை அமுல்படுத்துவதற்காக சட்டத்தை வலுப்பெறச் செய்யும் நிறுவனங்களான சட்டமா அதிபதி,இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு முறைப்படி 2018.01.02 மற்றும் 2018.02.10 ஆந் திகதிகளில் மேலதிக நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டதுடன் அதன் பிரதியொன்று கௌரவ சபநாயகரிடம் கையளிக்கப்பட்டது.



- அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அரசியலமைப்பின் 33(2) (உ) உப உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2018.12.11 ஆந் திகதி ஜனாதிபதி சட்டத்தரணிகள் 25 பேர் நியமிக்கப்பட்டதுடன், அவர்கள் 2019.01.18 ஆந் திகதி கௌரவ பிரதம நீதியரசரின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் முன்மொழிவின் பிரகாரம் ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களினதும் பிரச்சினைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக அவரின் கவனத்தை ஈர்ப்பதற்கான முறைமையொன்றைத் தயாரிப்பது தொடர்பில் இது வரை சிறப்பாகத் தீர்வுகள் வழங்கப்பட்ட சிக்கல்கள்:

- அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த அலுவலர்களினால் முன்பு போன்றே தமது தற்போதைய அடிப்படைச் சம்பளத்தின் 1/3 கொடுப்பனவைச் செலுத்துமாறு மேற்கொள்ளப் பட்ட கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரின் கவனம் ஈர்க்கப்பட்ட பின்பு முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்ட அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 1/3 கொடுப்பனவை 2016.01.01 ஆந் திகதி முதல் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

- பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவில் பணியாற்றும் சமந்த பிரியதர்ஷன அவர்கள் தனது தாயாரின் முழங்கால் பொருத்துகை சத்திரசிகிச்சையினை காத்திருப்போர் பட்டியலுக்கு அப்பால் மேற்கொள்ள ஆவண செய்யுமாறு வேண்டிய கோரிக்கை தொடர்பாக கண்டி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு செயலாளர் அவர்கள் தொலைபேசி மூலம் உரையாடி தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

- கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவில் பணியாற்றும் டி.எம்.டி. காஞ்சன அவர்கள் தனது உறவினர் ஒருவருக்கு உரித்தான Q 15301 ஆம் இலக்க துளை 12 வகையிலான துப்பாக்கியை அவருக்கு உரித்தாக்கித் தருமாறு மேற்கொண்ட கோரிக்கை பொருத்தமான நடவடிக்கைக்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சு தற்போது பதிலளித்துள்ளது.

- கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவில் பணியாற்றும் டி.டி.ஐ.எஸ். சபரமாது அவர்கள் தனது வீட்டுக்குச் செல்லும் வீதியை கொங்ரீட் இட்டு புனரமைத்துத் தருமாறு வேண்டிய கோரிக்கை 2018.03.21 ஆந் திகதி வத்தளை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்பு எதிர்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது அவரது பிரேரணை உள்ளடக்கப்படும் என் பிரதேச செயலாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

- பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவில் சாரதியாகப் பணியாற்றும் ஆர்.ஏ. அமில நுவன் பண்டார அவர்கள் ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்களை வீதியில் நிறுத்தி வைப்பதற்கு விசேட அனுமதிப் பத்திரமொன்றை வழங்குமாறு முன்வைத்த கோரிக்கை பணிப்பாளருக்கு (போக்குவரத்து) அனுப்பி வைக்கப்பட்டு அப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

- போக்குவரத்துப் பிரிவில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றும் யூ.ஜீ. அசல திலுமின் ரணதுங்க அவர்கள் தனது அவசர கண் சத்திர சிகிச்சையொன்றுக்கு நிதிவுதவி வழங்குமாறு கோரி முன்வைத்த கோரிக்கை ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்பு அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் ரூ. 100,000/- நிதியுதவி வழங்கப்பட்டது.

- பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவில் சாரதியாகப் பணியாற்றும் ஆர்.ஏ. அமில நுவன் பண்டார அவர்கள் மரணம் நிகழும்போது செலுத்தும் பணத்தொகையை ரூ. 50,000/- வரை அதிகரிக்குமாறு சமர்ப்பித்த முன்மொழிவு நலன்புரிச் சங்கத்திற்கு முன்வைக்கப்பட்ட பின்பு அத்தொகையை ரூ. 40,000/- வரை அதிகரிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


- ஊடகப் பிரிவில் பணியாற்றும் எச்.எம். அஸங்க சாமிந்த என்பவர் தனது பிள்ளையின் சுகயீனம் தொடர்பாக முன்வைத்த கோரிக்கைக்கு ஏற்ப 10 இலட்சம் ரூபாயை கருணைக் கொடுப்பனவாக வழங்கி அந்தப் பணத்திலிருந்து கிடைக்கும் வட்டிப் பணத்தை ஏற்புடைய சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியுமானவாறு நடவடிக்கை மேற்கொள்ள அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்.

- ஜனாதிபதி செயலகத்தின் அலுவலர்களின் கோரிக்கைக்கு அமைவாக நலன்புரி சிற்றுண்டிச்சாலை யொன்றை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

- 2017 ஆம் ஆண்டிலிருந்து முன் எடுத்துச் செல்லப்பட்ட வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை - 71
- 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை - 28
- **வழக்கு கோப்புகளின் மொத்த எண்ணிக்கை - 99**

வழக்கு கோப்புகளின் மொத்த எண்ணிக்கை	2018 ஆம் ஆண்டில் நிறைவடைந்த வழக்கு கோப்புகளின் எண்ணிக்கை	தொடர்ந்தும் விசாரிக்கப்படும் நிலையில் காணப்படும் வழக்கு கோப்புகளின் எண்ணிக்கை
99	24	75



நிலைபேறான அபிவிருத்திப் பிரிவு

உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம்

அறிமுகம்

ஜனாதிபதி செயலகத்தின் நிலைபேறான அபிவிருத்திப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்படும் பிரதான நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாக உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் காணப்படுகிறது. உணவு உற்பத்தி மற்றும் உணவு இறக்குமதி தொடர்பாக கவனமாக நோக்கும்போது சில காலங்களாக நாம் இறக்குமதி செய்யும் பெரும்பாலான உணவுப் பொருள் வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்து தன்னிறைவு மட்டத்தை அடைய முடியும் என்பது தெளிவாகியுள்ளது. அதேபோன்று உணவுகளுக்காக செலவாகும் பாரிய வெளிநாட்டுச் செலவினை நாட்டினுள் மீதப்படுத்திக் கொள்ளவும், ஆரோக்கியமான நாட்டவர் மற்றும் பலமான பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது. உணவுப் பாதுகாப்பு மற்றும் தன்னிறைவினை நாட்டினுள் ஏற்படுத்தல், தரமான உணவு நுகர்வுக்குப் பழக்கப்படுத்தல் மூலம் நே-ாயற்ற ஆரோக்கியமான நாட்டவரை உருவாக்குதல் உள்ளிட்ட பல நோக்கங்களை முன்னிலைப்படுத்தி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

ஜனாதிபதி அலுவலகத்தின் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டப் பிரிவுடன் இணைந்து பிரதான நிரல் அமைச்சுக்களான கமத்தொழில், கடற்றொழில், சூழல் மற்றும் மகாவலி, கிராமியப் பொருளாதார மற்றும் தோட்டக் கைத்தொழில் ஆகிய அமைச்சுக்கள் மற்றும் அனைத்து மாகாண சபைகள் உட்பட தனியார் துறை, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய உதவுகின்றன. 2018 ஆம் ஆண்டின் செயல் திட்டத்திற்கு அமைவாக கீழுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அவை கீழே விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்திற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 316 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு பல்வேறுபட்ட அரச நிறுவனங்களில் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு விடுவிக்கப்பட்டதுடன் அவற்றில் 246 மில்லியன் ரூபாய் முழுமையாக செலவிடப்பட்டுள்ளது.

1. சிறு நீர்ப்பாசனங்களைப் புனரமைக்கும் துரித நிகழ்ச்சித்திட்டம்.
2. பண்ணைகள் இயந்திரமயமாக்கல், புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தல்
3. மாற்று எரிசக்தி முறைமைகளை விவசாயத் துறையில் பிரபல்யப்படுத்தல் மற்றும் வணிக கமத்தொழில்
4. மேலதிக உணவுப் பயிர்களைப் பயிரிடுவதை ஊக்குவித்தல்
5. இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்
6. வித்துக்களை உற்பத்தி செய்யும் கருத்திட்டங்கள் (சிவப்பு வெங்காயம், மிளகாய், சோளம், விதை நெல்)
7. பாற் பண்ணையாளர் தொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டம்
8. தரிசு வயல்களில் பயிரிடல் மற்றும் பயிரிடப்படாத காணிகளில் பயிரிடல்
9. இளம் விவசாயத் தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம்
10. விசேட கருத்திட்டப் பணிப்பாளர்களின் கருத்திட்டப் பிரேரணைகள்
11. ஏனைய ஒதுக்கீடுகள் (2017 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாதவை)
12. ஊடக மற்றும் பிரச்சார நடவடிக்கைகள்

தொலைநோக்கு

சிறப்பான உணவு இறைமையுடன் கூடிய நாட்டினை உருவாக்குதல்

செயற்பணி

நவீன, உகந்த அபிவிருத்தி மூலோபாயங்களை அறிமுகப்படுவத்துவதன் மூலம் மனித மற்றும் சூழலின் சிறந்த இருப்பினை நிலைபேறாக அடைய முடியுமான உணவு உற்பத்தி முறைமையொன்றை இலங்கையில் நிறுவுதல்

பிரதான நோக்கங்கள்

I. நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு நிலைமையை உறுதிப்படுத்தல்

II. உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமான உணவுப் பயிர்கள் ஊக்குவிப்பு

III. விவசாயச் சூழல் வலயங்களை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல்

IV. சிறு நீர்பாசனங்கள் (எல்லங்கா அமைப்புக்கள்) புனரமைப்பு

V. நஞ்சுப் பொருட்கள் கொண்ட உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகள் பாவனையைக் குறைத்தல்

VI. சூழல் நட்பான முறைமைகளைப் பின்பற்றி தரமான உணவுப் பொருட்களை சாதாரணமாக கிடைக்கச் செய்தல்.

VII. தரமான உள்ளீடுகள், புதிய தொழிநுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி தயாரிப்பு உற்பத்தித் திறனை உச்சப்படுத்தி செலவினத்தைக் குறைத்தல்.

VIII. விவசாய உற்பத்திகளை வினைத்திறனுடன் விநியோகித்தல் மற்றும் மேலதிக உணவு இருப்புக்களை முறையாக முகாமை செய்தல்.

IX. விவசாயத்துறையில் இளவயதினரின் சக்தியினை இணைத்துக் கொள்ளுதல்.

X. இளம் பாற் பண்ணைத் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.

XI. உள்நாட்டு உணவு உற்பத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து பலப்படுத்தல்.

01. சிறு நீர்ப்பாசன (எல்லங்கா அமைப்புக்கள்) புனரமைப்பு துரித நிகழ்ச்சித்திட்டம்.

இக்கருத்திட்டம் ஜனாதிபதி அலுவலகத்தின் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டலுடன் அனைத்து மாகாண சபைகள், இராணுவம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட விடயத்துடன் தொடர்புடைய ஏற்புடைய பிரிவுகளைத் தொடர்புபடுத்தி முன்னுரிமை அடிப்படையில் நாடு முழுவதும் கிராமிய மட்டத்தில் இனங்காணப்படும் குளங்கள்/அணைகள் மற்றும் அவற்றுக்கு ஏற்புடைய ஏனைய நீர்ப்பாசன அம்சங்கள் துரிதமாக புனரமைக்கப்படுகின்றன. இக்கருத்திட்டத்தின் புனரமைப்புப் பணிகள் இராணுவத்தினரிடம் காணப்படும் உள்ளீடுகள் மற்றும் ஒவ்வொரு மாகாண சபை அல்லது மாவட்டச் செயலகங்கள் ஊடாக வழங்கப்படும் உள்ளீடுகளைப் பயன்படுத்தி ஏற்புடைய விடயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் தொழிநுட்ப வழிகாட்டலுடன் இலங்கை இராணுவத்தின் பொறியியல் படையணி யால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கருத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.09.21 ஆந் திகதி அநுராதபுரம் நபகடஸ்திகிலிய வாவி

அருகே இடம்பெற்றது. அநுராதபுர மாவட்டத்தில் தற்போது 05 குளங்கள் புனரமைக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன், அதிக மழைவீழ்ச்சி காரணமாக உரிய இலக்குகளை அடைய முடியவில்லை. இதனூடாக 528 பயனாளிகளுக்குப் பயன் கிடைப்பதுடன், இந்த குளத்தின் புனரமைப்பின் பின்பு தற்போது தரிசாகக் காணப்படும் 696 வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது.

பிரதேச செயலகப் பிரிவு	கிராம அலுவலர் பிரிவு	எல்லங்கா அமைப்புக்குரிய குளங்கள்
மஹவிலச்சிய	துனுமடலவா	நபகடஸ்திகிலிய வாவி, துனுமடலாவ வாவி, இஹல மில்ல கொல்லேவ வாவி, மஹ மில்ல கொல்லேவ வாவி, கலஹிட்டியாவ வாவி





02. பண்ணைகளை இயந்திரமயமாக்கல், புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் இளம் விவசாயத் தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம்.

இக்கருத்திட்டம் பொலொன்னறுவை, புத்தளம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டச் செயலகங்கள் ஊடாக வடமத்திய, மத்திய, வடமேல், தென், ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இதன் கீழ் 50% பங்களிப்புடன் வயல் கிணறுகள், தெளிப்பு நீர் அமைப்புக்கள், நீர்ப் பம்பிகள், பாதுகாப்புப் பொருட்கள், நவீன தொழிநுட்ப அறிவு என்பவற்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முன்னோடித் திட்டமாக புத்தளம் மாவட்டம் உள்ளடங்கும் வகையில் இளம் விவசாயத் தொழில் முயற்சியாளர்கள் 100 பேரைத் தெரிவு செய்து வலுவூட்டுதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு சலுகை வட்டி வீதக் கடன் முறைமையின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கி ஊடாக கடன் வழங்கப்படுவதுடன், இதற்குச் செலவாகும் வட்டி உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒதுக்கீடுகள் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்படுகிறது. முழு நாடும் உள்ளடங்கும் வகையில் இளம் விவசாயத் தொழில் முயற்சியாளர்கள் 10,000 பேரை உருவாக்குவது இதன் இலக்காகும். நவீன தொழிநுட்பத்தின் அடிப்படையில் ஏற்றுமதிச் சந்தைக்காக உற்பத்தி செய்யும் மத்திய வகுப்பு விவசாய சமூகமொன்றை நாட்டில் உருவாக்குவது இதன் நோக்கமாகும்.





03. மாற்று எரிசக்தி முறைமைகளை விவசாயத் துறையில் பிரபல்யப்படுத்தல் மற்றும் வணிக விவசாயத் துறை.

இக்கருத்திட்டம் பொலொன்னறுவை, புத்தளம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டச் செயலகங்கள் ஊடாக வடமத்திய, மத்திய, வடமேல், தென், ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இதன் கீழ் சூரிய சக்தி, காற்றுச் சக்தி, உயிர் வாயுப் பாவனை போன்ற எரிசக்தி மூலங்கள் விவசாயத் துறையில் பயன்படுத்தப்படுவதை ஊக்குவித்தல். விவசாயத் துறைக்கு ஏற்புடைய மாற்று எரிசக்திப் பாவனையை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வு மற்றும் தொழிநுட்பப் பயிற்சிகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டன.





04. மேலதிக உணவுப் பயிர்கள் ஊக்குவிப்பு

தற்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படக்கூடிய எனினும் இந்த நாட்டில் பயிரிட முடியுமான மேலதிக உணவுப் பயிர்களை ஊக்குவிப்பதற்கு விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அதன் கீழ் கீழுள்ள மாவட்டங்களில் விவசாயிகளுக்கு மேலதிக உணவுப் பயிர் விதைகளை இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தொடர் இலக்கம்	மாவட்டம்	பயிர்	விவசாயிகளின் எண்ணிக்கை	ஏக்கர் அளவு
1	கிளிநொச்சி	மிளகாய்	115	220
		சிவப்பு வெங்காயம்	160	180
		பயறுப் பயிர்	250	65
		முருங்கை	60	8
2	குருநாகல்	வேர்க்கடலை	650	433
		பயறுப் பயிர்	80	53
		கௌப்பி	78	67.3
		மிளகாய் பயிருக்கான பொலித்தீன் கிண்ணங்கள்	3000	
3	பொலொன்னறுவை	சிவப்பு வெங்காயம்	200	350
		சோளம்	228	320
4	முல்லைத்தீவு	உளுந்து	250	300
		சோளம்	200	380
		சிவப்பு வெங்காய குமிழ் உற்பத்தி	40	65
5	யாழ்ப்பாணம்	மிளகாய் விதைகள்	121	250
6	வவுனியா	பயறுப் பயிர்	152	38.5
7	நுவரெலியா	உருளைக் கிழங்கு	500	125
மொத்தம்			**6084**	**2854.8**





05. பாற் பண்ணைத் தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம்.

இக்கருத்திட்டம் மத்திய, ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு ஒதுக்கீடுகள் வழங்கி கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. மத்திய மாகாணத்தில் 100 பேரைக் கொண்ட முன்னோடித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதும் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கையைப் 10,000 வரை விரிவுபடுத்துவது இக்கருத்திட்டத்தின் இலக்காகும். இதன் கீழ் தொழிநுட்பம், பயிற்சி போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன. (பேராதெனிய பல்கலைக்கழகத்தின் உதவியையும் பெற்றுக் கொள்ளுதல்) தொழில் முயற்சியாளருக்குத் தேவையான அடிப்படை மூலதனத் தேவைகளுக்கான சலுகைக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையருக்குத் தேவையான பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகனை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல், பால் கைத்தொழிலை இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு அறிமுகப்படுத்தல், பால் உற்பத்தி மூலம் இடைநிலை உற்பத்திகள் மற்றும் விற்பனை தொடர்பான தொழில்களை உருவாக்குதல், உணவுப் பயிர்ப் பயிற்செய்கைக்குப் பயன்படுத்த முடியாத பயன்படுத்தப்படாத காணிகளை கால்நடை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்துவதன் மூலம் தேசிய உற்பத்திக்குப் பங்களிக்கச் செய்தல் என்பன இக்கருத்திட்டத்தின் நோக்கங்களாகும். நாட்டிற்குத் தேவையான சேதனப் பசளை உற்பத்தியை பிரதேச மட்டத்தில் நிறுவுதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

06. இயற்கை விவசாய ஊக்குவிப்பு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்.

இக்கருத்திட்டம் விஞ்ஞானம், தொழிநுட்பம், ஆராய்ச்சி, திறன் விருத்தி தொழிற் பயிற்சி அமைச்சு, தெற்கு வடமேல் மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கு ஒதுக்கீடுகள் வழங்கி செயற்படுத்தப்பட்டுள்ளது. விஞ்ஞானம், தொழிநுட்பம், திறன் விருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு மற்றம் களனி பல்கலைக்கழகம் என்பன இணைந்து ரிட்ஜவே சீமாட்டியர் சிறுவர் வைத்தியசாலையில் தெரிவு செய்யப்பட்ட 100 பிள்ளைகளின் ஈரலில் எண்ணெய் தேங்குதல் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக நஞ்சுப் பொருட்கள் இல்லாத உணவுப் பாவனை தொடர்பாக விழிப்புணர்வூட்டல், தரக் கட்டுப்பாடு, நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவித்தல், நஞ்சுப் பொருட்கள் அற்ற உணவு விற்பனை மற்றும் பிரச்சாரம் என்பன இக்ருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.





07. விதைகள் உற்பத்திக் கருத்திட்டங்கள்

தற்போது இலங்கையில் உள்நாட்டு விதை உற்பத்தி பலவீனமான மட்டத்தில் காணப்படுவதால், அதனை ஊக்குவிப்பதற்கு விசேட ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அதன் கீழ் வடமத்திய, மத்திய, வடமேல், ஊவா, வடக்கு, கிழக்கு மாகாண சபைகளை மையப்படுத்தி சிவப்பு வெங்காயம், சோளம், விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

08. தரிசாக காணப்படும் வயல் நிலங்களில் பயிரிடல் மற்றும் பயிரிடப்படாத காணிகளில் பயிரிடல்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2018 ஆம் ஆண்டு தேசிய உணவு உற்பத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் PS/SD/NFPU/08/18 ஆம் இலக்க 2018.09.05 ஆந் திகதிய ஜனாதிபதி சுற்றறிக்கை ஊடாக அனைத்து அரச நிறுவனங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றறிக்கை மூலம் எதிர்வரும் 2018/19 பெரும்போகத்தில் தரிசாகக் காணப்படும் வயல்களில் மீண்டும் பயிர் செய்து, பயிரிட முடியுமான அனைத்துக் காணிகளையும் பயிர்செய்கையில் ஈடுபடுத்தி உணவு உற்பத்தியை புதிய உத்வேகத்துடன் ஆரம்பிக்கும் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கு அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், விவசாய சமூகம், தனியார் துறையின் பங்களிப்புடன் தரிசாக காணப்படும் வயல்களில் பயிரிடல் மற்றும் பயிரிட முடியுமான அனைத்துக் காணிகளிலும் பயிரிடல் வேலைத்திட்டமொன்றைத் துரிதமாகச் செயற்படுத்துவதற்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதகாத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2018.09.30 ஆந் திகதிக்கு முன்பாக தரிசாக காணப்படும் வயல் காணிகள் மற்றும் பயிரிட முடியுமான அனைத்துக் காணிகளையும் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துமாறு காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் விசேடமாக சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கயை கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஊடாக 2018/19 பெரும் போகத்தில் தரிசு வயல் பயிற்செய்கையில் பெற்றுக்கொண்ட முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	மாவட்டம்	தரிசான வயல்களின் மொத்த ஏக்கர் அளவு	நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள தரிசான வயல்களின் அளவு (ஏக்கர்)	ஏனைய பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள தரிசான வயல்களின் அளவு (ஏக்கர்)
1	கொழும்பு	4,445	560	89
2	கம்பஹா	4,194	940	77
3	களுத்துறை	10,364	1089	64
4	காலி	8,191	1213	0
5	மாத்தறை	8,568	1681	596
6	அம்பாந்தோட்டை	1,219	119	0
7	பதுளை	1,014	49	19
8	மொனறாகலை	183	52	4
9	இரத்தினபுரி	7,273	1751	165
10	கேகாலை	3,164	805	416
11	குருநாகல்	1,960	408	45
12	புத்தளம்	2,621	1440	300
13	கண்டி	6,265	164	378
14	மாத்தளை	215	78	65
15	நுவரெலியா	346	390	0
16	அநுராதபுரம்	0	0	0

தொடர் இலக்கம்	மாவட்டம்	தரிசான வயல்களின் மொத்த ஏக்கர் அளவு	நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள தரிசான வயல்களின் அளவு (ஏக்கர்)	ஏனைய பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள தரிசான வயல்களின் அளவு (ஏக்கர்)
17	பொலொன்னறுவை	0	0	0
18	திருகோணமலை	4,157	410	0
19	வவுனியா	7,323	1183	0
20	முல்லைத்தீவு	3,739	1464	80
21	கிளிநொச்சி	0	0	0
22	மன்னார்	5,564	896	4
23	அம்பாறை	968	1	0
24	மட்டக்களப்பு	4,941	409	0
25	யாழ்ப்பாணம்	6,447	243	0
	மொத்தம்	**93,159.50**	**15,345**	**2,302.00**





09. இளம் விவசாயத் தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம்

முன்னோடித் திட்டமாக புத்தளம் மாவட்டம் உள்ளடங்கும் வகையில் இளம் தொழில் முயற்சியாளர்கள் 100 பேரைத் தெரிவு செய்து வலுவூட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு சலுகை வட்டி வீதக் கடன் முறைமையின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கி ஊடாக கடன் வழங்கப்படுவதுடன், இதற்குச் செலவாகும் வட்டி உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒதுக்கீடுகள் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்படுகிறது. முழு நாடும் உள்ளடங்கும் வகையில் இளம் விவசாயத் தொழில் முயற்சியாளர்கள் 10,000 பேரை உருவாக்குவது இதன் இலக்காகும். நவீன தொழிநுட்பத்தின் அடிப்படையில் ஏற்றுமதிச் சந்தைக்காக உற்பத்தி செய்யும் மத்திய வகுப்பு விவசாய சமூகமொன்றை நாட்டில் உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

10. விசேட கருத்திட்டப் பணிப்பாளர்களின் கருத்திட்டப் பிரேரணைகள்

புத்தளம் மற்றும் காலி மாவட்டங்களில் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன் வறட்சியான காலத்தில் பயிர்செய்கைக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள நீர் மோட்டார்களை வழங்குதல், வீட்டுத் தோட்டப் பயிர்கள் ஊக்குவிப்பு, சேதனப் பசளை உற்பத்தி, பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல் போன்றன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11. ஏனைய ஒதுக்கீடுகள் (2017 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாதவை)

கருத்திட்டம்	செயற்படுத்திய நிறுவனம்
2017 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்ட 08 வாவிகளின் விலைப்பட்டியல் மீளளிப்பு	குருநாகல் மாவட்டம்
2017 ஆம் ஆண்டில் இபனெல்ல பயற்றுப் பயிர் விலைப் பட்டியல் மீளளிப்பு	அம்பாந்தோட்டை மாவட்டம்
இயற்கை விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்ட ஊக்குவிப்பு	காலி மாவட்டம்
உளுந்து மற்றும் சோளப் பயிரின் விலைப்பட்டியல் மீளளிப்பு	முல்லைத்தீவு மாவட்டம்

12. ஊடகப் பிரச்சார நடவடிக்கைகள்


வானொலி நேரடி நிகழ்ச்சிகள், பத்திரிகை விளம்பரங்கள், கையேடுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் (சிங்களம்/தமிழ்) உட்பட அச்சுக் கட்டணங்கள், சிறு நீர்ப்பாசன புனரமைப்பு துரித நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வின் (வாவிப் புரட்சி) பெரபொலிக் ஹட் மற்றும் அனைத்து பிரச்சாரப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

பயனாளிகள் தொடர்பான விபரங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	**பயனர்களின் எண்ணிக்கை**	**ஏக்கர் அளவு**
மாவட்டக் கருத்திட்டங்கள் (சோலா பெனல், நீர்ப் பம்பி, மற்றும் கருவித் தொகுதிகள், துளி மற்றும் நுண் நீர் வழங்கல் அமைப்புகள், பயிற்சி நிகழ்ச்சிகள் வழங்கல்)	6536	-
மேலதிக உணவுப் பயிர்கள் (மிளகாய், சிவப்பு வெங்காயம், பயறு, வேர்க்கடலை, கௌப்பி, சோளம், உளுந்து, மிளகாய் விதைகள், உருளைக் கிழங்கு)	6084	2855
சிறு நீர்ப்பாசன புனரமைப்புக் கருத்திட்டம் (அனுராதபுரம் மாவட்டம்)	528	696
மாகாண சபைக் கருத்திட்டங்கள் (துளி மற்றும் நுண் நீர் வழங்கல் அமைப்புக்கள், மின்சார வேலிகள், பூச்சித் தடுப்பு வலைகள், ஒளித் தெறிப்புப் பொலித்தீன், நன்னீர் மீன் வளர்ப்பு)	1822	-
தரிசான வயல்களில் பயிரிடல்	366	303
மொத்தம்	15,336	3854

ஒதுக்கீடுகளின் சுருக்கம்

ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு (ரூ.மில்)	கருத்திட்டம்	செலவினம் (ரூ. மில்)
500	சிறு நீர்ப்பாசன புனரமைப்பு துரித நிகழ்ச்சித்திட்டம்	70.27
	பண்ணை இயந்திரமயமாக்கல், புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தல்	34.35
	மாற்று எரிசக்தி முறைமைகளை விவசாயத் துறையில் பிரபல்யப்படுத்தல் மற்றும் வணிக விவசாயத்துறை	33.63
	மேலதிக உணவுப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு	35.78
	இயற்கை விவசாயம் ஊக்குவிப்பு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்	18.54
	விதை உற்பத்திக் கருத்திட்டங்கள் (சிவப்பு வெங்காயம், மிளகாய், சோளம், விதை நெல்)	4.48
	பாற் பண்ணை தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம்	**1.46**
	தரிசான வயல்களில் பயிர்ச்செய்கை மற்றும் பயிரிடப்படாத காணிகளில் பயிர்ச்செய்கை	**2.68**
	இளம் விவசாயத் தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சித்திட்டம்	**0.22**
	விசேட கருத்திட்டப் பணிப்பாளர்களின் கருத்திட்டப் பிரேரணைகள்	**0.61**
	ஏனைய ஒதுக்கீடுகள் (2017 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாதவை)	**21.75**
	ஊடகப் பிரச்சார நடவடிக்கைகள்	**22.4**
	மொத்தம்	**246**
மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை **15,336** 08 மாகாண சபைகள் மற்றும் 18 மாவட்டச் செயலகங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.		



சிறியளவிலான விவசாயத்துறை வணிக கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டம்

அறிமுகம்

இலக்கான பயனாளிகள்	:	கிராமிய சிறிய காணி உரிமையாளர்கள் 57,500 பேர்
கருத்திட்டம் செயற்படுத்தப்படும் காலப்பகுதி	:	ஆறு வருடங்கள் (06) 2017-2023
கருத்திட்டத்தின் மொத்த வரவுசெலவு	:	105.3 மில்லியன் அமெ.டொலர்
2019 ஜனவரி 20 ஆந் திகதியில் நிதி முன்னேற்றம்	:	26% (கடப்பாடுகள் உட்பட)
பயனாளிகளின் ஈடுபடுத்தல்கள்	:	18% (மொத்த கருத்திட்டத்துடன் ஒப்பிடுகையில்)
கடன் செல்லுபடியாகும் திகதி	:	2017 ஜூன் 26
கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி	:	2017 ஜூன் 26
கருத்திட்டம் நிறைவு பெறும் திகதி	:	2023 ஜூன் 30
இடைநிலை மீளாய்வுத் திகதி	:	2020 நடுப் பகுதி

- சிறியளவிலான விவசாயத்துறை வணிக கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டம் “கிராமசக்தி” மக்கள் இயக்கத்துடன் இணைந்தவாறு ஜனாதிபதி செயலகத்தின் நிலைபேறான அபிவிருத்திப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

- உற்பத்தி அடிப்படையில் குறைவான ஒழுங்கமைப்பு மட்டம் மற்றும் பெறுமானச் சங்கிலித் தரப்பினர்கள், விசேடமாக சிறிய காணி உரிமையுடைய உற்பத்தியாளர்கள் மற்றும் சந்தைக் கிடையே ஒப்பீட்டளவில் பலவீனமான தொடர்பு மூலம் இலங்கை விவசாயத் துறையின் பிரதான பண்புகள் வெளிப்படுகின்றன. அதனால் முன்னைய நிகழ்ச்சித்திட்டம் மூலம் (தேசிய விவசாய வணிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - NADeP) மூலம் கற்றுக்கொண்ட பாடங்களுடன் சந்தைக்கான அணுகலை உருவாக்கும் நோக்கத்துடன் பெறுமானச் சங்கிலித் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- வணிக ரீதியாக சார்ந்துள்ள அரச தனியார் உற்பத்தி கூட்டுப்பங்காண்மை ஊடாக இலங்கையின் சிறிய காணி உரிமையாளர்களின் வறுமையைக் குறைத்தல் மற்றும் போட்டித்தன்மைக்குப் பங்களிப்பு செய்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும். சிறிய காணி உரிமையாளர்கள், தனியார் துறை விவசாய வணிகங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் தொடர்புபடும் வகையில் சிறியளவிலான விவசாய வணிக கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டம் வசதிகளை வழங்கும்போது சந்தை சார்ந்த அரச தனியார் கூட்டுப் பங்காண்மை மாதிரியில் ஏனைய அனைத்தும் பலம் பெறுகின்றன.

- இந்த நிகழ்ச்சித்திட்டம் மூன்று கூறுகளைக் கொண்டது.

  1. வணிகரீதியான கூட்டுப் பங்காண்மைக்கான அணுகல்: இந்தக் கூறு இரண்டு உப கூறுகளைக் கொண்டது. – சந்தை செயற்பாட்டு மாதிரியொன்றில் அரச தனியார் கூட்டுப் பங்காண்மையை நிறுவுதல் மற்றும் உற்பத்திக் குழுக்களை நிறுவனரீதியாகப் பலப்படுத்தலும் அவர்களது கொள்திறனை விருத்தி செய்தலும். இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 51.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

  2. கிராமிய நிதிக்கான அணுகல்: இந்தக் கூறும் இரண்டு உப கூறுகளைக் கொண்டது. - அரச தனியார் கூட்டுப் பங்காண்மைக்கு நிதி வசதியளித்தல் மற்றும் நிதிச் சேவைப் பிரிவுகளுக்காக நிறுவனரீதியான பலப்படுத்தல். இந்தக் கூறினைச் செயற்படுத்துவதற்கு 43.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

  3. நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை தொடர்பான உரையாடல் - நிகழ்ச்சித்திட்டத்தின் உபகூறுகள் மற்றும் அறிவு முகாமைத்துவம் மற்றும் கொள்கை தொடர்பான உரையாடல் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதற்காக இந்தக் கூறில் 5.8 மில்லியன் டொலர் அளவில் செலவழிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

- இந்த நிகழ்ச்சித்திட்டம் நாடு முழுவதும் செயற்படுத்தப்படுவதுடன், குறைந்த வருமானமுடைய மாவட்டங்கள் மற்றும் உற்பத்திகளை முன்னுரிமைப்படுத்திய பிரதேசங்கள் தொடர்பாக அதிக கவனம் ஈர்க்கப்படும். நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்திற்கு அமைவாக நிறுவப்பட்டுள்ள அளவுருக்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் 57,500 வறுமையான கிராமிய வீடுகள் (230,000 நபர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்) இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் இலக்காகக் கொள்ளப்படுகின்றன.

- நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதி வளங்கள் அரச தனியார் கூட்டுப் பங்காண்மை பெறுமானச் சங்கிலியினுள் பல்வேறுபட்ட நிதி மூலங்களிலிருந்து கிடைக்கப் பெறும். அடுத்த ஆறு வருடங்கள் முழுவதும் சிறியளவிலான வணிக விவசாய கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தேச பணிகளுக்கு மீண்டெழும் செலவுகள் உட்பட (கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு) மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினம் 105 அமெரிக்க மில்லியன் டொலர்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் (17 பில்லியன் இலங்கை ரூபாய்) அதற்கு விவசாயத்துறை அபிவிருத்திக்கான தேசிய நிதியம் (IFAD) இரண்டு சந்தர்ப்பங்களில் 54.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பங்களிப்பை வழங்குவதுடன், அரசின் பங்களிப்பு 19.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். அரச பங்களிப்பானது (19.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) 0.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வரி மற்றும் காப்பு வரிகள், முன்னைய (IFAD) கடன் வசதியின் 18.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற மீள்வருவனவற்றைக் கொண்டுள்ளது. பங்கேற்பு நிதி நிறுவனங்களின் பங்களிப்பு 9.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். தனியார் துறையினால் 17 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவில் நிதியிடப்படுவதுடன், பயனாளிகளின் பங்களிப்பு 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

அட்டவணை அ 1: நிதி மூலங்கள்

மூலம்	**தொகை (அமெ.டொ)**
IFAD கடன்	54.4
அரசு (NADeP மீள்வருவன 18.5 + முன்னரே தீர்மானிக்கப்பட்ட வரி மற்றும் காப்பு வரி 0.7)	19.3
பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (PFIs)	9.8
தனியார் துறை	17
பயனாளிகள்	4.5
மொத்தம்	**105**

ஆ. 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான ஒட்டுமொத்த முன்னேற்றம்

ஆ.1 கிடைத்த ஆர்வ வெளிப்பாடுகள் மற்றும் அரச தனியார் கூட்டுப் பங்காண்மையாக மாற்றுதல்

விபரம்	**தனியார் துறை**	**கமத்தொழில் அமைப்புக்கள்**	**மகாவலி அதிகாரசபை**	**மொத்தம்**
கிடைத்த ஆர்வ வெளிப்பாடுகளின் எண்ணிக்கை	49	68	1	118
ஆரம்ப மதிப்பீடு	32	33	1	66
நிராகரிக்கப்பட்ட ஆர்வ வெளிப்பாடுகள்	8*	33*	-	41
தயாரிக்கப்படும் நிலையிலுள்ள ஒப்பந்தங்கள்	3	2	-	5
கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள்	6	0	-	6

*சி.வி.வ.கூ.ப. நிகழ்ச்சித்திட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இயைபின்மை அல்லது நடைமுறைத் தன்மை இல்லாமை அல்லது இது வரை பதில் கிடைக்காமை.

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் ஆர்வ வெளிப்பாடுகள் 118 அளவில் கிடைக்கப் பெற்றதுடன், அவற்றில் 68 கமத்தொழில் அமைப்புக்களினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், தனியார் துறை 49 ஆர்வ வெளிப்பாடுகளை அனுப்பியிருந்தது. எவ்வாறாயினும் அவ்வாறு கிடைத்த ஆர்வ வெளிப்பாடுகளில் கமத்தொழில் அமைப்புக்கள் அனுப்பியிருந்த 33 உம், தனியார் துறையின் 8 உம் சி.வி.வ.கூ.ப. நிகழ்ச்சித்திட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாமை காரணமாக முதலாவது மதிப்பீட்டுச் செயற்பாட்டில் நிராகரிக்கப்பட்டன. எனினும் ஏற்புடைய விண்ணப்பதாரிகளின் திருத்தப்பட்ட ஆர்வ வெளிப்பாடுகள் கிடைத்த பின்பு அவற்றில் சில மீண்டும் கருத்திற் கொள்ளப்படும். அதற்கமைய 06 இனை மாத்திரம் கருத்திட்டப் பிரேரணை மட்டம் வரை முன் கொண்டு செல்ல முடிந்ததுடன், அவை தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அரச தனியார் கூட்டுப் பங்காண்மைச் செயன்முறையின் நிலைமை ஆ 1 அட்டவணை மூலம் மேலும் விளக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

ஆ. 2 கைச்சாத்திடப்பட்ட அரச தனியார் கூட்டுப் பங்காண்மை

தற்போது சி.வி.வ.கூ.ப. நிகழ்ச்சித்திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 6 பெறுமானச் சங்கிலிகளுக்காக 4 அரச தனியார் கூட்டுப் பங்காண்மைகளுடன் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ளது.

1. கல்லோயா பிளான்டேஷனுடன் கரும்புப் பயிர்செய்கைக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
2. காகீல்ஸ் சிலோன் நிறுவனத்துடன் பால் பசுக்கள் அபிவிருத்திக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
3. கெனல் கோனர் பிளவர் காடின் உடன் மலர் பயிர்செய்கைக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
4. களுபோவிடியான பிளான்டேஷனுடன் தேயிலைப் பயிர்செய்கைக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
5. செரி டேரி தனியார் நிறுவனத்துடன் பால் பசுக்கள் அபிவிருத்திக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
6. தாசினி டிஹைட்ரேட் சென்டருடன் முருங்கை இலை செயலாக்கத்திற்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பட்டியலில் முதல் நான்கு கருத்திட்டங்களும் அவற்றின் உற்பத்திகளை ஆரம்பித்துள்ளன. விசேடமாக மலர் பயிர்செய்கை கருத்திட்டம் 97 கொட்டாரங்களை அமைத்துள்ளதுடன் உள்ளீட்டுப் பொருட்கள் விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

- அரச தனியார் கூட்டுப் பங்காண்மைமலர் பயிர்செய்கையில் பூர்த்தி செய்யப்பட்ட செவன கொட்டாரம்
- காகீல்ஸ் பால் பசுக்கள் அரச தனியார் கூட்டுப் பங்காண்மையின் கீழ் நிறைவு செய்யப்பட்ட மாட்டுக் கொட்டகைகள்
- சைலேஜ் தயாரிப்பது தொடர்பாக விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல் - காகீல்ஸ் பால் பசுக்கள் அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
- முருங்கைப் பயிர்செய்கையை ஆரம்பித்தல்

ஆ. 3 மதிப்பீட்டிற்கு அண்மித்த நிலையிலுள்ள, 2019 இல் கைச்சாத்திடப்படவுள்ள கருத்திட்டங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கருத்திடப் பிரேரணைகளின் மதிப்பீடு இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் அரச தனியார் கூட்டுப் பங்காண்மை ஒப்பந்தங்களைச் கைச்சாத்திடுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. வரையறுக்கப்பட்ட இன்டகிரேடட் அக்ரோ நிறுவனத்துடன் வீட்டு கோழி வளர்ப்புக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
2. அருண தேயிலைக் கம்பனியுடன் தேயிலைப் பயிர்செய்கைக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
3. இலவங்கப்பட்டைப் பயிர் நலன்புரிச் சங்கத்துடன் இலவங்கப்பட்டைப் பயிர்செய்கைக்காக அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
4. லங்கா பரிசர தயாரிப்பு நிறுவனத்துடன் பனை வெல்ல உற்பத்திக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
5. கெப்பெடிபொல டேரி நிறுவனத்துடன் பால் சார்ந்த உற்பத்திகளுக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
6. ரன்தில நிறுவனத்துடன் சிறியளவிலான தக்காளிப் பயிர்செய்கைக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை
7. சானுக பூட்ஸ் நிறுவனத்துடன் வெனிலா பயிர்செய்கைக்கான அரச தனியார் கூட்டுப் பங்காண்மை

ஆ.4 முன்னேற்றத்தின் சுருக்கம் மற்றும் அடைய எதிர்பார்க்கப்படும் வீடுகள் (கைச்சாத்திடப்பட்ட வணிகப் பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு)

இது அமுலாக்கலின் முதலாவது கட்டம் என்பதுடன், நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்படுத்துகையானது இரண்டாவது வருடத்தில் காணப்படுகிறது. முன்னர் காணப்பட்ட தேசிய விவசாயத்துறை வணிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (NADeP) முகாமைத்துவ அலகானது (PMU), அந்த அலகுக்கு ஒப்படைக் கப்பட்டுள்ள விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேலதிக ஆளணியினரைச் சேர்ப்பதன் மூலம் சிறியளவிலான விவசாயத்துறை வணிக கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டங்கள் முகாமைத்துவ அலகாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தேசிய விவசாயத்துறை வணிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவு செய்கின்றமையானது சிறியளவிலான விவசாயத்துறை வணிக கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதுடன் இணைந்தவாறு மேற்கொள்ளப்பட்டது. ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒப்பிடுகையில் சிறியளவிலான விவசாயத்துறை வணிக கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டம் ஊடாக அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை 18% என்பதுடன், 2018 இன் இலக்குடன் ஒப்பிடுகையில் அது 80% ஐத் தாண்டிச் செல்கிறது. உண்மையான செலவினத்தைக் கருத்திற் கொள்ளும் போது சிறியளவிலான விவசாயத்துறை வணிக கூட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டத்தின் திரண்ட நிதி முன்னேற்றம் 5.5% ஆக காணப்படுவதுடன், மூன்று கூறுகளுக்கும் இணங்கிய செலவினத்துடன் அது 26% ஆகும். (தயவுசெய்து இ பிரிவைப் பார்க்கவும்). நடைமுறை ஒழுங்குவிதிகளை சட்டபூர்வமாக்குதல் மற்றும் சிக்கலற்றதாக்குதல், விசேடமாக நிதிப் பயன்பாட்டைத் தீர்ப்பதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் தொடரொன்றை நடாத்தியமையினால் இந்த ஆரம்ப கட்டத்தில் குறைந்தளவான உண்மை நிதி முன்னேற்றம் காணப்படுவதைத் தவிர்க்க முடியாது. தற்போது 10,620 பயனாளிகளை உள்ளடக்கி 06 அரச தனியார் கூட்டுப் பங்காண்மை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. செயற்பாட்டுரீதியான அரச தனியார் கூட்டுப் பங்காண்மையைக் கருத்திற் கொள்ளும்போது மொத்த வீட்டு இலக்குகளின் பயனாளிகள் வேறுபாட்டெல்லை 18% ஆகும். தற்போது கருத்திற் கொள்ளப்படும் கருத்திட்டங்களையும் உள்ளடக்கி நோக்கும்போது பயனாளிகள் வேறுபாட்டெல்லை அண்ணளவாக 30% ஆகும். (அண்ணளவாக 6500). அரச தனியார் கூட்டுப் பங்காண்மை ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினராக ஆவதற்கு பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் பணிப்பாளர் சபை அனுமதியைப் பெற்றுக் கொள்ள மேலதிக காலம் தேவைப்படுவதால் அரச தனியார் கூட்டுப் பங்காண்மை ஒப்பந்தங்களின் மூலம் உள்ளடக்கப்படும் சட்டரீதியான அம்சங்கள் மற்றும் செயற்படுத்துகையின் ஒருங்கிணைப்புடன் ஒப்பிடுகையில் இந்த 2 ஆவது வருடத்தில் செயற்படுத்துகையின் முதலாவது கூறின் பயனாளிகள் வேறுபாட்டெல்லை திருப்தியானதாக காணப்படுகிறது.

கடன் வழங்குகின்ற களைப்பூட்டும் செயற்பாடு காரணமாக 02 ஆம் கூறின் கீழ் உள்ளடக்கப்படும் பயனாளிகளுக்கு நிதி வசதிகளை வழங்குவது மந்தமான நிலையில் காணப்படுகிறது. தற்போது காணப்படும் அனுபவங்களுக்கு ஏற்ப இளைஞர்கள் உட்பட சாத்தியமான கடன்பெறுனர்களின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் தடுப்புப் பட்டியலில் காணப்படுகின்றனர். கடனை வழங்க பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு கொடுகடன் பணியகத்தின் தடை நீக்கம் கட்டாயமானதாகும். இதன் காரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை துரிதமாக செயற்படுத்துவதில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் கடன் வழங்கும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்கு சில சந்தர்ப்பங்களில் தனியார் நிறுவனங்கள் நிறுவன ரீதியான பிணையத்தை வழங்க வேண்டியேற்பட்டுள்ளது. விசேடமாக கடனை மீள அறவிடுவது கிளையின் செயலாற்றுகையுடன் நேரடியாகத் தொடர்புபடுவதால் பங்கேற்பு நிதி நிறுவனங்களின் கிளை முகாமையாளர்கள் அது தொடர்பாக அதிக ஆர்வங் காட்டுகின்றனர். வங்கி முகாமையாளர்களின் விருப்பத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் மொத்தமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களைக் குறுகிய காலத்தினுள் செயலாக்கம் செய்வதற்கு கிளைகளின் கொள்திறன் போதாமை என்பனவும் துரிதமாகச் செயற்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அடுத்து கடந்த சில வருடங்களாக அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் இலங்கையின் ரூபாய் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமையினால் கருத்திட்டப் பிரேரணைகளில் உடன்பட்ட கடன் தொகையுடன் சீர்செய்வது கடினமானதாக உள்ளது. விவசாயத்துறை உள்ளீடுகள்/பொருட்களின் விலைகள் அண்ணளவாக 15% - 20% இடையே அதிகரித்ததன் விளைவாக கடன் மற்றும் கொடைகளுக்கு ஏற்புடையதாக ஒரு விவசாயிக்கு அதிக முதலீடு/செலவினம் ஏற்படுகிறது. 6 மாதங்களுக்கு அல்லது ஒரு வருடத்திற்கு முன்னைய காலத்துடன் ஒப்பிடுகையில் விவசாயத்துறை இயந்திர உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்துள்ளன. அதிகரித்த பெறுமதிகளுக்கு மேலதிக நிதியை வழங்கி சீர் செய்ய வேண்டும் என்பதுடன், அதன் மூலம் நிதி முன்னேற்றத்தைப் பெற முடிந்தாலும், பயன் பெறும் வீடுகளின் எண்ணிக்கை குறைவடையும். எப்போதும் பல்வேறுபட்ட மூலோபாயங்கள் மூலம் நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளின் நிதி மற்றும் பௌதீக அமுலாக்கலை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு இயலுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதுடன், முறைப்படுத்தப்பட்ட வகையில் கடன் வழங்குதல் மற்றும் பெறுகை நடைமுறைகளின் முறைசார்தன்மை நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்துகின்றன. பங்கேற்பு நிதி நிறுவனங்கள் உட்பட பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டத் தரப்பினரின் ஒத்துழைப்பு திருப்தியான மட்டத்தில் காணப்பட்ட போதிலும், சந்தை நிலைமைகள் நிகழ்ச்சித்திட்டத்தைத் துரிதமாக செயற்படுத்துவதில் தடையாக காணப்பட்ட நிலைமைகள் இருந்தன. உதாரணமாக தொழிற்துறையில் ஏலவே மேலதிகமாகக் காணப்படும் பால், பால் சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு கடுமையான அடியாக அமைந்துள்ளதுடன், புதிய பண்ணையாளர்களை சேர்த்துக் கொள்ள அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். அவ்வாறு இல்லாவிடின் நஷ்டத்தினைத் தவிர்ப்பதற்கு அவர்கள் பால் சேகரிப்பினைக் குறைக்க விரும்புகின்றனர். அனைத்து நுண்கடன்களும் இறுதிக் கடன் பெறுனருக்கு வருடாந்த 6.5% வீதத்தில் வழங்கப்படுகின்றன. தற்போது இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சுடன் நிர்வாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அடுத்ததாக 9 பங்கேற்பு நிதி நிறுவனங்களுடன் இடைநிலைக் கடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

மூன்றாவது கூறின் (03) கீழ் (நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை ஈடுபாடு), இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் சாத்திய வள மற்றும் ஏற்புடையதாவதைப் பிரதிபலிக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொண்டுள்ளது. போட்டித்தன்மை அடிப்படையில் புதிய ஆளணி அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், தேசிய விவசாயத்துறை வணிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் (NADeP) காணப்பட்ட நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகு சிறியவிலான விவசாயத்துறை வணிக நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகில் உள்வாங்கப்பட்டுள்ளது. இலக்காகக் கொள்ளுதல் மற்றும் வழிமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறியவிலான விவசாயத்துறை வணிக நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவ தகவல் அமைப்பு மற்றும் இணையத்தளம் நிறைவு செய்யப்பட்டு வருவதுடன் சில மொடியுல்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பங்கேற்பு நிதி நிறுவனங்கள் மற்றும் ஏற்புடைய அரச ஆளணியினரை விழிப்புணர்வூட்டுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் பங்களிப்புடன் 15 பிராந்திய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. முன்பு காணப்பட்ட தேசிய விவசாயத்துறை வணிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் (NADeP) அவர்களின் செயலாற்றுகையின் அடிப்படையில் அனுபவமிக்க சமூக செயல்நிலைப்படுத்துனர்கள் 16 பேர் தேசிய வழிநடாத்தல் குழுவின் அனுமதியுடன் சிறியவிலான விவசாயத்துறை வணிக நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்த வழிகாட்டுவதற்காகவும் அதனைத் துரிதப்படுத்தவும் 12 தேசிய வழிநடாத்தல் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் சிறியவிலான விவசாயத்துறை வணிக நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

பயனாளிச் சுட்டி	இலக்கான வீடுகள்	2018 இலக்கு	செயற்பாட்டு	2018 சதவீதமாக	மொத்தமாக %
வணிக கூட்டுப் பங்காண்மைக்கான அணுகல்					
1.1 புதிய அ.தனி.கூ.பங்காண்மைகள்	21,000	5,237	1,537*	**30**	**7**
1.2 மேம்படுத்தல்கள்//NADeP நீட்டிக்கப்பட்ட	10,000	4,600	8500**	**185**	**85**
1.3 விவசாய அமைப்புக்கள்	4,000	300	-	-	-
கிராமிய நிதிக்கான அணுகல்					
2.1 முன்னைய NADeP தவணை/WC & STARR	20,000	2,499	583	**23**	**3**
2.2 இளைஞர்	2,500	100	-	-	-
மொத்த கூட்டுத்தொகை/மொத்தம்	**57,500**	**12,736**	**10,620**	**83**	**18**

*மலர்ப் பயிற்செய்கை, கலுபோவிடியான, முருங்கை

** கரும்பு, காகீல்ஸ் டெய்ரி, செலோ டெய்ரி

ஆ 5. தர்க்கரீதியான சட்டக செயல்திறன்கள்

கூறு	இது வரையான செயல்திறன்
தர்க்க ரீதியான சட்டக உற்பத்தி 1.1: தற்போது காணப்படும் அர.த.கூ.ப. வணிகத் தயாரிப்பு	உப கூறு (1.1) அர.த.கூ.ப. நிறுவுவதை விளக்குகிறது. உப கூறு (1.2) இன் கீழ் அர.த.கூ.ப. திட்டங்கள் மற்றும் நிறுவன ரீதியான பலப்படுத்தலுக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் 35,000 மொத்த வீடுகளைச் சென்றடையும். அர.த.கூ.ப. இனால் உருவாக்கப்படும் உற்பத்திகள் அல்லது சேவைகளுக்கான கேள்விக்குத் துலங்கலை வெளிப்படுத்தும் வகையில் தொழில் முயற்சியாளராவதற்கு மேலும் வறுமை யான இளைஞர் யுவதிகள் 2500 பேருக்குத் தேவையான உதவி வழங்கப்படும். 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் 6 கூட்டுப் பங்காண்மைகள் கைச்சாத்திடப்பட்டதுடன், மேலும் 2 ஐச் செயற்படுத்துவதற்கு IFAD அங்கீகாரம் கிடைத்துள்ளது. மேலும் 4 வணிகப் பிரேரணைகள் மீது IFAD இன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள சமர்ப்பிப்பதற்கு இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. இந்த 6 கூட்டுப் பங்காண்மைகள் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 10,620 ஆகும். நிறுவனத் தலைமைத்துவத்தை ஏற்ற அர.த.கூ.ப. பிரிவின் கீழ் சிறி.விவ.வ.நிக. இன் மூலம் சேவை வழங்கப்படும் சிறியளவிலான காணி உரிமையாளர்கள் 1,537 பேரும், வணிக விரிவாக்கப் பிரிவின் கீழ் 8500 பேரும் காணப்படுவதுடன், கடன் வசதிகளின் கீழ் 583 வீடுகள் நன்மை பெறும். வணிகப் பிரேரணைகள் பால் கைத்தொழில், மலர்ப் பயிற்செய்கை, கரும்பு மற்றும் முருங்கை உற்பத்திக் கைத்தொழில்களை உள்ளடக்குகின்றன.

கூறு	இது வரையான செயல்திறன்
தர்க்கரீதியான சட்டக உற்பத்தி 1.2: அமைப்பு ரீதியான பலப் படுத்தல் மற்றும் உற்பத்தி அமைப் புக்கள் மற்றும் அவற்றின் அங்கத் தவர்களின் கொள்திறன் விருத்தி	இது வரை 68 விவசாய அமைப்புக்கள் தம்மைப் பலப்படுத்துமாறு கோரியுள்ளதுடன், சிறி.விவ.வ.நிக. இன் தேவைப்பாடுகளுடன் இயைபின்மை அல்லது சுய மதிப்பீட்டின் போது போதிய புள்ளிகளைப் பெற முடியாமை காரணமாக அவற்றில் 33 நிராகரிக்கப் பட்டுள்ளன. நிலைமை மற்றும் தயாரிக்கப்படவுள்ள மேம்படுத்தல் பொதிகளை அடிப்படையாகக் கொண்டு விவசாய அமைப்புக்களைத் தரவரிசைப் படுத்துவதற்கு விவசாய அமைப்புக்களைப் பலப்படுத்துவதற்குத் தேவையான கருவிகள் தொகுதி யொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிக.முகா. அலகிற்கு உதவும் வகையில் சேவை வழங்குனர் ஒருவர் சுருக்கப் பட்டியலிடப்பட்டுள்ளார். தயாரிக்கப் படும் கருவித் தொகுதியை விவசாய அமைப்புக்கள் சுயமதிப்பீட்டிற்குப் பயன்படுத்த முடியும் என்பதுடன், அவ்வாறு இல்லாவிடின் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைவதற்கு அவற்றைப் பலப்படுத்த எந்தப் பொதி அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதை சிறி.விவ.வ.நிக. தீர்மானிக்க முடியும்.
தர்க்கரீதியான சட்டக உற்பத்தி 2.1: சிறியள விலான உற்பத்தி யாளர்களை இலக்காகக் கொண்ட வறுமையான மக்கள் நட்பான நிதி உற்பத்தி களுக்கான அணுகலைப் பெறுதல்	இது அர.த.கூ.ப. நிதியிடல் தொடர்பான உப கூறுக்கு (2.1) ஏற்புடையதாகும். 1 ஆம் கூறின் கீழ் தனிப்படுத்திக் காட்டப்பட்ட மூலோபாயங்கள், பங்களிக்கும் முறைகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை இக்கூறு பின்பற்றுவதுடன் நிலைபேறான முறையில், ஏற்க முடியுமான வீதங்களின் கீழ் கிராமிய நிதிச் சேவைகளை அணுகுவதற்கு வசதியளிப்பது நோக்கமாகும். இது தொடர்பாக இரண்டு கடன் திட்டங்களின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் (புதிய நிதி மற்றும் அபாயமற்ற நிதி) நான்கு (04) கடன் உற்பத்திகளின் கீழ் ஆறு (06) கடன் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஏற்புடைய வழிநடாத்தல் அறிவுறுத்தல்கள் பங்காண்மை வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், கடன் வழங்குவதற்கு ஏலவே 9 வங்கிகள் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புபட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கி மற்றும் பங்காண்மை வங்கிகளின் அலுவலர்களின் பங்கேற்புடன் நாடு முழுவதும் கடன் உற்பத்திகள் தொடர்பான விழிப்புணர்வூட்டல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. IFAD இன் வழிகாட்டலுக்கு அமைவாக சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு உதவும் வகையில் STARRகருத்திட்டத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.
தர்க்கரீதியான சட்டக உற்பத்தி 2.2: மத்திய வங்கி மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங் களை நிறுவன ரீதியாகப் பலப் படுத்தல் மற்றும் கொள்திறன் விருத்தியைக் கட்டியெழுப்புதல்	நிதிச் சேவைப் பிரிவுக்கு நிறுவனரீதியான பலப்படுத்தலாக அமையும் உப கூறு (2.2) க்கு இது ஏற்படையதாகும். மத்திய வங்கியின் கடன் பதிவு தன்னியக்கமாக்கல் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் ஆரம்ப விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் தேவைப்பாடுகள் மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டுள்ளன. மென்பொருள் அபிவிருத்தி (பெறுகை) தொடர்பான அடிப்படை ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகளை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளது. IFAD மற்றும் மத்திய வங்கியின் நிதிச் சபையின் அனுமதியுடன் இது தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மத்திய வங்கியுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்குப் பதிலாக "சம்பிரதாயபூர்வமல்லாத நிதி உற்பத்திகள்" ஐ அறிமுகப்படுத்துமாறு வங்கிப் பிரிவின் பிரேரணை நிக.முகா. அலகிற்கு கிடைத்துள்ளது.
தர்க்கரீதியான சட்டக உற்பத்தி 3: முன்னுரிமைப் படுத்தப்பட்ட கொள்கைச் சிக்கல்கள்/ தடைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட மாதிரிகள்/கற்றுக் கொண்ட பாடங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட பகுப்பாய்வு	இந்தக் கூறு இரண்டு உப கூறுகளைக் கொண்டது: (3.1) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் அறிவு முகாமைத்துவம்; மற்றும் (3.2) கொள்கை உரையாடல் - சிறி.விவ.வ. கூட்டுப் பங்காண்மையை ஆரம்பிக்கும் தேசிய வழிநடாத்தல் குழு உட்பட 12 தேசிய வழிநடாத்தல் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன. சிறி.விவ.வ. கூட்டுப் பங்காண்மை உற்பத்தித் தகவல் முகாமைத்துவம் பகுதியளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் IFAD இன் உதவியுடன் நிதி அத்தியாயத்தை உள்ளடக்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கைச்சாத்திடப்பட்ட அரச தனியார் கூட்டுப் பங்காண்மைகளுக்கு இலக்காகக் கொள்ளும் ஆய்வுகள் நடாத்தப்பட்டதுடன், அரச தனியார் கூட்டுப் பங்காண்மை மூன்றுக்கு வழிமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசேட அறிவு முகாமைத்துவ உற்பத்திகளைத் தயாரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் தற்போது காணப்படும் செயற்படுத்துகைச் செயலாக்கங்களை மேம்படுத்துவது தொடர்பான கொள்கை விடயங்கள் மற்றும் தரப்பினர் பிரேரணைகளைச் சேகரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் தரப்பினர்களுடனான கலந்துரையாடல்கள்/கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

இ. – 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் நிதி முன்னேற்றம்

	PDR செலவின அட்டவணை (மாற்று விகிதம் 163.48)	ஒட்டுமொத்த செலவினங்களுக்குச் செலுத்துதல் (2017 மற்றும்2018)	%	கடப்பாடுகள்	கடப்பாடுகளுடன் மொத்த தொகை	%
பிரிவு	**மில்லியன் ரூபாய்**			**மில்லியன் ரூபாய்**		
I. ஆலோசனை மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகள்	1,627.23	18.01	1.1	-	18.1	1.1
II. உபகரணங்கள் மற்றும் பொருட்கள்	156.51	4.38	2.8	-	4.38	2.8
III. கடன்	1,987.32	437.93	22.0	1,249.40	1,687.33	84.9
IV. கொடைகள்	4,699.87	7.00	0.1	585.30	592.3	12.6
V. மீண்டெழும் செலவினம்	421.01	22.76	5.4	-	22.76	5.4
மொத்தம்	**8,891.95**	**490.08**	**5.5**	**1,834.70**	**2,324.78**	**26.1**

ஈ. 2019 க்கான நிதித் திட்டம்

பிரிவு/ நிதி வழங்குனர்	IFAD	அரசு	அரசின் மீள்வருவன	தனியார் துறை	பங்கேற்பு நிதி நிறுவனங்கள்	பயனாளிகள்	மொத்தம்
	மில்லியன் அமெ.டொ						
I. ஆலோசனை மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகள்	0.936						0.936
II. உபகரணங்கள் மற்றும் பொருட்கள்	0.089	0.002					0.091
III. கடன்	9.136		3.363				12.499
IV. கொடைகள்	10.391			3.664			14.055
V. மீண்டெழும் செலவினம்	0.442	0.100					0.542
மொத்தம்	**20.994**	**0.102**	**3.363**	**3.664**			**28.123**
	மில்லியன் ரூபாய்						
மொத்தம் (மாற்று விகிதம்)1= 165)	3,463	16	554	604			4,640

2019 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் கிராமிய முதலீடு 4,640 மில்லியன் ரூபாய் என்பதுடன் அதில் அதிக முதலீட்டுத் தொகையான 3,463 மில்லியன் ரூபாய் IFAD உதவி மூலம் நிதியிடப்படும்.

உ. ஆண் பெண் பாலின மற்றும் வீட்டு போசாக்கு இலக்கு

ஆண் பெண் பாலின மற்றும் வீட்டுப் போசாக்குச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிக.முகா. அலகு அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன், முழுநேர ஆலோசகர்களைக் கொண்டுள்ளது. ஆண் பெண் பாலின மற்றும் போசாக்கு மேம்பாட்டிற்கு சட்டகமொன்று தயாரிக்கப்படுவதுடன் அதனை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. சிறி.விவ.வ. நிகழ்ச்சித்திட்டத்தில் தற்போது காணப்படும் ஆளணி அங்கத்தவர்கள் ஆண் பெண் பாலினம் சார்ந்த கூருணர்ச்சிப்பாடு தொடர்பாக சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன், ஆண் பெண் பாலின ஒன்றுபடுத்தல் பணிகளை மேற்கொள்ளும் பிரதான செயற்பாட்டாளர்கள் அவர்கள் ஆவர். 2018 இன் இறுதிப் பகுதியில் நிக.முகா. அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட "ஆண் பெண் பாலின கூருணர்ச்சிப்பாடு" தொடர்பான பயிற்சி நிகழ்வில் ஆளணி அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். அவர்களது அறிக்கைகளுக்கு அமைவாக இது தொடர்பாக விவசாயிகளின் அறிவுநிலை குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட வேண்டும். சிறி.விவ.வ. நிகழ்ச்சித்திட்ட கருத்திட்டப் பிரேரணைகளில் விசேடமாக பண்ணை அடிப்படையான பயிர்கள் அல்லது கால்நடை வளர்ப்பின்போது ஆண்கள் மற்றும் பெண்களின் சமமான பங்கேற்புக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆண் பெண் பாலின மற்றும் போசாக்கு சார்ந்த சிறி.விவ.வ. நிகழ்ச்சித்திட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக தரப்பினரான நிறுவனங்களைக்கூட அறிவுறுத்தியுள்ளதுடன், நிறுவனரீதியான சமூகப் பொறுப்புக்கு ஏற்புடையதாக தமது எதிரணியினரை விடவும் மிகவும் முன்னிலை வகிப்பதற்கு இந்தப் பெரும்பாலான நிறுவனங்கள் அப்பிரச்சினைகள் தொடர்பாக அதிக கவனஞ் செலுத்தியுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

இன்று அர.தனி.கூட். பங்காண்மை மற்றும் நுண் நிதி முனைப்புகள் விவசாயத் துறையின் அபிவிருத்திக்கு ஏற்புடையதாக பெண்களின் கொள்திறனை மேம்படுத்துவதற்காக நிதியுதவி, பயிற்சி மற்றும் கருத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சிறி.விவ.வ. கூட்டுப் பங்காண்மைப் பயனாளிகளில் அண்ணளவாக 35% ஐப் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். மலர் பயிற்செய்கைக் கருத்திட்டம் 95% க்கு மேற்பட்ட பெண்கள் பங்கேற்பைக் கொண்ட முக்கிய கருத்திட்டமாகும்.

ஊ. வறுமையை மையப்படுத்தல்

நிறைவு செய்யப்பட்ட இலக்காகக் கொள்ளும் ஆய்வுகளின்படி, மாதிரிக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 90% க்கு மேற்பட்டோர், அவர்களின் மாதாந்த வருமானத்தைக் கருத்திற் கொள்ளும்போது வறுமைக் கோட்டின் கீழ் காணப்படுகின்றனர். பாற் பண்ணையாளர்கள் தமது பால் வழங்கலுக்காக ஒவ்வொரு 15 நாட்களுக்கு ஒருமுறை கொடுப்பனவு செய்யப்படும் பால்வளத் துறை தவிர்ந்த ஏனைய கருத்திட்டங்களில் இந்த நிலைமை தெளிவாகக் காணப்படுகிறது. ஏனைய விவசாயிகளுடன் ஒப்பிடுகையில் பாற் பண்ணையாளர்களின் வாழ்க்கைத் தரம் ஒப்பீட்டளவில் உயர்ந்ததாகும். கஷ்டப் பிரதேசங்களில், விசேடமாக தோட்டத் துறையில் (தேயிலைத் தோட்டங்கள்) மாதாந்த வருமான மட்டம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. குறித்த பிரதேசங்களில் கருத்திட்டப் பயனாளிகளின் வருமானம் ரூ. 15,000 க்கும் ரூ. 25.000 க்கும் இடைப்பட்ட நிலையில் காணப்பட்டது. குடும்பமொன்றில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையை நோக்கும்போது சாதாரணமாக நான்கு என்பதுடன், பயனாளிகள் வறுமையான சமூகப் பொருளாதாரப் பிரிவின் கீழ் காணப்பட்டனர்.

எ. காலநிலை மற்றும் சூழலை மையப்படுத்தல்

பாதகமான சூழல் தாக்கம் இருக்க மாட்டாது என்ற நிர்ணயிக்கப்பட்ட அளவுகோளுக்கு ஏற்றவாறு அனைத்து செயற்றிட்ட வணிகப் பிரேரணைகளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டன. மேலும் காலநிலை மாற்ற அபாயத்தைக் குறைப்பதற்கு உதவும் தொழிநுட்பங்கள் உட்பட சிறந்த விவசாயத்துறை

நடைமுறைகளை இந்த அரச தனியார் கூட்டுப் பங்காண்மை ஊக்குவிக்கின்றது. பொதுவாக நோக்கும்போது நவீன தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தும், விசேடமாக நீர்ப் பற்றாக்குறை அதிகரிப்பது சவாலாக அமைந்துள்ள பிரதேசங்களில் (உலர் வலயம்) மேம்படுத்தப்பட்ட நீர்ப் பயன்பாட்டு வினைத்திறனுக்கு அவ்வாறானவற்றை அறிமுகப்படுத்தும் நிலைபேறான வணிகத் திட்டங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது. சைலேஜ் தயாரித்தல், சாணத்தினை உரமாகப் பயன்படுத்தல் மற்றும் உயிர் வாயு உற்பத்தியை ஊக்குவித்தல் போன்றன சிறி.விவ.வ. நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் கண்டுகொண்ட உதாரணங்கள் ஆகும்.

உயர்ந்த செலவினம் மற்றும் தேவையான அறிவின்மை காரணமாக தமது விவசாயத்துறை அமைப்புக்களை மிகவும் சூழல் நட்பானவையாகவும் நிலைபேறான அமைப்புக்களாகவும் மாற்றுவதற்குத் தேவையான முதலீடுகளை வழங்க பெரும்பாலான சிறு காணி உரிமையாளர்களுக்கு இயலுமை இல்லை. நீர்ப் பாவனை, சேதனப் பசளைப் பாவனை, புதிய பண்ணை இயந்திரமயமாக்கல் போன்றவற்றுக்கு ஏற்புடைய நவீன தொழிநுட்பத்தினை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அனைத்து வணிக கருத்திட்டங்களிலும் சூழல் பிரிவு தொடர்பாக ஆராய்வதற்கு சிறி.விவ.வ..கூ.ப. நிகழ்ச்சித்திட்டம் பகுதி நேர ஆலோசகர் ஒருவரை ஈடுபடுத்தியுள்ளது. அனைத்து விவசாயத்துறை உற்பத்திகளினதும் விளைச்சலுக்கு நீர் தேவையானதாகும். சிறி.விவ.வ..கூ.ப. நிகழ்ச்சித்திட்டத்தின் அர.தனி. கூட்டுப் பங்காண்மைக்கு சொட்டு நீர் வழங்கல் அமைப்புக்கள், தெளிப்பு நீர் வழங்கல் அமைப்புக்களை அறிமுகப்படுத்தி கிராமிய நீர் மூலங்களின் ஆயிரக்கணக்கான நீர்க் காலன்களை சேமிக்க முடியும். பால் கறக்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்தல், சாப் கடர் இயந்திரங்களில் சிறிய துண்டுகளாக வெட்டப்பட்ட புல்லினை வழங்குதல், பசுக்களுக்கு இயந்திரமுறை நீர்த்தொட்டிகளை வழங்குதல் என்பன சிறியளவிலான காணி உரிமையாளர் களான பாற் பண்ணையாளர்களின் விளைச்சலை மேம்படுத்தும். இந்த பெரும்பாலான உயர் தொழிநுட் பங்களை கொடையாக அல்லது நுண் நிதியுடன் இணைத்து விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

மண்ணின் வளமான தன்மை, விவசாயத்துறை உயிர்ப் பல்வகைமை, காலநிலைக்கு ஏற்றவாறு தகவமைதல், சிறந்த விவசாயத்துறை நடைமுறைகள் தொடர்பாக அறிந்துகொள்ளுதல் போன்றவற்றை மேம்படுத்துவது தொடர்பாக சிறி.விவ.வ..கூ.ப. நிகழ்ச்சித்திட்டம் அதிக கவனஞ் செலுத்துகிறது. விவசாயிகளுக்கு நடாத்தப்படும் அனைத்து பயிற்சி நிகழ்ச்சிகள், புத்தறிவுப் பயிற்சிகளிலும் மேற்குறிப்பிட்ட பயிரிடல் பழக்கங்கள் தொடர்பான அறிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. நிக.முகா.அ. மற்றும் அதன் தனியார் தரப்பினர் ஆகிய இரு தரப்பினரும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவைப் பிரச்சாரம் செய்கின்றன. விவசாய ஊக்குவிப்புடன் சூழலுக்கு நேரிடையான முறையில் பங்களிப்புச் செய்யும் கருத்திட்டப் பிரேரணைகளுக்கு சிறி.விவ.வ..கூ.ப. முன்னுரிமை வழங்குகிறது. உதாரணமாக ஏதாவது கருத்திட்டமொன்று அரிய இயற்கை வளப் பாவனையின் வினைத்திறன், மேம்பட்ட சூழல் அமைப்புக்கள், மண்ணின் வளத்தை அதிகரித்தல், மகரந்தச்சேர்க்கையைப் பரவலாக்குதல், சூழல் நட்பான முறையில் தொற்றுக்களை ஒழுங்குபடுத்தல், நீரைத் தேக்கி வைக்கும் கொள்திறன் போன்றவற்றை மேம்படுத்துவதாக காணப்படுமாயின், அவ்வாறான பிரேரணையை அங்கீகரிக்கும் செயன்முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.

ஏ. எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்சினைகள்

- பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (வங்கிகள்) தெளிவாகவே இலாபம் சர்ந்த நிறுவனங்கள் என்பதுடன் எப்போதும் அபாயங்களைத் தவிர்த்து நிற்கின்றன. அதனால் பங்கேற்பு நிதி நிறுவனங்கள், விசேடமாக பிரதேச செயலக மட்டத்தில் (கிளைகள்) விவசாயிகளைப் பதிவு செய்யும்போது ஆரம்ப ஆயத்தங்களுக்கு பொதுவாக நீண்ட செயலாக்க காலம் எடுப்பதுடன் அதன் விளைவு அர.தனி.கூட்.. பங்காண்மை தாமதமடைவதாகும். அதற்கு ஒரு காரணமாக குறைவான கொள்திறன் (குறைவான ஆளணி) இனங்காணப்பட்டுள்ளதுடன், அது மறுபுறத்தில் பூரணமற்ற பரீட்சிப்புச் செயன்முறைக்கு காரணமாக அமைகிறது. அதனால் விவசாயிகளைப் பதிவு செய்யும் செயன்முறையை விரைவுபடுத்துமாறு எப்போதும் நினைவூட்டல அல்லது செய்திகளை பங்கேற்பு நிதி நிறுவனங்களின் கிளைகளைச் சேர்ந்த ஆளணியினருக்கு, பங்கேற்பு நிறுவனங்களின் பிரதான அலுவலகத்திற்கு, ஊக்குவிப்பு நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டிய நிலைமை நி.முகா. அலகிற்கு ஏற்படுகிறது.

- சந்தை மாறிகளின் ஸ்திரமற்ற தன்மை – விசேடமாக பணவீக்கம் அதிகரித்தல் மற்றும் பரிமாற்று விகிதங்களின் வீழ்ச்சி கருத்திட்டச் செயற்பாடுகள் மீது எதிர்மறையாகத் தாக்கம் செலுத்துகின்றன. விசேடமாக கடந்த 6 மாத காலத்தினுள் விவசாயத்துறை உள்ளீடுகளின் விலை அண்ணளவாக 15% - 20% அதிகரித்தமையினால் விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப்படும் கடன் மற்றும் கொடைகளின் அளவு அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்துள்ளது. எனவே ஒவ்வொரு பெறுமானச் சங்கிலியினதும் உண்மைக் கருத்திட்டச் செலவினம் மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டச் செலவினத்தை விடவும் குறிப்பிட்டத்தக்களவில் தாண்டிச் சென்றுள்ளதுடன், அதனால் சிறி.விவ.வ..கூ.ப. நிகழ்ச்சித்திட்டத்திற்கு அந்த இடைவெளியை நிரப்புவதற்கு மேலதிகமாக நிதியிட வேண்டியேற்பட்டுள்ளது. அதற்கமைய இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அது ஆரம்பத்தில் இலக்காகக் கொண்ட பயனாளிகளுக்குத் தனது சேவையை வழங்கும் வாய்ப்பு இல்லை என்பதுடன், அதனை விடவும் குறைவான அளவு விவசாயிகளுக்கு மாத்திரமே சேவை வழங்க முடியுமாக இருக்கும்.

- பங்கேற்பு நிதி நிறுவனங்கள் உட்பட பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டத் தரப்பினரிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு திருப்தியான மட்டத்தில் காணப்பட்ட போதிலும், சந்தை நிலைமைகள் நிகழ்ச்சித் திட்டத்தை விரைவாக செயற்படுத்துவதற்குத் தடையாக அமைந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. உதாரணமாக தொழிற்துறையில் ஏலவே மேலதிகமாகக் காணப்படும் பால், பால் சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு கடுமையான அடியாக அமைந்துள்ளதுடன், புதிய பண்ணையாளர்களை சேர்த்துக் கொள்ள அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். அவ்வாறு இல்லாவிடின் நஷ்டத்தினைத் தவிர்ப்பதற்கு அவர்கள் பால் சேகரிப்பினைக் குறைக்க விரும்புகின்றனர்.

- அர.தனி.கூ. பங்காண்மை ஒப்பந்தங்களில் மேலதிக தரப்பினரை உள்ளடக்குவதனால் விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக இணங்குவதற்கு அதிக காலம் தேவைப்படுகிறது. உதாரணமாக, பங்கேற்பு நிதி நிறுவனத் தரப்பினர் தமது பாதுகாப்பினை எப்போதும் எதிர்பார்த்து ஊக்குவிப்பு நிறுவனப் பிணை போன்றவற்றைப் பயன்படுத்தி தமது அபாயத்தைக் குறைத்துக் கொள்கின்றன. ஆகையால் அனைத்து தரப்பினரும் உடன்பட முடியுமான நிலைமைக்கு வருவது சவாலாகக் காணப்படுகிறது.

- முன்னர் காணப்பட்ட NADeP நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிறியளவிலான காணி உரிமையாளர்களுக்கு சந்தையில் குறைந்த செலவின கடன் மாற்றீடுகள் காணப்படுகின்றன. உதா – வருடத்தில் 6.75% க்கு ஒரு மில்லியன் வரை.

- தனியார் துறை விவசாய செயலாக்கத் தரப்பினருக்கு சர்வதேச கொடையாளிகள் நிதியளிப்பு மற்றும் சீராக்கல் நிதியுதவி வழங்குதல் - உதா – உலக வங்கி/சர்.தொ. அமைப்பு உதவி

கிராமசக்தி மக்கள் இயக்கம்

அறிமுகம்

“மைத்திரி ஆட்சி – பேண்தகு நாடு” கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட “கருத்துருமிக்க நாடொன்றை உருவாக்குவதற்கு” வழங்கிய உறுதிமொழியை யதார்த்தமானதாக மாற்றும் நோக்குடனும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் குறிப்பிடப்படுகின்றவாறு வறுமையை ஒழிப்பதற்காகவும் “2017 – வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டு” எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக கிராமசக்தி மக்கள் இயக்கம் செயற்படுத்தப்படுகிறது.

தொலைநோக்கு

ஊக்கத்துடனும் வலுவுடனும் முறையாகவும் ஒழுங்கமைந்து வறுமையிலிருந்து மீண்டு முன்னேற்றப் பாதையில் செல்லும் இலங்கை மக்கள்.

செயற்பணி

2030 ஆம் ஆண்டாகும்போது கடுமையான வறுமையை ஒழித்து அனைத்து வகையான வறுமையினை அரைவாசியளவு ஒழிக்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குப் பங்களிப்பு வழங்கி, 2020 ஆம் ஆண்டாகும்போது மிகவும் வறுமையான கிராம அலுவலர் பிரிவுகள் 5000 இலுள்ள மக்களுக்கு தீர்மானிக்கும் அதிகாரம், தகவல்கள் மற்றும் வளங்களை வழங்கி தமது அடிப்படைத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு வசதியினை வழங்குதல்.

கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் மூன்று மூலோபாயங்கள்

- வறுமையை ஒழிக்கும் சமூக ஆளுகைக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம்
- உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம்
- காணப்பட்ட கெமிதிரிய மக்கள் நிறுவனங்களை முறையாக இற்றைப்படுத்தி கிராமசக்தி இயக்கத்துடன் தொடர்புபடுத்தல்.

அடிப்படை நோக்கம்

இலங்கையில் காணப்படும் முழு வறுமையை 2030 ஆம் ஆண்டாகும்போது முழுமையாக ஒழித்தல்.

விசேட நோக்கங்கள்

- நாட்டின் வறிய மக்களைப் பொருளாதார ஓட்டத்தில் உள்வாங்குவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறமைகளை மேம்படுத்துவதன் ஊடாகப் வலுவூட்டல்.
- நாட்டில் வறுமையான சமூகத்தினர் வாழும் பிரதேசத்தில் வளங்களைப் பயன்படுத்தி புதிய தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் வறிய மக்களை உள்வாங்குதல்.
- இலங்கை வறிய சமூகத்தினரின் குடும்ப மாதாந்த வருமான நிலைமையை ஒரு வருடத்தினுள் இரு மடங்கினால் அதிகரித்தல்.

இலக்குகள்

- சட்டத்தின் ஆணைக்கு, நல்லாட்சிக் கோட்பாடுகளுக்கு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இலட்சியங்களுக்கு உட்பட்ட நாட்டின் அனைத்து மாவட்டங்கள் முழுவதும் பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் இனங்காணப்பட்ட 1000 கிராம அலுவலர் பிரிவுகளில் சமூக ஆளுகைக் கிராமங்களை, உற்பத்திகள் மற்றும் சேவை சார்ந்த கிராமங்களாக அபிவிருத்தி செய்வதற்கு கிராமசக்தி நிறுவனங்கள்/ சங்கங்களை நிறுவுதல்.
- கெமிதிரியவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நுண் நிறுவனங்களை கிராமசக்தி அமைப்புடன் இணைத்தல்.
- அந்த அனைத்து நுண் நிறுவனம்/சங்கமும் இயங்கும் கிராம அலுவலர் பிரிவுக்கு ஏற்புடைய பிரதேச செயலாளரின் கீழ் கண்காணிக்கப்படும் கிராம அபிவிருத்தி நிதியமொன்றை உருவாக்குதல்.
- சங்கத்தின்/நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அவர்களது குடும்பங்களில் காணப்படும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ஒரு நபருக்கு ரூ. 8000 என்ற வாறு பொது அபிவிருத்திக்கான நிபந்தனையுடன் ஒரு தடவை மாத்திரம் வழங்கும் ஒதுக்கீடாக அரசினால் முதலீடு செய்தல்.
- புதிய தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பாக முக்கியத்துவம் வழங்கி கிராமிய விவசாயத்துறை தொழில் முயற்சியை ஏற்படுத்தல்.
- கிராமியத் தொழில் முயற்சியை மேம்படுத்துவதற்காக மூலதனம் வழங்கும் பொறுப்பு நிதிய மொன்றை உருவாக்குதல்.
- கிராமியத் தொழில் முயற்சியை மேம்படுத்துவதற்கு முகாமைத்துவம், தொழிநுட்பச் சந்தை வசதிகளை வழங்குவதற்கான மத்திய நிலையங்களைப் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் உருவாக்குதல்.

கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் 2018.12.31 ஆந் திகதியில் பௌதீக முன்னேற்றம்.

- முதலாவது கட்டத்திற்குத் (2017 ஆம் ஆண்டு) தெரிவு செய்யப்பட்ட கிராமசக்தி மக்கள் இயக்கத்தில் 1000 கிராமங்களிலும் தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. (மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில்)
- அத்தகவல்களைப் பகுப்பாய்வு செய்து கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகளை 1000 கிராம அலுவலர் பிரிவுகளும் மேற்கொண்டுள்ளன.
- கிராமசக்தி மக்கள் சங்கங்களை சட்டரீதியான, முறையான நிறுவனங்களாக வலுவூட்டும் நோக்குடன் 1031 கிராமசக்தி சங்கங்கள் (712 சமூக ஆளுகை சங்கங்களும் உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த 319 சங்கங்களும்) கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- முதலாவது கட்டத்தில் (2017 ஆம் ஆண்டு) பதிவு செய்யப்பட்ட கிராமசக்தி சங்கங்களுக்காக அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் ஒரு மில்லியன் ரூபாய் வீதம் 25 மாவட்டங்களுக்கும் 994 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
- நுண் நிதிப் பயிற்சிக்கு ஏற்புடைய விலைப்படியல்கள், படிவங்கள் மற்றும் மாதிரிப் படிவங்கள் அச்சிடுவதற்கு ஒரு பிரதேச செயலகத்திற்கு ரூ. 25,000/- வீதம் 252 பிரதேச செயலகங்களுக்கு 6.3 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளது.

25 மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் செயற்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

- மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டல்.
- மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல்), மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர்களைப் பயிற்சியாளர்களாகப் பயிற்றுவித்தல்.
- பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்களைப் (திட்டமிடல்) பயிற்றுவித்தல்.
- பணிப்பாளர்களுக்கு (திட்டமிடல்), உதவிப் பணிப்பாளர்களுக்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கு நுண்நிதிப் பயிற்சியளித்தல்.
- சமூக ஆளுகைக் கிராமங்களுக்கும் உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த கிராமங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பாக அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு.
- கிராமசக்தி அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் புதிய அபிவிருத்தி அலுவலர்களுக்கு மூன்று நாள், வதிவிட, சேவைத் துவக்கப் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.
- கிராமசக்தி மக்கள் இயக்கத்தை தேசிய ரீதியாக நிறுவுவதற்கு நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பயிற்சிக் குழாம் வளவாளர்களின் பங்கேற்புடன் கிராமசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை எதிர்காலத்தில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான பயிற்சியாளர்களைப் பயிற்று விப்பதற்கான மொடியுல்களைத் தயாரிக்கும் செயலமர்வுகள்.

கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	மாவட்டம்	கூட்டம் இடம்பெற்ற திகதி	கூட்டம் இடம்பெற்ற இடம்
01	குருநாகல்	2018.11.08	மாவட்டச் செயலகம், குருநாகல்
02	காலி	2018.11.09	மாவட்டச் செயலகம், காலி
03	கண்டி	2018.11.11	மாவட்டச் செயலகம், கண்டி
04	களுத்துறை	2018.11.12	மாவட்டச் செயலகம், களுத்துறை
05	புத்தளம்	2018.11.13	மாவட்டச் செயலகம், புத்தளம்
06	இரத்தினபுரி	2018.11.15	மாவட்டச் செயலகம், இரத்தினபுரி
07	மாத்தறை	2018.11.23	மாவட்டச் செயலகம், மாத்தறை
08	அம்பாந்தோட்டை	2018.11.23	மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை
09	பொலொன்னறுவை	2018.11.27	மாவட்டச் செயலகம், அநுராதபுரம்
10	அனுராதபுரம்	2018.11.27	மாவட்டச் செயலகம், அநுராதபுரம்
11	இரத்தினபுரி	2018.11.30	மாவட்டச் செயலகம், இரத்தினபுரி
12	மொனறாகலை	2018.12.06	மாவட்டச் செயலகம், மொனறாகலை
13	அம்பாறை	2018.12.06	மாவட்டச் செயலகம், அம்பாறை
14	கம்பஹா	2018.12.11	மாவட்டச் செயலகம், கம்பஹா

நடாத்தப்பட்ட மாகாண வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மாகாணம்	கூட்டம் இடம்பெற்ற திகதி	கூட்டம் இடம்பெற்ற இடம்
01. ஊவா மாகாணம்	2018.05.21	பதுளை மாவட்டத்தில் ஊவா மாகாண சபைக் கேட்போர் கூடத்தில்.
02. வடமேல் மாகாணம்	2018.06.13	புத்தளம் மாவட்டத்தில் மதுரங்குளி மேர்சி லங்கா நிறுவனத்தில்.
03. மத்திய மாகாணம்	2018.07.11	ஜனாதிபதி மாளிகை, கண்டி
04. சப்ரகமுவ மாகாணம்	2018.07.25	இரத்தினபுரி மாவட்டத்தில் சப்ரகமுவ மாகாண சபைக் கேட்போர் கூடத்தில்
05. வடமத்திய மாகாணம்	2018.12.20	அநுராதபுரம் மாவட்டத்தில் வடமத்திய மாகாண சபைக் கேட்போர் கூடம்.

கிராமசக்தி மாகாண வழிநடாத்தல் குழுக் கூட்டங்களில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கிராமசக்தி மக்கள் இயக்கம் வழங்கிய மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

திகதி	மாவட்டம்/ மாகாணம்/பிரதேசம்	கருத்திட்டம்	பௌதீக முன்னேற்றம்	நிதி முன்னேற்றம்	
				வழங்கிய நிதி (ரூ.)	2018.12.31 செலவினம் (ரூ.)
2018.07.25	கேகாலை மாவட்டம் கலிகமுவ அந்தர அவதி நகரம் கலிகமுவ அந்தர அவதி நகரம்	நுழைவு வீதி	நிர்மாணிக்கப்பட்டுள்ளது.	ரூ.மி. 25	ரூ.மி.22.44
		நீர் மற்றும் மின்சார நடவடிக்கைகள்	ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது.		
2018.07.11	யடிநுவர கொடலிகொட கிராம அபிவிருத்திப் பணிகள்	சேவை நிலையம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	ரூ.மி.2	ரூ.மி.2
		கிராம அபிவிருத்திக் கட்டிடம்		ரூ.மி.1.5	ரூ.மி.1.5
2018.07.25	இரத்தினபுரி மாட்டம் பெல்மடுலை கனேகம வெல்அந்துருகொட கிராமசக்தி கிராமம்	சனசமூக மண்டபம்	நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.	ரூ.மி.35	ரூ.மி.21.88
		சமூக நீர் விநியோ கத்திட்டம்	நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.		
		இரண்டு மாடி பல்நோக்கு கட்டிடம்	நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.		

திகதி	மாவட்டம்/ மாகாணம்/பிரதேசம்	கருத்திட்டம்	பௌதீக முன்னேற்றம்	நிதி முன்னேற்றம்	
				வழங்கிய நிதி (ரூ.)	2018.12.31 செலவினம் (ரூ.)
2018.12.20	அநுராதபுர மாவட்டம் பலுகஸ்வெவ ஆசிரிகம துலானே அபிவிருத்திப் பணிகள்	ஆசிரிகம ரதனசார பாலர் பாடசாலை மறுசீரமைப்பு	நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.	ரூ.மி.1.5	-
		எப்பாவல சமனல பாலர் பாடசாலை மறுசீரமைப்பு			
		சேவா பியஸ கட்டிட மறுசீரமைப்பு			
		எப்பாவல குடிநீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தல்	ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.	ரூ.மி.25	-
		குளங்களைப் புனரமைத்தல்			
		நுழைவு வீதிகள் மற்றும் உள்ளக வீதிகளைப் புனரமைத்தல்			
		சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை வழங்குதல்			
		புஸ்திவுல்வெவ பாடசாலையைத் திருத்தியமைத்தல்			
		விகாரைகள் மறுசீரமைப்பு			
		களிமண் மற்றும் குடிசை வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணித்தல்	ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.	ரூ.மி. 21.5	-

முதலாவது கட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் கிராமங்களில் (10000) கிராமசக்திச் சங்கங்களின் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம்

கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் முதலாவது கட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் கிராம (1000) கிராமசக்திச் சங்கங்களின் ஆரம்ப நிகழ்ச்சி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2018.12.20 ஆந் திகதி அநுராதபுர மாவட்டத்தின் பலுகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவின் ஆசிரிகம கிராமத்தில் இடம்பெற்றது. அதனுடன் இணைந்தவாறு ஏனைய சங்கங்களின் கருத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன.




දිළිඳුකම පිටුදැකීමේ ජාතික වැඩසටහන
வறுமை ஒழிப்பு தேசிய செயற்திட்டம்




BOC
2,000,000/=

கிராமசக்தி மக்கள் இயக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த சங்கங்களின் 2018.12.31 ஆந் திகதி வரையான முன்னேற்றம்.

தொடர் இலக்கம்	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	கருத்திட்டப் பிரேரணை	விடுவிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு
1	**நுவரெலியா**	அம்பகமுவ	மசாலா பொருட்களை உலர வைத்து பெறுமதி சேர்த்தல்	0.829
			பால் உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரித்தல்	1
			ஒவ்வாத்தன்மையுடைய புல் பயிர்செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரித்தல்.	3.108
		நுவரெலியா	கிராமசக்தி சிக்கனப் பூக்களை உற்பத்தி செய்தல்	25
			ஸ்ட்ரோபரி செய்கையாளர்களின் மாதாந்த வருமானத்தை அதிகரித்தல்	4.5
		வலப்பனே	வாழை இலையைப் பயன்படுத்தி சூழல் நட்பான லஞ்ச் சீட் உற்பத்தி	2.1
			கோப்பி செய்கையாளர்களின் வருடாந்த வருமானத்தை அதிகரித்தல்	6.275
			பசுமை இல்லத்தில் வெட்டியெடுக்கப்படும் பூக்கள் கருத்திட்டம்	7.8
		கொத்மலை	தைத்த ஆடைக் கைத்தொழில்	1.66
			பாதுகாப்பான இல்லத்தில் சிவப்பு மிளகாய் பயிரிடல்	4.47
			சிறிய நிர்வாகத் தொழில் முயற்சியாளர்களின் மாதாந்த வருமானத்தை அதிகரித்தல்	7.5
		ஹங்குராங்கெத	விதை போஞ்சி செய்கையாளர்களின் வருடாந்த வருமானத்தை அதிகரித்தல்.	12.75
			பெயார்ஸ் செய்கையாளர்களின் வருடாந்த வருமானத்தை அதிகரித்தல்.	0.8
			சணல் தயாரிப்பை ஊக்குவித்தல்	2.65
		முழு மாவட்டமும் உள்ளடங்கும் வகையில்	நுவரெலியா மாவட்ட பூ செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரித்தல்.	21.175
		கொத்மலை	சிறியளவிலான தொழில் முயற்சியாளர்களின் மாதாந்த வருமானத்தை அதிகரித்தல்.	7.5
2	**பதுளை**	முழு மாவட்டமும் உள்ளடங்கும் வகையில்	ஏற்றுமதிக்கான அலங்காரப் பூக்கள் மற்றும் செடிகள் உற்பத்தி	29.39
மொத்தம்				**138.507**

தொ. இல.	ஒப்பந்தத் திகதி	ஒப்பந்தத் தரப்பினர்	ஒப்பந்த நோக்கங்கள்
01	2018.07.25	I. குடாவ சிங்கராஜ சுற்றுலாச் சேவை மற்றும் கித்துல் உற்பத்தி கிராமசக்தி மக்கள் இயக்கம். II. காகீல்ஸ் கம்பனி.	1. கித்துல் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல். 2. கித்துல் சார்ந்த உற்பத்திகளுக்கு நிலையான விலையை வழங்குதல். 3. கித்துல் சார்ந்த உற்பத்திகளுக்கான சந்தையை விரிவுபடுத்தல்
02	2018.07.25	I. வரையறுக்கப்பட்ட எலபாத கெஹெல்ஓவிடிகம/ கிராமசக்தி மக்கள் சங்கம் II. சதாஹரித பெருந்தோட்டக் கம்பனி	1. மரக்கறிகள் மற்றும் பழங்களில் நீரிழப்புச் செய்து பொதியிடல்.
03	2018.07.11	I. வரையறுக்கப்பட்ட வெலிமடை பூ செய்கையாளர்களின் / கிராமசக்தி மக்கள் சங்கம் II. வரையறுக்கப்பட்ட ஹேலீஸ் கம்பனி	1. ஏற்றுமதிக்குப் பொருத்தமான பூ செய்கையாளர்களை உருவாக்குதல். 2. உள்நாட்டு பூ செய்கையாளர்களை ஊக்குவித்தல்.
04	2018.07.11	I. நுவரெலியா மாவட்ட பூ மற்றும் செடி வழங்குனர்களின் கிராமசக்தி சங்கம். II. வரையறுக்கப்பட்ட ஹேலீஸ் கம்பனி	1. ஏற்றுமதிக்குப் பொருத்தமான பூ செய்கையாளர்களை உருவாக்குதல். 2. உள்நாட்டு பூ செய்கையாளர்களை ஊக்குவித்தல்.
05	2018.07.11	I. கல்கடபதன பல்பயிர் உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் கிராமசக்தி சங்கம். II. Kiyota Coffee Company PVT Ltd.	1. மக்கள் மத்தியில் கோப்பிப் பயிரை ஊக்குவித்தல். 2. ஏற்றுமதிக்குப் பொருத்தமான கோப்பி உற்பத்தி. 3. உற்பத்திக்கு உறுதியான விலை-யொன்றை வழங்குதல்.
06	2018.07.11	I. அம்பன்கங்கை வெனிலா செய்கையாளர்களின் கிராமசக்தி சங்கம் II. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் Mccormic Global Lngredients Ltd	1. வெனிலா செய்கையை நாட்டினுள் பெருகச் செய்தல். 2. வெனிலா செய்கையாளர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தல்.
07	2018.06.13	I. வரையறுக்கப்பட்ட கோன்கடவல பூசணிக்காய் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கையாளர்களின் கிராமசக்தி சங்கம் II. வரையறுக்கப்பட்ட காகீல்ஸ் கம்பனி	1. ஏனைய பயிர்கள்/பூசணிக்காய் விவசாயிகளுக்கு உறுதியான விலையினை வழங்குதல். 2. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
08	2018.12.20	I. வரையறுக்கப்பட்ட ரஜரட்ட கப்றுக கிராமசக்தி கம்பனி II. வரையறுக்கப்பட்ட ஹேலீஸ் தனியார் கம்பனி	1. தென்னந் தும்பு சார்ந்த தயாரிப்புகளுக்கு சந்தையில் உயர்ந்த பெறுமதியைப் பெற்றுக் கொடுத்தல்.
09	2018.12.20	I. வரையறுக்கப்பட்ட ஹிங்குராங்கொடை சிரட்டை/சிரட்டைக் கரி வழங்குனர்களின் கிராமசக்தி மக்கள் கம்பனி. II. வரையறுக்கப்பட்ட ஹேலீஸ் தனியார் கம்பனி	1. சிரட்டைக் கரி வழங்குனர்களை ஊக்குவித்தல்.
10	2018.12.20	I. வரையறுக்கப்பட்ட வெல்லாரகம கிராமசக்தி மக்கள் சங்கம் II. சீஆர் எக்ஸ்போட் தனியார் கம்பனி.	1. மரக்கறி மற்றும் பழங்கள் உற்பத்திக்கு உரிய விலையை வழங்குதல். 2. உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்குதல்.
11	2018.12.20	I. வரையறுக்கப்பட்ட கனுலஸ்வெவ கிராமசக்தி மக்கள் சங்கம். II. வரையறுக்கப்பட்ட ஸ்மோல் டெய்ரி டெவலொப்மன்ட் தனியார் கம்பனி	1. பாற் பசுக்களின் உணவுப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குதல்.


2018.12.31 ஆந் திகதியில் நிதி முன்னேற்றம்
செலவினங்கள் செலவு விடயங்களுக்கு ஏற்ப கீழே காட்டப்பட்டுள்ளன.

விபரம்	தொகை
001-2--611-2202	
1000 கிராமசக்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 894 கிராமங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ஒரு கிராமத்திற்கு 01 மில்லியன் ரூபாய் வீதம் வழங்குதல்.)	893,480,000.00
முகாமைத்துவ முறைமைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி - நுவரெலியா மாவட்டம்	208,570.00
கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் - காலி மாவட்டம்	570,000.00
கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் - அம்பாறை மாவட்டம்	320,000.00
மொத்தம்	**894,578,570.00**

1-2-6-11-2509	
1000 கிராமசக்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 120 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்	120,520,000.00
விசேட உற்பத்திக் கிராமங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்	
பதுளை மாவட்டம்	29,931,612.00
நுவரெலியா மாவட்டம்	101,617,000.00
அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவுகளைச் செலுத்துதல்	20,874,000.00
கிராமசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிர்வாகச் செலவுகளாக மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிதி	33,100,000.00
பலுகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் பாலர் பாடசாலைகள் மற்றும் சேவை நிலையங்கள் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி	1,500,000.00
அநுராதபுரம் மாவட்டம் நுவரகம் பலாத்த பிரதேச செயலகப் பிரிவில் 291 விகார கல்லஞ்சி பால் உற்பத்திக் கிராமம் யோகட் கோப்பை சீலர் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு	2,000,000.00
பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ. 500,000 வீதம் வழங்குதல்.	12,500,000.00
மாகாண மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதற்கு ஏனைய நிகழ்ச்சிகளுக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடு	4,406,339.70
கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்	1,691,355.00
முடிவுறுத்தப்படாத கருத்திட்டங்கள் 2017	19,977,345.59
	359,558,152.29

2018.12.31 ஆந் திகதியில் நிதி முன்னேற்றம்

2018 ஆம் ஆண்டிற்கு கிராமசக்தி மக்கள் இயக்கத்திற்குக் கிடைத்த ஒதுக்கீடு மில்லியன்	ரூ.மில். 1460
2018.12.31 ஆந் திகதிக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகளின் அளவு மில்லியன்	ரூ.மில்.1254
எஞ்சியுள்ள ஒதுக்கீட்டின் அளவு	ரூ.மில். 206



கிராமசக்தி மக்கள் இயக்கத்தினால் ஆற்றப்படும் ஏனைய விசேட பணிகள்

2025 ஆம் ஆண்டாகும்போது பால் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் ஆரம்பக் கல்வியைப் பெறும் பிள்ளைகளின் போசாக்கினை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களை முன்னிறுத்தி ஆரம்பக் கல்வியைப் பெறும் பாடசாலை மாணவர்களுக்கு காலை நேர பாலுணவை வழங்கும் வேலைத்திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட PS/CP/27/2018 ஆம் இலக்க 2018.07.13 ஆந் திகதிய அமைச்சரவை நிருபத்தைச் செயற்படுத்துவதற்கு கொள்கையளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு, கல்வியமைச்சு மற்றும் கிராமசக்தி மக்கள் இயக்கம் என்பன ஒன்றிணைந்து செயற்படுத்தவுள்ள இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலைபேறான நோக்கு கருத்திட்டம்

அறிமுகம்

2015 ஆம் ஆண்டில் இலங்கை உட்பட ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்துவ நாடுகளினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) 17 மற்றும் 2030 ஐ இலக்காகக் கொண்ட நிகழ்ச்சி நிரல் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தச் சட்டத்தினுள் அனைத்து நாடுகளும் 2030 க்கான அவற்றின் நோக்கினைச் சமர்ப்பிக்கவுள்ளதுடன், நிலைபேறான அபிவிருத்திக்கான முன்னேற்றம் தொடர்பான வருடாந்த தேசிய அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேற்குறிதத நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக 2017 ஜனவரி மாதம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி விசேட நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு பல்வேறுபட்ட துறைகளைச் சேர்ந்த 43 நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன் அதன் தலைவராக பேராசிரியர் மொஹான் முனசிங்க அவர்கள் செயற்படுகிறார்.

அந்தக் குழுவினால் 2030 ஆகும்போது இலங்கை பூர்த்தி செய்ய வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான வரைவொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது கடந்த ஆகஸ்ட் 06 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த வரைவு விவசாயத்துறை, உணவு, கல்வி, எரிசக்தி, சுகாதாரம், சமுத்திர வளங்கள், போக்குவரத்து, நகர அபிவிருத்தி மற்றும் பௌதீகத் திட்டங்கள், நீரியல் போன்ற பல துறைகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக எதிர்வரும் 12 வருடங்களினும் நாட்டின் நீண்ட கால பொருளாதார, சமூக மற்றும் சூழல் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பதற்குத் தேசியரீதியாக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது முயற்சி இது என்பதுடன், நிலைபேறான நோக்குப் பிரிவு தற்போது பல்வேறுபட்ட துறைகளை உள்ளடக்கி பல நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.

நிலைபேறான அபிவிருத்திப் பிரிவினால் பல்வேறுபட்ட துறைகளில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கிழே காட்டப்பட்டுள்ளன.

நோக்கம்

- வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் நிலை பேறான இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான மக்கள் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் வரைவினை மேலும் மெருகூட்டி அதனூடாக நிலைபேறான இலங்கையை உருவாக்குதல்

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

01. கல்வி

01.1 பல்கலைக்கழகக் கலந்துரையாடல்கள்

கல்வித் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தற்போது நாம் பல வேலைத்திட்டங்களை மேற் கொண்டுள்ளதுடன் இந்த வேலைத்திட்டங்களில் பல்கலைக்கழகங்களைத் தொடர்புபடுத்தி தொடர் கலந்துரையாடல்கள் பலவற்றை கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் நடாத்துவதற்கு நிலைபேறான நோக்குப் பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கல்வி தொடர்பான பல விடயங்கள் இவற்றில் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

I. பாடசாலையைப் போன்றே பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ள சிக்கலான நிலைமைகள் தொடர்பாக.

II. உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக

III. தற்போது காணப்படும் பாடசாலைப் பாடத்திட்டம் மற்றும் அது திருத்தப்பட வேண்டிய முறைமை தொடர்பாக.

IV. பாடசாலை மாணவர்களின் உள ஆரோக்கிய அபிவிருத்தி தொடர்பாக

V. அனைத்து மாணவ சமூகத்தினரதும் எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றிக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக.









மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மேலதிகமாக மேலும் பல விடயங்கள் தொடர்பாக இக்கலந்துரையாடல்களில் கவனஞ் செலுத்தப்பட்டதுடன் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் இந்த நிலைபேறான நோக்கு வரைவு தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தனர். அவ்வாறே பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டின் எதிர்காலத்திற்காக மேற்கொள்ளும் இந்த தேசிய வேலைத்திட்டத்திற்கு அவர்களின் அதிகபட்ச ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் இந்த வரைவு மேலும் எவ்வாறு வளப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் கருத்துக்களைத் தெரிவித்தனர். அவர்கள் முன்வைத்த கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை எமது இரண்டாவது வரைவில் உள்ளடக்குதல் மற்றும் அவை நடைமுறைரீதியாக எவ்வாறு இடம்பெறுகிறது என்பது தொடர்பாக எமது பிரிவினால் மேலும் விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ்வாறு நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கி தொடர் கலந்துரையாடல்கள் பல நடாத்தப்பட்டுள்ளதுடன் மேலும் சில பல்கலைக்கழகங்களில் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு எமது பிரிவு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தற்போது நடாத்தப்பட்டுள்ள பல்கலைக்கழகக் கலந்துரையாடல்கள்:-


பல்கலைக்கழகம்	நடாத்தப்பட்ட திகதி
கொழும்பு பல்கலைக்கழகம்	2018.08.20
சப்ரகமுவ பல்கலைக்கழகம்	2018.08.21
திறந்த பல்கலைக்கழகம்	2018.08.23
களனி பல்கலைக்கழகம்	2018.09.04
பேராதெனிய பல்கலைக்கழகம்	2018.09.05
அழகியல் பல்கலைக்கழகம்	2018.09.06
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	2018.09.07
ருஹுணு பல்கலைக்கழகம்	2018.09.13
வயம்ப பல்கலைக்கழகம்	2018.09.21
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்	2018.10.16
கிழக்குப் பல்கலைக்கழகம்	2018.10.17

01.2 இலங்கை சட்டக் கல்லூரி விவாதப் போட்டி

இலங்கை சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் இலங்கை சட்டக் கல்லூரியில் விவாதப் போட்டியொன்று நடாத்தப்பட்டதுடன் அதன் கருப்பொருள் நிலைபேறான நோக்கு வரைவில் காணப்படும் குறுக்குவெட்டு கருப்பொருளாகும். புதுக்கடை விவாதம் எனப் பிரசித்தி பெற்ற இந்த விவாதப் போட்டியின் பிரதம அதிதியாக முன்னாள் நீதிபதி மெக்ஸ்வெல் பரணகம அவர்கள் கலந்துகொண்டதுடன் வருடாந்தம் இடம்பெறும் இந்த விவாதப் போட்டி இம்முறை எமது பிரிவினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டது. இதன்போது அவர்களுக்கு நிலைபேறான நோக்கு மூலம் மேற்கொள்ளப்படும் தேசிய பணி தொடர்பான புரிதலைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.









இந்த விவாதத்தில் சட்டக் கல்லூரி வெற்றி பெற்றதுடன், இதன்போது அவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற குழுவுக்கு மேலதிகமாக சிறந்த பேச்சாளர், திறமையான அங்கத்தவர் போன்ற பல்வேறுபட்ட திறமைகளை கொண்டவர்களுக்கு இதன்போது பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

01.3 ஊடகச் செயலமர்வு

நிலைபேறான அபிவிருத்திப் பிரிவு, அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் லேக் ஹவுஸ் நிறுவனம் என்பன ஒன்றிணைந்து ஊடகச் செயலமர்வொன்றை ஏற்பாடு செய்ததுடன், அது வெகுசன ஊடகத்துறை மாணவர்கள் மற்றும் ஊடகத் துறையில் ஈடுபட்டுள்ளோரை மையப்படுத்தி நடாத்தப்பட்டது. இதில் இலங்கை வெகுசன ஊடகவியல் கல்லூரி பணிப்பாளர் ஷான் விஜேதுங்க, இலங்கை சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளர் சீ. தொடாவத்த, தொழில்சார் புகைப்பட நிறுவனத்தின் தலைவர் பேர்டி குணசேகர அவர்கள், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்திப் பதிப்பாசிரியர் விஷாக்கா வேஹெல்ல அவர்கள் ஆகிய விசேட விரிவுரையாளர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

I. பகுப்பாய்வுடன் கூடிய உலக செய்தி அறிக்கையிடல் மற்றும் தற்கால நேர்மறையற்ற அபிவிருத்தி அறிக்கையிடலை அர்த்தமுள்ளதாக மெருகூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக.

II. சவால் மிகுந்த, நிலைபேறான, பசுமைப் பொருளாதாரமொன்றை நோக்கிச் செல்லும் பயணத்தில் ஊடகவியலாளரிடம் காணப்பட வேண்டிய அறிக்கையிடல் சமநிலை தொடர்பாக.

III. ஆண் பெண் சமூக நிலைமை மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் பயணத்தில் விசேட தேவையுடை நபர்களுக்கு சமூகத்தில் காணப்பட வேண்டிய சமத்துவம் தொடர்பான மிகவும் முக்கியமான அம்சங்கள் தொடர்பாக.

IV. உள்நாட்டு வெளிநாட்டு புகைப்படமாக்கலில் நேர்மறை வகிபாகம் மற்றும் ஆழ்ந்த கண்களினால் மனிதாபிமானத்தை முன்னிறுத்திய வளர்ச்சியுடன் கூடிய புகைப்படமாக்கல் தொடர்பாக.

V. பரந்த அறிவினை மாணவர்களுக்கு வழங்கவும் அந்த அறிவு மூலம் நிலைபேறான இலங்கையை நோக்கி நாம் செல்லும் பயணத்தில் அவர்களுக்கு வழங்க முடியுமான பங்களிப்பு தொடர்பான விளக்கத்தையும் எமது பிரிவினால் வழங்க முடிந்தது.






01.4 கட்டுரைப் போட்டி

தேசிய நிலைபேறான கலந்துரையாடலை வெளியிட்டு வைப்பதை முன்னிட்டு மூன்று மொழிகளிலும் அனைத்து இலங்கையருக்கும் திறந்த கட்டுரைப் போட்டியொன்று நிலைபேறான நோக்கு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டது. 19 வயதுக்கு கீழ் போட்டியாளர்களுக்கு "நான் காணும் எனது எதிர்காலம்", 19 வயதுக்கு மேற்பட்ட போட்டியாளர்களுக்கு "தேசிய தேவைப் பாடுகளைப் பூர்த்தி செய்யும் நிலைபேறான எதிர்காலத்திற்கான மார்க்கம்" என்ற கட்டுரைத் தலைப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் பணப் பரிசில் களும் வழங்கப்படவுள்ளன. இப்போட்டி மூலம் மக்களுக்கு அவர்களது திறமைகளை விருத்தி செய்து கொள்ளவும் அவர்கள் எழுதிய கருத்துக்களை நிலைபேறான நோக்கிற்கான தேசிய பயணத்தில் பங்களிக்கச் செய்யவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

මම දකින මගේ හෙට දීප ව්‍යාප්ත රචනා තරගය



இதற்கு மேலதிகமாக களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்து குறுந் திரைப்படப் போட்டியொன்றை நடாத்துவதற்கு தற்போது எமது பிரிவு ஆயத்தங்கள மேற்கொண்டு வருவதுடன், எமது பிரிவு இதன் மூலம் நிலைபேறான நோக்கு மூலம் ஆற்றப்படும் பணியை சமூகமயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது.

02. சுகாதாரம்

02.01. தற்கொலையைத் தடுப்பதற்காக நிறுவப்படும் 1926 உளவளத்துணைச் சேவை

இலங்கையரின் உள ஆரோக்கிய விருத்தி மற்றும் தற்கொலையைக் குறைப்பதற்கு நிலைபேறான நோக்கு பிரிவு **Softlogic** நிறுவனத்துடன் இணைந்து சமூக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றை ஏற்பாடு செய்து தற்போது செயற்படுத்தியுள்ளது. தேசிய உளச் சுகாதார நிறுவனம் இதற்காக 1926 எனும் தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தி அவர்களின் பங்களிப்பை வழங்குவதுடன் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் 1926 எனும் தொலைபேசி இலக்க அழைப்பு வழியை இலவச சேவையாக வழங்க உதவுகிறது. இது இலங்கையில் உள ஆரோக்கியத் துறையின் முன்னேற்றத்திற்கு மிகவும் பங்களிக்க முடியுமான ஒரு முயற்சி என்பதால் இந்த வேலைத்திட்டத்திற்கு எமது பிரிவு அதிகபட்ச ஒத்துழைப்பினை வழங்கி வருகிறது.

இதற்கு மேலதிகமாக சுகாதாரத் துறைக்கு ஏற்புடைய மேலும் பலரைத் தொடர்புபடுத்தி பல நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்காலத்திலும் நடாத்தப்படவுள்ளன.

03. சமுத்திர வளங்கள்

03.1 தேசிய நிலைபேறான நோக்கிற்காக கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர் கலந்துரையாடல்கள் பல மேற்கொள்ளப்பட்டதுடன் வரைவிலுள்ள துறைகளில் ஒரு துறையான சமுத்திர வளங்கள் துறை தொடர்பான விசேட கலந்துரையாடலொன்றை கடற்படைத் தலைமையகக் கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பாக நடாத்த முடிந்ததுடன் இக்கலந்துரை யாடலில் கடற்படைப் பதவிநிலைத் தலைமை அதிகாரி பிரியந்த ஸ்ரீலால் அவர்கள் உட்பட கடற்படை பதவிநிலைப் பணிப்பாளர் அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதன்போது சமுத்திர வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான பெறுமதி யான கருத்துக்களும் முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன. அவற்றில் சில கீழ்வருமாறு.

I. சமுத்திர வளங்களைப் பாதுகாப்பதற்கு அமைச்சு ஒன்றை நிறுவுதல்.

II. சமுத்திர வளங்கள் ஆராய்ச்சி நிறுவனமொன்றை நிறுவுதல்.

III. உயிருள்ள மற்றும் உயிரற்ற வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாக்க வேண்டிய பிரதேசங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்தல்.

IV. சூழல் நட்பான மீன்பிடிக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு மீனவர்களை ஊக்குவித்தல்.

V. சமுத்திர வளங்கள் மூலம் உரிய முதலீட்டைச் செய்து அதனூடாக அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

VI. மீன் வளர்ப்பு தொடர்பாக கவனஞ் செலுத்துதல்.

VII. பல்வேறுபட்ட மீன் உணவுச் சந்தைகளை அறிமுகப்படுத்தி அதனூடாக பிரதான பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்தல்.

VIII. சமுத்திர வளங்கள் தொடர்பான மற்றும் சமுத்திரம் தொடர்பான கல்வியினைப் பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்ளடக்குதல்.

IX. சுற்றுலாத்துறையைப் பொறுப்புடைமையுடன் செயற்படுத்தல்.

மேற்குறித்த முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக நிலைபேறான நோக்கினை மேலும் வளப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.





04. விவசாயத்துறை

04.01. தேயிலைக் கைத்தொழில் மற்றும் தேயிலைச் சங்கங்களின் அங்கத்தவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்

I. விவசாயத்துறையின் கீழ் இலங்கை தேயிலை சங்கங்களின் தலைவர் லுசில் விஜேவர்தன அவர்கள் மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழில் தலைவர்கள் உட்பட தேயிலைச் சங்கங்களின் அங்கத்தவர்களுடன் இலங்கையில் தேயிலைக் கைத்தொழில் தொடர்பாக கலந்துரையாட லொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதுடன் இதன்போது தேயிலைக் கைத் தொழிலில் ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பல முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

II. விவசாயத்துறைக்கு உரிய இடத்தை வழங்கி தேயிலை விற்பனைக்குப் பொருத்தமான சந்தையொன்றை உருவாக்க வேண்டும் எனவும்.

III. தேயிலை ஏற்றுமதி மூலம் போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும்.

IV. தற்போது காணப்படும் வளங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும்.

V. சுற்றுலாக் கைத்தொழில் மூலம் தேயிலைக் கைத்தொழிலை முன்னேற்ற முடியும் எனவும்.

VI. நவீன சந்தைகளைத் தேடி தேயிலைக் கைத்தொழில் மூலம் முன்னேற்றகரமான பொருளாதார மொன்றை நோக்கி நெருங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானது எனவும் பல முன்மொழிவுகள் இதன்போது முன்வைக்கப்பட்டன.





இவ்வாறு விவசாயத்துறையின் அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில் கருத்துக்களைப் பெற முடிந்ததுடன், எமது பிரிவினால் வரைவு ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்பட்ட பின்பு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க எதிர்பார்ப்பதாக இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டது.

05 . அனைத்து துறைகளும் உள்ளடங்கும் வகையில்

05.01. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல்

தேசிய நிலைபேறான நோக்கு தொடர்பாக புத்திஜீவிகளின் கருத்துக்கள் மற்றும் முன்மொழி வுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அங்கத்தவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடாத்துவதற்கு எமது பிரிவு நடவடிக்கை

மேற்கொண்டது. அந்தக் கலந்துரையாடல் மூலம் நிலைபேறான கலந்துரையாடலொன்றில் நுழையும்போது நாட்டில் காணப்படும் அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்துவதற்குத் தேவையான பல விடயங்களை வெளிப்படுத்திக் கொள்ள முடிந்ததுடன், நாட்டில் சட்டரீதியாக மாற்றமடைய வேண்டிய பக்கத் தோற்றங்கள் தொடர்பாகவும் விசேட கவனஞ் செலுத்த வேண்டும் என கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதன்போது எமது பிரிவின் இரண்டாவது வரைவினை உருவாக்குவதற்கான முக்கியமான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.





05.02. நிலைபேறான நோக்கின் இன்னுமொரு நடவடிக்கையாக மாவட்டக் குழு அங்கத்தவர்களைப் பெயரிடுவது இடம்பெற்றது. அதற்கமைய அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று நிலை பேறான நோக்கு தொடர்பாக சமூகத்தின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டு அவர்களை விழிப்புணர்வூட்டுவது தற்போது மேற்கொள்ளப்படுவதுடன், இதன் முதற் கட்டமாக கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு அங்கத்தவர்களின் கூட்டம் கொழும்பு பொது நூலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கல்வித் துறை தொடர்பாக அதிக கவனஞ் செலுத்தப்பட்டதுடன், அரசியல், சமய கருத்து வேறுபாடுகளின்றி நாட்டின் அனைத்து நபர்களையும் இந்த நிலைபேறான கலந்துரையாடலில் தொடர்புபடுத்திக் கொள்வது பொருத்தமானது என்ற கருத்தோட்டம் வெளிப்படுத்தப்பட்டது. மேலும்,

I. நிலைபேறான கலந்துரையாடல் வேலைத்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு நாட்டினுள் மக்கள் கருத்தினை உருவாக்க வேண்டும் எனவும்,

II. நிலைபேறான நோக்கு மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் தொடர்பாக இதன்போது மேலும் பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டதுடன், இலங்கையின் பொருளாதாரம் உட்பட அதிகமான தலைப்புக்கள் தொடர்பாகவும்,

III. பொது மக்கள் என்ற வகையில் அவர்களுக்கு காணப்படும் பிரச்சினைகள், சிக்கல்கள் மற்றும் இச்செயற்பாட்டை வெற்றி பெறச் செய்வதற்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப் பட்டன.

இவ்வாறு அனைத்து மாவட்டங்களிலும் சமூகத்தினரிடம் சென்று அவர்களது பிரச்சினை களை இனங்கண்டு அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து நிலைபேறான இலங்கைக்கான தேசிய முயற்சி ஊடாக பலமான நாடொன்றைக் கட்டியழெப்புவதற்கு நிலைபேறான நோக்குப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்கிறது.

- அத்துடன் எதிர்காலத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மற்றும் இலங்கை தொழிலாளர் சங்கத்துடனான கலந்துரையாடல்கள், ஆண் பெண் சமூக செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு, நிலைபேறான நோக்கு குறுந்திரைப்படப் போட்டி, Suicide Prevention Program போன்ற நிகழ்ச்சித்திட்டங்களையும் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நிலைபேறான நோக்குப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்கிறது.









"SMART SRI LANKA" கருத்திட்டம்

அறிமுகம்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் அவரின் முழுமையான கண்காணிப்பின் கீழ் ஸ்மாட் ஸ்ரீலங்கா கருத்திட்டம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகிறது.


Smart Sri Lanka 500 இளைஞர் மன்றங்களை உருவாக்கும் கருத்திட்டம் ஊடாக டிஜிட்டல் நவீனமயப் படுத்தலின் உதவியுடன் தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல், பங்கேற்பு அணுகல் மற்றும் கொள்திறன் மேம்பாடு ஊடாக "அனைவருக்கும் போதிய, நிறைவான, நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, நிறைவான, உற்பத்தித்திறன் மிக்க, சிறப்பான தொழில் ஊக்குவிப்பு" எனும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை (இலக்கம் 08) முன்னிலைப்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

நோக்கங்கள்

- நிலைபேறான நோக்கங்களை கிராமிய மட்டத்தில் செயற்படுத்துவதற்காக நிலைபேறான 17 நோக்கங்கள் ஊடாக இளம் சமூகத்தினரின் உதவியுடன் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்
- விஞ்ஞான ஆராய்ச்சிகள் மற்றும் நவீனமயப்படுத்தல் நோக்கங்கள் ஊடாக தொழில் முயற்சியாளர் களுக்காக புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் மற்றும் தொழில்களை சிறப்பாக நடாத்திச் செல்வதற்கு இளைஞர் சமூகத்திற்கு உதவுதல்.
- தொழில் சமூகத்திற்காக புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் அவற்றில் ஈடுபடுத்தல்.

பிரதான பணிகள்

- 332 பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் 168 தொழிற் பயிற்சி நிறுவனங்களைத் (VTA, NAITA, DTET etc) தொடர்புபடுத்தி நாடு முழுவதும் 500 இளைஞர் மன்றங்களை நிறுவுதல்.
- ஒரு மாவட்டத்தில் 20 இளைஞர் மன்றங்களை நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது. (20 x 24 = 480 SMART Leaders) (480x100= 48 000)
- இளைஞர் மன்றங்களை நிறுவுவதற்கான இளைஞர் யுவதிகளின் பங்கேற்பு கிராம அலுவலர்களின் தலைமையில் இடம்பெறுகிறது.



- இளைஞர் மன்றங்களில் அங்கத்துவம் பெற்று தலைமை வகிக்கும் இளைஞர் யுவதிகள் முன்னோடிகளாகச் செயற்படுவதுடன் அவர்கள் தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்களை நோக்கி வழிகாட்டப்படுகின்றனர்.

- இச்செயற்பாடு நாடு முழுவதும் 25 மாவட்டங்களில் தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்களை நிறுவி செயற்படுத்தப்படுகிறது.

- "இலங்கையின் இளைஞர்களை நவீனமயப்படுத்தலில் மிகவும் தரமான மட்டத்தை நோக்கி அழைத்து வரும் நோக்குடன், இலங்கை தொழில் வழிகாட்டல் நிலையம் (SLICG) மற்றும் ஸ்மாட் ஸ்ரீலங்கா என்பன ஒன்றிணைந்து நவீன தொழிநுட்பப் பங்களிப்புடன் வழிகாட்டல்களை வழங்கி வேலையில்லாத இளம் சந்ததியினரை வலுவூட்டுதல் மற்றும் புதிய எண்ணக்கருக்கள், வாய்ப்புக்கள் ஊடாக புத்தாக்கமிக்க தொழில்களுக்கான வாயிலைத் திறந்து விடுதல்"

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

- எமது உற்பத்திகள் மற்றும் கைத்தொழில்களை அறிமுகப்படுத்தல் (தற்போது 11 கருத்திட்டங்களை மகாவலி அதிகார சபையுடன் இணைந்து செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.)

- புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- MARK FED நிறுவனத்தை சர்வதேச பின்னணியுடையதாக மாற்றியமைத்தல்.
- கண்டி மாவட்ட SMART SriLanka இளைஞர் மன்ற செயலமர்வினை சிறப்பாக நிறைவு செய்தல்.
- அநுராதபுர மாவட்ட SMART Sri Lanka இளைஞர் மன்ற செயலமர்வு சிறப்பாக நிறைவுற்றது.





Smart நோக்கங்களைத் தயாரிப்பது தொடர்பான விழிப்புணர்வு குழுச் செயற்பாடு - majic pole



SWOT சட்டகம் மூலமான செயன்முறைப் பயிற்சிகள்



குழு புகைப்படம்

“எழுச்சி பெறும் பொலொன்னறுவை” மற்றும் “சிரிசர பிவிசும” கருத்திட்டப் பிரிவு

அறிமுகம்

"எழுச்சி பெறும் பொலொன்னறுவை" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2015.09.09 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப ஐந்து ஆண்டுத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் மொத்த முதலீடு 60,000 மில்லியன் ரூபாய் ஆகும் என்பதுடன், 2018 ஆம் ஆண்டினுள் 10,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடுகள் 19 பிரதான அபிவிருத்தித் துறைகளின் கீழ் முதலீடு செய்யப்பட்டது.

"சிரிசர பிவிசும" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017.01.04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்கான ஐந்து ஆண்டுத் திட்டத்திற்கு அமைவாக 5,000 மில்லியன் ரூபாய் முதலீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குளங்கள் புனரமைப்பு, யானை வேலிகளை அமைத்தல் மற்றும் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டில் 1,000 மில்லியன் ரூபாய் முதலீடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கருத்திட்டங்கள் முப்படையினர் ஊடாக அரசின் ஏனைய நிறுவனங் களினால் செயற்படுத்தப்படுவது முக்கிய அம்சமாகும்.

அத்துடன் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி அலுவலகத் திற்கு முன்வைக்கப்படும் தகவல் கோரிக்கைகளுக்கு இப்பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படு வதுடன், ஜனாதிபதி அலுவலகத்தின் தகவல் அதிகாரியாக மேலதிக செயலாளர் பீ.கே.எஸ். ரவீந்திர அவர்கள் செயற்படுகிறார்.

தொலைநோக்கு

நிலைபேறான அபிவிருத்தி ஊடாக வளமான, ஆரோக்கியமான, அறிவு ஞானம்மிக்க மக்களை உருவாக்குதல்.

செயற்பணி

மாவட்டத்தின் சமூக உட்கட்டமைப்பு வசதிக் குறைபாடுகளை மக்களின் பங்கேற்புடன் சரியாக இனங்கண்டு அவற்றுக்குத் தேவையான நிதி மற்றும் பௌதீக வளங்களை உயர்ந்த பெறுமதியைப் பெறும் வகையில் பயன்படுத்தி நிலையான, உயர்வான வாழ்வாதாரத்தை மக்களுக்கு வழங்குவதற்குத் தேவையான சமூக மற்றும் பொருளாதாரச் சூழலைக் கட்டியெழுப்புதல்.

நோக்கங்கள்

- பொலொன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் முன்னேற்றகரமான சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அமைப்பினை உருவாக்குதல்.
- அந்த மாவட்ட மக்களின் வாழ்வாதார மார்க்கங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- ஜனாதிபதி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் தகவல் கோரிக்கைகளுக்கு 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய காலப்பகுதியினுள் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

2018 ஆம் ஆண்டின் அடைவுகள்

1. "எழுச்சி பெறும் பொலொன்னறுவை" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

தொடர் இலக்கம்	அபிவிருத்தித் துறை		கருத்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீடு ரூ.மில்.	2018.12.31 ஆந் திகதியில் செலவு. ரூ.மில்.
	கல்வி	பாடசாலை அபிவிருத்தி	80	541.54	541.45
		பிரிவெனாக்கள் அபிவிருத்தி	11		
	சுகாதாரம்		31	423.07	423.07
	குடிநீர் வழங்கல்		23	1233.13	1233.12
	வீதி அபிவிருத்தி	நகர வீதிகள்	11	3999.30	2584.00
		பிரதேச வீதிகள்	58		617.85
		கிராமிய வீதிகள்	408		797.43
	நீர்ப்பாசனம்		28	59.84	59.84
	கமநல சேவைகள்		10	155.11	155.09
	விவசாயம்		11	101.53	101.52
	கால்நடை வளங்கள் அபிவிருத்தி		02	1.80	1.80
	கூட்டுறவு அபிவிருத்தி		12	29.20	29.15
	தொழில் முயற்சி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி		4,225	405.92	405.92
	வனப் பாதுகாப்பு		01	4.67	4.66
	வனசீவராசிகள் பாதுகாப்பு		01	2.23	2.23
	காணி மற்றும் வீடமைப்பு		400	177.40	177.35
	விளையாட்டு மற்றும் கலாசாரம்		31	87.52	87.51
	மதஸ்தலங்கள் அபிவிருத்தி		57	101.30	101.26
	தொல்பொருளியல்		08	5.50	5.46
	நகர அபிவிருத்தி		29	1974.64	1908.80
	பொது வசதிகள்		39	647.41	647.40
	சமூக வலுவூட்டல்		05	7.26	7.26
	நிர்வாகச் செலவுகள்	மாவட்டச் செயலகம்		21.63	20.63
		ஜனாதிபதி அலுவலகம்		20.00	19.75
மொத்தம்			**5482**	**10000.00**	**9932.55**

➢ **கல்வி (பாடசாலை அபிவிருத்தி)**

பாடசாலை அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்
ஒரு மாடி வகுப்பறைக் கட்டிடங்கள்	14	22.34
இரண்டு மாடி வகுப்பறைக் கட்டிடங்கள்	14	62.27
மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடங்கள்	07	95.11
வாசிகசாலைக் கட்டிடங்கள்	02	7.54
விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடங்கள்	01	12.20
குடிநீர் வழங்கல்	04	7.84
சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள்	05	5.74
கட்டிடங்கள் திருத்தம்	08	27.42
பிரதான கேட்போர் கூடங்கள்	02	29.55
உள்ளக விளையாட்டு அரங்குகள், நீச்சல் தடாகங்கள்	06	70.34
ஏனையவை	17	15.30
மொத்தம்	**80**	**355.65**



விலயாய மத்திய மகா வித்தியாலயம்



சீவலி மாதிரிக் கனிஷ்ட வித்தியாலயம்



தோபவெவ மகா வித்தியாலயம்



தம்பால அல் ஹிலால் முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்

➢ **கல்வி (பிரிவெனாக்கள் அபிவிருத்தி)**

பிரிவெனாக்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்
பிக்குமார் விடுதிக் கட்டிடங்கள்	04	43.52
பிக்குமார் தங்குமிடக் கட்டிடங்கள்	02	15.44
பிரிவெனா மண்டபக் கட்டிடங்கள்	01	60.75
ஏனையவை	04	15.63
மொத்தம்	**11**	**135.34**



திம்புலாகலை காசியப்ப மகா பிரிவெனா



லங்காபுர சிரி பெரகும் பிரிவெனா

➢ **சுகாதாரம்**

சுகாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்
வாட்டுகள் நிர்மாணித்தல்	02	64.27
வைத்தியர் உத்தியோகபூர்வ இல்லங்கள்	09	147.61
பிணியாய்வு மற்றும் நிர்வாகக் கட்டிடங்கள்	06	143.44
சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள்	02	3.90
ஏனையவை	05	22.78
மொத்தம்	**24**	**382.00**



வெலிகந்த ஆரம்ப வைத்தியசாலையின் விசேட வைத்திய அலுவலர் உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடத் தொகுதி



பொலொன்னறுவை பொது வைத்தியசாலையில் 120 கட்டில் வாட்டினை நிர்மாணித்தல் - கட்டம் II



ஹிங்குராங்கொடை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அலுவலர் உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடத் தொகுதி



வெலிகந்தை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் பிணியாய்வு மற்றும் நிர்வாகக் கட்டிடம்

- **குடிநீர் வழங்கல்**

இதன் கீழ் 2018 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

தொடர் இலக்கம்	கருத்திட்டம்	மொத்த மதிப்பீட்டின் பெறுமதி ரூ.மில்.	பௌதீக முன்னேற்றம் %
1.	நகரத் திட்டமிடலின் கீழ் குடிநீர் வழங்கல் மற்றும் நீர்க் குழாய்களை இடல்	2240.20,	92%
2.	மெதிரிகிரிய பிசோபுர நீர் விநியோகத் திட்டம்	2957.55,	75%
3.	சோமாவத்திய புனிதப் பிரதேசம் மற்றும் கந்தகடுவ முகாம் பிரதேசத்திற்கு நீர் வழங்கல்	448.88	70%
4.	திம்புலாகலை விகாரை நீர் விநியோகத் திட்டம்	36.51	100%
5.	அரலகங்வில நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தல், அரலகங்வில வைத்தியசாலை மற்றும் தற்போது காணப்படும் விநியோக அமைப்புக்கு நீர் வழங்கல்	133.17	89%
6.	சிறுநீரக நோய் காணப்படும் பிரதேசங்களுக்கு நீர் வடிகட்டும் இயந்திரங்களை வழங்குதல்	84.49	95%
7.	பொலொன்னறுவை மாவட்டத்தில் தற்போது காணப்படும் நீர் சுத்திகரிப்பு அமைப்புக்களுக்கு அத்தியாவசியமான குழாய்கள், ஜெனரேடர் மற்றும் ஏற்புடைய உபகரணங்களை வழங்கி அபிவிருத்தி செய்தல்	147.71	58%
8.	பொலொன்னறுவை மாவட்டத்தில் தற்போது காணப்படும் குழாய்க் கிணறுகளைப் புனரமைத்தல்	14.18	100%
9.	இலங்கை மின்சார சபையுடன் இணைந்து பொலொன்னறுவை மாவட்ட நீர் வழங்கல் முறைமை களுக்கு சூரியப் பெனல்களைப் பொருத்துதல்	60.00	90%
10.	ஹிங்குராங்கொடை பிரதேச செயலகப் பிரிவு கிராமிய நீர் விநியோகத் திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்	112.12	85%
11.	கிராமிய நீர் விநியோகத் திட்டங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்	89.27	75%
12.	நீர் வடிகட்டி மற்றும் குழாய்களைப் பொருத்துதல்	51.99	50%
13.	பாடசாலைகளுக்கு பாதுகாப்பான நீர் வடிகட்டல் உபகரணங்களைப் பொருத்துதல் (123 பாடசாலைகள்)	114.56	100%
எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை		**6490.63**	
2018 ஆம் ஆண்டில் செலவு		**1233.13**	



அரலகங்வில நீர் விநியோகத் திட்ட மறுசீரமைப்பு



சோமாவத்திய நீர்க் கோபுரத்தை நிர்மாணித்தல்

1. நகர வீதி அபிவிருத்தி

நகர வீதி அபிவிருத்தியின் கீழ் 2018 ஆம் ஆண்டில் முதலீடு ரூ.மில். 2,584.00 ஆகும்.

தொடர் இலக்கம்	செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்	மொத்த மதிப்பீட்டின் பெறுமதி ரூ.மில்.
1.	எலஹெர கிரிதலே வீதியை அபிவிருத்தி செய்தல்	3422.98
2.	மன்னம்பிட்டி அரலகங்வில வீதியை அபிவிருத்தி செய்தல்	2049.40
3.	தம்புள்ளை பகமூன கலகஹவெல வீதியை அபிவிருத்தி செய்தல்	1062.68
4.	தெஹியத்தகன்டிய அரலகங்வில வீதியை அபிவிருத்தி செய்தல்	1656.66
5.	மின்னேரிய கல்லோயா வீதியை அபிவிருத்தி செய்தல்	1553.47
6.	ஹபரனை மட்டக்களப்பு வீதியில் பொலொன்னறுவை நகர பிரதேசத்தில் 7.5 கி.மீ தூரத்தை 4 ஒழுங்கைகள் கொண்டதாக அமைத்தல் (திரிக்கொண்டியாமடு வீதி -ஹபரணை - மரதன்கடவல)	1333.20
7.	பொலொன்னறுவை மைத்திரிபால சிறிசேன வீதியின் 2 ஆம் கட்டத்தைப் பொலிஸ் நிலையம் அருகில் வரை நீட்டிப்புச் செய்தல்	1311.87
8.	ஹிங்குராங்கொடை மெதிரிகிரிய வீதியை அபிவிருத்தி செய்தல்	435.24
எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை		**12825.50**



தெஹியத்தகன்டிய - அரலகங்வில வீதி



தம்புள்ளை - பகமூன வீதி

2. பிரதேச வீதி அபிவிருத்தி

- ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை - 58
- நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை - 37
- முதலீடு செய்யப்பட்ட நிதி - ரூ.மில்.617.85



மெதிரிகிரிய சைத்திய வீதி முதல் யாய 7 மற்றும் அரசமர சந்தி வீதி



றோயல் ஆரம்பக் கல்லூரி அருகிலிருந்து பொலொன்னறுவை வலயக்கல்வி அலுவலகம் அருகே பிரதான வீதி வரை நிர்மாணித்தல்

3. கிராமிய வீதிகள் அபிவிருத்தி

- ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை - 408
- முடிவுறுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை - 404
- முதலீடு செய்யப்பட்ட தொகை - ரூ.மில்.797.43



லங்காபுர முதல் கிளை வீதி அபிவிருத்தி



கி/சுசிரிகம கிராம வீதி

➢ **நீர்ப்பாசனம்**

நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
கழிவுநீர் வடிகான்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்	28	32.99
அணைகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்	07	9.70
நீர் வெளியேறும் வழி மற்றும் குள அணைக்கட்டுகளை நிர்மாணித்தல்	04	2.92
ஏனையவை	02	-
மொத்தம்	**41**	**45.61**



குருப்புகாடு அணை புனரமைப்பு



LB 05 வயல் கால்வாய் புனரமைப்பு

➢ **கமநல சேவைகள்**

கமநல சேவைக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
குளங்களைப் புனரமைக்கும் கருத்திட்டங்கள்	25	94.94
அணைகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்	05	2.18
கமநல சேவை நிலையங்களை நிர்மாணித்தல்	03	7.00
மொத்தம்	**33**	**104.12**



சந்தனபொகுன வாவி



அரலகங்வில புதிய கமநல சேவைகள் நிலையம்

➢ **விவசாயத்துறை**

விவசாயத்துறை அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
பழப் பயிர்களைப் பயிரிடல்		2.80
வேர்க்கடலை விதைகளை வழங்குதல்	விவசாயிகள் 150	2.19
காளாண் செய்கைக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்	விவசாயிகள் 350	3.18
கதிரடிக்கும் தளங்களை நிர்மாணித்தல்	21	21
நகர வீட்டுத் தோட்டப் பயிர் அபிவிருத்தி		0.69
சமயஸ்தலங்களில் விவசாய நிலங்கள் அபிவிருத்தி		0.50
தேனீ வளர்ப்புப் பெட்டி, உபகரணங்கள் மற்றும் தேனீக்களை வழங்குதல்		4.78
புல் வெட்டும் இயந்திரங்களை வழங்குதல்	1470	24.63
எண்ணெய் தெளிக்கும் இயந்திரங்களை வழங்குதல்	1500	
மொத்தம்		**59.77**



காளாண் செய்கை

➢ **கூட்டுறவு அபிவிருத்தி**

கூட்டுறவு அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	செலவு ரூ.மில்.
மாவட்டத்தின் 9 கூட்டுறவுச் சங்கங்களுக்கு நவீனமயப்படுத்தப்பட்ட கூட்டுறவு விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல்	17.92
பலுகஸ்தமன பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி மா உற்பத்தி நிலையத்தை நவீனமயப்படுத்தல்	5.00
பலுகஸ்தமன பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குரிய சில காலமாக செயலிழந்து காணப்பட்ட தும்பு ஆலையைப் புனரமைத்தல்	0.95
மொத்தம்	**23.87**



வரையறுக்கப்பட்ட/ ஹிங்குராங்கொடை கூட்டுறவுச் சங்கம்



பலுகஸ்தமன கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி மா உற்பத்தி நிலையம்

➢ **தொழில்முயற்சி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி**

தொழில்முயற்சி மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் ஊடாக சுயதொழில் உபகரணங்களை வழங்குதல்	நன்மையடையும் குடும்பங்கள் 3,809	265.00
விவசாய உற்பத்தி விற்பனை நிலையங்கள் மற்றும் ஹெல உணவகங்கள்	04	29.21
ஏனையவை		3352.
மொத்தம்		**327.73**



புளொக் கற்கள் தயாரிப்பு



தச்சுக் கைத்தொழில்





- **காணி மற்றும் வீடமைப்பு**

தொடர் இலக்கம்	காணி மற்றும் வீடமைப்புக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
1.	குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல்	100 வீடுகள்	100.71
2.	அங்கவீனர்களாகக் காணப்படும் குறைந்த வருமான முடைய குடும்பங்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் மற்றும் அணுகல் வசதிகளை வழங்குதல்	50 குடும்பங்கள்	
மொத்தம்			**100.71**

இதன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சில வீடமைப்புத் திட்டங்கள்





- **விளையாட்டு மற்றும் கலாசாரம்**

விளையாட்டு மற்றும் கலாசாரக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
பொது விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி	20	6.28
பாடசாலை விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி	09	82.64
ஏனையவை	02	-
மொத்தம்	**31**	**88.92**



பொலொன்னறுவை ரோயல் கல்லூரி கிரிக்கட் மைதானம்



அசேலபுர விளையாட்டு மைதானம்

➢ **சமயஸ்தலங்கள் அபிவிருத்தி**

சமயஸ்தலங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
தர்மபோதனை மண்டபக் கட்டிடங்கள்	12	15.13
அறநெறிப் பாடசாலைக் கட்டிடங்கள்	06	9.81
தான மண்டபங்கள் மற்றும் பிக்குமார் வதிவிடக் கட்டிடங்கள்	22	32.93
சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள்	01	1.00
குடிநீர் வசதிகள்	01	1.00
திருத்த வேலைகள்	07	3.58
ஏனையவை	07	34.45
மொத்தம்	**56**	**97.90**



கதுருவெல ஜயந்திமகா விகாரை தர்மபோதனை மண்டபம், பிக்குமார் வதிவிடம்



ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

➢ **நகர அபிவிருத்தி**

தொடர் இலக்கம்	நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	செலவு ரூ.மில்.
1.	புதிய நகர நிர்வாகக் கட்டிடத் தொகுதி	306.04
2.	பொலொன்னறுவை மாநகர சபைக் கட்டிடம்	69.75
3.	அரச உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்	350.72
4.	கதுருவெல நகரத்தை விரிவுபடுத்தல்	162.81
5.	கதுருவெல நகரத்தை விரிவுபடுத்துவதற்கு புகையிரத உத்தியோகபூர்வ இல்லங்களை வேறிடத்தில் அமைத்தல்	79.79
6.	வைத்தியசாலைச் சந்தியை அபிவிருத்தி செய்தல்	17.39
7.	செவனபிட்டிய மீன் இனப்பெருக்க நிலையத்தை நிர்மாணித்தல்	106.00
8.	அருங்காட்சியகம் மற்றும் தகவல் நிலையத்தின் I,II,III ஆம் கட்டிடங்களின் வேலைகளை நிறைவு செய்தல்	331.84
9.	பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தை நிர்மாணித்தல் - முதலாவது கட்டம்	4.86
10.	சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புக் கட்டிடத்தை நிர்மாணித்தல்	62.35
11.	கதுருவெல மூன்று மாடி அஞ்சல் அலுவலகத்தை நிர்மாணித்தல்	20.21
12.	தமன்கடுவ புதிய வர்த்தகக் கட்டிடத் தொகுதியின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்தல்	163.50
13.	கதுருவெல பகுதியளவு தற்காலிக டிப்போ அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல்	10.00
14.	கதுருவெல பஸ் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்தல்	50.00
15.	ஏனையவை	144.60
மொத்தம்		**1879.86**



பொலொன்னறுவை மாநகர சபைக் கட்டிடம்



அரச ஊழியர்களின்
உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடத்தொகுதி



அருங்காட்சியகம் மற்றும் தகவல் நிலையம்



கதுருவெல புகையிரத ஊழியர்களின் உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடத்தோகுதி

- **பொது வசதிகள்**

பொது வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	செலவு ரூ.மில்.
அரங்குகளை நிர்மாணித்தல்	03	51.33
பஸ் தரிப்பிடங்களை நிர்மாணித்தல்	02	20.00
சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களை அபிவிருத்தி செய்தல்	06	5.00
நில செவன சேவை நிலையத்தை நிர்மாணித்தல்	146	160.71
கழிவு முகாமைத்துவக் கருத்திட்டங்கள்	02	50.00
பொதுக் கட்டிடங்கள், பூங்காக்களை நிர்மாணித்தல்	09	6.08
ஏனையவை	04	136.19
மொத்தம்		**429.31**



இளைஞர் சமூக பல்செயற்பாட்டுக் கட்டிடம்

லங்காபுர அரங்கம்

2. "சிரிசர பிவிசும" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

தொடர் இலக்கம்	அபிவிருத்தித் துறை	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	2018.12.31 ஆந் திகதியில் செலவு ரூ.மில்.
1.	குளங்கள் புனரமைப்பு	64	147.62
2.	வீதி அபிவிருத்தி	10	143.37
3.	யானை வேலிகள் நிர்மாணித்தல்	04	23.33
4.	நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்		6.96
மொத்தம்		**78**	**321.28**

- **குளங்கள் புனரமைப்பு**

2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	இராணுவ மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்.)	உண்மைச் செலவினம் (ரூ.மில்.)
1.	கொலொன்கொல்ல குளம்	76.26	24.23
2.	பக்மீகம குளம்	17.08	3.38
3.	பக்மீகம – மைலவெவ	6.28	1.82
4.	இஹல காலியா குளம்	1.24	0.91
5.	நிகியாகல குளம்	8.99	2.71
6.	நைதந்திரி குளம்	6.27	0.32
7.	பேரமடுவ குளம்	13.22	1.5
8.	கல்வல குளம்	10.47	0.67
மொத்தம்		**139.81**	**35.54**

அத்துடன் 2018 ஆம் ஆண்டில் கீழுள்ள குளங்களின் புனரமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	இராணுவ மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்.)	உண்மைச் செலவினம் (ரூ.மில்.)
1.	அளுத்வெவ	7.30	7.11
2.	இஹலவெவ	10.60	10.49
3.	வலஸ்வெவ	2.97	2.99
4.	பனிச்சங்குளம் வாவி	14.39	10.48
5.	தாமரைக் குளம்	4.09	4.03
6.	பிடியவெவ	7.69	7.08
7.	கருவலகஸ்வெவ	10.40	7.97
8.	ஜயந்திபுர பொல்கடு வாவி	7.87	7.85
9.	கலபிட வாவி	20.00	9.00

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	இராணுவ மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்.)	உண்மைச் செலவினம் (ரூ.மில்.)
10.	வில மடு வாவி	6.56	5.91
11.	கிராங்குளம்	10.00	6.47
12.	கந்தமலாவ மகா வாவி	18.30	2.86
13.	குடா கந்தமலாவ வாவி	3.44	0.05
14.	கும்புக்வெவ	4.12	3.62
15.	திவுல்வெவ	18.26	5.95
மொத்தம்		**145.99**	**91.86**



கொலொன்கொல்ல குளம்



பக்மீகம – மைலவெவ



கல்வல வாவி



நாமல்வத்த வாவி

- **வீதி அபிவிருத்தி**

2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	இராணுவ மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்.)	உண்மைச் செலவினம் (ரூ.மில்.)	பௌதீக முன்னேற்றம் (%)
1	20 ஆம் சந்தி முதல் வான் எல ஊடாக அய்லடி வீதி	111.69	107.12	100%

அத்துடன் 2018 ஆம் ஆண்டில் 04 நகர வீதிகள், 05 கிராமிய வீதிகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதுடன் இதற்கு 36.25 மில்லியன் ரூபாய் செலவு ஏற்கப்பட்டது.



20 ஆம் சந்தி முதல் வான் எல ஊடாக அய்லடி வீதி



கந்தலாவ உள்ளக வீதி

- **யானை வேலிகளை நிர்மாணித்தல்**

2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	இராணுவ மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்.)	உண்மைச் செலவினம் (ரூ.மில்.)	பௌதீக முன்னேற்றம் ((%
1	பாதுகாப்பு மின்சார வேலிகள் முன்னோடிக் கருத்திட்டம்	22.45	20.9	100%

அத்துடன் 2018 ஆம் ஆண்டில் யானை வேலி நிர்மாணிக்கும் 03 கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதுடன், இதற்கு 2.43 மில்லியன் ரூபாய் செலவு ஏற்கப்பட்டது.



கோமரன்கடவல பாதுகாப்பு மின்சார வேலிகள் முன்னோடிக் கருத்திட்டம்


3. தகவல் கூறு

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் சட்டத்தை அமுல்படுத்தல்

- ஜனாதிபதி செயலகத்தின் தகவல் அதிகாரியாக ஜனாதிபதி மேலதிக செயலாளர் பீ.கே.எஸ். ரவீந்திர அவர்கள் பணியாற்றுகிறார்.

- 2018 ஆம் ஆண்டில் தகவல் கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த சுருக்கமான அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

விபரம்	எண்ணிக்கை
கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை	173
❖ தகவல்களை வழங்குதல்	90
❖ தகவல்கள் இல்லாதபோது மற்றும் ஏனைய காரணங்களினால் நிராகரிக்கப்பட்டவை	60
❖ ஏனைய அமைச்சுக்கள்/ நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டவை	15
❖ விண்ணப்பதாரியினால் பதிலளிக்கப்படாத தகவல் கோரிக்கைகள்	08



பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு

அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் பொதுமக்களின் மனக்குறைகள், பிரச்சினைகள், கோரிக்கைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாக சிறந்த கவனத்தைச் செலுத்தி அவற்றை சிறப்பாக முகாமைத்துவம் செய்து திருப்தியான பொதுமக்களுடன் இணைந்த தரமான அரச சேவையை நடாத்திச் சென்று "பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு துரிதமாகவும், நேர்மறையாகவும் பதிலளிக்கும் பிரிவாக மாறுவதைத்" தமது நோக்காகக் கொண்டு அனைத்து அலுவலர்களும் தமது கடமைகளை ஆற்றும் பிரிவு பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவாகும்.

நோக்கங்கள்

- பொதுமக்களின் கோரிக்கைகள், மனக்குறைகள், பிரச்சினைகள், கருத்துக்கள், முன்மொழிவுகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரச திணைக்களங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களிலும் முறையான ஒழுங்குமுறையொன்றைப் பேணிச் செல்லுதல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- பொதுமக்களினால் சமர்ப்பிக்கப்படும் மனக்குறைகள், கருத்துக்கள் போன்ற அனைத்தும் "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டம் ஊடாக ஏற்புடைய அமைச்சுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்பு முறையான ஒழுங்குமுறையொன்றிக் கீழ் அனைத்துக் கடிதங்கள் தொடர்பாகவும் நிறுவனரீதியாக வழிநடாத்துதல் மற்றும் காலாண்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தல்.

- "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் கோரிக்கைகள், மனக்குறைகள், பிரச்சினைகள், கருத்துக்கள், முன்மொழிவுகள் மற்றும் முறைப்பாடுகளின் இயல்புக்கு அமைவாக அவற்றைக் குறிப்பான வகைப்படுத்தலுக்கு உட்படுத்தி பிரிவு மற்றும் உபபிரிவுகளாகப் பகுப்பாய்வு செய்ததன் பின்பு அரச சேவைகளை வழங்கும் செயற்பாட்டில் ஏற்படும் மக்கள் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை வழங்குவதற்குத் தேவையான அரச கொள்கைகளை வகுப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.

பிரதான பணிகள்

- பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களின்போது அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு வழங்கப்படும் விஞ்ஞாபனங்களில் காணப்படும் மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு ஏற்புடைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு அவற்றுக்குத் துரிதமாகப் பதிலளிப்பதற்குப் பங்களித்தல்.

- அஞ்சல், தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல், இணையத்தளம் மற்றும் பெக்ஸ் ஊடாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு முன்வைக்கப்படும் பல்வேறுபட்ட வடிவங்களிலான பொதுமக்களின் கோரிக்கைகளுக்குத் துரிதமாகப் பதிலளித்து "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தல்.

- ஊழியர்களின் பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்வதற்கு அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு விசேட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.

- பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுக்கு நேரடியாகக் கிடைக்கும் பொதுமக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள் மற்றும் ஜனாதிபதி நடமாடும் சேவைகளில் சமர்ப்பிக்கப்படும் பொதுமக்களின் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளுக்குத் துரிதமாகத் பதிலளித்தல் மற்றும் அதில் தலையிட்டு செயற்படுதல்.

பொதுமக்களின் கோரிக்கைகள், பிரச்சினைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுக்குக் கிடைக்கும் முறை



"ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" மனக்குறைகள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

"ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டம் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் முதலாவது வருட பதவியேற்புப் பூர்த்தியை முன்னிட்டு 2016 ஜனவரி மாதம் 08 ஆந் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தள சேவையை அடிப்படையாகக் கொண்ட வலையமைகப்பட்ட தகவல் அமைப்பு முறையாகும். முதலாவது சந்தர்ப்பத்தில் *www.complaints.gov.lk* எனும் இணைய முகவரியில் செயற்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டம் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் இரண்டாவது வருட பதவியேற்புப் பூர்த்தியை முன்னிட்டு 2017 ஜனவரி மாதம் 08 ஆந் திகதி முதல் "ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" என *www.tell.president.gov.lk* என்று இலகுவாக எவருக்கும் நினைவில் வைத்துக் கொள்ள முடியுமான பெயரில் மாற்றப்பட்டது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு பல்வேறுபட்ட நபர்களிடமிருந்து கிடைக்கும் கோரிக்கைகள், பிரச்சினைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் போன்றன தொடர்பாக சாதாரண மற்றும் பதிவுத் தபாலில் மாத்திரம் செயலாற்றிய காலத்தைக் கடந்து செல்வதாக "ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகம் காணப்பட்டது.

பொதுமக்களினால் ஜனாதிபதி அலுவலகத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும் அனைத்துக் கடிதங்களும் பதவிநிலை அலுவலர்களினால் பரீட்சிக்கப்பட்டு உரிய விடயத்துக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்பு அந்த அனைத்துக் கடிதங்களும் விஞ்ஞானபூர்வ அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட பின்பு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயின் அந்தக் கடிதங்கள் மற்றும் இணைப்புக்கள் ஏற்புடைய அமைச்சு, மாகாண சபை அல்லது நிறுவனத்திற்கு சாதாரண தபாலில் ஏற்பட முடியுமான தாமதங்களைக் குறைத்து https://www.tell.president.gov.lk எனும் "ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" இணையத் தகவல் அமைப்பு முறை ஊடாக ஏற்புடைய நபருக்கும் குறுஞ்செய்தியொன்று (SMS) அல்லது மின்னஞ்சல் (e-mail message) செய்தியொன்று மூலம் தெரியப்படுத்தி, உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது.

அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பொதுமக்களின் கோரிக்கைகள் தொடர்பாக ஏற்புடைய அமைச்சு, மாகாண சபை, மாவட்டச் செயலகம், திணைக்களம் அல்லது நிறுவனம் தற்போது எந்தளவு தூரம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பது தொடர்பாகவும் தொடர்ச்சியான, சரியான ஒழுங்குபடுத்தல் ஜனாதிபதி அலுவலகத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் வழிநடாத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு (MPR Unit) அலகினால் நடாத்திச் செல்லப்படுவதுடன் ஒவ்வொரு மாதமும் அவர்களுக்குத் தமது முன்னேற்றம் அறியத் தரப்படுவதுடன் காலாண்டுக்கு ஒரு முறை நபர்களின் மனுக்கள் தொடர்பாக தீர்வுச் செயற்பாட்டிற்கு முன்வைக்கப்படாத *(Not Assigned)* மனுக்கள் குறித்து உசாவி முன்னேற்ற அறிக்கைகள் கோரப்படுகின்றன. மேலும் எந்தவொரு நபருக்கும் "ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" *(www.tell.president.gov.lk)* இணையத்தளத்திற்குச் சென்று தாம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு முன்வைத்த விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது தற்போது எந்த நிலைமையில் உள்ளது என்பது தொடர்பாகப் பார்ப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்புடைய நபருக்குத் தனது கையடக்கத் தொலைபேசிக்கு அல்லது மின்னஞ்சலுக்கு "ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டம் ஊடாக தன்னியக்க முறையில் அனுப்பி வைக்கப்பட்ட செய்தியில் குறிப்பிடப்பட்ட தொடர்பு இலக்கத்தைப் (உதா - *PRE/2017/N/012345)* பயன்படுத்த வேண்டும்.

பொதுமக்களின் தேவைகள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம் மிகவும் வினைத்திறன் மிக்க, திருத்தமான சேவையினை இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றமையால், இச்சேவையினை மிகவும் உயர்ந்த மட்டத்திலானதாக மாற்றும் எதிர்பார்ப்புடன் மூன்று கட்டங்களின் கீழ் இனங்காணப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப அவ்வப்போது சிற்சில மாற்றங்களை மேற்கொள்வதற்கு ஸ்ரீ லங்கா டெலிகொம் - மொபிடெல் நிறுவனத்துடன் ஜனாதிபதி அலுவலகம் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டு செயற்படுகிறது.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி அவர்களினால் நடாத்திச் செல்லப்படும் *The Whitehouse Petition System* எனும் பொதுமக்கள் மனு நிகழ்ச்சித்திட்டத்தையும் முன்மாதிரியாகக் கொண்டு எந்தவொரு நபருக்கும் பொதுமக்கள் மனுவொன்றை அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு "ஜனாதிபதிக்குத் தெரிவிக்க" நிகழ்ச்சித்திட்டத்தின் www.tell.president.gov.lk இணையச் சேவை ஊடாக வசதிகள் வழங்கப்பட்டிருப்பது முக்கிய அம்சமாகும். அதேபோன்று ஏற்புடைய பொதுமக்கள் முறைப்பாட்டில் எந்தவொரு நபரும் கையொப்பமிடுவதற்கான வாய்ப்பும் அதனூடாக வழங்கப்பட்டுள்ளது.

ஏதாவது பொது மனுவொன்று குறிப்பிடத்தக்க நபர்களினால் கையொப்பமிடப்பட்டிருப்பின் அந்த மனு ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி அலுவலகத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவினால் மக்களுக்குத் தமது ஜனாதிபதி அவர்களை நெருங்குவதற்கு வழங்கப்பட்டுள்ள இன்னுமொரு அரிய சந்தர்ப்பமாகும்.



இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் (ICTA) நிறுவனத்தினால் உள்ளடக்கங்கள் உருவாக்குவதைப் பாராட்டும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட "ஈ-ஸ்வாபிமானி" அரச விருதானது அரச மற்றும் தனியார் நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் டிஜிட்டல் நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணித்து அவற்றில் தெரிவு செய்யப்படும் சிறந்த டிஜிட்டல் கருத்திட்டத்திற்காக வழங்கப்படுகிறது.



தொலைத்தொடர்பு மற்றம் டிஜட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் வசந்த தேசப்பிரிய அவர்கள் விருதினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு வழங்கி வைத்தபோது. ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேன, ஜனாதிபதி மேலதிக செயலாளர் சுனந்த காரியப்பெரும, சிரேஷ்ட உதவிச் செயலாளர் சமந்தி ரணசிங்க, ஸ்ரீ லங்கா மொபிடெல் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் சமன் பெரேரா, முகாமையாளர் பிரபாத் கமகே ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் இதில் இணைந்து கொண்டனர்.









2018 ஆம் ஆண்டில் பொதுமக்களின் விஞ்ஞாபனங்களை ஏற்றுக்கொள்ளுதல்

ஜனாதிபதி அவர்களுக்கு சிலபோது தொழிற் சங்கங்கள், மாணவர் இயக்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பல்வேறுபட்ட குழுக்கள் எதிர்ப்பு இயக்கங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் அல்லது உண்ணாவிரதங்களாக தமது கோரிக்கைகள், சிறப்புரிமைகளைக் கோரி அல்லது எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகை தரும் சந்தர்ப்பங்களில் அவர்களது செய்தியை விஞ்ஞாபனமாக ஜனாதிபதி அவர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காக பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவினால் அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவினாலேயே அடிப்படையில் ஏற்புடைய தரப்பினரை அரசியல், நிறுவனரீதியாகத் தொடர்புபடுத்தி தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞபானங்களின் எண்ணிக்கை 55 ஆகும்.

2018 ஆம் ஆண்டில் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுக்கு மக்கள் தமது மனக்குறைகள், கோரிக்கைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்குப் பயன்படுத்திய தொடர்பாடல் முறைமைகளின் எண்ணிக்கைரீதியான தரவுகளுடன்



2018 ஆம் ஆண்டில் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுக்கு மக்கள் சமர்ப்பித்த தமது மனக்குறைகள், கோரிக்கைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாக ஜனாதிபதிக்குத் தெரிவிக்க நிகழ்ச்சித்திட்டத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகளின் நிலைமை



ஜனாதிபதி நிதியம்

1. அறிமுகம்

அதிமேதகு ஜனாதிபதியவர்கள் உட்பட்ட நிர்வாக சபையின் கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில் ஜனாதிபதியின் செயலாளர் உட்பட்ட ஜனாதிபதி நிதியத்தின் பணியாட் தொகுதியினால் இலங்கைப் பிரஜைகளுக்கு மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கு நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல், தகைமை பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு க.பொ.த (உயர் தரம்) பயிலுவதற்கு நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஏனைய செயற் திட்டங்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. அத்துடன் அபிவிருத்தி லொத்தர் சபையின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் 50%இனை மஹபொல உயர்கல்விப் புலமைப் பரிசில் நிதியத்திற்கு வழங்குவதும் ஜனாதிபதி நிதியத்தின் அலுவலாகும்.

2. ஜனாதிபதி நிதியத்தின் தூர நோக்கு

ஜனாதிபதி நிதியச் சட்டத்தின் பிரகாரம் இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்

3. ஜனாதிபதி நிதியத்தின் செயற்பணி

இலங்கைப் பிரஜைகளுக்கு மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கான நிதியுதவியை வழங்குவதற்கும், மதங்களைப் போசிப்பதற்கும், கல்விசார்ந்த புலமைப் பரிசில்களை வழங்குவதற்கும், தேசம் மற்றும் நாட்டுமக்களின் நலன் கருதி சிறந்த சேவைகளை ஆற்றியவர்களை மதிப்பீட்டுக்குட்படுத்தி நிதியுதவியை வழங்குதல்.


4. ஜனாதிபதி நிதியத்தின் நோக்கங்கள்

1. வறுமைக்கு நிவாரணம் வழங்குதல்
2. கல்வியறிவை மேம்படுத்தல்
3. மதங்களின் மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செலுத்தல்
4. தேசத்திற்காக சேவையாற்றிய நபர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்குதல்
5. ஜனாதிபதியவர்கள் மற்றும் நிர்வாக சபையின் கருத்தின் அடிப்படையில் பொது மக்களின் நலன் கருதி அலுவல்களை மேற்கொள்ளல்

5. 2018 ஆம் ஆண்டில் அடைந்துகொண்ட வெற்றிகள்

1. 2018 ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதியத்தின் பிரதான வருமான மூலம் என்ற வகையில் அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து ரூபா 2,088,000,000.00 கிடைத்ததுடன் நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் மற்றும் அன்பளிப்புக்களுடன் மொத்த வருமானம் ரூபா 2,311,583,733.93 ஆகும்.

வருமானம் கிடைத்த விதம்	தொகை (&பா)
அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து	2,088,000,000.00
வட்டி வருமானம்	223,506,052.81
அன்பளிப்புக்கள் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள்	77,681.12
மொத்தம்	**2,311,583,733.93**



2. ஜனாதிபதி நிதியப் பிரிவின் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்து முறையான அலுவலக அமைப்பை திட்டமிட்டு பணி புரிவதற்கான புதிய மேசைகள் மற்றும் கதிரைகளைப் பெற்றுக் கொள்ளல், சேவை பெறுநர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தல், சேவை பெறுநர்களை அறிவுறுத்துவதற்கான அறிவித்தல் பலகைகளைப் பொருத்துதல்.

3. ஜனாதிபதி அலுவலகத்தின் உற்பத்தித்திறன் மேம்பாட்டு வேலைத் திட்டத்துடன் இணையான வகையில் ஜனாதிபதி நிதியப் பிரிவின் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வட்டங்கள் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தல்.

4. சேவை பெறுநர்களின் பிரேரணைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் கிடைக்கப்பெற்ற பிரேரணைகளுக்கமைய சேவை பெறுநர் களுக்காக மிகவும் வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குவதற்குத் தேவையான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

5. நிகழ்நிலைப்படுத்தப்பட்ட ஜனாதிபதி நிதியத்தின் இணையத்தளத்தை ஜனாதிபதி நிதியத்தின் 61 ஆவது நிர்வாகக் குழுக் கூட்டத்தின்போது அதிமேதகு ஜனாதிபதியவர்களால் ஆரம்பித்துவைத்தல்.

6. ஜனாதிபதி நிதியத்தின் அலுவல்கள் கணனிமயப்படுத்தப்பட்ட தன்னியக்க செயன்முறையொன்றின் கீழ் மேற்கொள்ளப்படுவதனால் அந்தக் கட்டமைப்பில் நிலவும் குறைபாடுகளை சீர் செய்வதற்குத் தேவையான பௌதீகஎ வளங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய நிபுணத்துவ அறிவைக்கொண்ட மனித வளங்களைப் பூர்த்தி செய்துகொள்ளல்.

7. ஜனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவியை வழங்கும் செயற்பாட்டை தன்னியக்கமயப்படுத்தலின் கீழ் கம்பஹா மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களினதும் கட்டமைப்புடன் தொடர்பு படுத்தல் மற்றும் பிரதேச செயலாளரின் அறிக்கைகளை இணைய வழி (online system) முறையின் கீழ் பெற்றக்கொள்ளல்.

8. க.பொ.த (சா.த) சித்தியடைந்து க.பொ.த (உ.த) கற்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதி யத்தினால் வழங்கப்படும் புலமைப் பரிசிலுக்குரிய அனைத்து தவணைத் தொகைகளையும் செலுத்துதல்.

9. ஜனாதிபதி நிதியத்தினது பணியாட்தொகுதியின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி செயலகத்தின் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பயிற்சிப் பாடநெறிகளில் பணியாட்தொகுதி அங்கத்தவர்களை பங்குபற்றச் செய்தல்.


    1. அரசாங்கத்தின் கணக்காய்வு செயல்முறை மற்றும் கணக்காய்வு வினவல்களுக்கு பதிலளித்தல்
    2. அரசாங்கத்தின் பெறுகை நடைமுறை
    3. 'கய்சென்' முகாமைத்துவ பயிற்சித் திட்டம்
    4. அறிக்கைகளை எழுதுதல்
    5. கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கானMS Excelஉயர் பாடநெறி
    6. அரச நிதி முகாமைத்துவ நடைமுறை
    7. அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள்

10. ஜனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக புதிய மருத்துவமனைகளைப் பதிவு செய்தல்

மருத்துவமனை	நோய்
1. றுஹுணு ஹொஸ்பிட்டல் (பிரைவட்) கம்பனி, கராபிட்டிய	இரத்த கூழ்மப்பிரிப்பு சிகிச்சை
2. கூட்டுறவு மருத்துவமனை, காலி	திறந்த இருதய சத்திர சிகிச்சை
3. நிவ் பிலிப் ஹொஸ்பிட்டல் (தனியார்) கம்பனி, களுத்துறை	இரத்த கூழ்மப்பிரிப்பு சிகிச்சை
4. நவலோக்க ஹொஸ்பிட்டல், கொழும்பு 02	காது நத்தைச்சுருள் பொருத்தும் சத்திரசிகிச்சை
5. டர்னன்ஸ் மருத்துவமனை, கொழும்பு 03	புற்றுநோய் சிகிச்சை, மூளை சத்திரசிகிச்சை
6. வின்செத ஹொஸ்பிட்டல் (தனியார்) கம்பனி, கொழும்பு 10.	இரத்த கூழ்மப்பிரிப்பு சிகிச்சை
7. நவலோக்க மெடிகெயார் ஹொஸ்பிட்டல், நீர்கொழும்பு	இரத்த கூழ்மப்பிரிப்பு சிகிச்சை
8. ஆர்யா மருத்துவமனை, இரத்தினபுரி	இரத்த கூழ்மப்பிரிப்பு சிகிச்சை
9. சென்ட டோரா ஹொஸ்பிட்டல், பத்தரமுல்லை	புற்றுநோய் சிகிச்சை

2018 ஆண்டில் ஜனாதிபதி நிதியத்தின் செலவுகள்

அலுவல்கள்	தொகை (ரூபா)
மருத்துவ உதவி	1,136,818,399.17
கல்வி	265,000.00
புலமைப்பரிசில்கள்	62,876,000.00
நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக	14,338,476.11
மத அலுவல்களுக்காக	11,050,000.00
கலாசார அலுவல்களுக்காக	3,400,000.00
விளையாட்டு மற்றும் கலை அலுவல்களுக்காக	100,000.00
மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம்	843,900,260.00
ஏனையவை (கணக்காய்வுக் கட்டணம் மற்றும் புலமைப் பரிசில் தொடர்பாக செய்திப் பத்திரிகை அறிவித்தல்)	1,051,100.00
மொத்தம்	**2,073,839,684.28**



- மருத்துவ உதவி
- சமூக சேவைகள் மற்றும் ஏனையவை
- மத அலுவல்கள்
- கலாசார அலுவல்கள்
- விளையாட்டு மற்றும் கலை
- கல்வி

ஊடகப் பிரிவு

2018 வருடாந்த செயல் திட்டத்திற்கு ஏற்ப 2018.12.31 ஆந் திகதிக்கு நிதி முன்னேற்றம்
புகைப்படப் பிரிவு

பிரிவின் /கூறின் பெயர் : புகைப்பட அலகு		
	செயற்பாடு/உருப்படி	நோக்கங்களை அடைந்து கொள்ள ஏற்ற செலவினம்
1	புகைப்படங்கள் அச்சிடுதல்	248,699.00
2	புகைப்படங்களுக்கு சட்டகமிடுதல்	607,140.00
3	விசேட வைபவங்களின் புகைப்படங்கள் அல்பத்தை தயாரித்தல்	15,000.00
4	வெளிநாட்டு விஜயங்களின் புகைப்படங்கள் அல்பத்தின் தயாரிப்பு	125,160.00
5	புகைப்படக் கண்காட்சிகளை நடாத்துதல்	820,000.00
6	உபகரணங்களின் பழுது பார்த்தல்	420,950.00
7	உபகரணங்கள் கொள்வனவு	2,236,949.00

மேற்குறிப்பிட்டவாறு புகைப்பட அலகினால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் உள்நாட்டு வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் வைபவங்களில் எடுக்கப்படும் புகைப்படங்களைத் தேவையானவாறு அச்சிடல், சட்டகப்படுத்தல், அல்பங்கள் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு அப்பால் சந்தர்ப்பத் திற்கேற்றவாறு இடம்பெறும் செயற்பாடுகள் மற்றம் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடு களின்போது உதவுதல் மற்றும் தேவையானவாறு புகைப்படங்களைத் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப் பட்டன.

2018 ஆம் ஆண்டின் செயல் திட்டத்திற்கு ஏற்ப 2018.12.31 ஆந் திகதியில் நிதி முன்னேற்றம்
ஜனாதிபதி பிரஜைகள் வழிகாட்டல் அலகு

தொடர் இல.	பிரதான நோக்கங்கள்	2018 ஆம் ஆண்டின் இலக்கு	2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை	செயற்றிறன் இடைவெளி
01	332 பிரதேச செயலகப் பிரிவு-களை உள்ளடக்கி பிரதேச தொடர்பாடல் அலுவலர் வலையமைப்பைக் கட்டியெழுப்புதல்	332 பிரதேச செயலகப் பிரிவுகள்	332 பிரதேச செயலகப் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.	மேலதிகமாக மேலும் 126 பிரதேச தொடர்பாளர்கள் (485-332 =126)
02	14002 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் கிராமிய தொடர்பாடல் அலுவலர் வலையமைப்பைக் கட்டியெழுப்புதல்.	10,000 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குதல்.	13,464 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.	ஆண்டின் இலக்குகள் நேர்மறையாகப் பூர்த்தி செய்யபப்ட்டுள்ளன.

தொடர் இல.	பிரதான நோக்கங்கள்	2018 ஆம் ஆண்டின் இலக்கு	2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை	செயற்றிறன் இடைவெளி
03	25 மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பிரஜைகள் வழிகாட்டல் மாவட்டத் தொடர்பாடல் மாநாடுகளை நடாத்துதல்	25 மாவட்டங்களையும் உள்ளடக்குதல்	22 மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.	தவிர்க்க முடியாத காரணத்தினால் 3 மாவட்டங்களில் நடாத்த முடியவில்லை என்பதுடன் 2019 ஆம் ஆண்டில் அவை பூர்த்தி செய்யப்படும்.
04	மாவட்ட மாநாடுகள் ஊடாக ஜனாதிபதி அலுவலகத்தின் விசேட கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கிராமிய சமூகத்தினருக்கு விழிப்புணர்வூட்டுதல்	25 மாவட்டங்களையும் உள்ளடக்குதல்	22 மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.	தவிர்க்க முடியாத காரணத்தினால் 3 மாவட்டங்களில் விழிப்புணர்வூட் டலை நடாத்த முடியவில்லை என்பதுடன் 2019 ஆம் ஆண்டில் அவை பூர்த்தி செய்யப்படும்.

2018 ஆம் ஆண்டின் செயல் திட்டத்திற்கு ஏற்ப 2018.12.31 ஆந் திகதியில் நிதி முன்னேற்றம்

புதிய ஊடகப் பிரிவு

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பிரதிபிம்பத்தை சமூகமயப்படுத்தல், ஜனாதிபதி அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தல், கட்சி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவியளித்தல், பொதுமக்களுக்கு அந்த கருத்திட்டங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக அவர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் என்பன எமது நோக்கங்களாகும்.

1	ஜனாதிபதி அவர்களின் அரச நிகழ்ச்சிகள் ஒழுங்கைப் பதிதல் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லுதல்.	● ஜனாதிபதி அவர்களின் மற்றும் அவர் கலந்துகொள்ளும் அரச நிகழ்வுகளை ஜனாதிபதி அவர்களின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் ஏனைய இணையத்தளங்கள் ஊடாக மக்கள் மயப்படுத்தல் மற்றும் அரச நிகழ்வுகள் மூலம் மக்களுக்கு ஏற்படும் சேவை தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாடுகளுக்கும் அறியப்படுத்தல். ● ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் அரச வைபவங்கள், நாடுகளுக்கான விஜயங்கள் மற்றும் அதன் மூலம் நாட்டிற்கும் மக்களுக்கும் கிடைக்கும் நன்மைகளை சமூகமயப்படுத்துவதற்கான ஊடகப் பயன்பாடு (தொலைக்காட்சி அலைவரிசைகள் உட்பட)
2	நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை சமூகமயப்படுத்தல்	● ஜனாதிபதி அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்படும் மாகாண, பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஊடாக கிடைக்கும் நன்மைகளை சமூக வலையமைப்புக்கள் மற்றும் ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்தி சமூகத்திற்கு அறியப்படுத்தல். (தொலைக்காட்சி அலைவரிசைகள் உட்பட)

3	இணையத்தள செயற்பாடுகள் மற்றும் உத்தியோகபூர்வ இணைய அமைப்புக்கள் ஊக்குவிப்பு, இற்றைப் படுத்தல்	● மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் காணப்படும் தொண்டர் சமூக அமைப்பாளர்கள் மற்றும் அமைப்புக்களைப் பங்கேற்கச் செய்து அவர்களின் செயலூக்க அங்கத்தவர்களினாலான குழுவொன்றைத் தெரிவு செய்து மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் சமூக வலையமைப்பு மன்றங்களை நிறுவுதல் மற்றும் அவற்றின் மூலம் 1. ஜனாதிபதி அவர்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தல். 2. கட்சி மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் 3. ஜனாதிபதி அவர்களின் பிரதிபிம்பத்தை மேம்படுத்தல் 4. விசேட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தல்.
4	புதிய அரசியலமைப்பு வரைவு மற்றும் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வினைப் பெற்றுக் கொள்ள சமூக உரையாடலொன்றை ஏற்படுத்தல்	● இனப்பிரச்சினை மற்றும் அரசியலமைப்பு வரைவை அடிப்படையாகக் கொண்டு சமூக ஊடகங்கள் மூலம் கருத்துப் போக்கொன்றை ஏற்படுத்தல், சமூகத்தை விழிப்புணர்வூட்டல் என்பன மேற்கொள்ளப்பட்டன.
5	24 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் சமூக வழிநடாத்தல் வட்டமொன்றை உருவாக்குதல்	● 25 மாவட்டங்கள், 09 மாகாணங்கள் உள்ளடங்கும் வகையில் ஊடக மன்றங்களை நிறுவுதல் ஊடாக ஜனாதிபதியின் பணியை முன்னெடுத்துச் செல்லுதல். ● தற்போது சமூக ஊடக மன்றங்கள் 03 மாகாணங்களிலும் 14 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் தொகுதி ரீதியாக நிறுவப்பட்டுள்ளன. இதனூடாக ஜனாதிபதி மற்றும் அவரின் தலைமையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், கட்சி மேம்பாட்டு வேலைத்திட்டங்களை சமூகமயப்படுத்தல்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு - வீடியோ கெமரா மற்றும் வீடியோ பதிப்புப் பிரிவு

தொடர். இல.	பிரதான நோக்கம்/பணி	பெறுபேறு
1.	நேரடி ஒளிபரப்பு (OB) பஸ் வண்டியை நவீனமயப்படுத்தல் மற்றும் அதற்கு புதிய தொழிநுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	எந்தவொரு நவீனமயமாக்கல் செயற்பாடும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு 100 மில்லியன் மதிப்பீட்டு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் இது வரை நிதி கிடைக்கவில்லை.
2.	தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக 03 நிமிட ஆவணங்களைத் தயாரித்து வாரம் ஒரு தடவை ஊடக அலைவரிசைகளுக்கு வழங்கி ஒளிபரப்புதல்.	● சத்தின மதகய (ஏழு நாள் நினைவுகள்) ஆவண நிகழ்ச்சி (அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் சாராம்சப்படுத்தப்பட்ட ஆவண நிகழ்ச்சி ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகுதல். ● இரத்தினபுரி, பதுளை, கண்டி, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் கிராமசக்தி ஆவண நிகழ்ச்சிகளை நடாத்துதல். ● மக கொவி பவுல் (பெரிய விவசாயக் குடும்பங்கள்) ஆவண நிகழ்ச்சியை நடாத்துதல். ● நீர் அமைப்புக்களைத் திறந்து வைத்தல் RO Plant நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் “பென் தோதக்” ஆவண நிகழ்ச்சியை நடாத்துதல்.

தொடர். இல.	பிரதான நோக்கம்/பணி	பெறுபேறு
3.	கௌரவ ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் தொலைக்காட்சி ஊடக அறிக்கையிடலை மேற்கொண்டு அவற்றின் பெறுமதியான செய்திகளைத் துரிதமாக ஊடக அலைவரிசைகளுக்கு வழங்குதல்.	அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் அனைத்து உத்தியோகபூர்வ அரச நிகழ்வுகளிலும் ஏற்புடைய வீடியோ செய்யப்பட்ட காட்சிகளை வகுத்துத் தொகுத்த பின்பு மிகவும் விரைவாக ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்.
4.	கௌரவ ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் தேசிய நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்பு (OB) பஸ் வண்டியைப் பயன்படுத்தி நேரடி ஒளிபரப்புச் செய்தல் மற்றும் பதிவு செய்தல்	வெளிப்புற ஒளிபரப்பு பஸ் வண்டியின் திருத்த வேலைகளுக்காக அதன் பாகங்கள் கழற்றப்பட்டிருந்தமையால் ஊடக அறிக்கையிடல் செயற்பாடுகளின்போது தற்காலிக உபகரணங்களைப் பொருத்தி பயன்படுத்தப்பட்டது.
5.	கெமரா உபகரணங்கள்/பாகங்கள் பதிப்பு உபகரணங்கள் கொள்வனவு	வீடியோ பதிப்புப் பிரிவு உபகரணங்களின் செயல்தன்மை குறைந்தமை காரணமாக புதிய உபகரணங்களைக் கோரியுள்ள போதிலும் இது வரை அவை கிடைக்கவில்லை.
6.	வெளிப்புற சேவை வழங்குதல் மற்றும் வெளவாரி நிபுணர்களைப் பயன்படுத்தல்.	அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் பல கெமரா தயாரிப்புகளுக்கு ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இல்லாத உபகரணங்களையும் அந்த உபகரணங்களுடன் தொழிநுட்ப அலுவலர் ஒருவரையும் கூலி அடிப்படையில் வெளி நிறுவனங்களினால் பெற்றுக் கொள்ளுதல்.
7.	பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் செயலமர்வுகளுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.	இலங்கை மன்றக் கல்லூரியில் படப்பிடிப்பு, ஒளியூட்டல், பதிப்பு தொடர்பான 3 நாள் பயிற்சிச் செயலமர்வொன்றை நடாத்துதல்.
8.	இலத்திரனியல் ஊடகப் பிரச்சார நடவடிக்கைகள்	● 2018.01.08 மொரகஹகந்த மற்றும் பொல்கொல்ல வைபவங்கள் - "சாலிஸ் வஸரக மகவலி அசிரிய" (தொலைக்காட்சி, சுயாதீன தொலைக்காட்சி) ● 2018.05.21 ஊவா மாகாண முன்னேற்ற மீளாய்வு ● (தொலைக்காட்சி, வானொலி, இணையத்தளங்கள்) ● 2018.07.23ஆந் திகதி களுகங்கை நீர்த் தேக்க “ரஜ தியவர” தேக்கும் விழா (தொலைக்காட்சி, வானொலி) ● 2018.08.06 ஆந் திகதி பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 2030 தேசிய நிலை பேறான உரையாடலை வெளியிட்டு வைத்தல். (தொலைக்காட்சி, வானொலி, இணையத்தளங்கள்)

ஊடகப் பிரிவு - ஆசிரியர் அலகு

தொடர். இல.	பிரதான நோக்கங்கள்/ செயற்பாடுகள்	பெறுபேறு
1.	அரசின் அபிவிருத்திச் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பாக புத்தகங்கள்/ துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்தல்	2018.03.09ஆந் திகதி A Fee Nation Rise Again புத்தகத்தின் 500 பிரதிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல் 2018.07.12 ஆந் திகதி A Fee Nation Rise Again புத்தகத்தின் 200 பிரதிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.08.31 ஆந் திகதி எழுச்சி பெறும் பொலொன்னறுவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 180 அபிவிருத்திக் கருத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும்போது மக்களிடம் பகிர்ந்தளிப்பதற்காக 30,000 புத்தகங்களை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.09.17ஆந் திகதி அரசுக்கு கடற்றொழில் மற்றும் நிலைபேறான வெற்றிக்கான பாதை புத்தகத்தின் 5000 பிரதிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.09.20 ஆந் திகதி “வயம்பட ஜலய” (வடமேல் மாகாணத்திற்கு நீர்) எனும் துண்டுப் பிரசுரங்கள் 7000 ஐ அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.10.01ஆந் திகதி The Common man of the Peaceful Revolution நூலின் பக்கங்களைத் தயாரிப்பதற்கு Lanka Graphic Advertising நிறுவனம். 2018.10.10 ஆந் திகதி எழுச்சி பெறும் பொலொன்னறுவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 180 அபிவிருத்திக் கருத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும்போது மக்களிடம் பகிர்ந்தளிப்பதற்காக 60,000 புத்தகங்களை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.11.18 ஆந் திகதி எழுச்சி பெறும் பொலொன்னறுவை நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் நிகழ்ச்சியின் 50,000 துண்டுப் பிரசுரங்கள் மற்றும் 3000 கையேடுகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.12.05 ஆந் திகதி The Common man of the Peaceful Revolution புத்தகத்தின் 1500 பிரதிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல்.
2.	நாட்காட்டிகளை அச்சிடுதல்	2018.01.05 ஆந் திகதி 2000 நாட்காட்டிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.01.15 ஆந் திகதி 4000 நாட்காட்டிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.06.08 ஆந் திகதி மொரகஹகந்த நீர் வழங்கலின் பின்பு நாட்காட்டிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல்.
3.	கௌரவ ஜனாதிபதி அவர்களின் விசேட நிகழ்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மக்கள் மயப்படுத்துவதற்கு பத்திரிகைகளை அச்சிடுதல்	2018.07.27 ஆந் திகதி எழுச்சி பெறும் பொலொன்னறுவை 25,000 பத்திரிகைகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.09.18 ஆந் திகதி"வயம்பட ஜலய" (வடமேல் மாகாணத்திற்கு நீர்) 10,000 பத்திரிகைகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.11.18 ஆந் திகதி"ரஜயட தியவர" 7,000 பத்திரிகைகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல்.
4.	கௌரவ ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவைப் பிரதிபலிக்கும் கட்டுரைகளை உள்ளடக்கிய சஞ்சிகைகள் மற்றும் வைபவங்களுக்கான அழைப்பிதழ்களை அச்சிடுதல்.	2018.07.02ஆந் திகதி "வெனஸ" (மாற்றம்) சஞ்சிகையின் 1500 பிரதிகளை அரச அச்சகத்தில் அச்சிடுதல். 2018.1116 ஆந் திகதி தீபாவளி வைபவத்திற்கு அழைப்பிதழ் உறைகள் 15,150 ஐ அரச அச்சகத்தில் அச்சிடுதல்.
5.	ஆசிரியர் அலகின் அலுவலர்களுக்கு பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்	2018மார்ச் மாதம் தரவுகள் மற்றும் தகவல்களை உரிய முறையில் கணனிமயப்படுத்தல் தொடர்பான செய்முறைப் பயிற்சி செயலமர்வொன்றை நடாத்துதல். 2018.09.25 ஆந் திகதி முதல் 26 ஆந் திகதி வரை மன்றக் கல்லூரியில் செயலமர்வொன்றை நடாத்துதல்.

சர்வதேச ஊடக மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் 2018 ஆண்டிற்கான செயலாற்றுகை

பிரிவின் செயற்பணி

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தொடர்பான செய்திகள், அறிக்கைகளை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தல் மற்றும் ஆங்கில மொழியில் வெகுசன ஊடகங்களை ஒருங்கிணைத்தல்.

2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

தொடர். இல.	செய்யப்பட்ட பணி	முன்னேற்றம்
1	ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு கட்டுரைகளைத் தயாரித்தல் (Sunday Times, Sunday Observer, Daily News, Ceylon Today, Daily FT)	கிட்டத்தட்ட 200 கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.
1.1	கட்டுரைகளைத் தயாரித்து பத்திரிகைகளுக்கு வழங்குதல்	வெற்றிகரமானது
1.2	எழுத்தாளர்களின் கட்டுரைகளை ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு வழங்குவது தொடர்பான ஒருங்கிணைப்பு	வாராந்தம் பல்வேறு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.
2.	செய்திகளை மொழிபெயர்த்தல்	நாளொன்றில் 2 - 5 க்கிடையே
2.1	தேவைக்கேற்ப பத்திரிகைகளில் வெளியாகியுள்ள கட்டுரைகளை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல்	வாரமொன்றில் 2 அல்லது 3 வீதம்
3.	விசேட கருத்திட்டங்கள் தொடர்பான அம்சங்கள்	வாராந்தம்
3.1	விசேட கருத்திட்டங்கள் தொடர்பான கட்டுரைகளைத் தயாரித்து பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு வழங்குதல்.	மாதாந்தம்
4.	மொழிபெயர்ப்பு	
4.1	செய்திகளை மொழிபெயர்த்தல்	அண்ணளவாக 100
4.2	பொழிப்பு மொழிபெயர்ப்பு	ஒரு நாளில் 4 வீதம்
4.3	அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பகிரங்க உரைகளை மொழிபெயர்த்தல்	வாரமொன்றில் தெரிவுசெய்யப்பட்ட 2 கட்டுரைகள் வீதம்
4.4	விசேட இலத்திரனியல் ஊடகச் செய்திகள் மொழிபெயர்ப்பு	தேவைக்கேற்ப
5.	அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் டுவிட்டர் கணக்குகள்	நாளாந்தம் 2/3 வீதம்
5.1	அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் டுவிட்டர் கணக்கினை இற்றைப்படுத்தல்	நாளாந்தம்
6.	ஆங்கில இணையத்தளம்	ஒரு நாளில் மூன்று தடவைகள்
6.1	ஆங்கில இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்	ஒரு நாளில் மூன்று தடவைகள்

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் விசேட கருத்திட்ட அலகினால் மேற்கொள்ளப்படும் நாளாந்த கடமைகள்
ஜனாதிபதி ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் கசுன் ஹபுகொட அவர்கள்

- எழுச்சி பெறும் பொலொன்னறுவை மற்றும் "சிரிசர பிவிசும" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்படும் பணிகளுக்குத் தேவையான ஊடக ஒருங்கிணைப்பு மற்றும் ஊடகங்கள் தொடர்பான பணிகளைச் செய்தல்.
- சூழல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்படும் பணிகளுக்குத் தேவையான ஊடக ஒருங்கிணைப்பு மற்றும் ஊடகங்கள் தொடர்பான பணிகளைச் செய்தல்.
- ஊடகப் பிரச்சார நடவடிக்கைகள் (அச்சு ஊடகம், இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களுக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடகப் பணிகளும்)

அச்சு ஊடகம்

பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளைத் தயாரித்தல்
பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கான கட்டுரைகளைத் தயாரித்தல்
பத்திரிகை விளம்பரங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு

இலத்திரனியல் ஊடகம்

தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளுக்கு வீடியோ மற்றும் சிறிய ஆவணப் படங்கள், கேட்பொலிகளைத் தயாரித்தல் (அந்தந்த விசேட கருத்திட்டங்களுக்கு ஏற்புடைய)
தொலைக்காட்சி மற்றும் வானொலி கலந்துரையாடல் நிகழ்ச்சிகளுக்கான ஊடக ஒருங்கிணைப்பு
தொலைக்காட்சி மற்றும் வானொலிவிளம்பரங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு

புதிய ஊடகங்கள்

சமூக ஊடக வலையமைப்புக்களில் (இணையம், முகநூல்) பிரச்சாரப் பணிகளைச் செய்தல். (விசேட கருத்திட்டங்களுக்கு ஏற்புடைய)

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் விசேட கருத்திட்ட அலகினால் மேற்கொள்ளப்படும் நாளாந்த கடமைகள்
ஜனாதிபதி ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் பாத்திய அர்தநாயக்க அவர்கள்
கிராமசக்தி மக்கள் இயக்கம்
போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான மக்கள் செயலணி
நிலைபேறான உரையாடல்

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஜனாதிபதி அவர்களின் விசேட கருத்திட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்ளுதல்.
கிராமசக்தி வடமேல் மாகாண குழுக் கூட்டம் மற்றும் அதற்கு ஏற்புடைய குழுக் கூட்டம்
சப்ரகமுவ மாகாண குழுக் கூட்டம் மற்றும் அதற்கு ஏற்புடைய குழுக் கூட்டம்
மத்திய மாகாண குழுக் கூட்டம் மற்றும் அதற்கு ஏற்புடைய குழுக் கூட்டம்
வடமத்திய மாகாண குழுக் கூட்டம் மற்றும் அதற்கு ஏற்புடைய குழுக் கூட்டம்
கிராமசக்தியை மக்கள் மயப்படுத்தல் மற்றம் 1000 கிராமங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்கும் ஆரம்ப வைபவம் - அனுராதபுரம் கலுகஸ்வெ

ஊடகப் பிரச்சார நடவடிக்கைகள் (அச்சு ஊடகம், இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களுக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடகப் பணிகளும்)

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் விசேட கருத்திட்ட அலகினால் மேற்கொள்ளப்படும் நாளாந்த கடமைகள்
ஜனாதிபதி ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் சுஸந்த கருணாரத்ன அவர்கள்
பிள்ளைகளைக் காப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

தொலைநோக்கு

இருபத்தியோராம் நூற்றாண்டின் சவால்களை சிறப்பாக எதிர்கொள்ளும், பாதுகாப்பான சூழலொன்றில் வாழும் சிறுவர் சந்ததியொன்று

செயற்பணி

பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான, அவர்களின் உடல் உளரீதியான அபிவிருத்திக்கு நட்பான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல்.

2017 – 2019 ஆண்டுகளில் செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கீழுள்ள 3 துறைகளின் கீழ் பிள்ளைகளைக் காப்போம் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. கொள்கை வகுத்தல், சட்ட மறுசீரமைப்பு மற்றும் அமுலாக்கம்.
2. நிறுவனங்களைப் பலப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி
3. சிறுவர்களின் உடநல ஆரோக்கியம், அறிவு மற்றும் திறன்கள் விருத்திக்கு விசேட வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தல்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் விசேட கருத்திட்ட அலகினால் மேற்கொள்ளப்படும் நாளாந்த கடமைகள்
ஜனாதிபதி ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் பாரத தென்னகோன் அவர்கள்

வளமான தேசம் வாவிப் புரட்சி தேசிய நிகழ்ச்சித்திட்டம்
வளமான தேசம் வாவிப் புரட்சி நாடு முழுவதும் “எல்லங்கா” நீர்ப்பாசன அமைப்புக்களைப் புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து ஊடகப் பிரச்சார நடவடிக்கைகளும்
ஊடகப் பிரச்சார நடவடிக்கைகள் (அச்சு ஊடகம், இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களுக்கு ஏற்புடையவாறு மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடகப் பணிகளும்)

அச்சு ஊடகங்கள்

- பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளைத் தயாரித்தல்
- பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் தயாரித்தல்
- பத்திரிகை விளம்பரங்கள் ஒருங்கிணைப்பு

இலத்திரனியல் ஊடகங்கள்

தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளுக்கு வீடியோக்கள் மற்றும் ஆவணப் படங்கள் தயாரிப்பு, கேட்பொலிகள் தயாரிப்பு (அந்தந்த விசேட கருத்திட்டங்களுக்கு ஏற்ப)
வானொலி மற்றும் தொலைக்காட்சி கலந்துரையாடல் நிகழ்ச்சிகளுக்கு ஊடக ஒருங்கிணைப்பு
வானொலி மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஒருங்கிணைப்பு

புதிய ஊடகங்கள்

சமூக ஊடகங்கள் (இணையம், முகநூல்) பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் (விசேட கருத்திட்டங்களுக்கு ஏற்ப)

நல்லிணக்கப் பிரிவு

அறிமுகம்

நல்லிணக்கப் பிரிவு 2015 ஜூன் மாதம் முதல் அருலுக்குவரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது. அனைத்துப் பிரஜைகளுக்கும் சம வாய்ப்புக்கள் வழங்கப்படும், பல்வகைமை மற்றும் தேசிய அடையாளத்திற்கு மதிப்பளிக்கும் ஒற்றுமையாக வாழ முடியுமான நிலையான தேசத்தைக் கட்டியெழுப்புவதும், அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தவாறு பொது மக்கள் நலன்களை மேம்படுத்தும் செயற்பாட்டுடன் தொடர்புடைய அலுவல்களை மேற்கொள்வதற்கான ஆரம்பப் பங்களிப்பை வழங்குதல் இந்தப் பிரிவின் அலுவலாகும்.

பிரதான நோக்கங்கள்

இந்தப் பிரிவின் பிரதான நோக்கங்கள் யாதெனில், இனங்கள் மற்றும் மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் மற்றும் தேசிய, மாகாண மற்றும் பிரதேச அரசியல் தலைவர்களுடன் இணைந்து பொது மக்களின் நலனோம்புகையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இனங்காணப்பட்டுள்ள பொது மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதுமாகும்.

இந்த விடயங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு ரீதியிலான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1. **பெதியாகந்த கழிவு முகாமைத்துவத் திட்டம்**

   அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரின் ஆலோசனைப் பிரகாரம் கம்பஹா மாவட்டத்தில் கழிவகற்றல் முறையை முறைப்படுத்தும் நோக்கில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பெதியாகந்த கழிவு முகாமைத்துவத் திட்டத்தை ஆரம்பித்து செயற்படுத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு அலுவல்களை மேற்கொள்ளல்.

2. **கம்பஹா மாவட்ட விளையாட்டுத் தொகுதியை நிர்மாணிக்கும் திட்டம்**

   விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக அத்தனகல்லை பிரதேச செயலகப் பிரிவின் வத்துபிட்டிவலை முதலீட்டு வலயத்தின் எல்லையில் நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகளின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் உரிய ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.

3. **வெயாங்கொடை நாடக அரங்கை நிர்மாணிக்கும் திட்டம்**

   மேல் மாகாண சபையினால் அத்தனகல்லை பிரதேச செயலகப் பிரிவில் செயற்படுத்தப்பட்ட வெயாங்கொடை நாடக அரங்கை நிர்மாணிக்கும் திட்டம் சம்பந்தமான மேற்பார்வை மற்றும் மீளாய்வு அலுவல்கள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் அதன் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

4. **கம்பஹா மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தின் அபிவிருத்தி**

   ஒவ்வொரு பாடத் திட்டங்களுக்கமைய பிரிக்கப்பட்ட பயிற்சி நிலையமாக மேம்படுத்துவதற்காக திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு அலுவல்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு அலுவல்களை மேற்கொள்ளல். இங்கு விசேடமாக வெயாங்கொடை சிறிமாவோ பண்டாரநாயக்க பயிற்சி நிலையத்தை (ICT பயிற்சி நிலையமாக மேம்படுத்தல்.

5. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்புக் கடன் திட்டம் - வெயாங்கொடை

6. வெயாங்கொடை வாரச் சந்தையை நிர்மாணித்தல்

7. வெயாங்கொடை விசேட பொருளாதார நிலையத்தை மேம்படுத்தல்

8. வெயாங்கொடை கலாசார நிலையத்தை மேம்படுத்தல்

9. வீரங்குல மட்பாண்டக் கைத்தொழில் கிராமத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்தல்

10. கிராமீய கைத்தொழில்களை மேம்படுத்தல் (முரசு உற்பத்தி)

போன்ற திட்டங்களின் ஒருங்கிணைப்பு, மேற்பார்வை, மற்றும் முன்னேற்ற மீளாய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அது தவிர முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரை சந்திப்பதற்கு பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் பொது மக்கள் இந்த அலுவலகத்திற்கு வருவதுடன், பொதுப் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதும் இந்தப் பிரிவின் பிரதான அலுவலாகும்.

இலங்கை வாழ் பொது மக்களிடமிருந்தும், பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் வேறு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு பதில் அளிப்பதும் அந்தக் கடிதங்களை உரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்புவதும், அத்துடன் தொலைபேசி ஊடாக கிடைக்கப்பெறும் செய்திகளுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி பதில் அளிக்கும் அலுவலும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவுக்கு 4000 இற்கும் அதிகமான கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அந்த அனைத்துக் கடிதங்களுக்குமான பதில்கள் உரிய நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்கு தாமதமின்றி அளிக்கப்பட்டுள்ளன.



Compassionate Governance.....

A Sustainable Era



Message from His Excellency the President

The responsibility and the importance entrusted to the President's Office as the prominent state body that leads the forward journey of Sri Lanka to realise sustainable development goals withstanding the challenges on its way is particularly significant. A reminiscence and a review on the projects implemented and programmes conducted by the President's Office throughout the preceding year would invariably floor the way for the upcoming year.

The year-end marked with achievements of several major programmes steered by the President's Office. Tobacco use in Sri Lanka was reported a decrease up to 14% during the last year, the alcohol and drug addiction is also considerably being dropped for our victory according to the statistics form Alcohol and Drug Information Centre. Adding more for our achievements, the spread of the Chronic Kidney Disease of unknown aetiology which was growing across agrarian areas in the country has shown a satisfactory decline.

Gramashakthi campaign initiated as a new approach of entrepreneurship to alleviate poverty in Sri Lanka, National programmes of Food production, Environmental conservation and Let's protect children have been able to launch new projects and programmes to accelerate their missions with the assistance and corporation derived from relevant line Ministries, Departments and various Non-Governmental organisations.

People expect a proficient, efficient, service and people oriented staff that have lots of commitments in the public service and have become vibrant with experience and expertise derived from the long-standing 150 years of Public service in Sri Lanka steered by good governing policies.

I'm confident that the staff in the President's Office would take every possible endeavour to plan a fruitful year ahead learning from challenges and accomplishments of the preceding year so as to comprehend and thus to realise public aspirations.

His Excellency Maithreepala Sirisena
The President of the Democratic Socialist Republic of Sri Lanka



Message from the Secretary to the President

The President's Office being the state governance and administration centre is functioning as the operational hub of the country's development process. The office is also the foremost state body consists of the institutional structure for executing the powers, responsibilities and duties entitled to H.E. the President as the head of the State and of the government.

Upholding the functions of the President's office productively and in an orderly manner along with refreshingly new procedures providing guidance for the overall performance of more than 14 hundred thousand people who serve in the public sector is highly challenging.

Yet it is our obligation to re-examine the progress of projects and programmes initiated in the previous year in order to win over the challenges cast our way and to realize sustainable development goals. Similarly, with that we would be able to encourage and strengthen the process for achieving the current year's objectives.

The President's Office has been directed under several programmes focused on generating a country with an organized, efficient, transparent and productive state service eliminating all forms of fraud, bribery and corruption.

The successful implementation of Gramashakthi campaign and National programmes of Food Production, Environment conservation and Let's Protect Children were added for last year's achievements.

Considerable decline in the expansion of the Chronic Kidney Disease of unknown aetiology including the drop of drug and alcoholic usage to 14% are milestones of our successful endeavours.

The objective of publishing a report on performances is to review the progress of the functions annually and to identify the fields on which we lacked progress with the intention of implementing those programmes with exceptional energy and enthusiasm.

I hope that collective efforts of the staff with far-sighted plans and strategies to cope with the challenges will prove a better performance for the fulfillment of people's expectations in the upcoming year.

Udaya R. Seneviratne
Secretary to H.E. the President

Contents

		Page No.
1.	Secretary's Division	5
	(i) Secretary's Bureau	5
	(ii) Internal Audit Division	19
2.	Private Secretary to the President's Division	21
3.	Chief of Staff's Division	22
4.	Development and Special Projects Division	26
5.	Human Resources Development Division	103
	(i) Medical Services Unit	111
	(ii) Productivity Unit	112
6.	Policy Coordination and Progress Review Division	114
7.	Constitutional and Statutory Affairs Division	126
8.	Agency Coordination Division	130
9.	Financial Management Division	135
10.	Internal Administration Division	138
	(i) Transport Unit	151
	(ii) Information and Communication Technology Unit	154
11.	Legal Division	159
12.	Sustainable Development Division	167
	(i) National Programme of Food Production	167
	(ii) Smallholder Agribusiness Partnership Programme (SAPP)	178
	(iii) Gramashakthi People's Movement	190
	(iv) Sustainable Vision Project	200
	(v) Smart Sri Lanka Project	210
13.	Division of implementing "Pibidemu Polonnaruwa and Sirisara Pivisuma" Projects	213
14.	Public Relations Division	234
15.	The President's Fund	241
16.	Media Division	245
17.	Reconciliation Division	257

Introduction

The President's Office established in the Old Parliamentary building which has been a landmark throughout the history of Sri Lankan democracy is the hub of state governance and administration. The President's Office at the same time is the administrative centre responsible for facilitating the administrative and institutional framework for implementing all the duties and functions assigned to H.E. the President who is also the Head of the State and the Government.

Programmes are formulated for supervision, coordination and review of the implementation of State policies and for implementing special projects to fulfil public interests also for facilitating the process of public grievance handling.

Similar to all other public bodies, the President's Office is fervently required to maintain transparency and prioritize public wellbeing in implementing prominent programmes and projects. The President's Office is supposed to be the role-model for all other state owned institutions and public sector employees to work according to the principles of good governance on which the current President H.E. Maithreepala Sirisena based his manifesto for the election in 2015 and won the mandate to be the President of Sri Lanka.

This report is intended to review annually the functions and projects initiated and continued by the President's Office in line with good Governing principles. This will be a guide and will be in assistance in the evaluation of its performance, in recognizing the fields on which more effort and expertise have to be made for the achievement of the vision of the President's Office.

This report will also be a momentum to set our goals and strategies for the upcoming year while enabling us to recognize in advance the possible challenges that can come our way.

Vision

A Sustained prosperous Sri Lanka of good governance

Mission

To be in the Vanguard of establishing good governance in the state machinery and building a prosperous nation through sustainable development whilst Facilitating the execution of statutory functions vested in His Excellency the President by the Constitution and the to implementation of development programmes.

Objectives

1. Providing necessary facilities to perform functions entrusted to H.E. the President by the Constitution and by diverse acts and orders and the efficient and diligent completion of those powers and responsibilities according to constitutional provisions.
2. Ensuring whether the activities of District development are being continued in line with "Compassionate Governance- a stable country"
3. Inter- Ministerial coordination to ensure the maintenance of an improved, responsible state sector in line with the manifesto named "Compassionate governance- a stable country
4. Collecting, analyzing and reporting as required the data and information necessary for policy formulation.
5. Conservation and enhancement of Forest cover in the country necessary for Sri Lanka's sustainable existence.
6. Establishment of an eco system adequate for living with the sustainable utilization, conservation and management of natural resources available in Sri Lanka.
7. Creating a waste-free living environment with a sustainable waste management system.
8. Generating a competent younger generation through personality development and child empowerment.
9. Formulation of policies and legal provisions to prevent drugs under the concept "a country free of drugs", coordinating activities related to treatments and rehabilitation and improving public awareness.
10. Public awareness on the prevention of kidney disease, promotion of habits, providing pure drinking water, providing medical treatments and the welfare of patients including their family members.
11. Assisting evenly all the religions in their religious education activities.
12. Granting financial assistance to citizens for medical treatments and education purposes.
13. Implementation, maintenance and follow up of a regularize procedure in all public institutions including governmental departments to take actions regarding public requests, grievances, problems, suggestions and opinions.
14. Introducing new products for entrepreneurs through scientific research and innovative endeavours to assist youth in the conduct of successful businesses.
15. Preparation of the draft bill "Vision for Sustainable development" to achieve sustainable development goals and lead the process of making Sri Lanka a sustainable country.
16. Complete eradication of absolute poverty by facilitating the basics and other needs of people through Gramashakthi people's movement by 2030.
17. Establishment of a food production system in Sri Lanka capable of sustainably ensuring human and environmental wellbeing through the introduction of innovative and adequate development strategies.
18. Maintaining diplomatic relations with foreign countries, entering into agreements and providing leadership for other international engagements.

The Secretary's Bureau

Introduction

This Division is expected to facilitate performance of duties by the Secretary to the President on behalf of His Excellency and to attend to matters connected therewith.

Vision

To be the leading Division that facilitates optimal performance of administrative and management duties by the Secretary to the President.

Main Functions/ Objectives -

- Carrying out actions related to preparation of the national action plan for the Open Government Partnership (OGP).
- Performing actions related to the responsibilities assigned to the Secretary to the President by the Cabinet of Ministers for supervision of the progress of implementation of the OTTAWA convention.
- Coordination of implementation of the decisions taken by the Sustainable Development Council on which the Secretary to the President acts as the Chairman.
- Performing the actions related to the Committee on releasing the lands being used by the Tri Armed Forces in the northern and the Eastern province.
- Organizing and coordinating the functions held in honour of the visiting foreign Heads of States as directed by His Excellency the President and instructed by the Secretary to the President
- Assisting in all matters connected with organizing meetings convened by the Secretary's Bureau including preparation of invitation cards, organizing such events, recording notes of discussion, coordinating and supervisions.
- Initiating actions with regard to accomplishment of transitional justice under government's reconciliation program.
- Acting as the President Office's representative to the officers' committee appointed under the Prime Minister Office to implement National Action Plan 2016-2021 for the safeguard and promotion of human rights.
- Coordinating arrangement activity of National Sustainable Development Agenda -2030 with relevant expert committee.
